காவேரி

விரோதி - மார்கழி December 1949.

8 அணா

முன்னேற்றத்தின் முன்னணியில்

ஸிந்திரி எரு உற்பத்தி சாலை:



இந்தியாவின் உணவுப் பிரச்னையைத் தீர்க்க, நிலத்தின் விளைவுத் தன்மையை அதிகரிக்க வேண்டும். இப் பிரம்மாண்டமான எரு உற்பத்தி சாலை முடிவான உடன் நம் நாட்டின் உணவுப் பயிர் விளைவுகளை அதிகரிக்க தேவையாயிருக்கும் விசேஷ எருவாகிய அம்மோனியா ஸல்பேட்டை தினத்திற்கு 1000 டன் விதம் தயாரிக்க நோக்கமிடும்.

இப் பெரிய உற்பத்தி சாலையை நிர்மாணிக்கும் தொழிலில், ஆயிரக்கணக்கான டன் இந்திய எஃகு உதவியளித்து வருகிறது. எருவை தயாரிக்கவும், அதை விநியோகம் செய்யவும் வேண்டிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல வகைகளில் எஃகு ஒத்துழைக்கும்.

டாடா
எஃகு

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்: 23-B நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 JUL 1948
MADRAS
2717
0332
1980S9

198059

தி ஜெனரல் அஷ்யூரன்ஸ் ஸொஸைஸ்டி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)

தலைமை ஆபீஸ்: **ஆஜ்மீர்** (இந்தியா)

சென்னை டிவிஷனல் ஆபீஸ்: **304**, தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1.

முற்றிலும் தேசீய ஸ்தாபனம்

அமுலிலிருக்கும் பாலிஸிகள் சுமார்		....	ரூ. 20,00,00,000
ஆயுள் நிதி	,,	....	ரூ. 2,00,00 000
மொத்த ஆஸ்திகள்	,,	....	ரூ. 2,20,00,000
உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை	,,	....	ரூ. 1,00,00,000

சேர்மென்: ஸ்ரீ பி. என். ஜலான் (ஸூரஜ்மல் நாகர்மல்) கல்கத்தா.

தென்னிந்தியாவில் கிளை ஆபீஸ்கள்:

மதராஸ், மதுரை, திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர், பெங்களூர், பெல்லாரி, பெஜவாடா & கொழும்பு (இலங்கை) மற்றும் எல்லா முக்கிய பட்டணங்களிலும் இன்ஸ்பெக்ஷன் ஆபீஸ்கள் இருக்கின்றன.



A. V. S. டாப்பியோக்கா கிழங்கு மாவுகள் சுத்தமாயும் சுகாதார முறைப்படியும் நீண்ட நாள் அனுபவத்தில் தயாரிக்கப்பட்டவை. அவைகள் கலப்பில்லாதவை யென்பதற்கு அத்தாக்ஷி மைக்ராஸ்கோப் என்னும் கண்ணாடி மூலம் பரீக்ஷை செய்து நாணயமான டாப்பியோக்கா மாவு என்று சர்டிபிகேட் பெற்றிருக்கிறோம். போண்டா, பஜ்ஜி, முறுக்கு, ஓமப்பொடி, சர்க்கரை சேவு, தோசை, ஹல்வா, மைசூர்பாகு, பால்கோவா, பிஸ்கட், கேக், ஒப்பிட்டு, சேமியா, ஜவ்வரிசி, மிட்டாய் தினுசுகளும் இன்னும் வேண்டிய தின்பண்டங்களும் பலகாரங்களும் தயாரிக்கலாம்.

எங்களிடம் முதல் தரமான ஜவ்வரிசி, ஈரோடு சேலம் மஞ்சள் ரகங்கள், No. 1 மஞ்சள் தூள், கடலை எண்ணெய், சுருட்டுக்கும் பீடிக்கும் வேண்டிய புகையிலை ரகங்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். 4 அந்தர் எடை போடக்கூடிய பைபில்ட் வேயிங் மிஷின் தராசும் சப்ளை செய்கிறோம். கேட்லாக் வேண்டுவோர் எழுதவும். ஜவ்வரிசி தயாரிக்கும் முறை அடங்கிய புஸ்தகம் வேண்டுவோர் ரூ. 1—0—0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விபரங்களுக்கும் சாம்பிள்களுக்கும் எழுதவும்.

A. V. சுப்ரமண்யம்

A. V. S. டாப்பியோக்கா பிளவர் மில்ஸ் & மஞ்சள் எண்ணெய் சப்ளையர்கள்,
புகையிலை ஹோல் ஸேல் லைசென்ஸ்தார்கள்,
ஈரோடு (S.I.Ry.)　　தந்தி: "INSAF".

1948-ஆம் ஆண்டு

உங்களுக்கு

வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிட லாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

★

Shree

Swami Yogiraj Jyotish Asram,

C. K. PHAGWARA. (Kapurthala State)

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபார்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டார்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3-0-0. பார்வதி கர்ப்பத் தடைக்கு அபாயமில்லாத சிறந்த மருந்து. தற்காலிக கர்ப்பத்தடைக்கு ரூ. 2-0-0. நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4-8-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, யானைக்கால் முதலியவற்றிற்கு, பி. எச். தைலம் உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது. இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3-0-0. உட்கொள்ளும் மருந்து ரூ. 2-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்ருல் தயார் செய்த விகரின் உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரியமிழந்து, ஞாபக சக்தியின்றி, மனச் சோர்வுள்ள வாலிபர்களுக்குப் புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப், பலப்படுத்தி, புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்குச் சுகமளிக்கிறது. சாதாரணம் விலை ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0–13-0)

ஆஸ்த்மா

க்ஷயம் போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரேநாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி ஆஸ்மோலா ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதையுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 3-0-0.

(தபால் செலவு ரூ. 0-13-0)

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்.

KAVIRAJ R. N. CHAKRAVARTHI

Ayurvedha Sasthri (K. M.)

24, Debendra Ghose Road, Bhowanipore

CALCUTTA, 25.

Telephone: South 308

Stockists:

Messrs. APPAH & CO., 286, China Bazaar Road, Madras.



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

உயிர்ப்பிச்சையளிக்கும் லிவர்க்யூர்!

ஜம்மியின் லிவர் க்யூர்

38 வருஷங்களாக ஆயிரக்கணக்கான குழந்தைகளை அகாலமரணத்தினின்றும் காப்பாற்றியிருக்கிறது. குழந்தைகளின் சுரம் கணக்கட்டி கோளாறுகளுக்கு கைகண்ட ஔஷதம்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாப்பூர், மதருஸ்.

1 M.-Tam.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

•

LIVER CURE Branch Office
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

அற்புத மருந்துகள்

மூலிகைகளிலிருந்து தயாரிக்கப்படுபவை. பயனில்லையேல் பணம் வாபஸ்.

செமினியா:—(வைடமின் டானிக்) வீரியத்திற்கும், மன சுறுசுறுப்புக்கும் கை கண்ட மருந்து. கெட்ட ரத்தம், சருமக் கோளாறு, தூக்கமின்மை, மன, தேகச் சோர்வு முதலியவற்றுக்குத் தலை சிறந்த மருந்து. நரை மயிரையும் நிரந்தரக் கறுப்பாக்குகிறது. ஒரு முழு முறைக்கு ரூ. 7—0—0.

குஷ்டம், வெண் குஷ்டம்:—இதை உபயோகித்து ஹக்கீம்ஸ் டாக்டர்கள் நாட்டு வைத்தியர்களால் குணப்படுத்த முடியாத நோயிலிருந்து சுகம் பெறலாம். விலை ரூ. 3—0—0.

நரை மயிர் நிவாரணி:—ஆயுர்வேத முறையால் தயார் செய்யப்பட்ட எங்கள் பிரைனியா வாசனைத் தைலம் உங்கள் நரை மயிருக்கு இயற்கையான கரு வர்ணத்தை அளிக்கிறது. மூளைச் சோர்வை ஓட்டி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. நரை மயிர் கொஞ்சமாக இருந்தால் ரூ 2—8—0 அதற்கு மேற்பட்டிருந்தால் ரூ.3—8—0 எல்லாம் நரையாயிருந்தால் ரூ.5—0—0.

N. B. பார்சலில் எங்கள் பார்மஸியின் பெயர் இல்லாவிட்டால் அதை வாங்காதீர்கள்.

பீகார் மாகாண மாஜி மந்திரி குரு ஷலாய்லால் எழுதுகிறார்.

பிரைனியா தலை மயிர்த் தைலத்தை உபயோகித்து, பயனடைந்தேன். குணப்படுத்தும் தன்மை நிறைய இருக்கும் இம் மருந்து மூளையைக் குளிர்ச்சியாக இருக்கச் செய்வதுடன் தலை வலியையும் உடனே போக்குகிறது. ஸ்நானம் செய்த பிறகுங்கூடத் தைலத்தின் மணம் போவதில்லை. இதைப் போன்ற தைலத்தை நான் பார்த்ததே இல்லை. நரை மயிருக்கு இது மிகவும் உபயோகமானது

Baidya Raj Brij Kishore Ram
RANIGUNJ P. O.
(BURDWAN)

விசேஷ சலுகை

மிகவும் குறைந்த விலையில் சிறந்த "ஸ்விஸ் மேக்" கைக் கடிகாரம். அனுபவ பூர்வமான திறமை வாய்ந்தது. மிக உயர்ந்த ரகக் கருவிகளால் ஆக்கப் பெற்றதும் ஒவ்வொன்றும் 3 வருடங்களுக்கு உத்தரவாதமுள்ளனவும் 'பிளாஸ்டிக பாண்ட்' உடன் கூடியது.



No 113—வளைவு வடிவம்.

பிரகாசமான க்ரோமியம் கேஸ்	...	Rs. 40/-
உயர்ந்த ரகம்	...	Rs. 45/-
ரோல்ட் கோல்ட் கேஸ் (10 வருட கியாரண்டி)	...	Rs. 60/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 75/-
15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட்	...	Rs. 90/-

No. 114—டாலிம்ஞு’ வடிவம்.

பிரகாசமான க்ரோமியம் கேஸ்	...	Rs. 42/-
உயர்ந்த ரகம்	...	Rs. 46/-
ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி)	...	Rs. 62/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 76/-
15 ஜுவல்ஸ ரோல்ட்கோல்ட் கேஸ்	...	Rs. 92/-



No. 115—மெல்லிய தட்டை வடிவம்

க்ரோமியம் கேஸ்	...	Rs. 24/-
,, உயர்ந்த ரகம் (7 ஜுவல்ஸ்)	...	Rs. 30/-
15 ஜுவல்ஸ் க்ரோமியம் கேஸ்	...	Rs. 38/-
,, ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி)	...	Rs. 75/-
,, வாடர் புருப் க்ரோம	...	Rs. 75/-

No. 116—சமகோணச் சதுர வடிவம்.

க்ரோமியம் கேஸ்	...	Rs. 38 -
,, (உயர்ந்த ரகம்)	...	Rs. 42/-
15 ஜுவல்ஸ க்ரோமியம் கேஸ்	...	Rs. 65/-
,, ரோல்ட் கோல்ட் (10 வருட கியாரண்டி)	...	Rs. 85/-

ஸ்திரீகளின் கைக்கடிகாரம்

மேற்கண்ட எவ்வித வடிவிலும் கிடைக்கும் (12½% அதிகப்படி)

அலாரம் டைம்பீஸ்
Rs. 18/-. உயர்ந்த ரகம Rs. 22/-

பாக்கிங், தபால் செலவு வேறு.
மேற்கண்டவற்றில் இரண்டு வகைகளுக்கு ஆர்டர் செய்பவர்களுக்கு தபால்செலவு முதலியன இல்லை

PIONEER WATCH CO.
Post Box No. 11428, CALCUTTA.
Show Room 318A, Chittaranjan Avenue.

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.

12A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

- நிச்சயமாகத் தவருது பலனளிக்கும் -
சில மருந்துகளை அறிமுகப்படுத்துகிரேம்

விமலா மாத்திரைகள் நெ. 1:

பலவீனம், நரம்புத் தளர்ச்சி, இதர நரம்பு, மனக் கோளாறுகள், ஸ்பெர்மடோரியா, தூக்கமின்மை, ஸ்வாசகாசம், மூல ரோகம், ரத்தக் கட்டிகள், கிரந்தி வீக்கம், புண், படை, ஸ்திரீகளின் மர்ம வியாதிகள், அஜீரணம், பிளவை முதலியவற்றை நிவாரணம் செய்யக்கூடியவை.

விமலா மாத்திரைகள் நெ. 2:

சகலவிதமான ஜ்வரங்கள், குதக வாய்வுகள், கீல் வாய்வுகள், கபம், இடுப்புப் பிடிப்பு, குஷ்டம், துர்நாற்றத்துடன் கூடிய ரணங்கள், காதில் சீழ் வடிதல், பீனிசம், வீக்கம் முதலியவற்றிற்கு.

வெண் குஷ்டத்திற்கு மருந்து:

அநேக வைத்தியர்களால் குணப்படுத்த முடியாதென்று கருதப்படும் வெண் குஷ்டத்திறகு இம் மருந்து உத்தரவாதமுள்ள சிகிச்சை அளிக்கிறது.

'எலீஷியம்' பாம்:

மெலவியலாருக்கு ஏற்படக்கூடிய எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவதால் இதை ஸதிரீகளின் உற்ற நண்பர், தோழன் என்று இதற்குச் சொல்லலாம்.

காச (ஆஸ்த்மா) நிவாரணி:

குறித்த காலங்களில் வருகிற காசநோயைக் கண்டிக்க இருவேளை மருந்தே போதும்.

அக்னி எண்ணெய்:

கீல்வாதம், சூலைக்கட்டு, தீவிரமான பக்ஷவாதம் முதலிய தீராதெனக் கருதப்படும் வியாதிகளை நிரந்தரமாக அக்னி எண்ணெய் நிவர்த்திக்கும்

கபக் கோளாறுகளுக்கு 'பேடண்ட்' மாத்திரைகள்:

இருமல், மார்ச்சளி, காசம் (ஆஸ்த்மா) முதலிய வியாதிகளை உடனே போக்கடிக்கும. தீங்கற்றவை ஆகையால் எந்நேரமும் எந்நிலையிலும் உபயோகிக்கலாம்.

இன்னும் அநேக அற்புதத் தயாரிப்புகள் உள. எங்கள் கேட்லாக்குக்கு எழுதவும். பிரதிநிதிகள் இல்லாத பிரதேசங்களில் ஏஜண்டுகள் தேவை.

KAVIRAJ N. C. MUKHERJI, Baidyasastri,
10, Fakir Haider Lane, Kalighat, Calcutta 26.

பொருளடக்கம்

சர்வதாரி மலர் 7 | ஆனி இதழ் 11

நிஜாம் தர்பார் 8

ஸங்கீத பிராதுகள் 10
கலாதாஸன்

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 14
ராமய்யா

பெயர்ச் சண்டை 23
தையல்

சங்கப் பலகை 34

உழைக்கப் பிறந்தவள் 37
நிதி

மசி 41
ஆர். கே. விசுவநாதன்

நடன கலா 45
கே. சுந்தரம்மாள்

உள்ளத்தின் உயரம் 64
வே. ரங்கராஜன்

மயக்கமும் மனோவியாதியும் 69
நா. கி. நாகராசன்

பத்மினி 73
டாக்டர் வே. ராகவன்

பேரொலிப் பாளையத்தின் அதிர்ஷ்டம் 78
கி. ஸந்தானம்

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயாகள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே, அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

காவேரி

சர்வதாரி மலர் 7 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | ஆனி இதழ் 11

நிஜாம் தர்பார்

என்ன இது நிஜாம் தர்பாரா? என்று தான்தோன்றித்தனமாக நடத்தும் நிர்வாகத்தைக் குறித்து மக்கள் கேட்பது வழக்கம். நவீன காலத்தில் சர்வாதிகாரிகள்கூட, பெருவாரியான மக்களுடைய நன்மைக்குப் புறம்பாக எதையும் செய்யத் துணிவதில்லை. தேச நலனை உத்தேசித்துத் தான் ஹிட்லரும் முஸலீனியும் போர் புரிந்தார்கள். இன்று ருஷ்யாவில் சர்வாதிகாரம் நடக்கிறது என்றால் ஸ்டாலின் தம் சொந்த ஆதிக்யத்தை நிலைநாட்டுவதற்கல்ல. கம்யூனிஸ்ட் அரசியல், பொருளாதார அமைப்பு, ருஷ்ய மக்களின் நலனை அதிகரிக்கச் செய்யச் சாலச் சிறந்தது என்று பூரணமாக நம்பி, அதைத் தம் முழுப் பலத்தினாலும் அமல் நடக்கும்படி செய்து வருகிறார். அங்கும் மக்களுடைய மனப்போக்கை உணர்ந்தே செய்வதாகப் பறைசாற்றப்படுகிறது. ருஷ்ய மக்களுடைய வாக்கைப்பெற்றுத்தான் பதவி வகித்து நடத்துவதாகச் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஹைதராபாத்தில் மட்டும் தனி ஆதிக்யம். சென்ற நூற்றாண்டில் இருந்து வந்த கொள்கைப்படி நிஜாம் தர்பார் நடந்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டில் உலகிலேயே நாம் கண்டிராத ஓர் ஆட்சி முறை அங்கு நடந்து வருகிறது.

நிஜாம் ராஜ்யம் மோகல் சக்கரவர்த்தியின் ஒரு துரோக கவர்னரால் அமைக்கப்பட்டது. டில்லியிலும் லக்னோவிலும் மோகல் ராஜ்யம் சூன்யமாய்விட்ட பின்னர் இந்திய முஸ்லிம்கள் இந்த ஹைதராபாத் மன்னரை இஸ்லாமிய பரம்பரைக்குப் பெரிய தூணைக் கருத ஆரம்பித்தனர். ஆனால் ஹைதராபாத்திலுள்ள மக்களில் பெரும்பாலோர் அவ்வரை அப்படிக் கருதவில்லை.

ஹைதராபாத்தில் ஒரு கோடியே அறுபது லக்ஷம் மக்கள் வசிக்கிறார்கள்; இதில் முஸ்லிம்களின் ஜனத்தொகை இருபத்து ஐந்து லக்ஷம். ஜனத்தொகையில் பாதிக்கு மேல் தெலுங்கு பேசுபவர்கள். ஹிந்தி மராத்தி முதலிய பாஷைகள் பேசும் மக்கள் 35 சதம். இருபத்து ஐந்து லக்ஷம் முஸல்மான்கள் பேசும் பாஷையை எஞ்சியுள்ள நூற்று முப்பத்து ஐந்து லக்ஷ மக்கள் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. முஸல்மான்கள் ஆளும் ஜாதியினர் என்றும் ஹிந்துக்கள் ஆளப்படும் ஜாதியினர் என்றும், எனவே ஆளும் ஜாதியினரின் பாஷையான உருது அரசாங்க பாஷையாக அமைக்கப் பட்டிருப்பதோடு, அரசாங்கத்தில் பெருவாரியான உத்யோகங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. இந்தியாவும் பாகிஸ்தானும் விடுதலை அடைந்தும் ஹைதராபாத்தில்சிக்கியுள்ள 135 லக்ஷம் ஹிந்துக்கள் நிஜாமின் அடிமைகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

நிஜாம் சர்வாதிகாரத்தில் அவருடைய மக்களுக்குப் பெருவாரியாகத் தலையிட உரிமையில்லை. அநீதிகளுக்கும் அதிக்கிரமங்களுக்கும் இருப்பிடம் இன்று நிஜாம் தர்பார்.

இந்த ஆட்சிக்குக்கையாளாக ஹைதராபாத்தில் ஓர் ஸ்தாபனம் இருந்து வருகிறது. அதன் பெயர் இதீஹாதுல்—முஸ்லிமீன் — முஸ்லிம்களின் சங்கம். அதன் தலைவர் லக்னோவைச் சார்ந்த ஓர் வேலையில்லா வக்கீல் ஹாஜி காஸிம் ரஸ்வி. இந்த ஸ்தாபனம் தான் இன்று நிஜாமின் கொள்கைகளை வகுத்து வருகிறது. 1947-ல் காலஞ்சென்ற நவாப் சர்தார் யார் ஜங் தலைமையில் ஓர் அஞ்சுமானாக ஆரம்பமாகி, இன்று மக்களைக் கதிகலங்கச் செய்யும் கொடிய அரசியல்

ஆயுதமாக மாறிவிட்டது. இந்த ஸ்தாபனத்தின் நோக்கம்—ஹைதராபாத் என்னும் அரசராதிக்கத்திற்குட்பட்டுத்தான் இருக்க வேண்டும், அஸப் ஜாகி வம்சத்தினர்தான் இங்கு அரசராக வரலாம், இன்று முஸல்மான்களுக்கு உள்ள சலுகைகள் எதையும் எந்த அரசியல் அமைப்பும் பாதிக்கக்கூடாது, சட்டமன்றங்களிலும் மற்ற ஸ்தல ஸ்தாபனங்களிலும் முஸல்மான்கள்தான் பெருவாரியான பிரதிநிதித்வம் பெற்றிருக்க வேண்டும், உருதுதான் ராஜாங்க பாஷையாக இருக்க வேண்டும்—என்றெல்லாம் வற்புறுத்தி வருகிறது.

தம்முடைய சர்வாதிகாரம் நீடிக்க இதிஹாத் முஸ்லிமானிதான் வழி என்று அதைப் பூரணமாக நம்பி, தர்பார் நடத்தி வருகிறார் நிஜாம். ஹிந்து மக்களைக் கொள்ளை கொலை முதலிய துன்பத்திற்கு ஆளாக்கிப் பயமுறுத்தி ஓடச் செய்து வருகிறார்கள்.

நவீன இந்தியாவில் நிஜாம் தர்பார் இருக்க முடியாது என்று இந்தியா கவர்மெண்டார் எடுத்துச்சொல்லி வருகிறார்கள். ஆனால், கட்டுக்கடங்காமல் மத வெறியில் மூழ்கி நிஜாம் கவர்மெண்டார் பொறுப்பாட்சி ஏற்படுத்தஇசையவில்லை. மக்கள் அவதிப்படுகிறார்கள். இதிஹாத் தலை விரித்தாடுகிறது. நவீன ஆயுதங்களைத் தாங்கி வெளிமுஸ்லிம் தேசங்களிலிருந்து கள்ளத்தனமாக வரவழைத்து வைத்திருக்கும் தடியர்களின் உதவியைக் கொண்டு மக்களை விரட்டி அடித்து வருகிறார்கள்.

இந்தியா கவர்மெண்டார் இவ்வட்டூழியங்களைத் தாங்காது தங்கள் படைகளை ஹைதராபாத்தைச் சுற்றிலும் அமைத்து வைத்திருக்கிறார்கள். ஆயினும் காலதாமதம்தான் மிச்சம். நிஜாம் வழிக்கு வருவதாயில்லை. சண்டைக்கு ஆயத்தமாகிக் கொண்டு வருகிறார் என்று தெரிகிறது. தமக்குப் பக்கபலமாகப் பாகிஸ்தான் வரலாம் என்று ஹைதராபாத் எதிர்பார்க்கிறது என்று தெரிகிறது. இந்தியா கவர்மெண்டார் இதை உணர்ந்து முன் கூட்டியே ஜாக்கிரதையாக இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

ஹைதராபாத்தை 'ப்ளீட் ஸ்கிரீக்' தாக்குதலால் சரணடையச் செய்வதே இனி எஞ்சியுள்ள முறை. நிஜாம் தர்பார் நியாயத்திற்கும் வாதத்திற்கும் இசையாத தர்பார். அவர்கள் புரிந்து கொள்ளும் பாஷையில் அதன் மீது கை வைத்தால்தான் ஹைதராபாத் மக்களுக்குக் கதி மோக்ஷம் பிறக்கும். காலதாமதத்தால் வீணுக ஹிந்துக்கள் அவதிக்குள்ளாக நேரிடுகிறது. பாகிஸ்தான் சேஷ்டை செய்தால் அதைச் சமாளிக்க வகை செய்துகொண்டு ஹைதராபாத் நியாய வழியில் நடக்கச் செய்வதே பொருத்தமாகும். இதை இந்திய கவர்மெண்டார் உடனே செய்வார்கள் என்று நம்புகிறோம்.

ஆண்டு மலர்

ஆவணி நெருங்க நெருங்க வாசகர்கள் நமது எட்டாவது ஆண்டு மலர் வெளிவரும் தேதியை ஆவலுடன் எதிர்பார்ப்பதோடு, அதன் அம்சங்கள் என்ன, விலை என்ன, சென்ற வருடத்தைவிட அதிக கவர்ச்சிகரமாக இருக்குமா என்றெல்லாம் நமக்குக் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள்.

பல பிரபல எழுத்தாளர்களும் ஓவியக்காரர்களும் இவ்வருஷ மலரை நறுமணம் கமழச் செய்வார்கள் என்று உறுதி கூறமுடியும். இப்பொழுதுதான் மொட்டு கிளம்பியிருக்கிறது. அது விகசிக்க இன்னும் கொஞ்சம் நாள் பிடிக்கும். அதன் தன்மையைப் பற்றிய விவரங்களை அடுத்த இதழில் பிரசுரிக்கச் சாத்தியமாகலாம் என்று நம்புகிறோம். இம் மலர் புதிய முறையில் அமையப் பெறும் என்று மட்டும் முன்னதாகவே கூற இயலும்.

ஸங்கீத பிராதுகள்

கலாதாஸன்

கலா ஸாம்ராஜ்யத்தில் ராஜ ஸபை கூடுகிறது. அரசன் கலாலோலன் ஸிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். பல கலைகளைக் குறித்து நியாயம் எடுத்துக்கூற, பல மஹான்கள் கூடியிருக்கிறார்கள். ஸங்கீதத்தைப்பற்றி எடுத்துச் சொல்ல நாரத ரிஷி வந்திருக்கிறார். அன்று இசை யுலக வழக்குகளைக் கேட்டு நியாயம் தீர்மானிக்கும் தினம்.

அர: நாரத முனி வந்தாய் விட்டதா? ஸங்கீத வழக்குகளை எடுக்கலாமா?

நார: அரசே, இதோ ஸந்நத்தனாயிருக்கிறேன். தொடங்கலாம்.

அர: யாரங்கே, நாதப்பிரியா, வழக்குக் கொண்டுவந்திருக்கிறவர்களை ஒவ்வொருவராய் அழைத்துவா.

(முதலில் மூக்கறுபட்டு ரத்தம் சொட்டும் ஒரு ஸ்திரீ வருகிறாள்—ஸபையில் அனுதாபத்தைக் குறிக்கும் ஆரவாரம் ஏற்படுகிறது.)

அர; யாரது? உனக்கென்ன தீங்கு? யாரிழைத்தது?

ஸ்திரீ: அரசே, நான்தான் தோடி ராக தேவதை. முன் காலங்களில் என்னை முறைப்படி பாடகர்கள் பூஜித்து வந்தார்கள். ஓங்கும் சோபையுடன் விளங்கி வந்தேன். சமீப காலத்தில் என்னைக் கண்டபடி சின்ன பின்னப்படுத்துகிறார்கள். எனது அங்கங்களைச் சரியான அளவுடன் உருவப்படுத்தாமல், ஒரு பாகத்தைப் பெரிதாக்குகிறார்கள். முக்கியமான சில அம்சங்களை இடம் தெரியாமல் குறைத்து விடுகிறார்கள். என் உருவத்தில் பல அங்க ஹீனங்கள் ஏற்படுகின்றன. நேற்று ஒரு வித்வான் தோடி பாடுகிறேனென்று சரியான ஸ்வர ஸ்தானங்களைக் கமக சுத்தமாகப் பிடிக்காமல் 'பாடி' என் மூக்கை யறுத்து என் உண்மையான பாவத்தையே கெடுத்துவிட்டான். இப்படியும் நேர்ந்ததே! இதற்கு நிவாரண மொன்றுமில்லையா? நாரத மஹரிஷே, தாங்களும் இருக்கிறீர்களே, இதற்கு விமோசனம் என்ன?

அர: நாரதரே, என்ன சொல்லுகிறீர்?

நார: அரசே, அவள் சொல்வது முற்றும் உண்மைதான். காலம் அப்படி ஆய்விட்டது.

அர: சரி, இதற்குத் தக்கதண்டனை என்ன? ஏதாவது சொல்லும்.

நார: (யோசித்து) இவள் மூக்கை யறுத்துவிட்டான் அந்தப்பாவி. சரி, அவன் தேகத்தில் ஒரு வியாதி ஏற்படும். அது உள்ளுக்கு மருந்து சாப்பிட்டுச் சொஸ்தமாகாது. கடைசியில் சஸ்திரக் கிரியை கொண்டுதான் அந்த வியாதி குணமாகும். அதுவே தக்கதண்டனை.

அர: அடுத்த வழக்கு யாருடையது? நாதப் பிரியா, அழைத்து வா.

(கோரமான ஒரு உருவம் வருகிறது. சில பாகம் பெண்ணாகவும், சில பாகம் ஆணாகவுமிருக்கிறது. சில பாகங்கள் பாம்பைப்போல் தோன்றுகின்றன. முகத்தில் இதற்கு முன் வந்த தோடி தேவதையின் ஜாடையும் காண்கிறது. எல்லோரும் பிரமிக்கிறார்கள்.)

நார: ஐயோ, இதென்ன கோரம்! அம்மா, நீ சாருகேசி யல்லவா? இதென்ன அக்ரமம்? அடையாளமே தெரியவில்லையே. நீ அதிகமாக எங்கும் வெளியில் போகப்பட்டவள் அல்லவே: ஒதுங்கி உள்ளேயே பர்தாவில் கொண்டவளாச்சே. உனக்கெப்படி இந்தக் கதி நேர்ந்தது? ஒரு பக்கம் பார்த்தால் தோடி ஜாடை கொஞ்சமிருக்கிறது. வேறு சில பாகங்களில் சங்கராபரணத்தின் தோற்றம் காண்கிறது. இதென்ன விந்தை!

சாரு: சுவாமி நாரதரே, என் கதி இப்படி ஆய்விட்டது. எனக்கு ஏற்பட்ட ஸ்வயரூபம் போய் என்னைச் சங்கர தோடித் துவையலாக்கி விட்டார்கள். தோடியையும் சங்கராபரணத்தையும் பாடி, நடுவில் பஞ்சமத்தில் ஒட்டவைத்து, என்னைச் சங்கர தோ யாக்கி விட்டார்கள். நாளிதுவரையில் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தா னிருந்தேன் அதிகமாக ஒருவர் கையிலும் அகப்படாமல். தியாக பிரம்மம் ஒருவர்தான் என்னினிமையான நிலையை அறிந்தார். அவருக்குப் பிரத்யக்ஷமானேன். இப்போது சிலர் என்னை வெளியிவிழுத்து உருத் தெரியாமலாக்கி, சந்தி சிரிக்க வைக்கிறார்கள். ஆனால் சிலர் என்னினிமையான பாவத்தைச் சர்ச்சை செய்து அறிந்து, என் ஸ்வரூபத்தைக் கெடுக்காமல் பாட முயன்று வருகிறார்கள். ஆனால் இத்தகையவர்கள் மிகவும் குறைவு. பொதுவாக என்னை உருத் தெரியாமல் கெடுப்பதுதான்

சகஜமாய் விட்டது. என் கதி இப்படி ஆய் விட்டது.

அர: என்ன நாரதரே?

நார: வாஸ்தவம், வாஸ்தவம். அவள் சொல்லுவது உண்மையே. சாருகேசிக்கு ஒரு தனி பாவமுண்டு. அதை நன்குணர்ந் தார் தியாக பிரம்மம். அவருடைய கீர்த்த னத்தில் எங்கேயாவது தோடி பாவமோ சங்கராபரண பாவமோ இருக்கிறதோ, இல்லை. இக்காலத்தில் பலர் அந்த உண் மையை உணராது சாருகேசியை இந்தக் கோலத்துக்குக் கொண்டுவந்து விட்டார்கள். பாவம், மஹா பாவம்.

அர: இதென்ன அக்ரமம்! ராக தேவதை களை இப்படி இம்சிப்பதா? இதற்குத் தக்க தண்டனை புரிய வேண்டும்.

நார: (சற்று யோசித்து) அரசே! இந்தப் பாவத்திற்குத் தக்க தண்டனை அந்தப் பாவி களே அனுபவிக்கிறார்கள். இது கலிகால மல்லவா? கைமேல் பலன். தேகத்தில் வியாதி உண்டாகி அதற்காகத் தினம் தினம் தேகத்தில் ஊசி குத்தி மருந்து ஏற்றுகிறார் கள். அதுவே போதுமான தண்டனை.

அர: அடுத்த வழக்கு!

(ஒரு அழகான பெண் சிறந்த ஆண் ஆடை ஷெர்வானியில் வருகிறாள். எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

நார: இதென்னம்மா, மோஹனா, இதென்ன வேஷம்?

பெண்: என்னை அப்படிக் கூப்பிடாதீர் சுவாமி. எனக்குப் பெயர் மோஹன பூப் பாபுஜீ. நான் பெண்ணாக, அடக்க ஒடுக்க மாக, நயமாக இருப்பது சிலருக்குப் பிடிக்க வில்லை. எனக்கு நிர்ப்பந்தமாக இப்படி யெல்லாம் அலங்காரம் செய்துவிட்டார்கள். எனக்கு இது பெரிய ஹிம்சையாக இருக் கிறது. ரொம்ப கஷ்டப்படுகிறேன்.

நார: அரசே, இந்த மாதிரி இந்த உத்தம மான மோஹன தேவதையை இம்சைப் படுத் தும் அறிவீனர்கள், ஆண்களாயிருந்தால் தங்கள் ஆண்மையிழந்து பெண்களுக்கடிமை யாகித் திண்டாடட்டும்; பெண்களாயிருந்தால் சாதாரணமாக மனிதர்க்குள்ள ஆண் பெண் உணர்ச்சிகளில்லாமல் உணர்ச்சியற்ற கட்டை கள் போலிருக்கக் கடவர்.

அர: அதுதான் சரி. அப்புறம் யார் வந்திருக்கிறார்கள்?

(நாலு ஐந்து பெண்கள் வருகிறார்கள். அவர்கள் மாசடைந்த உடைதரித்து, முகத் தில் உற்சாகமில்லாமல், நெற்றியில் பொட்டில்லாமல், தூங்கி வழிந்து கொண்டு வருகிறார்கள்.)

நார: இதென்ன, கும்பகர்ணனது தொழிலை ஏற்றுக்கொண்டீர்களா? யாரது? ஓஹோ, நீ தேவகாந்தாரி அல்லவா, நீ புன்னாகவராளி, நீ ஸ்ரீராக தேவி, அது நாட்டக் குறஞ்சி, அப்புறம் பூபாள தேவதை—ஊம், ஏன் இப்படி சோர்ந்து நிற்கிறீர்கள்?

தேவதைகள்: மஹரிஷே. தங்களுக்குத் தெரியாததுண்டா? நாங்கள் சொல்லவும் வேண்டுமா? ஒரு காலத்தில் எங்களுக்கிருந்த கௌரவமும், பிரசாரமும் தங்களுக்கு நன்கு தெரியும். சமீப காலத்தில் எங்களை அவ்வளவாக ஆதரிப்பதில்லை. எங்கள் ராக நகரத்தில் சில புதியவர்கள் வெளி வந்திருக் கிறார்கள். யாரோ ஷம்ஸ ப்ரமரியாம், புஷ்ப லதிகையாம், ரதிபதி ப்ரியாவாம், சிலாந்தியாம், இன்னும் பல நவீன ஆட்கள், புதிய நடையுடை பாவனைகளில் தோன்றி யிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் இப் போது காலம்; எங்கும் பிரசாரம், வரவேற்பு எல்லாம். எங்களைக் கவனிப்பதில்லை. நாங்கள் இப்படி சோர்ந்து நிற்கிறோம்.

நார: ஓஹோ, அப்படியா. அதனால் பாதக மில்லை. அந்தந்தக் காலத்துக்குத் தக்கபடி புதிய புதிய உணர்ச்சிகளும், நோக்கங்களும் பழக்க வழக்கங்களும் ஏற்படுவதுபோல் ஸங்கீத லோகத்திலும் ஏற்படுவது இயற்கை தான். ஆனால் உங்களுக்கு இப்படி நிரா தரவு செய்வது குற்றம்தான். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்தப் புதிய வழி களைக் கண்டு பிரமை கொள்வது அதிக நாளைக்கு நிற்காது. உங்களுடைய ஸ்தானம் உங்களுக்கென்றும் உண்டு. காலக்ரமத்தில் உண்மையான தனிப் பெருமை யுள்ள ராகங் கள் ஒரு காலும் அழியா. அவைகளை அழிக் கவும் முடியாது. நடுவில் ஏற்படுகிற தாத் காலிக மாறுதல்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

(அவர்கள் போகிறார்கள்)

அரசன்: வேறு யாராவது உண்டா?

(முகத்திலும் புஜங்களிலும் காயம் பட்ட தழும்புகளுடன் ஒரு பெண் மெல்ல நடந்து வருகிறாள்.)

நார: யாரம்மா நீ, ஓ! நீலாம்பரி யல்லவா? இதென்ன தேகத்திலெங்கும் தழும்புகள்?

நீலா: சுவாமி, என்னையும் என்னுடைய தன்மையையும் தாங்கள் நன்றாயறிந்தவர்கள். மிருதுவான தேகம் படைத்தவள், காடின்யம் ஒரு விதத்திலும் தாங்க முடியாதவள். என்னை யாதரிப்பவர்கள் மிருதுவாக, சாவதானமாக, அவசரமில்லாமல் அதட்டல் பதட்டம் ஒன்றுமில்லாமல் காந்தார மத்யம ஸ்வரங்களை ஜாக்கிரதையாகக் கமகமாகப் பிடித்துப் பாட வேண்டும். சிலர் முரட்டுத்தனமாகப் பதட்டத்துடன் பாடி என்னைச் சின்னா பின்னப் படுத்தி விட்டார்கள். எனது மிருதுவான மேனியில் காயங்களேற்பட்டு விட்டன.

நார: சரிதான். அப்படித்தான் சிலர் அக்கிரமம் செய்கிறார்கள். அவர்களுக்குத் தக்கபடி தண்டனை விதிக்க வேண்டும். அவர்கள் ருசிகரமான உணவு பதார்த்தங்களை யனுபவிக்க விடாத வயிற்று வலியாலோ, நல்ல இனிமையான நாதத்தைக் கேட்க ஒட்டாமல் தடுக்கும் காது ரோகத்தாலோ கஷ்டப்படுவார்கள்.

அர: வேறு யாராவது உண்டா?

(எலும்பும் தோலுமாக ஜீவப்ரேதம் போன்ற ஒரு உருவம் வருகிறது. சபையில் பயங்கர ஆரவார மேற்படுகிறது.)

நார: இது யார்? எனக்கே தெரியவில்லையே! வெறும் எலும்புக்கூடாக அல்லவா தோன்றுகிறது. அடையாளமே தெரியவில்லையே!

உருவம்: என்னைத்தான் சுபபந்துவராளி என்பார்கள். அந்த நிர்ப்பாக்யை நான் தான். என்னுடன் கூடப் பிறந்தவர்கள் என்னுடைய பிரதிபிம்பம் என்று சொல்லக்கூடியவர்கள். வட தேசங்களில் வெகு அழகாகப் பெருமையுடன் விளங்குகிறார்கள். என் கதி இப்படியாச்சுது. தென் இந்தியாவில் குடி புகுந்ததற்கு இந்தக் கதியா எனக்கு வர வேண்டும், ஸ்வாமி. கேவலம் ஸ்வரங்களைக் கொண்டு பாவமில்லாமல் பாடினால் எங்களுக்கு உயிரேது, ஒளியேது. ஸ்வர ஜாலம் வெறும் எலும்புக்கூடு மாதிரிதானே. பாவத்தைக் கொண்டுதானே எங்களைப் போஷிக்க முடியும், எங்களுக்கு உயிர் கொடுக்க முடியும் எங்களுக்குள்ள தனிச் சோபையை வெளிப்படுத்த முடியும். ஸ்வரங்களை மட்டும் மேலும் கீழுமாக ஜீவனில்லாமல் சப்தப் படுத்தினால் எங்களுக்கு என்ன பெருமை, என்ன தனி நிலை ஏற்படும். அங்கே இங்கே ஒருவர் இரண்டு பேர்கள் ஏதோ சிரத்தை எடுத்துக்கொண்டு கொஞ்சம் கவனமாகப் பாவத்தைக் கொடுத்துப் பாட முயலுகிறார்கள். அதனால்தான் இந்தத் தோலாவது எலும்பை மூடிக்கொண்டிருக்கிறது. அதுவுமில்லாமல் போனால் தனி எலும்புக்கூட்டைத்தான் பார்ப்பீர்கள்.

நார: நீ கூறுவது உண்மையே. பாடகர்களுக்கு இந்த விஷயத்தைப்பற்றிச் சரியான சர்ச்சைகள் செய்யச் சௌகரியமில்லை போலும். அநேகர்களுக்கு நீ கூறின விஷயத்தின் உண்மை இன்னும் விளங்கவில்லை. ராகமென்றால் ஸ்வர ஜாலம் என்று தவறான அபிப்பிராயமுள்ளவர்களும் இருக்கிறார்கள். உனக்கு நல்ல காலம் வரும். நீ நன்றாகச் சோபித்து எல்லாராலும் போற்றப்படும் காலம் சீக்கிரம் வரும்: கவலைப்படாதே. ஏற்கனவே சிலர் உன்னுடைய உண்மையான பாவத்தை உணர்ந்து உன்னைப்பூஜிக்கத்தொடங்குகிறார்கள். சஞ்சலம் வேண்டாம்.

அர: இன்னும் யாராவதுண்டா?

(ஒரு தேவ ஸ்திரீ அநேக பணிப் பெண்கள் சூழ ஸபைக்கு வருகிறாள். உடனே நாரதர் முதலிய ஸகலரும் எழுந்து வணங்குகிறார்கள்.)

நார: ஸங்கீத தேவதையே இங்கு வந்து எங்களுக்குத் தரிசனம் கொடுத்தது எங்கள் பெரும் பாக்கியம்.

அர: நல் வரவு கூறுகிறோம். ஆசனத்தில் அமரவேண்டும். என்ன விசேஷமோ தாங்களே நேரில் வரும்படியாக நேர்ந்ததற்கு?

தே: நானே நேரில் வந்து மன்றாடும்படி காலம் வந்து விட்டது, இனி இந்தப் பூலோகத்தில் தங்கியிருக்கலாகுமோ என்கிற சந்தேகமேற்பட்டுவிட்டது. தென் இந்தியாவில் நமக்கு ஏதோ இதுவரைக்கும் வசிக்கச் சௌகரியம் கொடுத்திருந்தார்கள். மற்றெங்கும் நான் எனது தன் ரூபத்துடன் என் நோக்கத்தைக் குலைக்காமல் நிற்க வசதி இல்லை. இக்காலத்தில் அந்தத் தென் இந்தியாவிலிருந்துகூட நம்மை விரட்டி விடுவார்களோ என்கிற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நான் கேவலம் செவிகளுக்குத் தாற்காலிக இன்பம் கொடுப்பதற்காக ஏற்பட்டவளல்ல, ஆத்மீக உணர்ச்சியை எழுப்பி ஜீவனுக்கு உகந்த பதவியைக் கொடுப்பதையே உண்மையான நோக்கமாகக் கொண்டவள் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். அந்த நோக்கத்தை இதுகாறும் எனது பக்தர்கள் அறிந்து என்னைப் போற்றிவந்தார்கள். ஆனால் சமீபகாலத்தி லேற்பட்டிருக்கும் சில புரட்சிகளால் என்னுடைய நிலையே குலைந்து போகுமென்கிற பயம் ஏற்பட்டுவிட்டது. என்னுடைய அந்தரங்கமும் நுட்பமுமான தத்வங்களை நன்கறிந்தவர்கள் சில பெரி

யார்கள்தான் அவர்கள்தான் உண்மையில் வித்வான்கள். பொதுஜனங்களாலித்தகைய ஸூக்ஷ்மமான விஷயங்களையறிய முடியாது. பொதுவாகத்தான் என் தன்மையை உணர முடியும். அப்படியிருக்க என்னையும் என்னுடைய தத்வங்களையும் குறித்துப் பொதுமக்கள் அபிப்ராயம் கூறுவது. அதற்கிணங்கத்தான் வித்வான்கள் அனுஷ்டிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது எத்தகைய மதியீனம் என்பது நான் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை. இதுபோலவே சிலர் என்னுடைய விசேஷங்களைக் குறித்து விமர்சனம் நடத்தத் தொடங்கி யிருக்கிறுர்கள். விமர்சனம் செய்வது நல்லதுதான். வித்தைக்கும் வித்வான்களுக்கும் நலம் தரலாம். ஆனல் சரியானபடி விமர்சனம் செய்யத் தக்கவர்கள் எவ்வளவுபேர். பத்திரிகைகள் மூலமாகவும், வேறு விதங்களிலும் ஸங்கீத விமர்சனம் செய்கிறவர்களில் எத்தனை பேருக்கு அதற்குத் தக்க பக்வம், ஞானம், அனுபவம், யோக்யதை முதலியவையுண்டு. அதுவும் இப்போது வெளி வருகிற இசைத் தட்டுகளைக் குறித்து, பிரசுரமாகும் அபிப்ராயங்களையும் விமர்சனங்களையும் கவனிக்கும்போது இனி இந்தப் பூலோகத்திலிருந்து என் கடையைக் கட்டிக்கொண்டு புறப்படலாமென்றுகூடத் தோன்றுகிறது. ஆனல், என் மனம் இன்னும் மன்ருடுகிறது. பாரத நாட்டிற்குரியதாயிருந்த பற்பல பெருமைகளை ஒவ்வொன்ருக இழந்த இந்த நாட்டில் ஸங்கீதம் என்ற ஒரு பெரும் சொத்தாவது இருக்கிறதே அதையும் விரட்டி விட்டால் இந்த நாட்டின் ஜீவன் என்ன பாடு படுமென்பதை மட்டும் உத்தேசித்துத்தான் நானும் எல்லாக் கஷ்ட நிஷ்டூரங்களையும் பொறுத்திருக்கிறேன். இதற்கு வழி என்ன? சொல்லும் நாரதரே.

நார: இது பெரிய விஷயம், திடீரென்று தீர்மானிக்க முடியாது.

அர: நாரதரே, ஆம். இது ரொம்பவும் முக்கியமான விஷயம்.

இன்று நேரமாகி விட்டது. இன்னெரு நாள் இதைக் குறித்துப் பேசித் தீர்மானிக்கலாம். அன்று நடன கலையைப்பற்றியும் சில பரிசோதனைகள் நடத்தலாம் என்று நினைக்கிறேன். அதற்கு ஸங்கீத தேவதை நடன கலா தேவதையையும் அழைத்துக் கொண்டு வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தே: ஆஹா, கட்டாயம் வருகிறோம்.

எங்கள் புதிய

வெளியீடுகள்

		ரு	அ.	பை.
1.	பட்டினிச் சாவு சாக மாட்டோம் (விகர்ணன்)	0	4	0
2.	மஹாத்மாவின் மணி மொழிகள் (என். ஆர். பத்மநாபன்)	0	8	0
3.	ஓர் நாள் இரவு (முத்துநாராயணன்)	0	10	0
4.	மீண்ட இந்தியா (என். ஆர். பத்மநாபன்)	0	14	0
5.	எழுத்தும் எழுத்தாளரும் (தி. ஜ. ர.)	1	0	0
6.	சைனு எங்கே போகிறது? (என். ராமநாதன்)	1	12	0
7.	மேடைக் கலை (ஆ. முத்துசிவம்)	2	0	0
8.	கலையும் கலை வளர்ச்சியும் (வ. ரா.)	2	0	0
9.	வாழ்க்கைச் சித்திரம் (வ. ரா.)	2	8	0
10.	மிருணாளினி (பங்கிம்சந்திரர்)	2	8	0
11.	புரட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயண் (கொடுமுடி ராஜகோபாலன்)	3	0	0
12.	தமிழ் உணர்ச்சி — சாதா	3	0	0
	— காலிகோ (சுத்தானந்த பாரதியார்)	3	8	0
13.	விஞ்ஞானமும் சமூகமும் (ப. கோதண்டராமன்)	3	8	0
14.	கவிதையும் வாழ்க்கையும் (ஆ. முத்துசிவம்)	3	8	0
15	மரகதம் (விக்டர் யூக்கோ)	5	0	0

கார்த்திகேயினி பிரசுரம்

இராமச்சந்திரபுரம் PO - திருச்சி ஜில்லா.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

தமிழ்ப்பாஷையில் பரிகாச வார்த்தைகளில் சிலவற்றிற்கு அர்த்தமே இல்லாமலிருக்கும்—ஒரு சிறுவன் ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, தற்புகழ்ச்சி செய்து கொண்டுவந்தால் அவனைப் பார்த்து, "நீ கிழிச்சே போடா" என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம். அநேக முறைகளில் அம்மாஞ்சி "கிழிஞ்சுதுபோ, கிருஷ்ணகிரி வரைக்கும்" என்று சொல்லி யிருக்கிறான்: கிழிவதற்கும் கிருஷ்ணகிரிக்கும் என்ன சம்பந்தமோ எனக்கு ஏற்படவில்லை. ஆனால் இந்த வசனம் மாத்திரம் பல முறைகளில் பல பேர் சொல்லிக் காதில் விழுந்திருக்கிறது. இன்னும் இம்மாதிரியான பலவகை ஏளன வசனங்களுமுண்டு. அத்தை பாட்டிகள் "என் வயித்தை அறுத்தாப்பலே யிருக்கு" என்பார்கள் — அல்லது "நான் வாக்கப்பட்டு குடித்தனம் பண்ணாப்பலே யிருக்கு" என்றும் சொல்லுவார்கள். இத்தனைவித வசனங்களையும் நமது தேச மக்களைப்பார்த்து, அநேக சந்தர்ப்பங்களை உத்தேசித்து, தற்காலத்தில் சொல்லலாம் போலிருக்கிறது. சுதந்திரம் வந்தபிறகு நாமெல்லோரும் நடந்து கொள்ளும் வகையும், செய்யும் வேலைகளும், "வாக்கப்பட்டு குடித்தனம் பண்ணுவதும்," கிழிக்கிற கிழிச்சலும், இரண்டு கைகளாலும் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனைவிடலாம்போலே தானிருக்கிறது என்கிறான் அம்மாஞ்சி. விஷயம் என்னவென்று கேட்பீர்களோ? கவனியுங்கள்.

அரசாங்கம் அயல் நாட்டாருடையதாகவிருந்த காலத்தில் நம்மில் பெரும் பாலருக்கு மனதில் குடிகொண்டிருந்த சஞ்சலம் முக்கியமாக எதைக் குறித்து? யோசித்துப் பதில் சொல்வோம். முதலாவது, இந்திய மக்களில் சமர்த்தர்கள் எவ்வளவோ பெயர் இருந்தும், மேன்மையும் கௌரவமும் வாய்ந்த பதவிகள் அவர்களுக்குக் கிடைக்காமல், வெள்ளைக்காரர்களே அந்தப் பதவிகளில் அமர்ந்திருந்தனர். இது பிரபுத்துவத்தில் மாத்திரமல்ல; வியாபார ஆபீசுகள், வர்த்தகசாலைகள், ரயில்வே அரசாட்சிகள், சர்வகலாசாலைகள். கல்லூரிகள், இது போன்ற சகல விசாரணைகளிலும் வெள்ளைக்காரர்களே அதிகாரத்திலிருந்து சட்டமும் சாம்ராஜயமும் செலுத்தி வந்தார்கள். இரண்டாவது, பொது ஜனங்களுடைய சம்பிரதாயங்களும், நடை, உடை பாவனைகளும் மேல் நாட்டாருடைய மனப்பான்மையைத் தழுவி இருந்தனவேயொழிய, சுதேசபாணியைத் தழுவி இருக்கவில்லை. மூன்றாவது, பலவிதத்திலும் சிறப்புக்குரிய இந்தியதேசப் பெரியோருக்கு நாம் அளிக்காத மரியாதைகளும், வினயங்களும், எவ்விதத்திலும் சிறப்புக்குத் தகாத வெள்ளையர்களுக்கு அளிக்கும்படியாக ஏற்பட்ட கர்மானுசாரம்—சில சந்தர்ப்பங்களில் இத்தகைய அனுபவம் துவந்தார்த்தங்களால் ஏற்பட்டது; ஆனால் வெகு சந்தர்ப்பங்களில் நம் மக்களின் அடிமைத்தனமான மனப்போக்கினாலேயே அனுபவங்கள் ஏற்பட்டனவெனலாம். இந்த மூன்றுவகைப்பட்ட சஞ்சலங்களும் சென்ற பத்து மாதங்களுக்குள் எவ்வளவு வரையில் தீர்ந்து வருகின்றனவென்று சிந்திப்போம்! அதன் பிறகு அம்மாஞ்சியின் ஏளன வசனங்கள் பொருத்தமுள்ளவையா என்று புலப்படுமல்லவா?

மேலே கூறிய முதலாவது சஞ்சலத்தைக் கவனிக்கும்போது, வெகு விஷயங்களில் நமக்குத் திருப்திகரமாகவே ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. கவர்னர் ஜனரல் பதவி முதல் அதிகார இலாகா தலைமைகள் வரை பெரும்பாலும் நம் நாட்டினரே தேர்ந்தெடுக்கப்பட்டனர். சுதந்திரத்துக்கு முன் ஜில்லா அதிகாரிகள் முதல் மாகாண அதிகாரிகள் உள்பட மத்திய பிரபுத்துவ அதிகாரிகள் வரை அனைவரும் மேல்நாட்டினராய் இருந்தமையால் எவனாயினும் சரி, பிரபு முதல் பிச்சைக்காரன் வரையில், மனு கொடுக்கும்படி நேரிட்டால் டவாலியிட்ட சேவகன் கொடுக்கைப் பிடித்துக்கொண்டு, குமாஸ்தாக்களிடம் கெஞ்சிக் கூத்தாடி, தலைமைக்குமாஸ்தாக்கள், சூபிரெண்டெண்டுகள், உதவிக் காரியதரிசிகள், காரியதரிசிகள் என்ற பலவகைப்படிகட்டுகளைத் தாண்டிக்கொண்டு, அதிகாரத்தலைவரையணுகி, காரியத்தைச்சாதிப்பது பகீரதப் பிரயத்தனத்துக்குரிய கஷ்டங்களும், விசுவாமித்ர தபசுக்குள்ள கோரப்பிரதிக்கினைகளும் அனுபவிக்கும்படியாயிருந்தன. இவையெல்லாம் இப்பொழுது மாறிவிட்டன. ஆனால் மாற்றத்தில் புதிய சங்கடங்கள் ஏற்பட்டு விட்டன. நம்முடைய ஆட்கள் வந்துவிட்டனரல்லவா என்கிற குதூகலத்தில், ஒழுங்கான சம்பிரதாயங்களைக் கைப்பற்றாமல் அதிகாரத்தை வகித்திருக்கும் மந்திரிகள், உத்தியோகஸ்தர் எல்லோரையும் அனுவசியமாகச் சங்கடப்படுத்துகிறோம். ஒரு சிறுவனுக்குச் சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொடுத்து விட்டால் கொல்லைப்புறம் போவதற்குக்கூட அதில் ஏறிக்கொண்டு செல்லுவானல்லவா? அது போலவே நமது மக்கள், மந்திரிகளை அலக்கடிக்கும் சங்கடம் சொல்லமுடியாது. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிக்கல்களாலும் பிடுங்கல்களாலும் அவர்கள், அமாவாசையன்று தர்ப்பணம் பண்ணி வைக்கும் புரோகிதர்கள் மாதிரி, மூலைக்கு மூலை ஓடிக்கொண்டு, சொன்னவற்றையே சொல்லிக்கொண்டு, வேளா வேளையில் சாப்பாடு இல்லாமல், சரியானபடி தூக்க

மில்லாமல், காலத்தைக் கழித்து வரு கின்றனர். அவர்கள் வீட்டில் எப்பொழுது பார்த்தாலும் கால்களைச் சுற்றிக் கொள்ள ஆட்கள்; ஆபீசுக்கு வந்தால் அப்படியேதான்; வெளியேறினால் இன்னும் அதிகம்; அவர்கள் தும்மினால் ஆபத்தான ஜலதோஷம் பிடித்து விட்டது என்பார்கள் பத்திரிகைகளில்; இருமினால் விபத்தான மார்சளி என்றும் கிளப்பி விடுவார்கள். ஆகக்கூடி ஓரே ஜல்லிக்கட்டு வைபவம்தான். பிரதம மந்திரி நேரு வாயிலும் பல்லிலும் ஈரமில்லாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார் டில்லியில். அவருக்குள்ள தொல்லைகள் வேறு யாருக்காவது இருந்தால் சரியான சீசம் தலைக்கு ஏறி முற்றிப் போயிருக்கும். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அவர் டில்லியிலிருந்து பஞ்சாய்ப் பறந்துகொண்டு "ஆசியா தூரக்கிழக்கு தேசப் பிரதேசங்களுக்குரிய ஐக்கிய நாட்டுப் பொருளாதாரக் கமிஷன்" திறப்பு நிகழ்ச்சிக்காக வந்துகொண்டிருந்தால், மதராஸிலிருந்தும், செட்டிநாட்டிலிருந்தும், மதுரையிலிருந்தும் "இங்கு வாரும், இங்கு வாரும், நாங்கள் வைத்திருக்கும் மசால்வடை காராப்பூந்தியைச் சாப்பிட்டு விட்டுப் போம், கொஞ்சம் காபி சாப்பிடும்," என்றெல்லாம் கூப்பிட்டு உபத்திரவப் படுத்தி, நேருஜீ தென் இந்தியாவில் திக்விஜயம் செய்யப்போகிறார் என்றும் விளம்பரப்படுத்தி விட்டால் அவரும் என்னதான் செய்வார்? பிரதம மந்திரியாவதற்கு முந்திதான் நாடாறு மாதம், காடு ஆறு மாதம் என்பது போல் வாழ்நாட்களில் பாதி சிறை வாசம் செய்து விட்டு, வெளியே வந்தபோதெல்லாம் ஜனங்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்கு வேண்டிப் பிரசாரத்திலேயே ஈடுபட்டுத் திரிந்தார். மந்திரி பதவி வகித்த பின்னுவது திரிந்தலைவதையும் பிரசங்கத்தையும் நிறுத்திக்கொண்டு அரசாங்கசேவையைச் செலுத்துவதற்கு அவருக்கு அவகாசம் கொடுக்காமல் பிய்த்துப் பிடுங்கினால் அவர் எப்படிச் சமாளிப்பார்? ஆதலால் தான் அவர் கோயமுத்தூர் பிரசங்கத்தில், "உங்களுக்குப் பிரீதி யாரிடம் உண்டோ அவரை இனி பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்காதீர்கள்" என்று வருத்தத்துடன் சொல்லிவிட்டார். இதை யுத்தேசித்துத்தான் அம்மாஞ்சி சில வேளைகளில் சொல்லுகிறான் "கிழிஞ்சுது டா கிருஷ்ணகிரி வரைக்கும், வெள்ளைக்காரன் வெளியேறி நம்முடைய ஆட்களே பதவிக்கு வர வேண்டும் என்று நாம் கேட்டதுதான் லாபம். நம்ம ஆளைப் படுத்தி வைக்கிற பாட்டைப் பாரு."

அரசாங்க முறையில் நம் நாட்டினர் பெரிய பதவிகளுக்கு வந்துவிட்டார்களேயொழிய, அரசாங்க அதிகாரத்துக்கு ஈடுபடாத விசாரணைகளில் இன்னும் இந்தியர்கள் சிற்றுள்ளாகவே இருந்து வருகின்றனர். அப்படியிருப்பதுதான் க்ஷேமம் என்றும் பொதுஜனங்களுக்கு அபிப்பிராயம் இருப்பதாகவும் தெரிகிறது. வியாபாரம், பொருளாதாரம், முதலிய விசாரணைகளில் வெள்ளையர்களே நிபுணர்கள் என்கிற கொள்கை மாறுவதற்கு வெகு வருஷங்களாகும் போல் காணப்படுகிறது. ஆகவே நமது தேசத்தின் தலையிலிருந்து மாத்திரம் வெள்ளையர் தொப்பி மறைந்ததே யொழிய, உடலிலெல்லாம் வெள்ளையர் சட்டையே அணியப்பட்டிருக்கிறது. யதார்த்தமாகவும், உருவகமாகவும், தற்கால ரீதி இப்படித்தானிருக்கிறது. கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் யோசித்துப் பார்த்தால் நான் சொல்லுவது விளங்கும். அதற்குப் பிறகு என் அபிப்பிராயப்படி நீங்களும் "ஆமாம், சார், உங்கள் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேண்டும்—கேவலம் மானக்கேடாக வன்றோ இருக்கிறது" என்பீர்கள்.

மேற்கூறிய சஞ்சலத்தில் இரண்டாவதை யெடுத்துக் கொண்டால் இந்த விஷயம் நன்றாகப் புரியும். இந்திய மக்களின் சம்பிரதாயங்கள், நடை யுடை பாவனைகளை யெடுத்துக்கொள்ளலாம்— ஐரோப்பியர்களுடைய ஆதீனத்தில் இருந்தபோது நாம் கைப்பற்றியவை யாவன: ஸூட், ஹாட், பூட் சம்பிரதாயம், பிஜாமா சம்பிரதாயம், கத்தி முள்ளு சம்பிரதாயம், கப் சாஸர், (Saucer) ஸூப் பிளேட் சம்பிரதாயம், இப்படிப் பட்டவை அநேகம். பொது ஜனங்களின் ஆதரவின்றி, பிரபுத்துவத்தைச் செலுத்துவதற்காக இத்தகைய அயல் நாட்டுப் படா

கட்டழகி தவமணி தேவி தன் மேனியை மிருதுவாகவும் மென்மையாகவும் வைத்திருக்க லக்ஸ் டாய்லட் சோப்பைத்தான் நம்புகிறார்



அதிரூபவதியான இந்த சினிமா நட்சத்திரத்தின் அழகு படுத்திக்கொள்ளும் முறை லக்ஸ் டாய்லட் சோப் தான். சருமத்தை சுத்தம் செய்து மிருது வாக்க இச்சோப்பின் வெண்ணிறம் கொண்ட சுகந்த நுரை போல் வேறெதுவுமில்லை என்பது அவருக்குத் தெரியும். மென்மைவாய்ந்த பூரணப் பொலிவுள்ள மேனியை விரும்பும் எல்லோரையும் அவர் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து தவறாமல் சுத்தம் செய்து கொள்ளும்படி உபதேசிக்கிறார்.

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS. 174-23 TM

டோப சம்பிரதாயங்களை இந்திய மக்களில் அநேகர் கைப்பற்றி வாழ் நாட்களைக் கழிக்க வேண்டிய துவந்தார்த்தம் ஏற்பட்டது. ஆனால் சுதந்திரம் வந்தபின் இவை மாறினவா? கவர்னர் ஜனரல் பட்டம் வகிக்கப்போகும் ராஜாஜியே கதர் ஜூப்பாவும் பஞ்சகச்சமும்பாதரக்ஷையும் போதுமென்று இருக்கிறாரே, அவரைப்பார்த்து நாம் தெரிந்துகொண்டோமா? பிரதம மந்திரி நேருஜியே சிருவாலும் ஷெர்வானியும் எத்தகைய நிகழ்ச்சிக்கும் பொருத்தமான உடையென்று உலாவி வருகிறாரே, அவரைப்பார்த்தாகிலும் நம் நாட்டு உயர்தர அதிகாரிகள் தெரிந்து கொண்டனரா? பத்திரிகைகளில் படங்களைப் பார்க்கிறோமே! நேருஜி நிற்கிறார், அவரைச்சுற்றிலும் உத்தியோஸ்தர்கள் பலர் நிற்கின்றனர்; அவர் மாத்திரம் சிருவால், ஜூப்பா, கதர் தொப்பி, அல்லது சிருவால், ஷெர்வானி அணிந்திருக்கிறார், சுற்றிலுமுள்ளவர்கள் டின்னர் ஜாகெட்டிலும், டிரஸ் ஸூட்டிலும், ஸ்டிப் காலரென்ன, கறுப்பு டை யென்ன, இத்தகைய உடைகளில் பிரகாசிக்கின்றனர். கறுத்த ஆட்களையும் வெளுத்த ஆட்களாகக் காட்டும் படங்களில், பிரதம மந்திரியைச் சூழ்ந்திருப்பவர்கள் இந்தியர்களா, அன்னியர்களா வென்றும் சந்தேகிக்கும்படி ஆய்விடுகிறது — சம்பிரதாயங்கள் மாறவில்லையே! ரயில் வண்டியில் முதல் வகுப்பில் சென்றால் பிஜமா சூட் போடாமல் படுத்து உறங்கினால் வண்டியிலுள்ள மெத்தையே பாம்பைப் போல் சீறும் என்கிற பீதி இன்னும் நம்முடைய மக்களிடம் இருந்து வருகிறது! வெண்டைக்காயையும் புடலங்காயையும் கூடக் கத்தியாலறுத்து முள்ளால் குத்தியெடுத்துச் சாப்பிட்டால்தான் நாகரிகம் என்கிற நம்பிக்கை இன்னம் போகவில்லை. கலியாணங்களுக்கும் சரி. கருமாந்தரங்களுக்கும் சரி, ஸூட், பூட், ஹாட் உள்பட உடைகளை யணிந்தால்தான் பெரிய மனுஷத்தனம் என்பதும் போகவில்லை. ஆயிரம் இந்திய மக்களின் நடுவில் ஒரு வெள்ளைக்காரன் வந்தாலும் சரி, அந்த ஒரு வெள்ளையனுக்காக ஆயிரம் பெயரும் தத்தம் நடைஉடை பாவனைகளை மாற்றிக் கொள்ளுகிறார்களே தவிர, அவன்தான் நம்மைப்போல் மாறி வரட்டுமே என்று சொல்லி, சுயமரியாதையைக்காப்பாற்றிக் கொள்ள மாட்டார்கள். பலநூற்றாண்டுகளாக ஆயிரக்கணக்கான வெள்ளையர்கள் இந்தியாவுக்கு வந்து குடியேறினார்கள்; எவனாகிலும் ஒருவன் தன்னுடைய ஆசாரங்களை ஒதுக்கிவைத்து, இந்திய சம்பிரதாயங்களைத் தழுவினதுண்டா? கால் சட்டையை மாற்றி வேஷ்டி கட்டினதுண்டா? சிற்சில அசந்தர்ப்ப வேளைகளில் தவிர, வேறு சமயங்களில் கத்தி, முள்ளு, ஸ்பூன் சகித மற்று தீனி தின்னதுண்டா? இது இப்படியிருக்க, நம்முடைய மக்கள் மாத்திரம் இங்கிலாந்துக்குப்போகுமுன் ஒரேயடியாக வேஷத்தை மாற்றி விடுகிறார்களே எதற்காகவோ? வெள்ளையர்கள்மாதிரியே ஸூட், ஹாட், பூட், டை, காலர் இவைகளை யணிந்தால் தான் அங்கு செலாவணியாகும் என்கிற அடிமைத் தனமான கொள்கை இன்னும் மாறவில்லையே!



மிஸ்ஸ் ஆங்ஸானுடன் பண்டித நேரு.

குளிர் தேசத்தில் அப்படித்தானிருக்க வேண்டுமென்று சொல்லிக் கேட்டிருக்கிறோம். இது முற்றும் அபத்தம். குளிர் தேசத்தில் சிருவாலும் ஷெர்வானியும் அணிந்து கொள்வதைப் போல் சுகம் சூட் அணிவதில் [illegible] வராது. ஷெர்வானி

யாவது, லாங் கோட்டாவது அணிந்தால் இந்திய உருவம் நிலைப்படுவதோடு, உடம்புக்கும் சுகமுண்டு. இது நிற்க, நம்முடைய பெண்மணிகள் அநேகர் இங்கிலாந்துக்குப் போகிறார்களே, அவர்களெல்லோரும் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல் உடைகளை யணிகிறார்களோ? சேலைகளையுடுத்துத் தானே கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்? ஆண் மக்களுக்கு மாத்திரம் ஏன் இந்தச் சேஷ்டையோ?

ட்ரிச்சினாப்பள்ளியை திருச்சிராப்பள்ளியாக்கி, பெஜ்வாடாவை விஜயவாடாவாக்கி, டின்னவல்லியைத் திருநெல்வேலியாக்கினால் மாத்திரம் சுதந்திரத்தால் கிடைத்த சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றின மாதிரி யாகுமோ? வெள்ளைக்கார ஆதீனத்தால் விளைந்த கோரங்களில் ஒரு சிறிய பகுதியே இவ்வண்ணம் நிவர்த்தியாகும். ஆனால், அந்த கோரங்களில் சகிக்கத் தகாதவையான வகைகளில் பெரிய பகுதிகள் மேற் கூறியவையே யாகும். அவைகளல்லவோ துரிதமாகத் தொலைய வேண்டும். கண்ணுக்கும் கருத்துக்கும் அருவருப்பா யிருக்கும் பழக்க வழக்கங்கள் தொலைந்தாலல்லாது வேறு சீர்திருத்தங்களால் இந்து தேச மக்களுடைய நாகரிக சாம்ராஜ்யம் மேன்மைப்படாது என்பது திண்ணம்.

இனி மூன்றாவது சஞ்சலத்தைக்கவனிப்போம்! இச் சந்தர்ப்பத்தில் கவனிப்பைப் பெரிய பட்டணங்களிலிருந்து சிறிய பட்டணங்களுக்கே செலுத்தவேண்டும்; அப்போதுதான் நுட்பமாக ஆராய்ச்சி செய்ய முடியும். ஏனென்றால் பெரிய பட்டணங்களில் மேல்நாட்டினத்தினர் தங்களுடைய வாழ்க்கைகளைப் பிரத்தியேக ஸ்தலங்களிலேயே கழித்து வருகின்றனர். அவர்களுக்கும் பொது மக்களுக்கும் சந்திப்பு சந்தர்ப்பங்கள் அநேகமாக ஏற்படுவதில்லை. ஆனால் சிறிய பட்டணங்களில் பரிஸ்திதிகள் பழையபடிதான். சுதந்திரத்துக்கு முன் எப்படி யிருந்ததோ அப்படியே தானிருக்கிறது. பஞ்சாங் சொல்வது போல் சொல்லலாம்: "துரை கெட்டிக்காரன், கெட்டிக்காரன். அந்தஸ்தில் பெரியவன், பெரியவன் புத்தி அபாரம், அபாரம். பொதுக்கூட்டத்துக்குத் தானாக வரமாட்டான். இரண்டு முறை அழைக்க வேண்டும். துரை மாத்திரம் வரமாட்டான். வரத்தகாத இடத்துக்கும் துரைசானியும் வருவள். வந்தால் மாலையிடணும். எல்லோருடனும் உட்கார மாட்டார்கள். தனியாகக் குஷன் சேர் போடவேண்டும். பத்து நிமிஷம் லேட்டாகத்தான் வருவார்கள். நூறு பேர் வந்திருந்தாலும் நூற்றொன்றாவது துரை வந்தால் தான் காரியம் நடத்தலாம். யாரைப் புகழ்ந்து வந்தன வார்த்தை சொன்னாலும் சொல்லாவிட்டாலும் துரையைப் புகழ்ந்து பிரத்தியேகமாய்ச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் பெரிய தகராறு" என்பதாகப் பஞ்சாதியை வளர்த்திக் கொண்டே போகலாம். இது தான் முன்னேயிருந்த பரிஸ்திதி, இப்பொழுது இருக்கும் பரிஸ்திதி, இன்னும் மேல் காலத்தில் வெகு வருஷங்களுக்கு இருக்கப் போகும் பரிஸ்திதி. அய்யய்யோ இது என்ன விபரீத ஜோஸ்யமாய் விருக்கிறதே யென்று கேட்காதீர்கள்! ஜோஸ்யமே யல்ல! கேவலம் சூசனை தான்! விளையும் பயிர் முளையிலே! ஐந்தில் வந்தது தானே ஐம்பதிலும் வரும் என்பார்கள். ஆகவே சுதந்திரம் கிடை



பரோடாவின் புதிய பிரதம மந்திரி
டாக்டர் ஜீவராஜ் மேதா.



அசோக ஸ்தூபியும் சக்கரமும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடிய பந்தலின் வாயிலில் வழிகாட்டியாக நின்றது.

த்துப் பத்து மாதங்கள் கழிந்தும் நம்முடைய அடிமைத்தனமான பழக்கவழக்கங்களைக் கைவிடாவிட்டால் இனி எப்போது விமோசனம்?

அன்னியதேசத்தினர் யாராயிருந்தாலும் சரி அவர்களை அன்யுடனும் ஆதரவுடனும் கவனிக்க வேண்டியது தான் சரி. அயல் நாடுகளில் நம்முடைய தேசத்தினருக்குச் செல்வாக்கு அளிக்கா விட்டாலும், நாம் நமது புராதன ஆசாரத்தைக் கைப்பற்றி, எல்லோருக்கும் செல்வாக்கு அளித்து நல் வழியைச் சுட்டிக்காட்டுவோம். ஆனால் அவர்களைத் தூக்கித் தலையின்மேல் வைத்துக்கொண்டு ஆட வேண்டியதில்லையே! அனாவசியமாக அவர்களை உயர்த்தி, நம் மக்களையே அவமதிக்க வேண்டியதுமில்லையே! நாகரிக ஒழுக்கங்களையும், நிபந்தனைகளையும், விதிகளையும்கூட அப்புறப்படுத்தியாவது மேல் நாட்டாரை மேன்மைப் படுத்த வேண்டும் என்கிற ஏளனமான கொள்கையை விலக்கலாகாதா? அவர்களிடையே காணப்படும் நல்ல பழக்க வழக்கங்களைக் கைப்பற்றுவோம்; அவர்களுடைய ஊக்கம், சட்ட மரியாதை, கட்டுப்பாடு, கண்டிதம், சிக்ஷை, தேசாபிமானம், பாஷாபிமானம் எல்லாவற்றையும் கைப்பற்றுவோம்! ஆனால் நமது நாகரிகத்துக்கும், நமது நாட்டின் பொருளாதார நிலைமைக்கும், பொதுமக்களின் மனப்பான்மைக்கும் விருத்தமாயிருக்கக் கூடிய மேல் நாட்டுப் பழக்கங்களை ஏன் இலகுவாகத் திரஸ்கரிக்கலாகாது? காரணமென்ன? அடிமைத்தனமான மனப்பான்மை போகாததாலா? அல்லது பிரபுத்துவத்தின் அசுவாரஸ்யமா? அல்லது கிரகசாரமா?

* * *

பங்கீடு எடுத்த பிறகு உணவு விஷயத்தில் ஏதோ ஒரு மாதிரி அமரிக்கை ஏற்பட்டிருக்கிற மாதிரி தெரிகிறது. ஆனால், துணி விஷயத்தில் களையபாரம் பிரமாதமாய்விட்டது. பஞ்சாலை வேலைநிறுத்தம் முடிந்து திரும்பவும் உற்பத்தி தொடங்கியும், நூலின் விலை, துணியின் விலை, இவைகளால் ஏற்பட்ட நெருக்கடிகள் விபரீதமா யிருக்கின்றன. கவர்ன்மெண்டோ உருமிக்கொண்டே யிருக்கிறது. உஷார் எச்சரிக்கை தினந்தோறும் ஒவ்வொன்றாக வெளிப்படுகிறது. எதன் மத்தியில் கதர் படும்பாடு பரிதபிக்கத் தக்கதா யிருக்கிறது. சரக்குகள் எடுபட வில்லையாம். உற்பத்தியும் வியாபாரமும் குறைந்து விட்டனவாம். பஞ்சின் விலையைப் பார்த்தால் கபால மோக்ஷமாய் விடும்போலிருக்கிறது. நல்ல நாளிலேயே நாழிப்பால் என்பது போல், துணிப் பங்கீடு இருந்த போதே கதர் பட்டபாடு பேஜாராகத் தானிருந்தது. இப்போது கேட்பானேன். போதாத குறைக்கு, சரக்கு வெளியேற்றத் தடை நிபந்தனைகள் என்ன காரணத்தினாலோ எடுபடவில்லை. துணி பார்ஸல்கள், கதரா யிருந்தாலும் சரி, தபால் மூலம் அனுப்பக்கூடாதாம். ரயில்வே பார்சலாக அனுப்பலாமென்றால், தென்னிந்திய ரயில்வே மூலம் எடுபடுமாம். ஆனால், எம். எஸ். எம். வழியில் எடுபடாதாம்! மாமியார் உடைத்தால் மண்கலம், மருமகள் உடைத்தால் வெண்கலம். இந்தியப் பிரதேசத்தில் இப்படி யிருக்க, பாகிஸ்தானிலோ லக்ஷக்கணக்கான ஜனங்கள் சேர்ந்து, கதர் தவிர வேறொன்றும் உடுப்பதில்லை யென்கிற கங்கணம் கட்டிக் கொண்டு, ஒரு லக்ஷம் சர்க்காக்களைச் செய்வித்து வினியோகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். பாகிஸ்தானுக்கு ஒன்றும் கிடையாது, வெறுங்கை எப்படி முழம் போடும் பார்க்கலாம் என்று சிலர் சொல்லிக் கொண்டிருந்தனர். கேவலம் ஊக்கத்தாலும், பிரதிக்ஞையினாலும் வெறுங் கையே முழம போட்டுவிடும் போல் தானிருக்கிறது.

உங்களுடைய விவசாயப் பிரச்னைகளை
நாங்கள் தீர்த்து வைப்போம்

WE CAN SOLVE YOUR AGRICULTURAL PROBLEMS



USE Fordson MAJOR TRACTORS

எத்தகைய வேலையாயினும், எதற்கும் உதவும் **போர்ட்ஸன் மேஜர்** அதைச் சாதிக்கும். அதன் பலதிறப்பட்ட சக்தியை நீங்கள் பரிபூரணமாக அடைய நாங்கள் உதவ இயலும். ஏனெனில் எத்தகைய கருவிகள் தேவையாயினும் — விவசாய சாஸ்திரக்ஞர்களால் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டவை— எங்கள் மூலம் நீங்கள் தருவித்துக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான கருவிகளைச் சீரிய முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் உதவத் தயார்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202—203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: **பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)**

பெயர்ச் சண்டை

தையல்

“ஓஹோ! நாளுக்கு நாள் போக்கிரித்தனம் ஜாஸ்தியாகிறதே,” என்று பொருமிக் கொண்டே கையிலிருந்த கடிதத்தை வீசி எறிந்தாள் சரசு.

“என்ன சங்கதி வந்திருக்கு?......ஏனம்மா கோபம்?...........மாப்பிள்ளையின் வேலைக்கு ‘மூப்பு’ ஒன்றுமில்லையே!......ஆபீஸ் துரை முரடன் என்று அடிக்கடி சொல்வாயே என்று கேட்கிறேன்......உம்?......என்ன சமாசாரம் ......சொல்லு!” என்று கேட்ட வண்ணம் பெண்ணை அணுகினாள் தாய். இடுப்பிலிருந்த கைக் குழந்தையுடனே குனிந்து கடிதத்தைப் பொறுக்கினாள்.

“முரடன் இருப்பது இந்த வீட்டிலேதான்!” என்று சுருக்கமாகப் பதில் பறந்தது சரசுவிடமிருந்து.

“யாரைச் சொல்கிறாய் இப்படி? அப்பாவையா?” என்று கேட்டாள் தாயார் திடுக்கிட்டு.

“என்ன முரட்டுத்தனம் செய்துவிட்டேன் சரசு?” என்று கேட்டவாறு கூடத்துள் நுழைந்தார் கந்தசாமி அய்யர். தபால்காரன் அவருக்கும் ஒரு ‘கார்டு’ கொடுத்துப் போயிருந்ததால் அதிலுள்ள சங்கதியைக் குடும்பத்திற்குக் கூற வந்துகொண்டிருந்தவர் தான். மனைவியும் மகளும் பேசுவதைக் கவனித்தார். பரிவாய்ப் பெண்ணை வினவினார்.

“பர்வதராணி குப்புறிக்கிறாளா, மூன்று மாதமாச்சே, என்று என் சைதாபபேட்டை சிநேகிதி விசாரிக்கிறாளே! அது எப்படி அவள் கேட்பாள்?......”

கந்தசாமி அய்யர் குறுக்கிட்டு, “பார்த்தயா, மதுரம்?......அடுத்த வீட்டுக் கீதவாணி போல மூன்றுமாதம் முடிவதற்குள்ளாகவே பர்வதராணி குப்புறிக்காதது, அக்காள் சரசுக்கு அவமானமாக இருக்கிறது .... குழந்தை கொஞ்சம் நோஞ்சதான். பயப்படாதே சரசு ......நாலாம் மாதம் பிறப்பதற்குள் நிச்சயம் அந்த லீலையைக் காண்பாய் பார்” என்று கூறிப் புன்னகையுடன் தேற்றிவிட்டு, குழந்தையின் பக்கம் திரும்பி, “ஏண்டி, பர்வதம் இப்பொழுதே குப்புறிக்கிறாள்!........... மாற்றுத்தருகிறேன்!” என்று மகவின் கன்னத்தைக் கொஞ்சிய வண்ணம் மனைவியின் இடுப்பிலிருந்த அதனை வாங்கித் தோளில் சாய்த்துக் கொண்டு, வாசற்பக்கம் திரும்பினார்.

சரசு சீறி எழுந்தாள். “என்னவோ மழுப்புகிறாயே அப்பா! பர்வதராணி என்று பத்மாவுக்கு எப்படித் தெரிந்தது? நான் பர்வதநந்தினி என்றுதானே குழந்தையின் பேரைக் குறித்திருந்தேன்! நான் அவளுக்கு எழுதிய கடிதத்தைத் தபாலில் போடுவதற்கு நீ தானே எடுத்துச் சென்றாய்?......அப்பொழுது, நீ தான் நந்தினி என்ற வார்த்தையை ராணி என்று மாற்றி யிருக்கிறாய்!......நன்றாகத் தெரிகிறது எனக்கு!......இல்லாவிட்டால் அவளுக்கு எப்படித் தெரியும்?......அக்கிரமம்! அநியாயம்!......எத்தனை படிப்புப் படித்தாலும் என்ன?......அநாகரிகம்தான்!” என்று ஒரு குண்டை வீசிவிட்டு மச்சுக்குத் திடும் திடும் என்று பாய்ந்தாள் அவள்.

கந்தசாமி அய்யர் பிரமித்து நின்றார். ஆம், அவர் பர்வதராணி என்று கார்டில் மாற்றியது உண்மைதான். அது இரகசியமாக இராது—நான்கு நாட்களுள் அம்பலமாகி விடும் என்று அவர் அறிந்துதானிருந்தார். பர்வதத்தின் விஷயமாகத் தமக்கும் சரசுவுக்குமிடையே சில வேளை கிளம்பிய இந்த வாக்கு வாதம், இவ்வளவுக்கு இன்று முற்றிவிடும் என்று அவர் நினைத்ததே இல்லை.

மதுரத்திற்கு ஆறாவது பிரசவம் ஆகியிருந்தது. முன்னைய ஐந்திற்கும்—பிறந்தகத்திலோ, புக்ககத்திலோ—பிரசவ சிசுருஷை செய்ய அவள் தாயார் பர்வதம்மாள் பக்கத்தில் இருந்தாள். சென்ற எட்டு மாதங்களாக அந்த அறுபது வயசுக் கிழவிக்குத் தள்ளாமை அதிகரித்து விட்டது. கண் பார்வை மங்கியதால், பிறர் துணையின்றி நடமாடுவது கஷ்டமாயிருந்தது. இந்த நிலையில் தன் தாயை அவளது கிராமத்தில் கண்ட மதுரம், “அம்மா, இந்தத் தடவை நீ என்னிடம் மதுரைக்கு வராமலிருப்பதே மேல். நெடு நாள் நீ பழகிய இந்த வீட்டில், தொட்டுத் தடவி நடமாடிக்கொண்டு சிறிது செளகரியமாகவே இருக்கலாம். நாங்களோ மதுரையில் வேறு வீட்டிற்குக் குடி மாறி யிருக்கிறோம்.

சைதாப்பேட்டைக்கு எழுதி, சரசுவை வரவழைத்து நாலைந்து மாதம் என்னிடம் வைத்துக்கொள்கிறேன். மாப்பிள்ளையும் அவளை அனுப்பிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார், என்னைப் பற்றிச் சிறிதும் கவலை வேண்டாம் உனக்கு. உன்னைப் பற்றித்தான் எனக்குப் பெரும் விசாரமாக இருக்கிறது" என்று விழிகளில் நீர் பெருக்கிப் பிரியாவிடை கொண்டு மதுரை திரும்பினாள்.

சரசு வந்தாள் தாயின் பிரசவத்திற்கு ஒரு மாதம் முன்பே. மிகப் பொறுமையாகவும், பொறுப்புணர்ச்சியுடனும், தான் இதுவரை மகப் பெருவிடினும், அனைத்தையும் அறிந்தவள் போலத் தாய்க்குப் பணிவிடை செய்தாள். மதுரமும் சுகமாய்ப் பெண் பெற்று அறையைவிட்டு வெளியேறினாள்.

"உனக்கு நான் பிரசவ உதவி செய்ய வேண்டிய வயசிலும் காலத்திலும் நீ எனக்குச் செய்ய வேண்டியதாயிற்று. ஏழ்மலையான் அருளால் உனக்கும் சீக்கிரம் குழந்தை பிறக்கட்டும்" என்று வாழ்த்தினாள் மதுரம்.

குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றிக் குடும்பத்தில் ஒரு குட்டி வாக்குவாதம் எழுந்தது. பர்வதப் பாட்டியின் பெயரையே சூட்டவேண்டும் பேத்திக்கு என்று கந்தசாமி அய்யர் கண்டிப்பாக இருந்தார்.

"வேறு எத்தனையோ அழகிய பெண் பெயர்கள் இருக்கே அப்பா!" என்றான் எஸ் எஸ் எல் சி படிக்கும் மகன் நாணு.

"ஆமாம்பா நாணு—எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள்—ஆனால் உன் பாட்டி போல் ஆகுமா?" என்று எதிர் வினாவால் மடக்கினார் தந்தை. நச்சப்பையர் பெண்—வெங்கடரமணய்யர் மனைவி—விதந்து பர்வதம்மாளைப் போல் பெருந்தன்மையும் பொறுமையும் சாந்தமும் தர்ம குணமும் உபகாரச் சிந்தையும் தெய்வ பக்தியும் விரத சீலமும் உடையோர் அந்தக் கிராமத்து வட்டாரங்களில் கிடையாது என்று ஊராரால் மட்டுமன்றி, அவளது உறவினர் குடும்பங்களாலும் ஒரு முகமாகப் பாராட்டப் பெற்றவள் கந்தசாமி அய்யரின் மாமியார். அவரும் அம்மூதாட்டிபால் பக்தியும் பெரு மதிப்பும் வைத்திருந்தார். குழந்தைகளுக்கும் பர்வதப் பாட்டிமேல் ஒரு அலாதி பாசம். நாணு மௌனம் சாதித்தான்.

"லீலா சிட்னிஸ் என்று சினிமாவில் வருகிறதேப்பா, அந்தப் பெயரை வைக்கலாமப்பா" என்று போட்டு வைத்தான் எட்டு வயது [illegible].

எல்லோரும் குப்பெனச் சிரித்தனர். "சீ முட்டாள். சிட்னி, சட்னி என்று இட்டிலியை நினைத்துக்கொண்டு உளறாதே. பாட்டியின் பெயர்தான் வைக்கணும்" என்று அதட்டினார் கந்தசாமி அய்யர்.

"சித்திக்குத் தொட்டியத்தில் பொறந்திருக்கும் பாப்பாக்கும் அவா இதே பாட்டியின் பேரை வச்சிருக்கா. போராதா ஒரு பேத்திக்கு இந்தப் பேரு? வேறு நாம் இடுவோம் இந்த வெள்ளக்காரச்சிக்கு" என்று மன்றாடத் தொடங்கினாள் ஏழாவது வகுப்புப் படிக்கும் செல்லம்.

இதற்கும் சமாளித்துக் கொண்டார் தந்தை. "அங்கே முதலில் மரியாதை ஆகிவிட்டதே, நாம் இங்கே காட்டும் முன்பு என்று எனக்குப் பெரிய குறைதான் மனசிலே. இங்கேயும் ஒரு பர்வதம் வளரட்டும்" என்று விட்டுக் கொடுக்காமல் நின்றார்.

"வெறும் பர்வதம் என்றே வைக்கலாமா?" என்று பிரசவ அறையிலிருந்து வந்தது மதுரத்தின் மெல்லிய குரல், சிறிது நகைப்புத் தொனியுடன். ஆனந்தமும் அதில் பூரித்தது.

"ஓகோ! ராஜமந்திரிக்கு வேலை மாற்றலாகி அங்கே நாம் இருந்தபோது, உன் ஆந்திர சிநேகிதிகள் உன் அம்மா பேரைச் செவி கேட்டுச் சிரித்தார்களென்ற நினைவோ உனக்கு? பர்வதமா? என்ன பர்வதமா? ஒரு பெண்ணுக்கா இப்படிப் பெயர்?' என்று கேலி செய்தார்கள் எமது எஞ்சினியர் நண்பர்களும்" எனப் பழைய ஞாபகம் ஒன்று வர, கந்தசாமி அய்யர் சிரித்தார்.

"அவர்கள் மட்டும் என்ன—கொண்டம்மா என்று பெயரிட்டுக் கொள்ள வில்லையா? கொண்டா என்றால் மலைதானே—பர்வதம் என்றாலும் மலைதானே. கொண்டம்மா என்று கேட்க நமது தமிழ் செவிக்குப் புளிக்கிறது!" என்று வாதித்தாள் மதுரம்.

"என்ன அம்மா கொண்டுவரணும்?" என்று உடனே கேலியாய்க் கேட்டுவிட்டு, திடுக்கென, ஏதோ நினைத்துக் கொண்டவர் போல, கந்தசாமி அய்யர், "பிறரைச் சொல்வானேன்? கந்தசாமி என்ற பெயர் கொண்ட பிராமணர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் உலகில்? எனக்குத் தெரிந்த வரையில் இருவரே: நான் ஒருவன்; இன்னொருவர் ஒரு ஜில்லா ரிஜிஸ்ட்ரார். கெஜட்டில் பார்த்த ஞாபகம்." என்று அங்கலாய்ப்புடன் உரைத்தார்.

இந்தப் பேச்சினால் மாட்டிக்கொண்டுவிட்டார் தந்தை. "பார்த்தாயாப்பா, உனக்கே

வருத்தம்—நல்ல பெயராக உனக்கு வைக்கவில்லையென்று. அது அந்த காலம். நாகரிகமான பெயர் வைக்கணும் நம்ம குழந்தைக்கு" என்று கிளறினான் மீண்டும் நாணு.

சரசு குறுக்கிட்டாள். "பர்வதம் என்ற பெண் பெயர் அச்சிலே எங்குமே வருவதில்லை, கலியாணப் பத்திரிகைகளிலும் பர்வத வர்த்தனி என்றே போடுகின்றனர், நான் கண்டிருக்கின்றேன்" என்றாள்.

நாணுவும், "ஆமாப்பா, தொட்டியத்துத் தங்கச்சிக்குப் பர்வத வர்த்தனி என்றுதான் நாமகரணம் செய்திருப்பதாகச் சித்தப்பா எழுதியிருந்தார், புண்ணியாகவசனம் நடந்த பின்னர்!" என்று நினைப்பூட்டினான்.

"வர்த்தனி என்றால் என்ன அர்த்தம் அப்பா?" எனக் கேட்டாள் செல்லம். இங்கே இப்பொழுது இந்தக் குடும்பத்தில் உள்ள எட்டுப் பேருள் ஒருவனாகிய சீனுவுக்கு நாலே வயதுதான். இவர்கள் பேச்சு ஒன்றுமே புரியாதவன்—'அங்கச்சி' என்ற பேர் பாபாவுக்கு அவன் இட்டிருக்கையில், ஏன் இப்படி வாதாடுகிறார்கள் என்று திகைத்திருக்கவேண்டும்"—சும்மா தகப்பனார் மடியில் உட்கார்ந்திருந்தான்.

"வர்த்தனியா? அகராதிதான் பார்க்கவேண்டும்" என்று தலையைச் சொறிந்தார் தந்தை. "அதனால், நாம் வேறு பெயர்தான் ......"

"பர்வத குமாரி என இடலாமே!" என்று இடைமறித்தாள் செல்லம். சீதாகுமாரி, சாந்த குமாரி, வசந்த குமாரி எனக் குமாரிகள் பலர் அவள் பள்ளிக்கூடத்தில் இருந்தனர்—அந்தப் பெயர்களைப் பொறுமைச் செவியுடனும் இனித்தவள் அவள்.

புன்னகையுடன் கசப்பும் கலந்துகொண்டு கந்தசாமி அய்யர், "பர்வத ராஜனின் குமாரி தானே பார்வதி? பர்வத குமாரி என்ற தொடர் தெளிவாகவும் இருக்கிறது. ஆனால் குமாரி, குமாரி என்று பெயரிடும் வெறி மிதமிஞ்சிப் போயிருக்கிற இக்காலத்தில் நானும் அந்த மோகத்தில் விழுந்து விட்டதாகப் பிறர் எண்ணுவதற்கு இடம் கொடுக்க மனமில்லை எனக்கு. வர்த்தனி வேண்டாம், குமாரியும் வேண்டாம். பிணைப்பதற்கு வேறு என்ன இருக்கிறது யோசியுங்கள் சாவகாசமாய்! அவசரமில்லை," என்று சபை முன் சமர்ப்பித்துத் தந்தை தலை குனிந்த வண்ணம் மீண்டும் தலை சொறிந்தார்.

அடுத்த நொடியே, ஆவேசம் வந்தவள் போல், "நந்தினி" என்றாள் சரசு, முகத்தில் பேரொளி விரிய. "ஆமாம், பர்வத நந்தினி தான்" என்று குதித்துக் கொண்டு எழுந்தாள்.

"நந்தினி என்றால் அர்த்தம் என்ன?" எனக் கேட்டான் ஆராய்ச்சிக்கார நாணு.

சபையிலே ஒரு நிமிஷம் மௌனம். "பொருள் தெரியவில்லைதான். ஆனால் பெண்களுக்கு அந்தப் பெயர் சூட்டுவதுண்டு—நன்றாய் நான் அறிவேன். பத்திரிகை எதிலோ படித்திருக்கிறேன். அழகிய சுவை மிக்க கட்டுரைகள், ஒருத்தி எழுதுகிறாள் நந்தினி என்ற புனை பெயர் பூண்டு. பர்வத நந்தினி என்றே பெயர் வைப்போம் அம்மா!" என்று சரசு தாயின் ஆதரவையும் நாடலானாள்.

"ஆமாப்பா, ஆமாப்பா!" என்று செல்லமும் ரங்கனும் சேர்ந்து கொண்டு ஆர்ப்பரித்தனர். நாணு வாய்திறக்கவில்லை. அதனால் கந்தசாமி அய்யருக்குச் சிறிது துணிச்சல் எழுந்தது. பிரசங்கம் போலவே தொடங்கி விட்டார்.

"சாதாரண ஜனங்களுக்கு எளிதில் புரிகிற பெயரை இடுவதால்தான் எல்லோருக்கும் பயனுண்டு. கிளிப்பிள்ளை போல எதையோ கொஞ்சலும் குழைவுமாக வாய் உளறுவது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தெய்வ நாமங்களை ஏன் நாம் குழந்தைகளுக்கு வைக்கிறோம்? அந்தந்தத் தெய்வங்கள் நம்மனதில் ஒரு நொடியேனும் அவ்வப்போது காட்சி தந்து பக்தி ஊட்டுவதற்கே" என்று மொழிந்தார் தந்தை.

சரசு எளிதில் அடங்குவாளா? "ராமு என்று அழைக்கும் போதெல்லாம் எத்தனை பேருக்கு ராமபிரான் உருவம் ஜனிக்கிறது? சீதைக்காக அவர் கிஷ்கிந்தையில் புலம்பினது நினைவில் தோன்றி, மனம் உருகுகிறார்களோ ராமநாமம் கேட்போரெல்லாம்?" என வெடித்தாள் உதடு.

"ராம ராஜ்யம் நடக்கிறது இன்பமயமாக என்று எண்ணி, சுக துக்கங்களை மறந்து தம் காரியமாகவே போய்விடுகிறார்கள்" என வாக்குச் சாதுரியமாய் நாணு கூறியபோது, பிதா முகம் முறுவல் பூத்தது. சரசுவும் "சரியான பதில்!" என்று தம்பி முதுகைத் தட்டிக் கொடுத்தாள் கர்வமாய்.

"என்னமோ — எனக்கு, பர்வத நந்தினி பிடிக்கவில்லை........." என்று இழுத்தார் கந்தசாமி அய்யர்.

"என்ன குறைச்சல் நம் குழந்தைக்கு? நீலப் பெருவிழியும், தாழம்பூ போன்ற பொன் மேனியும்; தலை நிறையக் கரு மயிரும்

—ராஜாத்திபோல இருக்கிறாள் குழந்தை...'' என்று வாதாடினாள் சரசு.

“என்ன சொன்னாய்? ராஜாத்தியா?—ராணி என்று இலக்கணமாய்ச் சொல்லு. ஆம் பர்வத ராணி என்று பெயர் வைப்போம்! சிலர் அனுப்புகிற திருமண ஓலைகளில், “என் குமாரத்தியைக் கன்னிகா தானம் செய்து கொடுப்பதாய்......'' என்று அச்சடிக்கிறார்கள். குமாரன், ஆண்பால்; அதற்குப் பெண்பால் குமாரி அல்லவா?—குமாரத்தி எப்படி ஆகும்? குமாரத்தி என்ற வார்த்தையைக் காணும்போதெல்லாம் அந்தப் பத்திரிகையையே கிழித்து விடணும் போல் கோபம் வரும் எனக்கு. ஆனால் சுபகாரியம் அல்லவா கலியாணம்? என் கோபத்தை அடக்கிக் கொண்டு. ‘இது போன்ற அவமானங்களுக்கும் அல்லல்களுக்கும் இடையே தம்பதிகள் இனிது வாழ்க நெடிது' என்று வாழ்த்துவேன் அவர்களை என் மனதிற்குள்ளே. குமாரத்தி எப்படித் தவறான சொல்லோ, அதே போல் ராஜாத்தி என்ற சொல்லும். ராணி என்பதே முறை, அதனால் உன்னிஷ்டப்படி பாப்பாவுக்குப் பர்வத ராணி என்ற பெயரே வைப்போம். ஆமாம், இதுவே பொருத்தம்! பர்வத ராணி! பர்வத ராணி!'' என முழங்கியவாறு தந்தை குதித்தார் என்றே சொல்ல வேண்டும். “பர்வதங்களுக்கு ராணி'' என்று மார் தட்டினார், இருபது வயது இளைஞன் போல.

“பர்வதங்களுக்கு ராணியா? அது உதகமண்டலம் என்று சில ரெயில்வேக்களும், சிம்லா என்ற பிறவும், டார்ஜிலிங் தான் அது என்று பிறவும் விளம்பரம் போட்டு, கோடைக்கால வாசத்திற்கு அழைக்கின்றனவே—நம்ம பாப்பா இவற்றில் எது அப்பா?'' என்று கேலி செய்தான் நாணு.

“போரும்டா உன் ரயில் ஞானம்!'' என்று கந்தசாமி அய்யர், அவன் வாயை அடக்கிவிட்டு, மெல்ல அறையைவிட்டு வெளிச் செல்லுகையில் “யோசித்துப் பாருங்கள் நன்றாக. நான் கூறிய யோசனை இது தான். நமக்குக் கர்வமும் பெருமையும் தரத்தக்கது. புதுமை பழமை, பக்தி, கவிதை எல்லாம் இதில் இருக்கிறது. நீங்கள் எப்படியாகிலும் குழந்தையை அழையுங்கள்—எனக்கு அவள் பர்வத ராணி தான்'' என்று மொழிந்தார்.

''அரசர்கள் காலம் மலை ஏறிவிட்டது. முடிகள் கீழ் உருள்கின்றன—குடியரசுகளே நாடுகளில் எங்கும், ராஜாவுக்கும் ராணிக்கும் என்ன மதிப்பு இந்தக் காலத்தில்? ராணி என்று தான் பெயர், சைதாப்பேட்டையில் எனது சிநேகிதி சாரதையின் வேலைக்காரிக்கு—சொல்ல முடியாத விகாரம்!'' என்று சரசு மேல்மேல் விவாதிப்பது பிதாவின் காதில் விழுந்தது—ஆனால் அவர் பிடிவாதமாய் யாதும் பேசாமல் வெளியே போய்விட்டார். மதுரம் மட்டும் ''விகாரம் விகாரம் என்று பிறரை ஏசாதே சரசு—எத்தனை தரம் நான் சொல்லியாச்சு!'' என்று மகளைக் கடிந்தாள்.

சில நாள் கழித்து, ஒரு பத்திரிகையைக் கையில் விரித்துக் கொண்டு மாடிக்கு ஓடி வந்தாள் சரசு. ''பார் அப்பா படத்தை! நந்தினி என்ற பெயராம் இந்தப் பசுவிற்கு. ரகுவம்ச மன்னன் திலீபன் அதைப் போஷித்து வந்ததும், ஒரு கொடிய சிங்கத்தினின்று அதைக் காப்பாற்ற அரசனே இடையில் பாய்வதையும் படத்தில் சித்திரித்திருக்கிறது'' என்று சுட்டிக்காட்டினாள் தந்தையிடம்.

இந்தக் கதையை, கந்தசாமி அய்யர் முன்பு கேட்டிருக்கிறார்—ஆனால் பசுவின் பெயர் நந்தினி என்று ஞாபகம் இல்லை. ஓவியத்தின் அழகில் சொக்கிப்போய்ச் சில நிமிஷங்கள் கண் கொட்டாமல் ரசித்தார் வர்ணங்களையும், வர்ணங்களில் பிரதி பலித்த உணர்ச்சிப் பெருக்கையும். “என்ன சொல்கிறாய் இப்போ?'' என்று நெருக்கினாள் மகள்.

''அழகிய கதை—அழகிய படம். ஆனால் நந்தினி என்ற பெயர் நம்ம பாப்பாவுக்குச் சூட்டுவதில் எனக்கு—என்னை அறியாமலேயே—எடுத்துச் சொல்ல முடியாத ஒரு வெறுப்பு மன ஆழத்தில் கிடக்கிறதேம்மா!''

''என்ன காரணம் என்று எனக்குத் தெரியும்! சரசு சொல்வதைக் கேட்பதா என்ற வீம்புதான் காரணம்!'' எனச் சிணுங்கினாள் சரசு.

''உளறாதே சரசு! அம்மா படுத்துவிட்ட, சென்ற இரண்டு மூன்று மாதமாக இந்த வீட்டில் நீதான் அரசி. உன்னுடன் கலந்து யோசிக்காமல் ஏதாவது நான் செய்கிறேனா? பிதற்றாதே வாய்க்கு வந்ததெல்லாம், ஆ—நந்தினி என்ற சொல் என் செவியில் நாராசம் ஊற்றுவதன் காரணம் இப்பொழுது திடுக்கெனப் புலனாகிறது எனக்கு. நந்தினி என்ற சொல் மந்தி என்ற எதிரொலியைக் கிளப்புவதாலோ யாதோ—நம் அருமைப் புதல்வி பிற்காலத்தில் மந்தியாகி விடுமோ என்ற அச்சத்தாலோ யாதோ......'' என்றார் கந்தசாமி அய்யர், முகத்தில் சோகம் பரவ.

“மந்தி என்றுதான் எதிரொலியோ? குந்தி சந்தி......சுந்தரி, சந்திரா என்ற நினைப்பு மூட்டட்டுமே! மந்தியாம், தொந்தியாம்!''

HAMAM
பரிசுத்தத்தில்
முதல் பாடம்
ஹமாம் ஸோப்புத் தேய்த்து
அனுதினமும் ஸ்நானம்
செய்யுங்கள்.
HAMAM
ஹமாம் ஸோப்பு
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

என்று முகத்தைக் கடுத்துக் கொண்டாள் சரசு.

"நான் என்ன சொன்னேன் சரசு? ஒரு உணராத உணர்ச்சி, அறியாத அருவருப்பு எதோ குடைகிறது என்றுதானே நான் சொல்கிறேன்? நீ உரைத்தாயே கடைசியில் தொந்தி என்று: அதுவும், நான் அறியாமலேயே என் செவியில் ஒலிக்கிறது போலும்!" என்று சிரிப்பில் முடித்தார் தந்தை.

"அதனால் என்ன குற்றம் குழந்தைக்கு? மதலைகள் கொழு கொழு வென்று தொந்தியும் தொப்பையுமாகக் கனத்திருந்தால் தான் அழகு." என மன்றாடினாள் மகள்.

"குழந்தைகளுக்குத் தொந்தி யென்றால், வயிற்றில் குலைக்கட்டி, கொலைக்கட்டி என்று அர்த்தம் அம்மா! ஆனால் உனக்குத் தொந்தி விழுந்தால் எங்களுக்கெல்லாம் சந்தோஷம் —குழந்தை பிறக்கும் என்று!" என அவர் சிறிது தைரியத்துடன் கூறும்போது பெண்ணின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

"போப்பா! கண்டதெல்லாம் பேசிக் கொண்டு!" என்று சரசு, முகம் நாணத்தால் குங்குமம்போல் சிவக்க, பத்திரிகையை மேஜையில் அப்படியே போட்டு விட்டு மறு கணமே மறைந்து விட்டாள்.

கந்தசாமி அய்யர் எண்ண மிட்டார், சரசு கர்ப்பவதி ஆகவேண்டும் விரைவில் என்று தாம் விரும்புவதை அவள் அறிந்ததால் நாணம் எழுந்த காரணமா?—பர்வத ராணி கட்டிநோய் குடல்நோய் யாதுமின்றி, சுகமாய் வளர்ந்து பிழைக்கணுமே என்ற கவலையா?—எதனால் சரசு தோல்வியுற்றதுபோல் போர்க்களம் விட்டகன்றாள்? இந்த விதம் அவள் தோற்றதற்குஇவர் சிறிதுவருந்தினாலும் சரசு இனிமேல் பர்வதராணி என்ற அமுதுசொட்டும் பெயருக்கு ஏதும் எதிர்கூறமாட்டாள் என்று உறுதியாய் நம்பலானார். தமது பிடிவாதத்தைச் சிறிதும் தளர்த்தாமல் கைக்குழந்தையைஇவர் பர்வதராணி என்ற முழு நீளப்பெயரால் சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் வாய் நிறைய முழங்கி வந்திருக்கிறார்.

"பர்வத ராணியைக் குளிப்பாட்டியாச்சா சரசு?"

"பர்வத ராணியை மிதிக்காமல் தூர விலகப்பா, சீனு."

"பர்வத ராணியைத் தொட்டிலிலாட்டு கொஞ்சம், செல்லம்."

"பர்வத ராணி சட்டையைக்கொண்டு வா, நாணு."

"ரங்கா, ஜாக்கிரதை — கெட்டியாய்ப் பிடித்துத் தூக்கு பர்வத ராணியை!"

"மதுரம்—பர்வத ராணியின் கண்கள் போல் அத்தனை நீலமாய் நம்மகுடும்பங்களில் எங்குண்டு? —பார் இங்கே வந்து!"

இப்படி யெல்லாம் வாய் மலர்ந்து வந்தார் கந்தசாமி அய்யர், மகவுக்கு அந்தப் பெயர் உறுதியாக நிலைத்து விட வேண்டும் என்றெண்ணி. ஆனால் சரசு வாயிலிருந்து பர்வத நந்தினி அல்லது நந்தினி என்று தான் வருமே ஒழிய, ஒரு நாளும் இது வரை பர்வத ராணி என்று முத்து உதிர்வதில்லை.

"தொந்தி என்ற பயங்கரச் சொல்லால் சரசுவை இப்பொழுது நடுங்க வைத்து விட்டேன். இனி அவளும் பர்வத ராணி என்றே அழைக்கச் சம்மதிப்பாள்" என்று திட நம்பிக்கையோடு இருந்தார் பிதா.

மறு நாளே ஏமாற்றம் அவருக்குக் காத்திருந்தது: சரசு ஒரு கடிதம் எழுதியிருந்தாள் தன் தோழி பத்மாவுக்கு. சைதாப்பேட்டையில் சரசு குடித்தனம் துவங்கியபோது பத்மாவின் நட்பு அவளுக்குப் பெரிய ஆதரவாக இருந்தது, இவர்களின் கணவன்மார் தினம் சேர்ந்தே பஸ்ஸிலேறி தமது ஆபீசுக்காகத் திருவல்லிக்கேணி செல்வர். பகல் பொழுதில் சரசுவும் பத்மாவும் இவள் வீட்டிலோ அவள் வீட்டிலோ சந்தித்து ஆனந்தமாய்க் காலம் கழிப்பர். நெருங்கிய சிநேகிதிகளாயினும்—அவர்கள் பிரிய நேர்ந்ததால்—கடிதப் போக்கு வரவு அவரிடையே ஒழுங்காக நடக்கிறதா? தாயின் பிரசவத்திற்காக மதுரை வந்த புதிதில் சரசு பத்மாவுக்கு எழுதி வந்தாள். பர்வதம் பிறந்த பின்பு சரசுவுக்கு அதிகம் ஒழிவு கிடைக்காததால், பத்மாவுக்குக் குழந்தையைப்பற்றி அவள் எழுதிய முதல் கடிதம் இதுவே. சிறிய கடிதம்தான்—ஒரு கார்டு; அவசரம் அவசரமாய்—அருகில் கிடந்த ஒரு பென்சிலால் எழுதினாள். குழந்தைக்குப் பர்வத நந்தினி என்று பெயரிட்டிருப்பதாக அதில் குறித்திருந்தாள். சரசுவும் அவள் புருஷன் சுப்புவும் பரிமாறிக்கொள்ளும் கடிதங்களைத் தவிர—வருவன போவன பிற யாவற்றையும்—பார்ப்பதற்கும் படிப்பதற்கும்—குடும்பத்தில் சகலருக்கும் உரிமை யிருந்தது அவ் வீட்டிலே. ஆதலால் பத்மாவுக்குச் சரசு எழுதியிருந்த கடிதத்தைத் தகப்பனார் அன்று தபாலில் சேர்க்க எடுத்தபோது அந்தக் கார்டை அவர் படித்தது சகஜமே. நேற்று நடந்த சம்பவத்திற்குப் பிறகும் சரசு வீம்பாக இன்னும் பர்வத நந்தினி என்று கார்டில் குறித்தது

அவரது நெஞ்சைக் குத்திற்று. நேரே போய், தம் கோபத்தைச்சரசுவிடம் கொட்டுவதற்கு அப்பொழுது நேரமில்லை—அவர் விரும்பவுமில்லை. சட்டைப் பையிலிருந்த பென்சிலை எடுத்து நந்தினி என்ற எழுத்துக்களின்மேல் ராணி என்று அழுத்தமாய் வரைந்தார். அவசரத்தில் சரசு எழுதிய எழுத்துக்களாயினும் அவை முத்துப்போல் பொலிந்தன; இவர் புகுத்திய ராணி என்ற சொல், அம்முத்துக்களிடையே களங்கம் தெறித்து விகாரமாய்த் தோன்றுவது தந்தைக்குப் பகீர் என்றது. நிச்சயம் ரப்பரால் அழித்துத் திருத்தத்தான் வேண்டும்! ஆனால் இப்பொழுது ரப்பருக்கு எங்கே போவது? குழந்தைகளிடம் இருக்கும்—அவர்களோ பள்ளிக்கூடம் போயிருக்கின்றனர் அந்த நேரம். ஒரு நொடி திகைத்தார்.

மறுகணமே நினைவு வந்தது கந்தசாமி அய்யருக்கு. தம் கையிலிருந்த பென்சிலின் மறு முனையிலேயே குங்குமப்பொட்டுப்போல் ஒரு சிவப்பு ரப்பர் இருக்கிறதே! என்ன விந்தை! இது போன்ற எத்தனை பென்சில்களை அவர் வாங்கிச் சீவி எழுதிக் கழித்திருக்கிறார்! இதுவரை ரப்பரால் அழித்து, புதிது எழுதித் திருத்தியது என்பது கிடையாது கந்தசாமி அய்யரின் சொந்த அலுவலிலும் சரி, ஆபீஸ் அலுவலிலும் சரி! குழந்தை பர்வத ராணி மேலுள்ள பாசமன்றி காரணம் வேறு யாதாயிருக்கும், இப்படி அவர் முதன் முதல் இன்று ரப்பரை உபயோகித்து மங்களகரமாகக் கடிதத்தை அழகு செய்வதற்கு? ராணி என்றஎழுத்துகளும் முத்திடைமுத்துப் போல் ஒளிருமாறு கார்டில் தீட்டிவிட்டு, மன நிம்மதியுடன் அதைத் தபாலில் சேர்த்தார்.

இந்தக் கடிதத்திற்குப் பதிலாக நான்கு நாட்களுக்குப் பின்பு பத்மா விடுத்த கடிதம் தான் கந்தசாமி அய்யருக்குப் "போக்கிரி", "முரடன்" என்ற பட்டங்களை இன்று கொணர்ந்து அவர் செய்த குற்றத்தை அம்பலத்திற்கு இழுத்து விட்டது. "அக்கிரமம்,', "அநியாயம்" என்று சரசு கூறும் புகார்களுக்குப் பதில் கூற வகையின்றி வாய் புதைத்து நின்றார் தந்தை.

சரசுவின் தலைகால் தெரியாப் பேச்சால், மதுரமும் நடுங்கிவிட்டாள். "அவளுக்கு வயது 20, உங்களுக்கு 40—ஏன் அவளுடன் இப்படிச் சண்டையும் சர்ச்சையும்? விபரீதமாக முடிந்துவிடப் போகிறது! ஊருக்குக் கிளம்புகிறேன் என்று அவள் ஒரு காலில் நிற்க ஆரம்பித்தால்?" என்றாள் கணவரிடம்.

"ஒரு காலில் நின்றால் நகர முடியாது—இரண்டு காலால்தான் ஊர் போக முடியும்!" என்று இடக்காகப்பேசிவிட்டு அவர் குழந்தையுடன் திண்ணைக்குப் போய்விட்டார்—அங்கே தம் பர்வத ராணிக்குக் குப்புறிப்புப் பழக்குவதற்குப் போலும்.

அன்று பகல் முழுதும் சரசு கண்ணீர்விட்டு முகத்தைக் கசக்கிச் சிவக்கச் சிவக்க வைத்துக்கொண்டு, மாலையில் காப்பியும் அருந்தாமல் இரவில் சமைத்துப் பிறருக்கு அவள் பரிமாறி விட்டு, தான் ஏதும் சாப்பிடாமல் தனது மனத்துயரைக் காட்டினாள்." விடிந்தால் அவள் உடம்பு என்னவாகுமோ? என்று ஏங்கிக்கொண்டிருந்த கந்தசாமி அய்யர், மறுநாள் பல் துலக்கிக் கொண்டிருந்தபோது மதுரம் புகுந்து "குழந்தைக்குக் காய்ச்சல்—டாக்டரை வரச் சொல்லுங்கள்" என வேண்டினாள்.

"தெரியுமே—நான் பயந்தபடிதான்" என்றார் கணவர்.

"சரசுவுக்கு அல்ல—கைக் குழந்தைக்குத்தான் ஜுரம். ராத்திரி பால் சரியாகக் குடிக்கவில்லை, வாய் வைத்தபோது, முதலில் கொஞ்சம் சுட்டது என் மார்பில்—பின்பு அதற்கும் பசியில்லை போலிருக்கு' என்றாள் மதுரம். "போய், சரசுவையும் எழுப்புங்கள் விஷயத்தைச் சொல்லி;—காப்பிபோட அரை நிமிஷத்தில் குதித்துக் கொண்டு வந்து விடுவாள்."

நல்லவேளை, சரசுவுக்கு இராப்பட்டினியால் உடம்பு ஒன்றுமில்லை. பர்வதத்திற்குக் காய்ச்சல் என்று அறிந்ததுமே படபடென எழுந்துபோய் மகவை ஒரு பார்வை பார்த்து மேனியைத் தொட்டுத் தடவி விட்டு, அக்கரையாகத் தனது காலைக் காரியங்களைத் தொடங்கினாள். தந்தைக்கும் மகளுக்கும் இடையே உள்ள பிணக்கும் புகைச்சலும் அறவே ஒழிந்ததுபோல் இருவரும் ஒழுகுவது கண்டு, மதுரத்தின் மனமும் மலர்ந்தது. ஆனால் முழு ஆனந்தம் இவ்வுலகில் யார் தான் எதிர்பார்க்கலாம்? பர்வதத்தின் உடல் நிலை நாளுக்கு நாள் அதிகமாகக் கவலை தந்து கொண்டே வந்தது. டாக்டர் தினம் வந்தார்—மருந்து கொடுத்தார். சிலநாள் அதை உடனே கக்கி விடும் குழந்தை. காய்ச்சல் ஏறுவதும் இறங்குவதுமாயிருந்தது. ஆகாரம் செல்வதில்லை, தாய்ப் பாலையும் சரியாகக் குடிப்பதில்லை. கொழு கொழு வென்றிருந்த குழந்தை குச்சியாய் இளைத்துத் துரும்பாகி விட்டது. முகத்தின் ஜோதி மட்டும் சிறிதும் குன்றாமல் தெளிவுடன் இருந்ததால், தாய் மனதில் அமைதி கொஞ்சம் நிலவிற்று.

குடும்பத்து அனைவருமே குழந்தையைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்தனர். பர்வத ராணி என்று ஓயாமல் கந்தசாமி அய்யர் முழங்கிக்கொண்டு இராப்பகலாய், தாம் செய்

யக் கூடியவற்றில் கையுதவி வந்தார் அவர். சரசுவின் சிசுருஷையைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? தானே தன் வயிற்றிலிருந்து பெற்ற மதலை என்றே எண்ணியதுபோல் அவள் பராமரிப்பு இருந்தது. ஓய்வு ஒழிச்சல் வேளைகளில், குழந்தையின் உடம்பு நிலையைப் பற்றிப் பந்துமித்திரர்களுக்குத் தெரிவிக்கும் கடிதங்களை இவளே எழுதுவாள், தந்தை ஆபீசுக்குப் போயிருந்த நேரங்களில், அப்பொழுதெல்லாம் குழந்தையின் பெயரைப் பர்வத நந்தினி என்றே விம்பாய் அவள் குறிப்பிடுவதை. மதுரம் காணாமலில்லை. கணவனும் புதல்வியும் இன்னமும் சிறுபிள்ளைத்தனமாகத் தத்தம் பிடிவாதங்களை நெகிழ்த்தாமல் அடம் பிடிப்பது அவள் நெஞ்சிற்குப் பெரிய வேதனையாயிருந்தது. காஷ்மீரத்தில் இப்பொழுது வெளிப்படப் போரென்று முரசு கொட்டாமல் மெய்யாகவே ரகசியம்ஏதுமின்றிப் போர் நிகழ்வதுபோல—வீட்டில் தந்தையும் புதல்வியும் வெளியிலே வேற்றுமைகளைக் காட்டாமல் உள்ளுக்குள்ளே இருவரும் மனம் பேதித்திருப்பது ஒரு கொடிய விதையை விதைத்தது மதுரத்தின் மனதில். "அப்பாவும் அக்காவும் நான் பிறந்த காரணத்தால் சண்டையிடுகிறார்கள்—நான் போய் விடுகிறேன் அம்மா, கைலாய பர்வதத்திற்கு" என்று மகவு வாய் திறவாமல் தாயின் இதயத்துள்ளே முணுமுணுப்பதாக மதுரம் நினைத்தாள். குழந்தையின் வியாதி சொஸ்தமாகாதிருப்பதற்கு இதுவன்றி வேறென்ன காரணமிருக்கும்? இதன் உயிரைக் காக்க ஒரே வழி—தந்தை மகள் பிணக்குகளைப் போக்குவதே என்று மதுரம் எண்ணினாள். பர்வத ராணி என்றும் செருக்காமல், பர்வத நந்தனி என்றும் கொஞ்சாமல். பெயரால் சுட்ட நேரும்போதெல்லாம், தான் பர்வதம் என்றே குழந்தையை அழைத்து வந்தது ஏன் இவ்விருவர் நெஞ்சிலும் உறைக்கவில்லையோ?

ஒரு நாள் இதனை வெளிப்படக்கூறிவிடத் துணிந்தாள் மதுரம். 'பர்வதத்தின் நிலை எனக்குப் பயம் தருகிறது. ராணியும் நந்தினியும் சண்டை போடும்போது பர்வதத்திற்கு என்ன வேலை இங்கேஎன்று குழந்தை உணவுஏதுமே உட்கொள்ளாமல், சாகப்போகிறது. அப்பொழுது மலையே இடம் விட்டுப் பெயர்ந்துவிட்டதுபோல் இந்த வீடும் என் வாழ்வும் சூனியமாகிவிடும் என்பது உங்கள் அறிவில் உதிக்கவேயில்லை. நீங்கள் உங்கள் பரஸ்பரச் சண்டையை நிறுத்த முடியுமானால் நல்ல குறிகள் தோன்றலாம். குழந்தை வயிறு காயும்போது எனக்கு மட்டும் என்ன உணவு வேண்டியிருக்கிறது! காந்தி மகான் போல் நானும் உண்ணா விரதம் இருக்கப் போவதாக மிரட்டவில்லை. என் அம்மா ஞாயிற்றுக்கிழமைப் பட்டினி விரதம் இருபது வருஷமாக நோற்கிறாள். நாளை முதல் நானும் அப்படி இருக்கப் போகிறேன்—தெய்வம் தான் குழந்தையைக் காப்பாற்றணும்!" என்று கூறிக் கண்ணீர் உகுத்தாள்.

"நல்ல யோசனை, மதுரம். நானும் யோசித்ததுண்டு தெய்வப் பிரார்த்தனையோ, நவக்கிரக சாந்தியோ பர்வதத்திற்காக நடத்த வேண்டுமென்று. நானும் விரதம் இருக்கிறேன் சனிக்கிழமைகளில். இன்றே தொடங்கி விடுகிறேன். இன்றிரவு எனக்குச் சாப்பாடில்லை—பலகாரமும் வேண்டாம்" என்று கந்தசாமி அய்யர் கூறும்போதே, தம் கண்களில் ஊறும் நீரைத் துடைத்துக் கொண்டார்.

ஏதோ சொல்ல வேண்டும் உடனே என்று சரசுவுக்குத் தோன்றிற்று—ஆனால், அதை செவ்வாய்க்கிழமை காலையில்தான் மெல்லத் தன் தாயிடம் வெளியிட்டாள். "அம்மா! சைதாப்பேட்டை பத்மா செவ்வாய்க்கிழமை விரதம் மேற்கொண்டு—அன்றிரவு பலகாரம் செய்வாள். நானும் அங்கேயே அதைக் கடைப்பிடிக்க விரும்பினேன். ஆனால், உன் மாப்பிள்ளை வேண்டாம் என்று தடுத்தார். இங்கே நீ தடை கூறாதே—நானும் பர்வதத்திற்காக விரதம் காப்பேன்" என்று சரசு யோசனை கேட்பதற்குப் போல வந்தவள், பொங்கி வந்த அழுகையால் கண்ணீரை அடக்க முடியாமல் தேம்பியவாறே சமையல் அறைக்குப் போய்விட்டாள்.

மூவரும் பட்டினி கிடந்தனர்—அந்தந்த வாரங்களில். ஒரு மாதம் இங்ஙனம் கடந்த பிறகு மெல்ல குணம் தெரிந்தது பர்வதத்திற்கு. ஒரு நல்ல நாளில் குழந்தைக்கு ஜலம் விட்டு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டி, மதுரம் அதனை மடியில் வைத்துப் பால் கொடுத்தபோது, அப்படியே பர்வதம் தூங்கி விட்டாள். இதை அறிந்த தாய் மெல்ல அதைத் தன் மடியிலிருந்து தொட்டிலுக்கு மாற்றுவதற்காகப் பெஞ்சிலிருந்து எழுந்தாள்—குழந்தை விழித்துக் கொண்டது. குழந்தைக்கு நீராட்டுகையில், டம்ளரினால் வெந்நீர் மொண்டு மொண்டு விட்டு உதவிய செல்லம் அப்பொழுது அங்கே நுழைந்ததால், அவள் "கொடு அம்மா என்னிடம்—நான் தொட்டிலுக்குக்கொண்டுபோகிறேன்" என்றதும் தாயும் மெல்ல மகவைக் கொடுத்தாள்.

செல்லம் நகர்வதற்குச் சிறிது தயங்கினாள். "அம்மா, ரெண்டு நாளாக உன்னை ஒன்று கேட்கணும் என்று எனக்கு ஆசை. பாப்பா

வைப் பதினோராம் தினம் தொட்டிலிட்ட போது அதின் காதிலே அதின் பேரை நீ சொல்லி யிருப்பாயாமே—பள்ளிக்கூடத்தில் என் சிநேகிதி கோனு, அப்படி வழக்கம் உண்டு என்று சொன்னாள். பாப்பாவின் காதில் நீ முணுமுணுத்த வார்த்தை என்ன? பர்வத ராணியுமல்ல, பர்வத நந்தினியுமல்ல பர்வதம் மட்டும்தானே!'' என்று வினவுதற்குச் செல்லம் ரேழியில் தாமதித்தாள்.

மதுரம் நகைத்தாள். செல்லம் வீட்டுச் சண்டைகளை எத்தனை சாந்தமாய்—அறிந்தும் அறியாதவள் போல் கவனித்திருக்கிறாள் என்று மதுரம் எண்ணியதும் கண் சிறிது கலங்கிற்று. ''ஆமா—செல்லம்! பாப்பா காதில் சொன்னேன், பர்வத வர்த்தனி என்று சொன்னேன்!'' என்றாள்.

உடனே ''பர்வத வர்த்தனியா நீ?'' என்று செல்லம் குழந்தையை ஒரு குலுக்கு மெல்லக் குலுக்கினாள். அது விழித்துக் கொண்டது—ஒரு புன்னகையும் அரும்பிற்று இதழ்களிலே, அந்தப் பெயரையே தான் விழைவது போல.

இந்தச் சமயம் நாணு வந்தான். ''நேற்றுப் பாடத்தின் போது வில்லி பாரதத்தில் ஒரு பாடலிலே, மகுட வர்த்தனரும் பட்ட வர்த்தனரும் என்ற சொற்கள் வந்தன. பண்டிதர் அவற்றை விளக்கினார். வர்த்தனர் என்றால் மன்னராம். ஆகையால் வர்த்தனி என்பது அரசியாய்த் தானிருக்கும். அதாவது, பர்வத ராணி என்ற பொருள் தான்!'' என்று சொல் மாரி பொழிந்தான் அண்ணன்.

''போதுமப்பா பிரசங்கம்— வாயை மூடு நாரதா! கண்மணியை எழுப்பிவிடாதே!'' என்று கடிந்தாள் தாய்.

கந்தசாமி அய்யர் வாசலில் செருப்புக் கழற்றும் சத்தம் கேட்டது. மெள்ள அவர்



சமீபத்தில் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பந்தல் சித்திர விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, தேவலோகம் போல் விளங்கிற்று.

கூடத்துள் நுழைந்து கொண்டே, "கோவிலிலிருந்து வருகிறேன், பொற்றாமரைக் குளத்துப்படிகளில் கோவிந்த கனபாடிகளைக்காண நேர்ந்தது. அவரை விசாரித்தேன், பர்வத வர்த்தனி என்பது ராமேசுவரத்தில் அம்மன் பெயராம். ராம பிரான் மணலில் லிங்கம் பிடித்துப் பூஜை செய்த பின்பே இலங்கைக்கு ராவண சம்காரத்திற்காக......" என்று அவர் வாக்கியத்தை முடிப்பதற்குள்ளே, சரசு குறுக்கிட்டு,

"சரி, இவளுக்கு ராமநாதன் என்ற கணவன் பிறந்திருப்பான்!" என்று கடைசிக் கடைசியாக முத்திரை யிட்டதுபோல் சொன்னதும், எல்லோரும் ஆரவாரித்தனர் ஆனந்தமாய். "பாப்பாவுக்குக் கலியாணமாப்பா?" என்று ரங்கனும் ஒரு அசட்டுக் கேள்வியைப் போட்டு வைத்தான்.

"ஆமாண்டாப்பா!" என்று மதுரமும் சாந்தமாய்,சாவதானமாககூறியபோதுதான், அனைவரும் கூச்சல் அடங்கி, தாய் முகத்தை அமைதியோடு நோக்கினர்.

பர்வத வர்த்தனி இன்பமாய்த் தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். "நாளைக்கே புறப்பட்டு வருமாறு அம்மாவுக்குக் காகிதம் போடுங்கள் இப்பொழுதே." என்று வேண்டினாள் மதுரம் தழு தழுத்த குரலில்.

தந்தை முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "பேத்தியின் உடம்பு இங்கே சரியாகி விட்டது. ஆனால் பாட்டியின் உடம்பும் கண்ணும் அங்கே அப்படியே தான் இருக்கிறதாம். குழந்தைகள் அங்கே போய், பாட்டியின் பாதங்களில் விழுந்தோ, அல்லது தோள் மேல் சாய்ந்தோ அவளைத் தரிசனம் காணச் செல்ல வேண்டும். நான் 20 நாள் லீவுக்கு எழுதிப் போட்டாச்சு—நிச்சயம் லீவு கிடைத்துவிடும். எட்டு பேரும் புறப்பட்டுப் போவோம். " என்று அவர் தெரிவித்ததும் களிப்பு மேலீட்டால் குழந்தைகள் ஆடிப் பாடினர், துள்ளிக் குதித்தனர்.

"ஆமாப்பா, இந்த ஊரையும் வீட்டையும் சில நாள் மறந்து, வேறு ஊர் போய் வருவது பல விதத்திலும் நல்லது தான்" என்றாள் சரசு. "சைதாப் பேட்டைக்கா போகணும்?" என்றான் போக்கிரி நாணு,

'இன்று சாயந்திரமேயா பயணம்—மூட்டை கட்டட்டுமா?" எனக் கேட்டாள் செல்லம் பரபரப்புடன், நாணுவின் குறும்பை உணராமல்.

"நாளை ராத்திரி போவோம். குழந்தைக்கு இப்பொழுதுதான் ஜலம் விட்டிருக்கு—இன்றைக்கு வேண்டாம்" என்று கூறும் போது இரு கண்களும் பொல பொலவெனக் கண்ணீர் உகுத்தன. தாயை உடனே காணுதற்கு அவா—சேயைப் பேணுகிற சிரத்தை—இவற்றிடையே ஊசலாடித் தவித்தது அவளது அன்பு ததும்பும் உள்ளம், பர்வத வர்த்தனி அப்பொழுது சுகமாய்த் தூங்கிக் கொண்டிருந்த தொட்டில் போல. பாட்டி வாழும் குக்கிராமத்துத் தோப்பு துரவுகளிலும் குளம் கோயில்களிலும் மகிழ்வதற்குப் பாய்ந்து கொண்டிருந்த சீனு ரங்கன் செல்லம் நாணு சரசுவின் உள்ளங்களிலோ—தாங்கள் மெள்ளச் சாவகாசமாக மூட்டை கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணமும் உதித்ததால், மதுரத்தின்யோசனை-ஏமாற்றம் அல்ல, மகிழ்ச்சியே ஊட்டிற்று இன்னும் அதிகமாய். பர்வதவர்த்தனியும் உறக்கத்திலே கண் மூடிய வண்ணமே அப்பொழுது ஒரு கண நேரம் மோகனப் புன்னகை பூத்தது ஆச்சரியமல்லவா? சண்டைகள் ஓய்ந்தன தன்னைப் பற்றி என்று அறிந்ததோ அந்த எட்டு மாதக் குழந்தை?

வாசலில் ஜட்கா நிற்கும் ஓசை கேட்டது. கனவிலிருந்து எழுந்தது போல மதுரம் ரேழிக்கு ஓடினாள். அவளுக்கு முந்திப் பாய்ந்தான் ரங்கன்.

"பாட்டி! அம்மா, பாரங்கே பாட்டி! வாசற்படி ஏறுகிறாள். தனியாக வந்திருக்காளே துணையில்லாமல்!

மதுரத்தால் நம்பவே முடியவில்லை. "அம்மா" என்றாள் "அதோ, அண்ணாவா பின்னாலே?"

கிழவி குரல் கணீரென்று வந்தது. "என் கண் சரியாகி விட்டது—துணை வேண்டாமப்பா ரயிலில் என்று நான் மன்றாடியும் அவன் கேட்கவில்லை. எங்கே குழந்தை?" என்று உள்ளே பாய்ந்தாள் கீச்சுக் கீச்சென உள்ளே ஓலமிடும் தொட்டிலை நோக்கி.

மருந்தும் விரதமும் தியானமும் இங்கே மதலை பர்வதத்திற்கு உயிர் அளிக்குமாயின், அங்கே முதியோள் பர்வதமும் மருந்து விரத தியானங்களால விழியுடன் வலுவும் பெறுவதில் விந்தை என்ன?



காஷ்மீரில் இப்பொழுது அமைதி நிலவுகிறது.

சங்கப் பலகை

சத்திய லோகம்
கிருத யுகம்

பாஞ்ச சன்னியம் அவர்கட்கு.

தங்களுக்குக் கல்வியைப்பற்றி நாங்கள் கொண்ட அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறதாகக் குறித்திருந்தேனன்றோ. எல்லாவற்றிற்கும் வித்தாக வுள்ளது கல்விதான் என்று தங்கள் நாட்டுக் கம்பன் இசைத்த பாட்டு எங்கள் உலகத்திலும் ஒலிக்கின்றது.

> "ஏகம் முதற்கல்வி ஊமுத் தெழுந் தெண்ணில் கேள்வி
> யாகம் முதற்றின் பணை போக்கி யருந்தவத்தின்
> சாகந் தழைத்தன் பரும் பித் தருமம் மலர்ந்து
> போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே"

இந்தப் பாட்டின் சுவையை அடிக்கடி மாந்துகின்றோம். கல்விதான் வித்து. அவ் வித்திலிருந்து அநேக கேள்விகளாகிற கிளைகள் விரிகின்றன. இக் கிளைகள் மீது தவமாகிற இலைகள் தழைக்கின்றன. பிறகு அன்பு தோன்றுகிறது. அவ் வன்பிலே தான் தருமம் மலர்கின்றது. அத் தர்ம மூலந்தான் வாழ்க்கைக் கனியைச் சுவைக்கின்றோம். அதில் எத்தனை உண்மைகள் அடங்கி யிருக்கின்றன பாருங்கள்.

ஆற்றல் வேண்டும்; அறிவு வேண்டும்; அன்பு வேண்டும். ஏதாவது ஒன்று அதிகமானால் மனிதனின் வாழ்க்கை யாழ் தக்கபடி ஒலிக்காமற் போய்விடும். வெறும் ஆற்றல் மட்டும் மனிதனுக்கு இருந்தால், அது ஒன்றுக்கும் பயன்படாது. அது ஒரு குருட்டுச் சக்தியாக மாறிவிடும். அறிவு மட்டும் இருந்தால், உலகத்தையே அது அழித்து விடும். அன்போடு சேர்ந்த அறிவுதான் உலகத்தைக் காக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எங்கள் நாட்டில் மனிதனின் ஆத்ம வளர்ச்சியைத்தான் முக்கியமாகக் கருதுகிறோம். கல்வி என்பது விஷயங்களை மனத்தில் திணிப்பதன்று. விஷயங்களை நிரப்புவது கல்வி ஆகுமானால், புத்தக சாலைகளெல்லாம் மிகுந்த அறிவாளிகளாகக் கருதப்படும்.

கல்வி சம்பந்தப்பட்டவரையில் மூன்று விதக் கொள்கைளை நாம் அனுஷ்டிக்கலாம். (1) படிப்புக்கேற்ற சூழ் நிலையைப் படைத்துத் தரலாம். (2) மனிதனுடைய ஆற்றலையும் சக்திகளையும் அறிந்து அவைகளை மனிதனிடத்தில் முதிரும்படி செய்யலாம். (3) சமுதாயத்தின் சேவைக்காக மனிதனை ஒரு கருவியாக ஆக்கிவிடலாம். மனிதனை ஒருகருவியாக ஆக்க எங்களுக்குச் சம்மதமில்லை,மனிதன் சமுதாயச் சேவை மூலம் தன் ஆத்ம தரிசனத்தை அடையலாம்; ஆனால் சமுதாயம் இவன் அகவுயிர் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்குமானால், சமுதாயத்தை எதிர்க்கும்படியான சுதந்திரத்தை அளித்திருக்கிறோம். எங்களுடைய மதம் மனிதனுக்காகவே சமுதாயம்: சமுதாயத்திற்காக மனிதன் அல்லன் என்பதே. உங்கள் ருஷிய நாட்டில் வறுமைப் பேயை அடித்துத் துரத்தி விட்டதாக ஆரவாரஞ் செய்கிறார்களே; அங்கே மனிதனுக்குச் சுதந்திரம் உண்டா? அங்கே அதிகாரிகள் கொண்ட கொள்கைகளை ஒருவன் எதிர்த்தால், சார் (Czar) காலத்துக் கொலைக் கருவிகளை வைத்திருக்கின்றனர். அவைகளைப் பிரயோகஞ் செய்வார்கள். அவர்கள் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே ரேடியோ நிலயங்கள், நாமங்கள், சினிமாக்கள். சங்கீதங்கள், மற்ற எல்லாக் கலைகளெல்லாம் அமைகின்றன என்ற செய்தியை நன்கறிவோம். இப்படியிருந்தால் தளைகளைத் தவிர வேறுண்டோ.

உங்களுடைய ஹிட்லரைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. யூதர்களை வதைத்ததை நாங்கள் அறிவோம். ஹேகல் கொள்கையில் பிறந்து, நீட்சே, பிஸ்மார்க் முதலியோர் சூழ் நிலையில் தாவப்பட்டு, இந்த அரக்கவுரு அவன் அடைந்தான் என்பதையும் நாங்கள் உணர்வோம். தன் நாட்டுப்பத்திரகாளிக்குப் பல்லாயிரக் கணக்கான மனிதர்களைப் பலி கொடுத்தானே அக் கொடியோன்!

தேசத்திற்காக ஒருவனைப் பலி கொடுப்பது நியாயமா? தகப்பன் தன் பிள்ளையைத் தியாகம் செய்யலாமா? மனைவியை விற்றுவிடலாமா? பிள்ளைக்குத் தனித்த ஓர் ஆத்மா இல்லையா? மனைவிக்கு ஒரு தனித்த ஆத்மா இல்லையா? ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு தனித்த சுபாவமுண்டு; ஆத்ம சக்தி உண்டு. அந்தச் சக்தி எவ்வளவு தூரம் விரியக்கூடுமோ, அவ்வளவு தூரம் விரியக்கூடிய சூழ் நிலையைச் சமைப்பதே சமுதாயத்தின் கடனாகும். இந்தச் சுருதியில்தான் எங்கள் கல்வி நாடி பேசுகின்றது.

எங்கள் நாட்டில் போர் நின்று விட்டது என்று முன்னமே சொல்லியிருக்கிறேன் அன்றோ, போரில் எத்தனை கோடிப் பணம் செலவு செய்கின்றனர், அத்தனை பணத்தையும் கல்வித் துறையில் செலவு செய்தால் எப்படி அறிவு தழைத்தோங்கும், யோசித்துப் பாருங்கள்.

எங்கள் நாட்டில் தெருவுக்கொரு பள்ளிக்கூடம் அமைத்திருக்கிறோம். குழந்தையைப் பெறவேண்டியது பெற்றோர்கள் கடமை. அதை வளர்ப்பது அதற்குக் கல்வி முதலிய அலுவல்களைச் செய்வது யாவும் தேசத்தைச் சார்ந்தவை. கல்வியை நாங்கள் விற்கிற வழக்கம் கிடையாது. சம்பளங்கிடையாது என்றதைத்



புது டில்லியில் நடைபெற்ற இந்தியத் தொழிற் சங்கத்தின் வருடாந்தர விழாவைப் பண்டித ஜவஹர்லால் நேரு ஆரம்பித்துச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். வலதுபுறம் வீற்றிருப்பவர் சங்கத் தலைவர் M. A. மாஸ்டர்.

தங்களிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குழந்தை பிறந்தவுடன் குழந்தை இல்லங்களில் பெற்றோர்கள் கொண்டு விட வேண்டியது. ஆகாரம் கொடுப்பதில் மிகவுஞ் சாக்கிரதையாக நாங்களிருக்கிறோம். குழந்தைக்கு அதிக சலுகை காட்டுவதில்லை; அதிகமான கண்டிப்பும் எங்களிடத்தில் இல்லை. எல்லாம் மிதந்தான். குழந்தை சுதந்திரத் தொட்டிலில் தான் வளர்கிறது. அச்ச மென்பதே குழந்தைகளுக்குத் தெரியாது; பொருமைக்கு இடமேகொடுக்கிறதில்லை. எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே விதமான உடை, ஒரே விதமான ஆகாரம்; ஒரே விதமான விளையாட்டுச் சாமான்தான். குழந்தைப் பருவத்தில் ஆரம்பிக்கிற அழுக்காற்றுத்தீப்பொறிதான், பிறகு ஒரு பெருங் காட்டுத் தீயாகப் பரவுகிறது என்ற உண்மையை நாங்கள் நன்கறிவோம்.

உடலைக் கவனிக்கின்றோம். அது தக்க நிலையில் இருந்தால்தான் மற்ற அலுவல்களில் மனிதன் ஊக்கத்தோடு நுழைய முடியும்.

உடல் நலத்தை மட்டும் நாங்கள் பேணவில்லை. அறிவை வளர்க்கின்றோம். அறிவோடு எங்கள் கல்வி நின்றுவிடவில்லை. அன்பையும் விரியச் செய்கின்றோம். இத் திருமூர்த்திகளையும் சேர்ந்து வணங்குகின்றோம். ஏதாவதுஒன்றினிடத்தில் அதிக பக்தி ஏற்படுமானால், வாழ்க்கை அமைதி குலைந்துவிடும் என்பது உண்மையே.

எங்கள் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் பரீட்சைகளில்லை என்று முன்பு குறித்திருக்கிறேன். பரீட்சைகளும் மனத்தில் ஒரு விதமான அழுக்காற்றை உண்டு பண்ணும் என்று சொன்னேன் அன்றோ. பரீட்சை இல்லாமல் போனால் எப்படி ஒருவனுடைய அறிவை அளக்க முடியும் என்று நீங்கள் வினவலாம்: ஆத்ம வளர்ச்சிதான் கல்வியின் நோக்கமென்று நான் மொழிந்திருக்கிறேன். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் இறங்க வேண்டுமென்ற ஆசை ஏற்படுமன்றோ? அந்த ஆசைக்கு உருக் கொடுக்க முயலுகின்றோம். அவரவர் தூய மனம் போன படி விட்டால், சண்டை யேது? சச்சரவு ஏது? நாங்கள் எங்கள் நாட்டில் கற்றுக் கொடுக்கிறது சுதந்திரந்தான். அறிவு எங்கெங்கே அழைத்துச் செல்லுமோ அங்கங்கே மனிதன் போகத் தயாராயிருக்க வேண்டும் என்ற மதத்தைப் பரப்புகின்றோம். ரேடியோ நிலையங்கள் ஒரு கட்சிக்காரருக்கு மட்டும் உரியதல்ல. அபிப்பிராய பேதங்களுக்காக நாங்கள் ஒருவரைச் சிறையில் வைப்பதில்லை. அச்சமற்று அபிப்பிராயத்தை அறிவித்ததற்காக நாங்கள் பரிசும் அளிப்போம். ரகசியம் என்பது எங்கள் நாட்டில் இல்லை. ரகசியப் பேச்செல்லாம் அச்சத்தில் விளைகிறவை. அரசாங்கம் நடத்துகிறவர்களிடத்தில் சுயநலமில்லை. அமாத்தியப் பதவி யெல்லாம் தங்கள் வயிறு நிரப்புவதற்காக இல்லை.

இந்தப் பாஷையைக் கற்றுக்கொள்ளக் கூடாது: அந்தப் பாஷையைக் கற்றே தீர வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. கட்டாயப் படிப்பு தீங்கை விளைவிக்கும். எத்தனை நயமுள்ள நூலாயிருந்தாலும், அதைப் படித்து மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற அறிவீனம் எங்களிடத்தில் இல்லை. அவரவர் இச்சைப்படி விட்டு விடுவோம். எங்கள் பாஷை உயர்ந்தது, அன்னிய பாஷை தாழ்ந்தது என்ற மதியீனம் எங்களிடத்தில் இல்லை. எல்லா நூல்களிடம் நயங்களிருக்கின்றன. எதையும் உவகையுடன் படிக்கத் தயாராயிருப்போம். எழுதப் படிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது. எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் சக்தியை வளர்க்கிறோம். பல பத்திரிகைகளில் பல அபிப்பிராயங்கள் வரும். அவைகளைச் சலித்துப் பார்க்கும் ஆற்றலைப் பாலோடு ஊட்டுகின்றோம். எங்கள் இலக்கியம் இதனால் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. எங்கள் நாடக சாலைகள் தூய்மையுள்ள கோயில்களாகத் திகழ்கின்றன. இத்தனைக்கும் வித்தாயுள்ள கல்வியை விதைக்கின்ற உபாத்தியாயர்களுக்குத்தான் உயர்ந்த பதவியை அளித்திருக்கிறோம். அவர்கள் தாம் நாம் கண்கண்ட தெய்வங்கள். அவர்கள் தவநெறிக்கோர் பெரு நெறியாய் நிற்கின்றனர். அவர்கள் தாம் எங்கள் அகவுயிர் பயிருக்குக் களைகண்ணாவார்கள். எங்கள் நாட்டுக் கல்வியைப்பற்றிச் சொன்னேன். தங்கள் நாட்டுக்கல்வியின் நிலையைப்பற்றி அறிய அவாவுடையேன். பிறகு எங்கள் இலக்கியச் சிருஷ்டிகளைப் பற்றித் தங்களுக்கு அறிவிக்கிறேன்.

தங்களன்புள்ள

சத்திய காமன்.

உழைக்கப் பிறந்தவள்

"நிதி"

பால் நிலவு. நடுநிசி. பாரிஸ் நகரம் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது. எங்கும் நிசப்தம். அரண்மனையின் ஓர் புறத்தில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அறையின் கட்டிலில் ஓர் உருவம் தூக்கமில்லாமல் புரண்டு புரண்டு படுத்தது. ஆம். அவனுக்கு எப்படி உறக்கம் வரும்? ஒரு வாரத்திற்கு முன்பு தனக்குக் கிடைத்த வெற்றியைத் தன் மனக்கண்முன் நெப்போலியன் சித்திரித்துக்கொண்டிருந்தான். தான் போரில் எவ்வளவு சாமர்த்தியமாகவும், தந்திரமாகவும் நடந்து கொண்ட போதிலும் ஓர் சமயம் தன்னை எதிரி துப்பாக்கியால் சுடப்போகும் தருணம் தன் சேனாதிபதி காப்பாற்றியதையும், தான் வெற்றியுடன் நாடு திரும்பும் போது ஜனங்கள் தன்னை ஆரவாரத்துடன் வரவேற்றதையும், அவன் மனதில் எண்ணிய போது அவனுக்குப் படுக்கையில் இருப்புக் கொள்ளவில்லை. சற்று நேரத்தில் ராஜ வீதியை நோக்கி அவன் வெண்புரவியைத் தட்டிவிட்டான்.

குதிரையின் குளம்புகளின் சப்தத்தைத் தவிர வேறோர் அரவமும் அவ்வீதியில் கேட்கப்படவில்லை. எவ்வளவோ இரவுகள் இவ்வீரன் தனக்கு மனச்சாந்தி ஏற்படாவிட்டாலும், அல்லது அளவுக்கு மீறிய சந்தோஷம் தரக்கூடிய சம்பவம் நேரிட்டாலும், இப்படித்தான் தனிமையாகக் குதிரையின் மீது ஊர்சுற்றி வருவது வழக்கம். வெண்மையான இரவு, தென்றல் காற்று, அமைதி நிலவிய நகரம்—இவற்றினிடையே தன்னுடைய அருமைப் புரவி, தன் வாலிப முறுக்கு, எல்லாவற்றிற்கும் மேலாகச் சில நாட்களுக்கு முன்பு தான் அடைந்த பெரும் வெற்றி—இவைகளால் இதுவரை அனுபவித்தறியாத ஓர் இன்பத்தை அவன் அனுபவித்துக் கொண்டே சென்றான்.

ஓர் நர்ஸ் தன் வேலை முடிந்தவுடன் ஆஸ்பத்திரியிலிருந்து அவள் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள். குதிரையும் அவளை நெருங்கி விட்டது. பிரஞ்சு சட்டப்படி அவள் நெப்போலியனை நோக்கிச் சலாம் செய்துவிட்டு மேலே நடக்கலானாள். உற்று நோக்கினான் அவளை. தன்னையும் அறியாமல் கைகள் குதிரையின் கடிவாளத்தை இழுத்தன. குதிரையும் நின்றது, "சிஸ்டர்", என்றான். நடந்து சென்றவள் பயத்துடன் திரும்பி வந்து மரியாதையுடன் வணங்கினாள். அவள் அணிந்திருந்த வெள்ளை உடை அவளை அன்று மலர்ந்த மல்லிகை போல் எடுத்துக் காட்டிற்று. அவளுடைய கரு நிறக் கூந்தல் மலர்க்கொடி போல வளைந்து வளைந்திருந்தது. உடலுக்கேற்ற உபரமும் உயரத்துக்கேற்ற உடலும் பெற்றிருந்தாள். கண்கள் அச்சத்துடன் மிரண்டன. அழகு வழிந்தோடியது. அவனோ அழகை வழிய விடாமல் தேக்கக் கைகளை ஏந்துவான் போலிருந்தது. காதல் என்பதையே இது வரை சுவைத்தறியாத அவ்விளங் காளைக்கு அவளைக் கண்டதும் ஏதோ ஓர் உணர்ச்சி அவன் நரம்புகளைத் தூண்டின. கண்கள் அவளுடன் பேச எத்தனித்தன. அவளுடைய கண்களோ 'ஓர் சக்ரவர்த்தி தம் அடிமையை இப்படி ஏன் பார்க்கிறார்!' என்பதைப் புரிந்து கொள்ளாமல் பேசப் பயப்பட்டன.

எவ்வளவு நேரம் இக் குளிரில் அவள் நிற்பாள். மௌனத்தைக்கலைக்கப் "பிரபு" என்றாள். இப்பொழுது இருக்கும் சில காட்டு ராஜாக்களைப் போலவா அவன் தாதிகளிடமும், கண்ட பெண்களிடமும் இன்பம் நுகர்ந்தவன்? இல்லை; அவன் வாழ்நாட்கள் பூராவும் 'யுத்தம், யுத்தம், வெற்றி, வெற்றி' என வாழ்ந்த செம்மல் அல்லவா! இது வரையில் கண்டிராத அப் பெண்ணின் எழிலைக் கண்டு சொக்கித் தான் கட்டுண்ட நாகம் போல் மதியிழந்து கிடந்தான். மறுபடியும், "சக்கரவர்த்தி—நான் போகலாமா," என்றாள். "உன் பெயர்?" என்றான். "மார்கிரெட்." 'உன் தந்தையின் பெயர்?" "தாய் தந்தையற்ற ஓர் அநாதை. என் பெற்றோர்கள் யார் என்று கூட எனக்குத் தெரியாது," என்றாள். "ஆகையால்தான் இந்த நர்ஸ் தொழிலில் ஈடுபட்டாயோ?" என்றான். " இல்லை பிரபு,

யுத்தத்தில் காயம்பட்டுத் தவிக்கும் என் நாட்டு மக்களுக்குத் தொண்டு புரிவதற்குத்தான் இத்தொழிலை மேற்கொண்டேன். ராஜ்யம் பெருக்கும் பேராசை கொண்ட ஒரு சிலரால் மக்களின் ரத்தம் சிந்துவதை நினைக்க என் உடல் நடுங்குகிறது. எப்பொழுது இத் தீய செயலிலிருந்து நாடு விடுபடுமோ, தெரியவில்லை.'' என்று பதிலளித்தாள். பிற நாட்டரசர்களைச் சண்டையில் தோற்கடிப்பதே தன் தொழிலாகக் கொண்ட நெப்போலியனுக்கு அவள் சொற்கள் கோபத்தைக் கிளறிவிட்டன. "கேட்ட கேள்விக்குப் பதில் எதிர்பார்க்கிறேன். உன் புத்திமதிகள் இங்கு தேவையில்லை,'' என்றான் கோபத்துடன். அதை ஆமோதிப்பதைப் போல் குதிரையும் கனைத்தது. பயந்தாள் பேதை. சக்கரவர்த்தி என்பதையும் மறந்து தான் பேசியதை நினைத்ததும் அவள் உடல் சற்று நடுங்கியது. அந்த நடுக்கத்திலும் ஓர் தனி அழகை அவன் கண்டான். அவனையும் அறியாமல் ஓர் முல்லைச் சிரிப்பு அவன் உதடுகளை அசைய வைத்தது.

" மார்கிரெட், இப்படி எவ்வளவு காலம் நீ இந்தத் தொழிலில் ஈடு படப்போகிறாய்?'' என்று வினவினான், "எவ்வளவு காலம் என் தேசத்து மக்கள் போரினால் அவதியுற்றுச் சிகிச்சைக்கு ஆஸ்பத்திரிகளில் அடைக்கலம் புகுகிறார்களோ அவ்வளவு காலம் வரையில்,'' என்றாள். அவள் சொல்லில் ஆர்வம் தொனித்ததை அவன் உணராமலில்லை. " அப்படியானால் உன் ஆயுள் பூராவும் இப்படித்தான் இருக்க வேண்டும் போலும்,'' என்றான். "நான் அதைச் சந்தோஷத்துடன் வரவேற்கிறேன்,'' என்றாள் சற்றும் யோசியாமல். "அப்படி என்றால் உன் நாட்களை மணமாகாத பெண்ணாகவே கழிக்கப் போகிறாயா?'' அவள் ஒரு பேயைப் போல்



டில்லி பெண் போலீஸ் தொகுதியினர் பயிற்சி பெறுகின்றனர்.

சிரித்தாள். நிசப்தமான அந்த இரவு வேளையில் சிரிப்பின் ஒலி தெருவில் உறங்கிக் கொண்டிருந்த நாய்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி விட்டது. சில குரைக்கவும் ஆரம்பித்தன. "உழைக்கப் பிறந்தவளுக்கு விவாகம் வேறு! ஆம், ஒரு காலத்தில் தனக்கு இசைந்த ஓர் வாலிபனை மணம் செய்து கொண்டு உல்லாசமாக வாழ எண்ணியது உண்டு. ஆனால் யுத்தத்தில் உழலும் வியாதியஸ்தர்களை நினைக்கும் போது ......நான் எப்பொழுதும் மணமாகாத மங்கையாகவே இருப்பேன்......என் தேகத்திலுள்ள கடைசி துளி ரத்தம் சுண்டும் வரையில் என் தாய் நாட்டிற்கே உழைப்பேன். நான் உழைக்கப் பிறந்தவள். உழை...க்க...பி...றந்...த...வ...ள்." அவளால் வேறொன்றும் பேச முடியவில்லை. நாக்குக் குழறியது. சற்று நேரத்தில் சுய நினைவை இழந்தாள். அவள் சாய்ந்தாள். அவன் அணைத்தான். இருவர்களையும் சுமந்து குதிரை அரண்மனையை நோக்கிப் பறந்தது.

மயக்கம் தெளிந்து கண் விழித்துப் பார்க்கும் போது தான் எங்கிருப்பதென்றே அவளுக்குப் புரியவில்லை. அவள் ஓர் கட்டிலில் படுத்திருந்தாள். அவளுக்கு முன் நாற்காலியில் நெப்போலியன் கம்பீரமாக வீற்றிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் மேஜையின் மேல் பழ வர்க்கங்களும், பாலும் இருந்தன. தான் இருக்கும் இடம் அவளுக்குப் புலனாயிற்று. "மார்கிரெட்." என்று கூப்பிட்டான். அவள் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றாள். அவன் அவள் தோள்களைப் பிடித்து மீண்டும் கட்டிலில் படுக்க வைத்தான். "முன் பின் தெரியாத ஓர் பெண்ணை......!" அதற்குமேல் அவள் பேசப் பயப்பட்டாள். "தேசத்திற்கே தன்னை அர்ப்பணிக்கத் துணிந்த உன் புனித உடலுக்கும், எழிலுக்கும் நான் என்றும் அடிமை. இன்றுமுதல் நீ என் வாழ்க்கைத் துணைவி," எனப் புகன்றான். ஆச்சரியத்தால் அவள் விழிகள் மிரள மிரள விழித்தன. "ஆனால்......என் உதவிக்கு ஏங்கும் வியாதியஸ்தர்களின் கதி. பிரபு—நான் உழைக்கப் பிறந்தவள். என்னை விட்டு விடுங்கள். என் மக்கள் ஆஸ்பத்திரியில் வலியால் அலறும் குரல்கள் என் செவிகளில் ஒலிக்கின்றன. நான் போகிறேன். தயவு செய்து எனக்கு விடையளியுங்கள்," என்றாள் மார்கிரெட் கனிவு ததும்ப. "மார்கிரெட்—இனி அவர்களைக் காப்பது என் பொறுப்பு. இன்று தொட்டு பிற நாடுகளை அடிமைப்படுத்தும் பேராசை கொண்ட நெப்போலியன் அல்ல. இனி படை யெடுப்பு, பிற நாட்டு மக்களை அடிமைப்படுத்துவது என்பதைக் கனவிலும் கருதேன். என் தேசத்து ஜனங்களைக் காப்பதே என் தொழில். என் கடமை. இது சத்தியம்" என்றான். அவன் பேச்சில் உண்மை தொனித்தது.

* * *

சதா மருந்துகளில் உழன்ற அவள் கைகள் இன்று நெப்போலியனைப் பற்றின. குடிசையில் உறங்கியவள் இன்று ராஜ மாளிகையிலே பட்டு மெத்தையில் புரண்டாள். அடிமையாக வாழ்ந்தவள் இன்று பட்டத்து ராணி ஆனாள். தனிமையில் ஏங்கியவள் இன்று வாழ்க்கைப் படகைத் தன் காதலனுடன் செலுத்தலானாள்.

எதிரிகளின் படையெடுப்பால் பயந்து கிடந்த பிரஞ்சு மக்கள் இன்று நிம்மதியாக உறங்கினர். பகைவர்களின் குண்டுகளால் சரிந்திருந்த கட்டிடங்கள் இன்று வானளவு நிமிர்ந்து நின்றன. பஞ்சம், பட்டினியால் வாடிய மக்கள் இன்று உடல் பருத்து ஜீரணத்திற்கு மருந்து தேடினர். போரின் கொடுமையால் நெப்போலியனைத் தூற்றிய மக்கள் இன்று வாயார மார்கிரெட்டையும், நெப்போலியனையும் புகழ்ந்தார்கள்.

யுத்தத்தால் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த இருவர் உள்ளமும் இன்று அமைதி யடைந்தன. ஆம், யுத்தம் என்ற பேய் தலைவிரித்தாடாமல் குழி தோண்டிப் புதைத்த பெருமையை அவன் நினைத்தபோது நெப்போலியன் பூரிப்படைந்தான்.

* * *

மாதங்கள் ஓடின. அன்று நெப்போலியன் பிறந்த தினம். பாரிஸ் நகரம் ரமணீயமாகக் காட்சியளித்தது. ஒவ்வொரு வீடும் புஷ்பங்களாலும், படங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. விளக்குகளின் ஒளி இரவைப் பகல் போல் காட்டிற்று. தெருக்களில் மக்களின் கூட்டம் கட்டுக்கடங்கவில்லை. நெப்போலியன் வீதிகளில் ஊர்வலம் வந்து தன் மாளிகையை அடைந்தான். பிரஞ்சுப்படையின் தலைவன் ஸிட்னி ஒருவர் கண்ணிலும் படாமல் பதுங்கிப் பதுங்கி மார்கிரெட் அறையை நோக்கிச் சென்றான். எவ்வளவு காலம் அவளை அடைய ஏங்குவான். அவளை அடைய அவன் செய்த முயற்சிகள் யாவும் வீண்போயின. அவளோ அவனைக் கண் எடுத்தும் பார்க்கவில்லை, காதல் பித்து தலைக்கேறியது. நெப்போலியன் மனைவி என்பதையும் கருதாமல் அவள் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டான். "யாரது?" என்றாள் கோபத்துடன். "ஏன்" என்றான் ஸிட்னி. அவன் குரல் கனத்திருந்தது. அளவுக்குமீறி மது அருந்தியிருப்பதை அவன் கண்கள் வெளியாக்கின. "கள்ளத்தனமாக இங்கு வரக்

காரணம்." "நான் உனக்கு நெருங்கிய பந்து" என்று பதிலளித்தான் ஸிட்னி. அவள் சிரித்தாள். "பந்துவிற்கும் இங்கு நீ வருவதற்கும் சம்பந்தம்." என்று சொல்லி மீண்டும் மார்கிரெட் சிரித்தாள். "மார்கிரெட் — நான் உன்னை அடைய எவ்வளவு மாதங்களாக வாடுகிறேன் என்பதை அறிந்துமா இப்படிப் பேசுகிறாய்? கண்ணே! என் உயிருள்ள வரையில் உன்னை அடையாமல் இருக்க மாட்டேன்" என்றான். நாகம்போல் சீறினாள் மார்கிரெட். "நெப்போலியனின் வாள் உன் குருதியை ருசி பார்க்குமுன் இவ்விடத்தை விட்டுச் செல்," என்றாள். அதற்குள் யாரோ வரும் சப்தம் கேட்டது. ஸிட்னி சற்று பயந்தான். ஒன்றும் பேசாமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். இருட்டில் ஓர் ஆள் மறைவதை அறிந்து வேகமாகப் பின் தொடர்ந்தான். அவனால் உருவமே தெரியாத வெறும் இருட்டைத்தான் காண முடிந்தது

கொஞ்ச நேரத்தில் மார்கிரெட் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். அதே சமயம் நெப்போலியனும் அவளை நோக்கி நடந்து வந்தான். "மார்கிரெட்". "வணக்கம்" என்றாள். அவள் உடல் சற்றே பீதியால் நடுங்கிற்று. அதை அவன் அவ்வளவாகக் கவனிக்கவில்லை. "எனக்குத் தூக்கம் வரவில்லை. வருகிறாயா என்னுடன், சற்றுத் தோட்டத்தில் உலாவி வரலாம்," என்றான். அவள் பதில் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தாள். பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற புல்லின்மேல் அவள் படுத்தாள். அவன் அவளருகில் உட்கார்ந்தான். நிலவு ஒளியைப் பரப்பிற்று. பூங்காற்று வீசியது. பூக்களின் மணம் சற்று மயக்கத்தை உண்டாக்கியது. அவர்களுக்கு எதிராக எட்டு கஜ தூரத்திலுள்ள ஆலிவ் மரங்களிடையே ஓர் உருவம் ஒளிந்திருந்தது. அவ்வுருவம் நெப்போலியனைக் குறி பார்த்துச் சுட, தன் கைத் துப்பாக்கியைத் தூக்கிற்று. மறு நிமிஷம் "டுமீல்—டுமீல்" என்ற தோட்டாக்களின் சப்தம். குறி பார்த்துக் கொண்டிருந்த உருவம் சுருண்டு கீழே விழ்ந்தது! கையில் பிடித்த ரிவால்வருடன் மற்றோர் உருவம் அவனை நோக்கி ஓடி வந்தது. சப்தம் வந்த திசையை நோக்கி நெப்போலியனும் மார்கிரெட்டும் ஓடினர். ஸிட்னி மார்பில் இரத்தம் ஒழுக மாண்டு கிடந்தான், நெப்போலியனின் அந்தரங்க மெய் காப்பாளன் ராபர்ட் கைத்துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தான், நெப்போலியனுக்குக் கோபம் எல்லை மீறியது, "துரோகி—என் நண்பனைக் கொன்று விட்டாயே," என்று கர்ஜித்தான். "பழிக்குப் பழி" என்றான் ராபர்ட். மார்கிரெட் தனக்கும், ஸிட்னிக்கும் கொஞ்ச நேரத்திற்கு முன் நடந்த விவாதத்தைச் சொன்னாள்.

இதுவரையில் கண் கலங்காத நெப்போலியனின் கண்களிலிருந்து இரண்டு முத்துக்கள் உதிர்ந்தன. தேசத்தையும், ஓர் சமயம் தன் உயிரையும் எதிரிகளிடமிருந்து காப்பாற்றிய தளகர்த்தனின் உடலைக் கண்டு கண்ணீர் உகுத்தான். அவனைக் கட்டிக்கொண்டு புலம்பினான். "நண்பா—உன் வீரத்தையும், தீரத்தையும், ஆண்மையையும் பிறநாட்டவர்கள் போரில் கண்டு அஞ்சிய உனக்கா இந்தக் கதி! அற்பக் காதலுக்காக உன் ஜீவனையே மாய்த்துக் கொண்டாயே," என்று சொல்லி விம்மி, விம்மி அழுதான். மார்கிரெட் அவனைத் தேற்றினாள். மறுநாள் ராணுவ மரியாதையுடன் ஸிட்னியின் சடலம் அரண்மனையின் எதிரிலுள்ள தோட்டத்தில் புதைக்கப்பட்டது. அன்றுமுதல் ஒரு மாதம் வரையில் உளிகளின் சப்தம் அத் தோட்டத்தில் கேட்டவண்ணமாயிருந்தது. உளிகளின் சப்தமும் நின்றது. அச் சப்தத்தின் முடிவில் முப்பது அடி உயரமுள்ள ஸிட்னியின் உருவச் சிலை அத் தோட்டத்தில் கம்பீரமாகக் காணப்பட்டது. நெப்போலியன் மனதும் நிம்மதியடைந்தது. "உழைக்கப் பிறந்தவளே—அதோ பார் என் வீரச் செம்மலை," என்றான். மார்கிரெட் அச் சிலைக்குத் தலை வணங்கினாள்.

மசி

ஆர். கே. விசுவநாதன்

காலில் பூசிக்கொண்டிருந்த செம்பஞ்சுக் குழம்பை மசியாகவும், தலையில் சூடிக்கொண்டிருந்த தாழம்பூ மடலைக் காகிதமாகவும், பித்திகையைப்பேனாவாகவும் கொண்டு மாதவி கோவலனுக்குக் காதற் கடிதம் எழுதினாள் என்று இளங்கோவடிகள் ஒரு பாட்டில் கூறுகிறார். எழுதுவதற்குச் சமீப காலம்வரை நம் முன்னோர்கள் பனை ஓலையையும் எழுத்தாணியையுமே கருவிகளாக உபயோகித்து வந்திருக்கிறார்கள். வரிகள் நன்றாகப் புலப்படுவதற்கு ஓலையில்கரியைப்பூசுவார்களாம். ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னரே சீனர்கள் காகிதம் செய்யும் முறையைக் கண்டு பிடித்துவிட்டார்கள் என்றும் அக்காலத்திலேயே அவர்கள் கறுப்பு மசியைத் தயாரிக்கும் வழியையும் தெரிந்து கொண்டார்கள் என்றும் சரித்திர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். சீனாவிலிருந்து எஜிப்த் நாட்டிற்கு இவை பரவின. தமிழ் நாட்டிலும் கறுப்பு மசியைத் தயாரிக்கும் முறையை நம் முன்னோர்கள் வெகு காலத்துக்கு முன்னமே அறிந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இப்பொழுதும் கிராமாந்தர பள்ளிக்கூடங்களில் மசியை விலைக்கு வாங்கமாட்டார்கள். கடுக்காயை உடைத்து அதன் மேல் ஓட்டைத் தண்ணீரில் ஊறவைப்பார்கள். ஊறிய பின்னர் அதை அரைத்துத் தண்ணீரில் கரைத்துக் கொண்டு அன்னபேதியைச் சேர்த்துக் கொதிக்க வைப்பார்கள். அத்துடன் கோந்தும், சிறிதளவு காசுக்கட்டியும் சேர்க்கப்படும். கொதித்த பின்னர் அதை வடி கட்டி நல்ல கறுப்பு மசியைப் பெறுவார்கள். தற்காலம் எண்ணற்ற மசி தினுசுகள் பல்வேறுகாரியங்களுக்குப் பயன்பட்டுவருகின்றன.

எழுதுவதற்கு உபயோகப்படும் மசிகளில் கறுப்பு, நீலம், சிவப்பு மசிகள் தான் முக்கியமானவை. எழுதும்போது பேனா முனையிலிருந்து சுலபமாகவும் சீராகவும் மசி ஓடிவந்தால்தான் எழுத்துக்கள் நன்றாக அமையும். மேலும் காற்றுப் பட்டவுடன் மசி மொத்தையாகப் படியாமல் சீக்கிரம் உலர்ந்துபோகவேண்டும். நிறம் மங்காமல் நெடுநாள் வரை இருக்க வேண்டும். தண்ணீர் பட்டவுடன் எழுத்துக்கள் அழிந்து போகக்கூடாது. இத்தகைய பண்புகளைப்பெற்ற மசிகள் தான் எழுதுவதற்குச் சிறந்தவை. கறுப்பு மசி தயார் செய்வதற்கு முக்கியமாக வேண்டிய பொருள்கள் டானின் சத்தும் (Tannin), இரும்பு கலந்த இரசாயனப் பொருளும் தான். தாவரங்கள் எல்லாவற்றிலும் டானின் சத்து இருக்கும். இதை மரவுரித் துவர்ப்பு அல்லது மரப்பட்டைச் சிந்தூரம் என்றும் சொல்லுவார்கள். கடுக்காயைப்போல உள்ள சில கொட்டைகளில் இருக்கும் மரவுரித்துவர்ப்பு தான் கறுப்பு மசி செய்வதற்கு மிகவும் சிறந்தது. Logwood என்னும் மரத்திலிருந்து தயாரித்த மரவுரித் துவர்ப்பையும் சில வகைக்கறுப்பு மசிகளுக்குச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். சுத்த கறுப்பு மசி முதற்கொண்டு பல வேறு அளவுக்கு நீலம் மேலாடிய கறுப்பு மசி வரை பல தினுசு மசிகள் செய்யப்படுகின்றன. இரும்பு கலந்த இரசாயன உப்புடன் மரவுரித்துவர்ப்புச் சேரும்போது உண்டாகும் பொருள் நீரில் கரையாமல் தங்கிவிடும். அவ்வாறில்லாமல் அது நீரில் நன்றாகக் கலந்து மிதந்து கொண்டிருப்பதற்காகக்கோந்து (Gum Arabic) சேர்க்கப்படும். சிவப்பு மசி தயார் செய்வதற்கு Brazil wood என்ற மரத்திலிருந்து சிவப்பு நிறச் சத்தை இறக்குகிறார்கள். இத்துடன் Stannous chloride என்ற பொருளையும், கோந்தையும் சேர்த்துச் சிவப்பு மசியைத் தயார் செய்கிறார்கள். அமெரிக்கா நாட்டில் மசிகளில் இருக்கவேண்டிய பொருள்களை வரையறுத்துச் சட்டம் போட்டுவிட்டார்கள். டானிக் காடியில் (Tannic acid) இருபத்து மூன்று சதமும், காலிக் காடியில் (Gallic acid) எட்டுச்சதமும், Ferrous sulphate என்னும் இரும்பு கலந்த உப்பில் முப்பது சதமும், கோந்தில் பத்துச் சதமும், வளாவிய ஹைட்ரஜன் குளோரைடு (Dilute hydro-chloric acid) காடியில் இருபத்தைந்து சதமும், கார்பாலிக் காடியில் (Carbolic acid) ஒரு சதமும் மசியில் இருக்கவேண்டுமென்று

விதித்திருக்கிறார்கள். இதில் சிறிதளவுக்கு வர்ணச் சத்துகளைச் சேர்த்துப் பல நிற மசிகளைத் தயாரித்து வியாபாரம் செய்யலாம் என்று அனுமதித்திருக்கிறார்கள்.

இப்பொழுது வேறு வழிகளில் மிகவும் மலிவான மசிகளைத்தயார் செய்து வருகிறார்கள். இவை எல்லாம் டானின் சத்திலிருந்து தயாரித்த மசிகளைவிடப் பகட்டாக இருந்தபோதிலும் காற்று வெளிச்சம் இரண்டையும் சமாளிக்க முடிகிறதில்லை. இவற்றினால் எழுதிய எழுத்துக்கள் சீக்கிரம் மங்கிவிடுகின்றன. நீடித்திருக்க வேண்டிய காரியங்களுக்கு இவை உதவா. செயற்கையாகத் தயாரிக்கப்படும் வர்ணச் சரக்குகளிலிருந்து இவற்றைத் தயாரிக்கின்றார்கள். நெடுநாள் வரை நிலக்கரி எரிக்கத்தான் உபயோகப்படக்கூடியது என்று நினைத்து வந்தார்கள். நிலக்கரியைக் காற்றுப்படாமல் எரித்தால் அதிலிருந்து தார் எண்ணெய் வருகிறது. இதை என்ன செய்வது என்று தெரியாமல் ரோடு போடுவதற்கு உபயோகப்படுத்தி வந்த காலம் உண்டு. தார் எண்ணெயின் மதிப்பை அறிந்து காட்டியவர் 'பெர்க்கின்' என்னும் விஞ்ஞானி. தார் எண்ணெயிலிருந்து பென்ஜீன், ஸைலீன், நாப்தலீன், ஆந்தரசீன் முதலிய பொருள்களைப்பெற்று அவற்றிலிருந்து வர்ணச்சரக்குகளைத் தயாரித்து வருகின்றார்கள். சுமார் ஆயிரத்து ஐந்நூறு தினுசுகள் இப் பொருள்களிலிருந்து தயாராகி வருகின்றன. இவ்வர்ணச் சரக்குகள் சாயத் தொழிலுக்குப்பயன்படுவதுபோல மசிகளைத் தயாரிப்பதற்கும் பயன்பட்டு வருகின்றன. இவ்வர்ணச் சரக்குகளைச் சுலபமாகத் தண்ணீரில் கரையும்படி செய்ய முடிவதால் தெளிவான மசிகளைப் பெறுவது சாத்தியமாகிறது.

குறிப்பிட்ட சில காரியங்களுக்கு என்று மசிகளைத் தயாரித்து வருகின்றார்கள். கலியாணப் பத்திரிகைகள் அச்சிடுவதற்குப்பயன்படும் தங்க மசி, வெள்ளி மசி இவற்றை அனைவரும் கவனித்திருக்கலாம். இம்மசிகளைக்கொண்டு பேனாவினாலும் எழுதலாம். தங்கம், வெள்ளி இவற்றைச் சன்னமாகப் பொடி செய்துகொண்டு தேனுடன் சேர்த்துக்குழைத்து தண்ணீரில் கலக்கிக் காய்ச்சுவார்கள். சிறிதளவுக்குக் காரம் (Alkali) சேர்த்துக் கொள்ளப்படும். காய்ச்சிய பின்னர் அதைப் பலமுறை வடிகட்டி இளஞ்சூட்டில் உலரவைப்பார்கள். பிறகு அதில் சிறிதளவைக் கோந்தில் கலந்து சுத்தமான தண்ணீரில் கரைத்து விட்டால் உலோக மசி கிடைக்கும். தங்கத்திற்குப் பதிலாகக் காக்காய்ப் பொன்னையும், பித்தளைப் பொடியையும் உபயோகப்படுத்துவது உண்டு. வண்ணான் துணிகளுக்குக் குறி போடுவதற்கு உபயோகிக்கும் மசிக்குச் சில பிரத்தியேக பண்புகள் இருக்கவேண்டும். துணிகளைச்சவுக்காரம் கலந்த வெந்நீரில் போட்டுக் கொதிக்க வைக்கும்போது குறிகள் மறையாமல் இருக்குமபடியான மசிகளைத் தயாரித்து வருகின்றார்கள். இத்தகைய மசியின் உபயோகம் குறைவு என்று நினைக்க வேண்டாம். அமெரிக்காவில் பிரதி வருஷமும் பட்டாளத்தில்சேர்ந்துள்ளவர்களின் துணிகளுக்குக் குறிபோடுவதற்கு லக்ஷம் புட்டி மசி செலவாகின்றதாம்! போர் நடக்கும் காலங்களில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சமாசாரத்தை அனுப்ப ஒருவர் கண்ணுக்கும் புலப்படாத மசியில் எழுதி யனுப்பப்படும். அதற்கு என்று தயாரித்த காகிதங்களிலோ அல்லது ஆட்களின் உடம்பின் மீதோ எழுதியனுப்பப்படும். நாணய நோட்டுக்களிலும் சில சங்கேதங்கள் கண்ணுக்குத் தெரியாதபடி அச்சடிக்கப்படும். போலி நோட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்காக இம்மாதிரி செய்யப்படுகிறது. இக் காரியங்களுக்கு ஓர்வித மசியைத் தயாரிக்கின்றார்கள். இம்மசியில் எழுதிய எழுத்துகளைச் சூட்டினால் விளங்கச் செய்யலாம் அல்லது அமோனியா (Ammonia), கந்தகப்புகை (Sulphide fumes) இவற்றைக்கொண்டு விளங்கச் செய்யலாம். மாப் பொருளில் (Starch) தயாரித்த மசியை ஊதிதப்(Iodine) புகையினால் விளங்க வைக்கலாம். ரப்பர் ஸ்டாம்புக்கு உபயோகிக்கும் மசி காயாமல் அட்டையில் நெடுநாள் இருப்பதற்காக Glycerol என்னும் பொருளை மசியுடன் சேர்த்துக்கொள்கிறார்கள். இவ்வாறாகப்பல வேறு காரியங்களுக்கு எழுதும் மசி தயாரிக்கப்பட்டு வருகின்றது.

எழுதுவதற்கு உபயோகப்படும் மசிக்கும் அச்சுத் தொழிலில் உபயோகப்படும் மசிக்கும் வித்தியாசம் உண்டு. அச்சுத் தொழிலில் உபயோகப்படும் மசியை வர்ணப் பூச்சுக்கு (Paint) ஒப்பிடவேண்டும். முன்னாளில் அச்சு வேலை தாமத

மாகவே நடைபெற்று வந்தது. ஏனெனில் அப்போது உபயோகிக்கப்பட்டுவந்த மசி காய்வதற்கே சில நாட்கள் ஆகும். அவ்வாறில்லாமல் தற்காலம் அச்சுத் தொழில் வெகு சீக்கிரத்தில் நடைபெற்று வருகிறது. அச்சு யந்திரத்தின் உருளைகளின் மீது மிருதுவாகப் படிந்து, அச்சடிக்கும் எழுத்துகள், காகிதம் இவற்றுக்குச் சுலபமாகப் பரவி சீக்கிரத்தில் உலர்ந்து போகக்கூடிய மசியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்ததின் பயனாக அச்சுத் தொழிலில் இம்முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெரிய அச்சுக்கூடங்களில் தையல் மிஷினில் நூல் ஓடிக்கொண்டிருப்பது போலக் காகிதம் உருளைகளின் மீது ஓடிக்கொண்டிருக்கும். ஒரு நிமிஷத்திற்கு எண்ணூறு முதல் ஆயிரத்து இருநூறு அடிவரை உள்ள வேகத்துடன் காகிதம் ஓடிக்கொண்டிருக்கும். அச்சடித்த பகுதி ஒரு பெட்டியின் மூலமாக நுழைந்து செல்லும். அப் பெட்டியினுள்ளே சூடு தொள்ளாயிரம் டிகிரி சென்டிகிரேடு வரை இருக்கும். பெட்டியிலுள்ள ஜ்வாலையைக் காகிதச் சுருள் தாண்டிக்கொண்டு போகும்போது மசி உலர்ந்து விடுகிறது. காகிதம் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்து விடுமே என்று ஐயப்படவேண்டாம். காகிதம் நொடிப்பொழுதிலே ஜ்வாலையைத் தாண்டிச் செல்வதால் மசி மட்டும் வெகு சீக்கிரத்தில் உலர்ந்து விடுகிறதே ஒழிய, காகிதத்திற்கு அபாயம் ஏற்படுகிறதில்லை. அச்சுத் தொழிலில் மூன்று முறைகள் உண்டு. அவற்றைTypo graphic,Plano graphic, Intaglio என்று கூறுவார்கள். முதல் முறையில் மசி தடவவேண்டிய பகுதி சமதளப் பரப்பிலிருந்து சற்று முன்னுக்கு வந்திருக்கும். இரண்டாவது முறையில் அப் பகுதி சமதளப் பரப்பிலேயே அமைந்திருக்கும். மூன்றாவது முறையில் மசி தடவ வேண்டிய பகுதி சமதளப்பரப்பில் குழிகளாக அமைந்திருக்கும். இம் மூன்று முறைகளையும் ஒட்டி மசியின் தன்மை வேறுபடும்.

அச்சுத்தொழிலில் உபயோகப்படும் மசியில் சன்ன கரி எண்ணெயில் குழைக்கப்பட்டிருக்கும். வீடுகளில் மை பண்ணுவதை அனைவரும் கவனித்திருக்கலாம். தாவர எண்ணெய் விளக்கின் புகையை மரக்கால் மீதோ அல்லது படியின்மீதோ படியச்செய்து அதைச் சுரண்டி எடுத்துக் கொள்வார்கள். இக்கரி கைக்கு மிகவும் மிருதுவாக இருக்கும். இதை ஆமணக்கு எண்ணெயுடனோ அல்லது வெண்ணெயுடனோ சேர்த்துக் குழைத்து மைக்கூட்டில் அடைப்பதைக் கவனித்திருக்கலாம். அச்சுத்தொழிலில் நெடுநாள் வரை கரியை ஆளிவிதை எண்ணெயுடன் (Linseed oil) மட்டும் குழைத்து அவ்வாறு பெற்ற மசியை உபயோகித்து வந்தார்கள். இத்துடன் வர்ணச் சரக்குகளையும் பிசினையும் சேர்த்துக் கொள்வார்கள். ஆளிவிதை எண்ணெயினால் மசி உலருவதற்கு நீண்ட நேரம் பிடித்துவந்தது. இதனால் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் துரிதமாக அச்சடிக்க முடியாமல் இருந்தது. இதை நிவர்த்திசெய்ய ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்தார்கள். கரியுடனும் வர்ணப் பொருளுடனும் குழைப்பதற்குத் தகுந்ததாயும் சீக்கிரம் உலரக்கூடியதாயும் உள்ள வார்னிஷைத் தயார் செய்தார்கள். பிசினில் மரப்பிசின் என்றும், பூச்சிப் பிசின் என்றும் இரண்டுவகை இயற்கைப் பிசின்கள் உண்டு. பாலுள்ள மரங்கள் எல்லாவற்றிலும் மரப்பிசின் கிடைக்கும். தேனீ, வாக்கை என்ற இருவகைப்பூச்சிகளும் தயாரிக்கும் பிசினுக்குப் பூச்சிப் பிசின் என்று பெயர்: இவற்றைப்போலப் பல காரியங்களுக்குப் பயன்படக்கூடிய செயற்கைப் பிசின்களை இரசாயனப் பொருள்களைக்கொண்டு தயாரிக்க விஞ்ஞானிகள் வழிகளைக்கண்டுபிடித்தார்கள். இப்பிசினைக்கொண்டு வார்னிஷ் தயார் செய்கின்றார்கள். இவ் வார்னிஷில் பிசினுடன் ஸோப்பும் ஆளிவிதை எண்ணெயும் சேர்க்கப்படும். அச்சடிக்கும் எழுத்துக்களுடன் மசி சீராக ஒட்டிக்கொள்ளுவதற்காக ஸோப்புச் சேர்க்கப்படுகிறது. பலரக மசிகளுக்குத் தக்கவகை சேர்க்கப்படும் ஸோப்பும் மாறுபடும். கரி, வர்ணப்பொருள், வார்னிஷ் இவை எல்லாவற்றையும் சேர்த்துக் கொதிக்க வைத்து, பின்னர் யந்திரத்தைக்கொண்டு மாவு போல அரைத்துக் குளிர வைப்பார்கள். குளிர்ந்தவுடன் மசி கட்டியாக இருக்கும். உபயோகிக்கும்போது இதைக் காய்ச்சி உருளைகளின்மீது படியுமாறு செய்து கொள்வார்கள். துணிகளுக்குக் கரைகள், பேட்டுகள் முதலியவற்றை அச்சடிப்பதற்குச் சாயங்களை உபயோகிப்பதற்குப்பதிலாகத் தற்காலம் இத்தகைய மசிகளையே உபயோகித்துவருகின்றார்கள்.

சாதாரண ஆம்லெட் தான்—



ஆனாலும் அதை டால்டாவில் பொரித்தால் தனிருசியே!

முட்டையின் வெள்ளைக்கருவை தனியாக எடுத்து கெட்டியாவதுவரை கடையவும். பிறகு மஞ்சள் கருவைப்போட்டு ஐந்து நிமிஷங்கள் கடையவும். நறுக்கின வெங்காயம், உடைத்தபயறு அல்லது அரிந்த தக்காளிப் பழம், ருசிக்குத் தகுந்தபடி உப்பு, மிளகு, இவைகளைச்சேர்த்துக்கொள்ளவும். பரந்த வாணலியில் பொரிக்குமளவு டால்டாவை சூடாக்கி அதில் கலந்து வைத்திருப்பதை ஊற்றவும். கீழ்பக்கம் இலேசாக சிவக்கும்வரை பொரித்து, இரண்டாக மடித்து, மறுபக்கம் திருப்பவும். இந்தப்பக்கமும் சிவந்ததும் சூடாக பரிமாறவும். ரொம்ப ருசியாயிருக்கும்.

ரேஷனில் கிடைக்கும் தானியங்களை அதிக நாட்கள் நீடித்திருக்கச் செய்வதெப்படி ?

இலவசமான ஆலோசனைகளுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள் :

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 76A-23 TM

கே. சுந்தரம்மாள்

15

"மணி என்ன ஆயிற்று தெரியுமா?" என்று கேட்ட வண்ணம், தனது படுக்கை யறையில் நுழைந்த ரவிவர்மனின் கையைப் பற்றினான் அவனது அந்தரங்க நண்பன் நரசிம்மன்.

"ஒண்ணரை. தெரியாமலென்ன? அதனால் என்ன வந்துவிட்டது" என்று புன் சிரிப்புடன் கூறியவாறு அவன் கையைப் பற்றிய படியே உள்ளே சென்று நாற்காலியின்மீது நரசிம்மனை உட்காரும்படி செய்து எதிரிலிருந்த சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டான் ரவிவர்மன்.

"அதனாலென்ன வந்துவிட்டதா? மஹாராஜா வந்தார். எங்கே என்று கேட்டார். இப்படிச் சற்று உலாவி விட்டு வருவதாகச் சொன்னார் என்றேன். நீ ஏன் கூடச் செல்லவில்லை யென்று கேட்டார். நான் கூடச் செல்லக்கூடிய இடத்திற்கு அவர் செல்லவில்லை என்று எப்படிச் சொல்லுவது? தலை வலி அதிகமாக இருக்கிறது. என்றேன். ஆனால் வரவேண்டாமென்று சொல்லிப் போனார் என்றேன்.

"சரி ஒரு மணிக்குள் வந்துவிட்டால் உடனே என்னை வந்து பார்க்கச்சொல்லு. பிறகு வந்தால் காலையில் என்னை வந்து பார்க்கும்படி சொல்லு என்று சொல்லிச் சென்றார். மறைவு எப்பொழுதும் ஆபத்து" என்றான்.

"பயமென்ன. கலாவைப் பார்க்கச் சென்றதாகச் சொல்லுவதற்கென்ன? அவர் அதைப் பற்றிக் குற்றமாக எண்ணமாட்டார்"

"நீங்கள் சொல்லுவதும் சரி. ஜமீன்தார் வேசியை நாடிச் செல்லுவது சர்வ சாதாரண விஷயம், குற்றமுமில்லை; ஆனால் மஹாராஜாவின் லக்ஷியப் பெண் கலாவதி வீட்டிற்கு, தாசி குலத்தை உத்தாரணம் செய்யக் கங்கணம் கட்டியிருக்கும் மஹாராஜாவின் லக்ஷிய புருஷன் இரவு நேரத்தில் செல்லுவதென்றால் அது விஷயம் யாவர் கண்களுக்கும் அனுசிதமாகவே தோன்றும். அதைப்பற்றி எனக்கென்ன. உம்பாடு, அவர் பாடு. என் கடமை உங்கள் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டியது. சென்ற விஷயம் காயா? பழமா?"

"நான் சென்றும் காயாகிவிட முடியுமா?" என்று சொல்லும்பொழுதே அன்றைய சம்பவத்தின் இன்ப உணர்ச்சி முகத்தில் பரிணமிக்கப் புன்சிரிப்புத் தவழ்ந்தது."

"யுவராஜ்! என்ன விஷயம் ஆனந்தம் அளவிற்கு மீறுகிறதே! என்ன புதுமை கண்டீர்கள்?"

"புதுமையல்ல நரசிம்மா. பழமையில் தோன்றிய புதுமையினால் ஐயம் விலகிற்று. அவ்வளவே" என்றான் உயர எரியும் மின்சார விளக்கை நிமிர்ந்து நோக்கியவாறு.

"ஆஹா நினைத்தேன். நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தாலும் அது......" என்று முடிக்கு முன்,

"சட், வாயை மூடு" என்றான் கோபமாக. முகத்தில் மிளிர்ந்த ஆனந்த விலாஸம் மங்கி, சிந்தனைக் கோடு விழுந்தது.

திடுக்கிட்டு நடுங்கிவிட்டான் நரசிம்மன் என்றாலும் வெளிக்குக் காட்டாமல் ஸ்வாதீனமான மனப்பான்மையில் "பின் உங்கள் ஆனந்தத்தின் அர்த்தமென்ன?"

"மனிதன் ஆனந்தத்திற்கு உலகில் அந்த ஒரு அர்த்தம்தான் காரணமாகுமா?" என் சொற்படி நடப்பதாக ஒத்துக்கொண்டாள், அவ்வளவே."

"யுவராஜ்! மன்னிக்கவேண்டும். காரணம் அது மட்டுமாகாது."

"நரசிம்மா! என்னை விடமாட்டாய். நீ யறியாத விஷயமென்ன விருக்கிறது. சொல்லுகிறேன்." என்று தான் அவ்விடம் சென்றதிலிருந்து திரும்பிவருமளவும் நடந்த விஷயங்களை ஒருவாறு சொல்லி முடித்தான்.

"உம்" என்று ஓர் நீண்ட மூச்சு விட்டுவிட்டு "எல்லாம் பொருத்தமான விஷயம்தான். ஆனால் சட்டம் இடமளிக்காதே. இது நன்மையான பாதையாகத் தோன்றவில்லையே. ஆஹா! கலாவதி மிகவும் அடக்கமான குணமுள்ளவள். உங்களுடன் எவ்வளவு தடவை அவளைப் பார்த்திருக்கிறேன். கடுகளவு கூட இவ்வெண்ணம் அவள் மனதிலிருக்கிறது என்று அறிய முடியவில்லையே" என்று ரவிவர்மனை உற்றுநோக்கியவாறு சொன்னான், சற்றுநேரம் மௌனம் நிலவியது. பிறகு, "உங்கள் சந்திப்பு எதுவரையில் போய் முடியுமோ? மஹாராஜா கண்டுவிட்டால் என்னவாகும்? சுரங்க வழி சரியான பாதை யல்ல. ஏதோ கூடிய சீக்கிரம் இதன் முடிவைக் கண்டுவிடலாமென்பதும் முடியாத விஷயம். உங்கள் கல்யாண வரையறை இன்னும் இரண்டு வருஷமிருக்கிறது. அதற்குள் உங்கள் சந்திப்பு வெளியானால் மிகவும் கேவலமாகி விடும். உங்கள் கொள்கை, உழைப்பு, செய்கை, லக்ஷியம், யாவும் சுயநலமாகி விடும். அதனால் சந்திப்பு என்பது சரியான விஷயமல்ல."

"இதைப்பார் நரசிம்மா! நான் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறேன் கேட்டுக்கொண்டுவா? பிறகு சொல்லு. சட்டம் என்பது என்ன? நம்மைப்போன்ற மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டதுதானே, உத்தமமான விஷயத்திற்கு, உலகின் முன்னேற்றமான விஷயத்திற்கு, நாகரிகத்தின் சின்னத்திற்கு, மக்களின் ஒற்றுமையான மனப்பான்மையில், நாம் ஏன் சட்டத்தைத் திருத்தியமைக்கக் கூடாது? இன்று மத்தியானம் வரை நான் கலாவின் மீது காதலுற்றேன் என்ற விஷயம் நீ அறிய முடிந்ததா? சந்தேகமாவது தோன்றினதுண்டா?"

"இல்லை" என்பதாகத் தலையை ஆட்டினான் நரசிம்மன்.

"அந்தரங்கத்திற்கு ஒரு ஆள் வேண்டுமென்பதற்கு நானாகத்தானே உன்னிடம் விஷயத்தைச் சொன்னேன். அதுபோல் எங்கள் சந்திப்பை ஒருவரும் அறிய முடியாதவாறு நடக்கமுடியும். இரண்டு வருஷ காலம் இப்படி நடப்பது கஷ்டமல்ல. சந்திப்பு என்பது நீ நினைக்கிறபடி கேவலமான இன்பத்திற்காகவல்ல. அவள் ஏற்படுத்தியிருக்கும் சங்கத்தின் விஷயமாகவும், அரசாங்க விஷயமாகவும், இருவரும் யோசனைசெய்து ஏற்பாடு செய்யவே. இது விஷயம் போகப்போக அறிவாய். ஆனால் நீ கேட்கலாம், ஏகாந்தத்தில் இருவரும் இது விஷயம் மட்டும் பேசிவிட்டுப் பிரிந்து விடுவீர்களோ என்று. அரசாங்க விஷயத்தைப் பேசிப்பேசி அலுத்த மனம், சற்றுநேரமாவது அன்பின் சல்லாபத்தை நாடுவது வியப்பல்ல, ஆனாலும் நீ நினைக்கிறபடி கேவலமாக நடக்கமாட்டேன். இதைப் பவானிமாதா அறிவாள். கல்யாணம் என்பது கலா ஒருத்தியுடன் தான் நடக்கும்."

"மிகவும் சரி. பாமா விஷயம்? தங்களுக்கென்று வளரும் கொடிக்கு ஆதாரம் அளித்துத்தானே யாகவேண்டும்."

"அது விஷயம் வேறு. கொடிக்கு ஆதாரம் நானாக முடியாது. லக்ஷிய மரம் வளர்ந்து வருகிறது." ஒரு காலத்தில் யாவும் புலனாகும்."

"என்னமோ புதிர் போடுகிறீர்களே! விளங்கச் சொல்லுங்கள். லக்ஷிய மரம் எங்கே வளருகின்றது? முற்றுமுன் வெட்டியெறிந்துவிட வேண்டும்."

"என்ன! நரசிம்மா மனங்கொண்டபடி பேசுகிறாய்? அது விஷயம் விதியால் ஏற்பட்டது. உன்னாலும் என்னாலும் ஒன்றும் செய்யமுடியாது. பாமாவின் ஹ்ருதயமலர் இன்னும் விரியவில்லை. விரிந்த பின்பு வண்டு ரீங்காரம் செய்வதைப் பார்க்கலாம். தற்சமயம் அவள் குழந்தை. அதைப்பற்றி இப்பொழுது நாம் வாதிப்பதில் பிரயோஜனமில்லை. நீ எனக்குச் செய்யவேண்டிய உதவி, மாஹிஷ்மதி உத்யானவனத்தில் நாங்கள் சந்திக்கும் சமயம், மஹாராஜா, ராணியார், அவ்விடம் வருவதாக இருந்தால் முன்னெச்சரிக்கை கொடுக்கவேண்டும். அவ்வளவே. மற்ற விஷயம் கவலையே இல்லை. சரி. நேரமாகிறது. படுக்கைக்குச் செல்லுவோம் வா" என்று எழுந்தான்.

மறுநாள் முதல் காலேஜ் சென்ற கலாவை, பாட்டி தடுக்கவில்லை. முன்போல், சித்திரம், சிற்பம், நாட்டியம் இந்த வகுப்புக்களுக்கு அடிக்கடி செல்லுவதில்லை. எப்பொழுதாவது ஒரு சமயம் ஆசிரியர்கள் வருந்தி அழைத்தால் சென்று வருவாள்.

ஆசிரியர் ஆசிரியைகள், மாணவ மாணவிகள், நகரத்து மக்கள்—யாவர் மனதிலும் 'கலாவின் வாழ்க்கை எவ்விதப் புதுமையில் அமையப் போகிறது? மஹாராஜா சொல்லியபடி அவள் வாழ்க்கை கலைக்கே அர்ப்பணமாக முடியுமா? அவள் அழகும் யௌவனமும் வீண் போகுமா? அதை

ஏற்று அனுபவிக்கத் தக்க புருஷன் யார்? சாமானியனுக இருக்க முடியாது.'' என்று நினைக்கும்பொழுது யாவர் மனதிலும் கலாவிற் கேற்றவன் ரவிவர்மன்தான் என்ற விடை கிடைத்தது. "ஆனல் அது நடக்க முடியாதே. கேவலம் இரண்டுதாரம் ஏற்பவன் ரவிவர்மனல்ல. ஆனல் கலாவின் வாழ்க்கைப் பாதை எவ்விதம் வகுக்கப்படும்?'' என்ற கேள்விக்கு யாராலும் பதில் தெரிந்து கொள்ள முடியவில்லை.

கலா ரவிவர்மன் சங்கேதப்படி மாஹிஷ்மதியில் நான்கு நாட்களுக்கு ஒரு முறையும், மாதக் கடைசி வெள்ளிக்கிழமை சுரங்க வாயிலாகத் தேவியைத் தெரிசித்து விட்டு, கலாவின் அறையிலுமாகச் சந்தித்து வந்தார்கள். அவர்கள் சந்திப்பில் சங்கத்தைப்பற்றிய விஷயங்கள் மிக்க அபிவிருத்தி யடைந்தன. அவர்கள் திட்டத்தை எல்லாச் சமஸ்தானங்களும் வரவேற்றன.

(1) சங்கத்தின் ஆதரவில் ஓர் ஸ்டுடியோ ஏற்படுத்தவும், அதில். அதுவரை குலத் தொழிலில் ஈடுபட்டிருந்து, சங்கம் ஆரம்பமானதுமுதல் அதை விட்டவர்கள், கல்யாண வயதைக் கடந்தவர்கள், நடிப்புக் கலையில் ஆர்வம் கொண்டவர்கள், யாவரும், நடித்து, படம் பிடிக்க ஏற்பாடு செய்யவும், சகலத்திற்கும் பெண்களே அதில் வேலை செய்யவும், மேனுடுகளிலிருந்து அத்தொழிலில் கை தேர்ந்த பெண்மணிகளை வரவழைத்து, போட்டோ கிராபி, ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, ஸீனரியோ முதலிய எல்லாத் துறைகளும் பெண்களாகவே நடத்தும் ஏற்பாடு, அவர்களையே ஆசிரியராகக் கொண்டு, கலாசாலை ஏற்படுத்தி, தாசிகுலப் பெண்களும் மற்றும் அதில் விருப்பங்கொண்ட பெண்களும் அதில் பயிற்சிபெற ஏற்பாடு.

(2) எந்தக் கலாசாலையிலும் யாவருக்கும் சகல உரிமைகளும் உண்டு என்ருலும், தாசிகுலப் பெண்களுக்குத் தனிச் சலுகை காட்ட வேண்டும். எந்த உத்யோகத்திலும், சட்டசபை முதலிய அங்கத்தினர்களிலும், அரசாங்கத்திலும், அவர்களுக்கு உரிமையுண்டு.

(3) சங்கத்தின் ஆதரவில் ஓர் கமிட்டி. தாசிகுலப் பெண்களை விவாகம் செய்து கொள்ள முன் வருபவர்கள், காதல் மணமாக ஏற்றுக்கொள்ளுபவர்கள், கல்யாணம் செய்து கொள்ளும் ஆண் பிள்ளையின் ஜாதி ஆசாரப்படி பவானி தேவியின் ஆலயத்தில் கல்யாணம் நடக்கவேண்டும். சட்டப்படியும் ரிஜிஸ்டர் செய்யப்படும். மற்ற சமூகப் பெண்களைப் போல் தாம்பத்ய உரிமையுண்டு. மேலே சொன்ன கமிட்டியார் இதை ஏற்று நடத்த வேண்டும்.

(4) சித்திரம், சிற்பம், நடனம், சங்கீதம், நூல் நூற்றல், நெசவு, பலவித சித்திரத் தையல் வேலைகள், இவைகளுக்கும், தனித் தனிக் கலாசாலை. எல்லாவிதக் கைத் தொழிலும் அவர்கள் யார் யாருக்கு எதில் நோக்கம் செல்லுகிறதோ அதில் முன்னேற வசதியுண்டு.

(5) முழுவதும் பெண்களாலான நாடக சபா ஒன்று. இவைகள் யாவற்றிலும் தனியாக வாழ்க்கை நடத்துபவர்களுக்குத்தான் முழு உரிமை யுண்டு. அவர்களுக்குப் பிறகு தான் மற்றவர்கள் கவனிக்கப்படுவார்கள். நாட்டியம் முதலிய கலைகளில் புருஷன் பெண் ஜாதி இருவருக்கும் பயிற்சி யிருக்குமானுல், பொதுவாக நடத்தப்படும் நாடகம், நாட்டியம், சினிமா இவைகளில் இருவரும் சேர்ந்து பங்கெடுத்துக்கொள்ளலாம். அல்லது பெண் பெண் இனத்திேைடும் ஆண் ஆண் இனத்திேைடு பிரிந்தும் பங்கெடுத்துக்கொள்ளலாம்.

இவ்விதத் திட்டங்களும் வசதிகளுமிருக்கும் பொழுது தாசிகுலத் தொழிலை விரும்பும் ஆத்மா எங்காவது இருக்க முடியுமா?

இவைகளை வரவேற்று எல்லாச் சமஸ்தானங்களிலும் கிளைச்சங்கங்கள் ஏற்பட்டன. என்ருலும் பவானி புரத்தில்தான் தலைமைக் காரியாலயம். அதன் கீழேதான் மற்றவை வேலை செய்யும்.

திட்டம் வகுத்த ஆறு மாதத்திற்குள் யாவும் நடைமுறையில் கையாளப்பட்டன. இவைகளுக்குப் பொருள் அபரிதமாக வேண்டியிருந்தது, ரவிவர்மன் முயற்சியினுல் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டது. கலாவதி, தனது பங்களா ஒன்றும், அரசாங்கத்திலிருந்து மாதச் செலவிற்கென்று வரும் பணம் இவைகளைத் தவிர மற்ற எல்லா ஸ்தாவர ஜங்கம சொத்துக்களையும் சங்கத்திற்கு அளித்துவிட்டாள்.

இவை போக, இன்னும் பொருள் தேவையாக இருந்தது. நாடகம், சினிமா இவைகளின் வருமானங்களையும், அவரவர்கள், மிகவும் ஸௌகர்யமாக உண்டு களிக்கப் போதுமான அளவு கொடுத்துவிட்டு, மிச்சத்தைச் சங்கத்தின் மூலதனமாகச் சேர்த்து விடுவார்கள்.

அலைமகளும் கலைமகளும் ஆனந்தத் தாண்டவமாடினர் பவானிபுரத்தில். உலகமெங்குமே ஓர் புரட்சியை ஏற்படுத்திற்று பவானிபுரம். சம உரிமை, பெண்கள் முன்னேற்றம் இவைகளின் முன் நின்று வழிகாட்டியது பவானிபுரம்.

ஆனுலும் எந்த விதமான லக்ஷியமும் பொருள் இல்லையேல் கை கூடுவது அவ்வளவு

சுலபமாகாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்வளவிருந்தும் சங்கத்திற்குப் பணம் இன்னும் தேவையாக இருந்தது.

வைத்திய இலாகா, சுகாதார இலாகா, கல்வி இலாகா முதலிய எல்லா இலாகாக்களிலும் ஜாதிமத வேற்றுமையின்றி ஸ்திரீகளுக்குச் சம உரிமை வழங்கப்பட்டு வந்தது. மகமதிய ஸ்திரீகளின் கோஷா முறை அறவே விலக்கப்பட்டது. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையினால் பவானிபுரம் மிக அரிய விஷயங்களையும் சாதிக்க முடிந்தது.

தனது லக்ஷியம் இவ்வளவு விரைவில் நிறைவேறி வருவதைக் கண்ட கலாவின் மனம் மிக்க ஆனந்தத்தை அடைந்தது.

அன்று மாதாந்தர சுக்கிரவாரம். காலை எட்டு மணி சமயம். எண்ணெய் தேய்த்து ஸ்னானம் செய்துவிட்டு, பூஜை, ஆகாரம் முதலிய காலை விவகாரங்களை முடித்துவிட்டு, அன்று காலேஜ் விடுமுறை நாளானதினால், மேல்மாடி வராந்தாவில் உலாவிய வண்ணம், தலையை ஆற்றிக் கோதியபடி இருந்த கலாவதியின் மனதில் சங்கத்தைப்பற்றிச் சிந்தனை ஓடலாயிற்று. ஐந்தாறு நாட்களுக்கு முன்பு மனோன்மணியும் அவளும் சங்கத்தின் பொருளாதார விஷயத்தைக் குறித்துப் பேசும் பொழுது,

“கலாவதி, தனக்குக் கிடைத்த செல்வாக்கைக் கொண்டு தங்களுக்கு மட்டுமே நன்மை தேடிக்கொள்வதே மாந்தர்களின் இயல்பு. உன் விஷயம் அதற்கு நேர்மாறானது. உனக்குக் கிடைத்த செல்வாக்கைக் கொண்டு ஸ்திரீ சமுகத்திற்கே ஓர்வித உத்தமமான புரட்சியை உண்டாக்கி விட்டாய். இப்படி அமைவதும் பூர்வ ஜன்ம சுகிர்தம். தற்சமயம் பொருளாதார விஷயத்திலும் உன் அற்புத நடனத்தினால் ஈடு செய்துவிடலாம். பிறகு உன் உசிதம்போல் செய்” என்றாள்.

அவள் சொன்னது உண்மை. யௌவன ஆரம்பத்தில் முதன்முதலாகக் காலேஜ் வராந்தாவில் ரவிவர்மன் சொன்ன விஷயம் சிந்தனையில் தோன்றவே, முதல் நாள் மாமதியின் சந்திப்பில் இதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்றும் நினைத்ததும் பிறகு அவர் மனம் எப்படியோ? அவராக அதைப்பற்றி ஏதாவது சொல்லட்டும், கலையை ஈடு செய்வது என்றால் மஹாராஜா என்ன சொல்லுவாரோ, என்ற பிரச்னையில் மனதில் எழுந்த விஷயத்தை அவரிடம் கேட்கத் தைரியமின்றிப் பிரிந்தோம். இன்று இரவில் எகாந்தத்தில் எப்படியாவது தைரியமாக இந்த விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபிப்பது என்ற முடிவிற்கு வந்த சமயம், அவ்விடம் வந்த வேலைக்காரி “அரண்மனை



யிலிருந்து வண்டி வந்திருக்கிறது. இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னார் மஹாராஜா'' என்று வணங்கினாள். கடிதத்தை வாங்கிப் பிரித்தாள்.

''குழந்தாய் கலாவதி,

ஓர் முக்கியமான விஷயம்பற்றிப் பேச வேண்டியிருக்கிறது. வண்டி அனுப்பியிருக்கிறேன். பாலச்சந்தர் துணையுடன் உடனே புறப்பட்டு வா!

இப்படிக்கு,
உன் பிரியமுள்ள தந்தை,
ராஜா சிவசர்மா.

என்ற வாக்கியம் அவர் கையினாலேயே எழுதப்பட்டிருந்தது. ஆடம்பரமான அலங்காரம் எதுவுமின்றி, சட்டெனத்தலையைத்தளர் பின்னல் போட்டுச் சிறிது மல்லிகைப்புஷ்பம் வைத்து, கறுப்புப் பட்டில் சிறிய கொடி வேலை செய்த பார்டருடன் கூடிய சேலை உடுத்து, அதேபோல் ஜாக்கெட், காதில் தோடும் தொங்கட்டானும், ஒரு மூக்கில் வைரப்பொட்டுத் தொங்கட்டமும், ஒருகையில் மெல்லிய கண்ணாடிக் கருநிற வளையல் ஒன்றும் தங்க வளையல் ஒன்றுமாக மாறி மாறி நான்கு நான்கு வளையல்களும், ஒருகையில் ஒன்றரை விரல் அகலம் கொடி வேலை செய்த வைரப் பட்டையில் கடிகாரம் பதித்த ரிஸ்ட் வாச் அணிந்து, இடுப்பில் வைர முகப்பு வைத்த பெல்ட், நெற்றியில் சிறிய சாந்துப் பொட்டு இவைகளுடன் பார்ப்பதற்கு மிக்க மனோரம்யமாக உடுத்துக்கொண்டு, பாலச்சந்திரனுடன் காரில் புறப்பட்டாள்.

அந்தப்புரத்தின் நடுவிலுள்ள மஹாலில் நடுவில் வட்ட மேஜை அதிக வேலைப்பாடமைந்த விரிப்புடன் போடப்பட்டுச்சுற்றிலும் எட்டு நாற்காலிகள் போடப் டட்டிருந்தன. வாயிற்படியைப் பார்த்துக்கிழக்கு முகமாகப் போடப்பட்டிருந்த உயர்தர வேலைப்பாடமைந்த நாற்காலியில் மஹாராஜாவும் அவரது வலதுபுறம் முறையே திவான் சந்திரதாஸும் உட்கார்ந்திருந்தார்கள். கடைசி நாற்காலி காலியாக இருந்தது. இடது புறம் ராஜாவிற்கடுத்தபடி ரவிவர்மனுக்கு நாற்காலி போடப்பட்டிருந்தது. ரவிவர்மனுக்கடுத்த நாற்காலியில் பாமாவும் அதற்கடுத்து மஹாராணியும் உட்கார்ந்திருந்தார்கள். கடைசி நாற்காலி காலியாக இருந்தது.

கலாவதி வந்த காரின் ஹாரன் சத்தம் கேட்டதும் பாமாவும் ரவிவர்மனும் எழுந்து வரவேற்கச் சென்றார்கள். எதிர்பாராத நிலைமையில் பாலச்சந்திரனைச் சந்திக்கவே பாமாவின் மனம் ஆச்சரியத்தினால் மலர்ந்தது, பொதுவாக ''வரவேண்டும்! நமஸ்காரம்'' என்று கை குவித்தாள். பதிலுக்குப் பாலச்சந்திரன், கலாவதி இருவரும் நமஸ்காரம் என்று கைகுவித்தார்கள். மஹாலின் உள் அடி வைத்ததும், ''மஹாராஜாவிற்கும் மஹாராணிக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் என் வந்தனம்'' என்றாள் கலாவதி. வாயைத் திறவாமல் கைகுவித்தான் பாலச்சந்திரன்.

தன் ஆசனத்தில் அமர்ந்துகொண்ட ரவிவர்மன், தன் பக்கத்திலுள்ள நாற்காலியைச் சுட்டிக் காண்பித்து, ''கலாவதி, இப்படி வந்து உட்கார்'' என்றான்.

தயங்கி நின்ற கலாவதியை நோக்கிய மஹாராஜா ''பரவாயில்லை அவன் சொன்னபடி உட்கார்ந்துகொள்'' என்றார், பாலச்சந்திரனைச் சந்திரதாஸிற்குப் பக்கத்திலும், பாமாவை ராணியாரின் பக்கத்திலுமாக உட்காரும்படி சொன்னார் மஹாராஜா.

பாலச்சந்திரனும் பாமாவும் பக்கம்பக்கமாக உட்கார்ந்திருந்ததைப் பார்த்த கலாவின் மனதில் ''சரியான ஜோடிதான். ஆனால் இவர் ஏன் இப்படிச்செய்யவேண்டும்'' என நினைத்தவளாகக் கடைக் கண்ணால் ரவிவர்மனை நோக்கினாள். பாமாவும் பாலச்சந்திரனும் கடைக் கண்ணால் பரிபாஷை பேசிக்கொள்ளுவதைக் கவனிக்கும்படி கண்ணினாலேயே அறிவித்தான் ரவிவர்மன். இவர்களுடைய நயன பாஷைகளைக் கவனியாத மற்றவர்கள் கலாவதியின் சாதாரண உடையிலும் அதிரூப ஸௌந்தர்யத்தை அள்ளிப் பருகினவர்களாக அவளையே பார்த்தவண்ண மிருந்தார்கள்.

''கலாவதி! உங்கள் சங்கம் எந்தமட்டிலிருக்கிறது?'' என்றாள் மஹாராணி.

''உங்களுடைய ஆசீர்வாதத்தினாலும், தயவினாலும், இவருடைய அதியற்புத ஆலோசனையாலும் மிகவும் முன்னேறி வருகிறது'' என்று ரவிவர்மனைப் பார்த்தவண்ணம் கூறினாள்.

''உன் ஸௌந்தர்யத்தைவிடப் புத்திவன்மை இவ்விள வயதினிலேயே எவ்வளவு நல்ல விஷயங்களை ஏற்படுத்தி விட்டது. பவானிதேவி உனக்குத் தீர்க்காயுளையும் நிர்மலமான வாழ்வையும் கொடுக்கும்படி வேண்டி, உன்னை ஆசீர்வதிக்கிறேன்'' என்றாள் ராணி.

''உங்கள் வாயினால் ஆசிமொழி பெறுவதற்கு ஜன்ம ஜன்மமாக நான் தவம் செய்திருக்கவேண்டும். உங்கள் அன்பும் ஆதரவுமில்லாவிடில் நான் இவ்வளவுதூரம் முன்னேறியிருக்கமுடியுமா?'' என்றாள்.

''எங்கள் அன்பிற்குப் பாத்திரமாகக் கூடிய சக்தி உனக்கு மட்டுமல்ல, உன் தாயாருக்கே

ஏற்பட்டிருந்ததினால்தான், எங்கள் ஆதரவு நல் வழியில் சென்றது. அதேபோல் உன் ஆதரவினால் ஒரு நன்மை ஏற்படச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லவே உன்னை வரும்படி சொன்னேன்" என்றார் மஹாராஜா.

"அப்படியானால் கட்டளையிட்டிருக்கலாமே" என்றாள்.

"கட்டளைக்கும், அன்பேவலுக்கும் எவ்வளவு வித்தியாசம்? தென் இந்தியா வட இந்தியா எங்கும், உன்னுடைய சங்கம் வேலை செய்கிறது. உனது நடனத்தைக் காணப் பல கோடி மக்கள் தவங் கிடக்கிறார்கள். நமது சமஸ்தானத்திற்கு வந்து பார்த்தவர் அனந்தம் கோடி; பார்க்காதவர் அனந்தங் கோடி. தற்சமயம் வட இந்தியாவில் உனது நடனத்தை ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகப் பலர் கேட்கிறார்கள். இது விஷயமாக என்னைச் 'சுயகாரியங்கொண்டவன், கலையை மூடி வைக்கிறான்' என்றுகூடச் சொல்லிவிடுகிறார்கள். அங்கங்கே, சமஸ்தானம், ஜில்லா இவைகளில் முன்னேற்பாடு செய்து, சுமார் நாலுகோடி ரூபாய் உன் சங்கத்திற்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். உனக்குச் சம்மதமானால் சந்திரதாஸருடன் அரண்மனைப் பாதுகாப்புடனும் அரசாங்க மரியாதையுடனும் சென்றுவர அனுமதிக்கிறேன்" என்றார் மஹாராஜா.

ரவிவர்மனுக்கு இவ் விஷயம் முன்னதாகத் தெரியுமா? அவனுக்குச் சம்மதமிருக்குமா, இருக்காதா? இந்த இடத்தில் அவன் சம்மதத்தை எவ்விதம் தெரிந்து கொள்ளுவது என்ற சிந்தனையில் பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தாள்.

"கலா! என்ன சிந்தனை செய்கிறாய்? கலையைப் போற்றும் மஹாராஜா கலையை விற்கச் சொல்லுகிறாரே என்று நினைப்பாய். இது விஷயம் விற்பதாகாது. கலைத் தொண்டாகும்.........சமஸ்தானத்துப் புகழ்பெற்ற நாட்டிய ராணி, இன்ன விஷயத்திற்காக நாட்டியமாடுகிறாள் என்றால் அது மிக்க பெருமை தரும் விஷயம். இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி, குடும்பத்தை நிர்வகிக்கும் ஸ்திரீகள்கூட அபலை ஆசிரமத்தின் உதவிக்கோ மற்றும் ஏதோ ஒரு நன்மைக்கு நாட்டியமாடினாள், அல்லது கச்சேரி செய்தாள் என்றால் அதை உலகமும், உலகத்தின் கண்ணுடியாகிய பத்திரிகைகளும் 'அரிய தியாகம், உயரிய தொண்டு' என்று புகழ்கின்றன. நீ செய்யப் போவதும் ஓர் அரிய தொண்டு" என்றார்.

"நீங்கள் சொல்லுவதை மறுக்கக் கூடிய சக்தியாவது அனுசிதமான விஷயத்தை எடுத்துச் சொல்லிர்களென்றுவது நான் நினைக்க முடியுமா? அப்படியொன்றுமில்லை" என்று கடைக் கண்ணால் ரவிவர்மனை நோக்கினாள், 'சரி என்று சொல்லு' என்பதாகத் தனது பாதத்தை ஒருவரும் அறியா வண்ணம் அவள் பாதத்தின் மீது வைத்து அழுத்தினான். "உங்கள் சித்தப்படியே நடக்கிறேன்" என்று நிறுத்தினாள்.

"கலாவதி, ஏதாகிலும் இடையூறு நேருமென்று பயப்படாதே. நானும் கூட வருகிறேன்" என்றான் ரவிவர்மன்.

"சரி. அப்படியானால் வருகிற மாதம் காலேஜ் விடுமுறையல்லவா? அந்த ஒரு மாதத்திற்குள் நடனம் முடிய ஏற்பாடு செய்யும்படி பதில் எழுதிவிடுகிறேன். இதற்கு முனைந்து நிற்பவர் நம்மைப்போல் ஓர் ஜமீன்தாரே" என்றார் மஹாராஜா.

பிறகு சற்று நேரம் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்து விட்டு கலாவும் பாலசந்திரனும் விடை பெற்றுக்கொண்டார்கள். பாமாவினிடம் கைகுலுக்கியும், மற்றவர்களுக்கு நமஸ்காரமும் செய்தாள் கலா. பாலச்சந்திரன் யாவரையும் வணங்கிவிட்டுப் பாமாவினிடம் கண்களால் விடை பெற்றான். புறப்படுமுன், "பாலச்சந்திரா, உன் சகோதரியுடன் நீ செல்லவேண்டுமென்று நான் சொல்லவேண்டியது அனாவசியம்" என்றார் மஹாராஜா.

"தங்கள் ஆக்ஞை, என் பாக்யம்" என்றான். பாமாவும் ரவிவர்மனும் அவ்விருவர்களையும் வழியனுப்பச் சென்றார்கள்.

சமீபமாக மூன்று மாதத்திற்கிடையில் கலாவதியை அரச தம்பதிகள் பார்க்கவில்லை. இன்று அவளது சாதாரண அலங்காரத்திலும், அதியற்புத அழகியாகத் தோன்றவே,

"இந்த ஸௌந்தர்ய தேவதையினிடம் காதல் உபாசனையின்றிக் கலை உபாசனை மட்டும் ஏற்க முடியுமா ரவிவர்மனின் மனம்? அப்படியானாலும் என்ன குற்றம்? ஜமீந்தார் ஏகபத்னி விரதம் பூண வேண்டுமென்பது சட்டமல்லவே. கூடிய சீக்கிரம் பாமா ரவிவர்மன் கல்யாணத்தை நடத்திவிட்டால் பிறகு கலாவையும் அவன் கொள்கைக்கு விரோதமில்லாமல் மாங்கல்யதாரணமே செய்துவிடுகிறது. கலா ரசிகனான ரவிவர்மன் இருவரையும் ஏற்றத் தாழ்வில்லாமல் நடத்துவான்" என்றது ராணியின் மனம்.

"ஆஹா! என்ன ஸௌந்தர்யம்! ஸ்ருஷ்டி தேவன் நாட்டியத்திற்கென்றே இவள் அங்கங்களை ஆராய்ச்சி செய்து அமைத்தானோ? தற்சமயம் தாயாரின் பிரதி பிம்பமாகவே

பிரஸவ சமயத்தில் விஷ கிருமிகளால்
அபாயம்
நேரலாம் என்று கவலைப்பட்டேன்
தாயி கூறுகிறாள்:
கவலைப்பட வேண்டாம் நான் 'டெட்டால்' உபயோகிப்பேன்.
பிரஸவம் ஆனதும
ஆம், விஷ கிருமிகளால் அபாயம் நேராமல் இருக்க 'டெட்டால்' பாதுகாக்கும்
உனக்கு ஒரு அருமையான மகன் பிறந்திருக்கிறான் உன் மனைவி டெட்டாலின் உதவியால் குணம் அடைவாள்
தாயி கூறுகிறாள்-
பிரஸவ சமயத்தில் 'டெட்டாலையே' ஒவ்வொரு ஸ்திரீகளும் நம்பி உபயோகிக்கும் படியும், மற்றும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் 'டெட்டால்' வீட்டில் வைத்திருக்கும்படியும் டாக்டர் சிபார்சு செய்கிறார்
DETTOL
'DETTOL'
அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிட் 20-1 செட்லா ரோடு, கல்கத்தா.

198059

தோன்றுகிருள். இத் தேவதையினிடம் ரவிவர்மனின் மனம் இரும்பாக இருக்க முடியுமா?" என்ற சிந்தனையில் நின்றது மஹாராஜாவின் மனம். கலாவின் காலை ரவிவர்மன் மிதித்ததையும் கலா தன்க்குப் பதில் சொல்லும்பொழுது, கடைக் கண்ணிஞல் அவனை விடை கேட்டதையும், கவனித்து விட்ட மஹாராஜாவின் உள்ளத்தில் சிந்தனை சக்கரம் சுழன்றது. ரவிவர்மன் மனம் சலிப்பதாக இருந்தால் அவளை அனுயாசமாக அடைய முடியும். அவள் மனேதர்மத்தின் உறுதிப்படி ரவிவர்மனின் உரிமைப் பொருளாக மறுக்கமாட்டாள். அப்படியிருந்தால் யௌவன மலர் விரிந்ததுமே அதை முகர்ந்து அனுபவித்திருப்பான். ஆனல் வருஷம் இரண்டாகியும் அப்படி நடந்துகொள்ளவில்லை யென்பது நிச்சயமாக நமது மனமறியும். இன்று நடந்தது சர்வ சாதாரணம். இது ஒரு பொருட்டாகாது. அவன் லக்ஷியம் கலை வளர்ச்சி. அதனல் அவள் வாழ்க்கை கலைக்கு அர்ப்பணமாக வேண்டுமென்பதை அவன் மறுக்க மாட்டான். ஆனல் அவள் யௌவனம், ஸௌந்தர்யம், இயற்கையின் சேஷ்டை என்னவாகும்? அதுவும் கலைக்கே! கலைக்கே! அவள் மாசற்ற உள்ளம் படைத்தவள். அவளது லக்ஷியத்திற்கு அவள் கல்வி மனேதைரியத்தை அளிக்கும். இருந்தாலும் உரிய காலத்தில் பாமா ரவிவர்மன் விவாகத்தை நடத்திவிட வேண்டும்" என்றது மஹாராஜாவின் மனம்.

"என்ன? திவான் சாகிப்! இரண்டு ஜோடிகளும் எப்படி" என்ருர் சந்திரதாஸ் போகும் வழியில்.

"ஜோடி என்பதின் அர்த்தமென்ன? ஒன்றுதானே ஜோடி. மற்றது சகோதரர்களல்லவா?"

"பார்வைக்கு அப்படி. அவர்கள் உட்கார்ந்திருந்தபடி ஜோடி சேரும். விஷயம் விளங்கும்."

"என்னய்யா அது, வாயில் வந்தபடி சொல்லுகிறீர். ஜோடி என்று வளர்ந்து வருவது யாவருமறிந்த விஷயம். நீங்கள் சொல்லுவது கனவிலும் நடக்காத விஷயம். சட்டத்திற்குட்பட்டதுதான் ஜமீனின் கல்யாண விஷயம் என்பதை மறந்தீர்களோ? மேலும் நீர் அவ்விதம் நினைப்பதற்கு ஒரு அத்தாட்சியையும் காணவில்லையே. ஏதாவது கொஞ்சமிருந்தாலும் உலகத்தின் பூதக் கண்ணுடியில் விழாமலிருக்க முடியாது. நான் பழகும்மட்டில் யுவராஜா அவ்வித எண்ணத்துடனிருப்பதாகத் தெரியவில்லையே."

"பூ, இவ்வளவுதான? உம்முடைய அரசியல் ஞானம் இவைகளைக் கண்டுபிடிக்க உதவவில்லை. நாட்டியத்தில் பழகின நால்வருக்கும் நயனபாஷை மிக உதவிற்று. அதன் ஆசிரியனன நான், மஹாராஜா பேசும்பொழுது, ஊமைமாதிரி உட்கார்ந்திருந்தாலும் அவைகளைக் கவனியாமலிருக்க முடியுமா? பாமாவும் பாலசந்திரனும், சமீபமாகச் சந்திக்கவில்லை போலும். கூடிய வரையில் சந்திப்பதாகச் சங்கேதம் செய்து கொண்டார்கள். மஹாராஜாவின் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் ரவிவர்மனிடம் அனுமதி கேட்டே பதில் சொன்னள் கலா. அவர்கள் இருவரும் காதல் கொண்டிருக்கிருர்களென்பதை அவர்களின் காதல் ஒளி வீசும் கண்கள் பறையடித்தனவே." இருவரும் அடிக்கடி தனிமையில் சந்திப்பார்கள். ஆனல் கேவலமான எண்ணத்துடன் அல்ல வென்பதை நான் நிரூபணம் செய்யமுடியும்."

"இவ்வளவையும் எப்பொழுது அறிந்தீர்கள்?"

"சற்றுமுன் மஹாலில் உட்கார்ந்திருக்கும் பொழுதுதான்."

"நல்ல ஆளய்யா நீர். பூனைமாதிரி உட்கார்ந்து கொண்டு இவ்வளவு விஷயம் ஆராய்ந்து விட்டீரே. எது எப்படியானலும் பாமா ரவிவர்மன் விவாகம் மட்டும் நிச்சயம். பிறகு வேண்டுமானல் கலாவதியை ஏற்றுக்கொள்ளலாம்."

"அதுதான் நடக்கப்போவதில்லை. காதலைப் பங்கிட்டு அனுபவிப்பவர் யுவராஜாவன்று. பவானிபுர ராணி கலாவதி. ஏன் அவள் ராணியாவதில் குற்றமென்ன? ராணியாவதற்குப் பவானிபுரம் தவம் செய்திருக்க வேண்டும். அவள் தொடங்கின சங்கம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது. அதேபோல் சமஸ்தானமும் இன்னும் முன்னேறும்."

"எல்லாம் வாய்ச்சொல்லில் சுலபம். சட்டம் இடமளிக்காது. காதல் பெரிதானல் சிம்மாசனத்தை விடவேண்டிவரும். பாமா பெண். அவளாக ஒன்றும் செய்ய முடியாது. ராணியார் இஷ்டப்படி நடந்துதானக வேண்டும்."

"சரி, அதைப்பற்றி இப்பொழுதென்ன? நடக்க நடக்கப் பார்த்துக் கொள்ளுகிறது. இதுவிஷயம் உம் மனத்திலேயே இருக்கட்டும். இராஜதந்திர நிபுணரான உமக்கு நான் எச்சரிக்கை செய்யவேண்டியது அனவசியம்." அத்துடன் அவர்கள் பிரிந்தார்கள்.

* * *

பாமா மங்கைப் பருவமடைந்ததுமே, சந்தர் அவளைத் தனிமையில் சந்திப்பதை நிறுத்திக்கொண்டான். அவள் மனம் அவனை விரும்புகிறது என்பதை அறிந்ததும் தான் விலகியிருப்பதே இருவருக்கும் நன்மை என்று நடந்தாலும் அவளது பிரிவு அவனுக் குக் கஷ்டமாகவே இருந்தது.

இருவர் காதலும் மனதிற்குள்ளேயே இருந் ததே தவிர வெளிக்குக் காட்டிக்கொள்ளா மலே நடந்து வந்தார்கள். சமீபகாலமாகப் பாமா எவ்வளவு முயற்சி பண்ணியும், தனி மையில் சந்திக்க இடமளிக்கவில்லை. இன்று மஹாலில் அவனைக் கண்டதும் அவள் மனோ வேகம் உச்ச நிலையை அடைந்தது. "இனி, கூடிய சீக்கிரம் ரவிவர்மனுக்குத் தன்னை விவாகம் செய்ய ஏற்பாடுகள் நடந்துவிடும். அதற்குள் பாலச்சந்திரனிடம் தனிமையில் இருவர் மனதையும் திறந்து பேசி முடிவு செய்ய வேண்டும்" என்ற முடிவிற்கு வந்தவ ளாய், அன்று சாயங்காலம் மாஹிஷ்மதி உப வனத்தில், பாமாவிற்கென்று ஏற்படுத்தப் பட்ட சோலையில் தன்னை அவசியம் சந்திக்கு மாறு தனது அந்தரங்கத் தோழி விசாகை யின் மூலமாகக் கடிதமனுப்பினாள்.

அன்று பௌர்ணமி, ஆனால் இன்னும் சந்தி ரோதயமாகவில்லை. மாஹிஷ்மதி உபவனத் தின், மல்லிகைக்கொடி வீட்டில் உட்கார்ந்து பாலச்சந்திரன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் பாமா.

சற்று நேரம் சென்றது. அவன் வரவில்லை. ஒருவேளை வராமலிருந்துவிடுவாரோ? என்று தவித்தது அவள் மனம். எழுந்து உலாவி னாள். வானத்தில் பூர்ணச் சந்திரோதயம் ஆவதைக்கண்டு, 'என் சந்திரன் வருவாரோ!' என்றாள். அந்தச்சமயம் பாலச்சந்திரன் அவள் முன்பாக நின்றான்.

"வரவேண்டும், நமஸ்காரம்" என்று கை குவித்தவண்ணம் "இரு சந்திரனும் ஒரே சம யத்தில் உதயமாக வேண்டுமென்பது இயற் கையின் விதி போலும்." என்று சிரித்த வாறு கூறினாள் பாமா.

"ஏது இவ்வேழையின்மீது இவ்வளவு பரா முகம். தெரிசனப்பாக்கியம் கிடைத்து மூன்று மாதமாகிறது. இன்று காலை தெய் வச்செயலால் கிடைத்தது, இப்பொழுது அவ்விடத்துக் கிருபை பிறந்துவிட்டது. வந்த னமளிக்கிறேன்" என்றான் சிரித்தவாறு.

"பராமுகம் செய்தது யாரோ? எவ்வளவு தினங்கள் சந்திரோதயத்தை எதிர்பார்த்துக் காத்து, என் கண்கள் பூத்துப்போயினவோ, அதை யார் அறிவது?"

"தேவி! மன்னிக்கவேண்டும். முன்போல் நாம் விளையாடும் பருவமல்லவே. நாம் சாதா ரணமாகச் சந்தித்தாலும் உலகம் அதை நம் பாது. வீணாக என்னால் உங்கள் பெயருக்கு இழுக்கு உண்டாக என் மனம் இடம் தராது. இன்னும் சொற்ப காலத்தில் ஜமீந்தாரிணி யாகும் தாங்கள், என்னாலாக வேண்டிய விஷயங்களைக் கட்டளை இட்டால் உடனே சித்தமாக வந்திருப்பேனே."

"இதென்ன, நீங்கள் மரியாதை? நான் ஜமீந்தாரிணி என்று யார் சொன்னது?"

"தாங்கள் ஜமீந்தாரிணி என்பதை ஒரு வரா சொல்லவேண்டும். உலகம் முழுவதுமே சொல்லுகிறது. ஓர் அரசியைச்சாதாரணப் பிரஜை தாங்கள் என்று சொல்லாது வேறு எப்படிச் சொல்வது?"

"சந்தர்! நீங்கள் அரச பதவியைப் போற்று கிறீர்களா? அதில் அபரிமிதமான சுக சௌக்கியம் உண்டென்று நினைக்கிறீர்களா? அல்லது வெறுக்கிறீர்களா?"

"நீங்கள் என்னை ஒருமையில் அழைப்பதே நலம். மரியாதைக்குப் பாத்திரம் நானல்ல."

"அது என்னிஷ்டம். கேட்ட கேள்விக்குப் பதில் வேண்டும்."

"ஜமீனை வெறுக்க முடியுமா? சாதாரணப் பிரஜைகளுக்கு ஜமீனால் எவ்வளவு நன்மை ஏற்பட்டிருக்கிறது. முக்கியமாக என் சகோ தரி, நான் இருவரும் இவ்வளவு உன்னத நிலை மையில் இருப்பது!"

"உங்களுடைய புத்தி வன்மையினாலும் உண்மை உழைப்பினாலும்."

"இருக்கலாம். ஆனாலும் ஜமீனால் சுக சௌக்கியம் இருப்பதாகவே நான் நம்புகி றேன். ஆனால் அதில் உட்புகுந்து பார்க் கும் சக்தி எனக்கு ஏது? தாங்கள் அதை அனுபவத்தில் அறிந்திருக்கலாம். எதற்காக இக்கேள்வி?"

"நான் இப்பொழுது மிகவும் சந்தோஷ மாக இருப்பதாகத்தானே உங்கள் நினைப்பு."

"அதில் சந்தேகம்?"

"இதற்குத்தான் இக்கேள்வி கேட்டேன். என்னைக் கேட்டால் ஜமீன் வார்சுகள் என் றால் சிறைச்சாலைக் கைதிகளுக்குச் சமம். வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்ளுபவர் களின் இஷ்டம்போல் தலைவர்களைப் பிணைக்க

முடியாது. தாங்கள் கற்ற கலையை மனம். போல் விநியோகிக்க உரிமை கிடையாது. இஷ்டமானவர்களுடன் பேச முடியாது. எதற்கும் ஒரு கௌரவமும் பதவியும் வந்து குறுக்கிடும். அப்பப்பா! நடமாடக் கூடக் கட்டுப்பாடு. எனக்கு இப் பதவியே பிடிக்கவில்லை. தாங்கள் என்னுடன் எவ்வளவு அன்புடன் பழகியும், பதவியின் பயத்தினால் தானே பேசவே அஞ்சுகிறீர்கள்."

"பயமென்பதில்லை தேவி! செய்யவேண்டிய கடமை இது."

"சந்தர், தயவுசெய்து என்னைத் தேவி என்றும் நீங்கள் என்றும் சொல்லாதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன் என் காதில் நாராசம் போலிருக்கின்றன அச் சொற்கள். முன் போல், பாமா வென்றும் நீ என்றும் அழைக்க மாட்டீர்களா?" என்றாள்.

"ஐயோ! இதில் இவ்வளவு வருத்தமா? பாமா, உன்னிஷ்டம்போல் நடக்கிறேன்"

இதுவரை இருவரும் நேருக்கு நேராக நின்றுகொண்டிருந்தார்கள். வனமெங்கும் நிலவொளியைப் பரப்பினான் நிறைமதி. நிலவொளியில் இருவர் தோற்றமும், ஒருவரை ஒருவர் பார்த்துப் பரவசமடையச் செய்தது. கண்களில் காதல் ஒளி வீசுவதை மனமறிந்தாலும், இருவர் மனமும் இருவித தடைகளினால் அதை வெளியிட மறுத்தன. பாமாவின் பெண்ணுள்ளம் இயற்கையான பெண்மையின் லஜ்ஜையினால் மறுத்தது. தனக்கும் அவளுக்கும் நடுவில் பதவியின் பிளவு இருப்பதினால் மனம் விரும்பினாலும் நடைபெறாத விஷயமாதலால் வெளியிடாமலிருப்பதே மேல் என்ற தடை விதித்தது சந்தர் மனம். சற்று நேரம் அவ்விதம் பேசாமல் நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு,

"வாருங்கள், அந்தக் கொடி வீட்டில் சற்று உட்காரலாம்" என்று நடந்தாள்.

அவளுடன் சரியாசனத்தில் உட்காருவது தப்பு என்றது மனம். ஆனாலும் அவள் அழைப்பை மறுக்கச் சக்தியின்றி பளிங்காசனத்தில் இருவரும் உட்கார்ந்தார்கள். சந்தரின் வாயினால் வரும் காதல் மொழிகளைப் பருகத் துடித்தது பாமாவின் மனம். சந்தரோ மிக்க கஷ்டத்துடன் ஹ்ருதய தாபத்தை அடக்கியவண்ணம் பதுமைபோல் உட்கார்ந்திருந்தான்.

இந்த நிலைமை பாமாவினால் சகிக்க முடியவில்லை. "அப்பா! என்ன அழுத்தம்? மனதில் இருப்பதைச் சொன்னால் என்னவாம், முகமும் கண்ணும் பறையடிக்கின்றன. வாய் வார்த்தைக்குப் பஞ்சமா? இந்த நிலைமையிலேயே இன்று பிரிய நேரிடுமோ?" என்று நினைக்கும் பொழுது அவள் மனம் மிக்க வேதனையுற்றது. இன்று எவ்விதமாவது இவர் வாய் மொழியைக் கேட்டே தீருவது என்ற முடிவிற்கு வந்தவளாக,

"சந்தர்" என்றாள்.

"ஏன்" என்றான் அவள் பக்கம் திரும்பி.

"நானும் சாதாரணப் பிரஜையாகப் பிறந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது"

"ஏன் இவ்விதம் பேசுகிறாய்? உனக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? வெளியிடக் கூடுமானால்......" என்று நிறுத்தினான்.

அவள் மனம் குமுறிற்று. "சந்தர்! என்னை என்னவென்று நினைக்கிறீர்கள்? பெண் என்றா? பேய் என்றா?" என்றாள் கண்களில் நீர் தளும்ப.

"பாமா! இதென்ன கேள்வி? பேயென்று நினைக்க நான் அவ்வளவு கடையனா?"

"பின் என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்?"

"நான் பயப்படவில்லையே"

"பின் மனதிலுள்ளதைச் சொல்லத் தடை என்ன?"

இக் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவது எனத் தயங்கினான். அவன் புறப்படும் சமயம் முன்பொருநாள் நடந்த விஷயம் மனதில் தோன்றினது. கடைசியாகச் சந்தித்த சமயம் இருவரும் ஓடி விளையாடினார்கள். ஒரு மரத்தினடியில் இருவரும் எதிர் எதிராக ஓடி வந்தார்கள். சட்டெனக் கைகளை நீட்டியவாறு நின்றுவிட்டான் சந்தர். ஓடிவந்து கைக்குள் பாய்ந்தாள் பாமா. இயற்கையின் விதிப்படி அணைத்து முத்தமிட்டுப் பிரிந்தார்கள். பிறகு பாமா அதைப்பற்றிச் சிந்திக்கவில்லை. சந்தருக்கு அது எவ்வளவு மதியீனமான செய்கை என்று பின்னால் தோன்றினது. அதனால் புறப்படும் பொழுதே பாமாவின் மனதை மாற்றி, "இக்காதல் நன்மை யல்ல" என்பதை விளக்கிவிட்டு வரவேண்டுமென்ற உறுதிகொண்டான். இந்தச் சமயம் பாமாவின் கண்ணீர் நிறைந்த முகம் அவன் உறுதியைச் சுக்கல் சுக்கலாகத் தகர்த்து விட்டது.

"பாமா! என்னைச் சோதனைக்குள்ளாக்க வேண்டாம். உன்னை முதன் முதலாகச் சந்தித்த அன்றுடன் நிற்காமல் நெருங்கிய பழக்கத்தை ஏன் ஏற்படுத்திக்கொண்டோமென்று ஒருவருஷ காலமாக நான் படும்பாடு

ஈசனறிவார். உன்னை மறக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டபொழுது நான்பட்ட துயரம்? நீயும் என்மீது காதலுற்ருய் என்று அறிந்ததும் சந்தோஷத்தைவிடத் துன்பமே மிகுந்தது. அதனுலேயே உன் சந்திப்பை நிறுத்திக்கொண்டேன். இன்று காலை உன் நயன பாஷை என்னை மதிமயங்கச் செய்து விட்டது. அதனுல் உன் அழைப்பை மறுக்கச் சக்தியற்று வந்தேன். உன்னை என் காதல் தெய்வமாக ஹ்ருதயத்தில் வைத்துப் பூசிக்கிறேன். உன்னைப் பேயென்று நினைக்கிறேன் என்ருய். இருவர் மனமும் ஒன்றுபட்டதென்ருலும் இது எப்படி நடைபெறும்? யுவராஜ் உன்மீது காதலுற்ருல்?''

"ஒருதலைக் காதலினுல் என்ன சுகத்தைக் காண முடியும்? அப்படிக் கசக்கி முகருபவர் யுவராஜாவல்ல. அவரை நீங்கள் அறியவில்லை என்று நினைக்கிறேன்''

"அப்படியானுல் இது நிறைவேறும் என்ரு நினைக்கிருய்?''

"சந்தேகமென்ன? யுவராஜா இஷ்ட விரோதமாக என்னை யடைய முயற்சிக்க மாட்டார். பெண்களின் சம உரிமைக்குச் சட்டமளித்தவர் என் இஷ்டப்படி நடக்க வசதியளிப்பார். உங்கள் உறுதி தெரிந்துவிட்டால் நேரில் நானே அவரிடம் உதவி கேட்பேன்.''

"யுவராஜா முயற்சிக்கலாம். ஆனுல், சட்டம், சமூகம், மஹாராஜா, மஹாராணி இவர்கள் அனுமதியளிக்க மாட்டார்கள். உன்னை அவருக்கென்றே வளர்த்து வருவதாக நாடெங்கும் பேச்சு. இவ்வளவையும் யுவராஜ் ஒருவரால் எதிர்த்து நிற்க முடியுமா? மேலும் நீ என்னை விரும்புவதினுல் என்ன பலன்? ராஜ பதவியைத் துறந்தாயானுல் நாடோடிபோல் என்னுடன் வாழ்க்கை நடத்த வேண்டிவரும். ஏன்? நாம் இந்தப் பக்கத்திலேயே வசிக்க முடியாது. என்னுடன் அநேகவித கஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். இதில் என்னிடம் நீ என்ன சுகத்தைக் காணப் போகிருய் என்பதுதான் புரியவில்லை.''

"சுகமென்பது, பணத்திலும், பதவியிலும் தான் இருக்கிறது என்பது உங்கள் அபிப்பிராயமா? உண்மையன்பில், தன்னல மற்ற தியாகத்தில், ஏழ்மையில் இன்பத்தை அடைய முடியாதா? நமது கலையும் காதலும் சுகத்தைக் கொடுக்கமாட்டாவா?

"இருக்கலாம் பாமா. நான் உன்னை அடைவது உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்ததாகும். இவ்வளவு உயர்ந்த பதவியில் என்னை வைத்திருக்கும் மஹாராஜாவிற்குத் துரோகம் செய்யலாமா? என் சகோதரி அனுமதிப்பாளா? சற்றுச் சிந்தித்துப் பார். இவ்வளவையும் எதிர்த்து நின்ருலும் என்னிடத்தில் என்ன சுகத்தைக் காணப் போகிருய்? வேண்டாம். நமது காதல் புதைக்கப்பட்டுப் போகட்டும். இதனுல் வேறு ஸ்திரீயை நாடுவேன் என்று மட்டும் நினைக்கிருயா? இந்த ஜன்மத்தில் உன்னைத் தவிர வேறு ஒரு ஸ்திரீயையும் மனதாலும் தீண்டமாட்டேன். பவானி மாதா அறியச் சத்யம். மனம் ஒப்பினுலும், ஒப்பாவிட்டாலும், கடமையென்று யுவராஜாவை ஏற்கவேண்டுவதுதான் நன்மை.''

சட்டென எழுந்து நின்றுகொண்டு "உங்களுக்குப் பதவி மோகப் பேய் பிடித்திருக்கிறது. அதற்காக உண்மைக் காதலை திரஸ்காரம் செய்கிறீர்கள். சுகம் சுகம் என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? சுகம் என்பது வேறெங்குமில்லை. நமது மனதில்தான் இருக்கிறது. உண்மையன்பின் முன் எத்தகைய விதியும் கட்டுப்படுத்தாது. யுவராஜாவை ஏமாற்றினேனுனல் என்னைப் போன்ற பாதகி இருக்க முடியாது. அவரின் தூய குணத்திற்கு ஏற்ற கன்னிகை சாதாரணமாக இருக்க முடியாது. அவரிடம் அன்பாக இருப்பதாக நடிக்க என்னுல் முடியாது. 'கடமை' என்ற பெயரால் நம்பிக்கைத் துரோகம் செய்ய என்னுல் முடியாது. உங்களுக்கு மன மில்லையேல் உங்களைக் கட்டாயப் படுத்தவும் நான் தயாரில்லை. நீங்கள் கடமைக்கும், பாபத்திற்கும் பயந்து கோழை வீரராக வாழுங்கள். இப்படித் தன்னையும் வருத்திக்கொண்டு பிறரையும் வருத்தும் ஆத்மா இனி பவானிபுரத்தில் தோன்ருதிருக்கட்டும். க்ஷத்திரியப் பெண்கள் கோழையாக இருக்க முடியாது. ஒரு உபகாரம் மட்டும் செய்யுங்கள். உங்கள் முகத்தைப் பார்த்த வண்ணம் என் ஜீவன் பிரியவேண்டும். அது வரை இப்படியே இருங்கள். என் ஜீவன் பிரிந்ததும் சாவதானமாக வீடு சென்று விடுங்கள். என் பக்கத்தில் உட்கார்ந்து வீண் பழிக்கு ஆளாக வேண்டாம். உங்கள் வாழ்க்கை தியாகத்தில் அமைதி பெறட்டும்'' என்று சொல்லிய வண்ணம் இடுப்பிலிருந்த பிச்சுவாவைக் கையினுல் உறையினின்றும் வெளியிலிழுத்தாள். நில வொளியில் பளபளவெனக் கண்களைப் பறித்தது. திடுக்கிட்ட சுந்தர் சட்டென இடது கையினுல் பிச்சுவாவைப் பிடுங்கிக்கொண்டு வலது கையினுல் அவள் வலது கையைப் பற்றிய வண்ணம் "பாமா!'' என்ருன். அவன் கண்களில் நீர் தளும்பிற்று.

பதில் பேசாமல் நின்றாள். அவள் கண்களிலும் நீர் தளும்பிற்று.

“பாமா! உனது தூய்மையான அன்பைப் பெற எத்தனை ஜன்மங்கள் நல்ல மல்லிகை மலரால் தேவியைப் பூசித்திருக்கவேண்டும். உன்னைப் புறக்கணிக்கும் சக்தி என்னிடத்தில் ஏது? நீ உயிரைத் தியாகம் செய்தால் அதைப் பார்த்துக்கொண்டு நிற்கும் கோழை எனத் தீர்மானம் செய்துவிட்டாய். நடக்கும் விஷயத்தை, கடமையின் அவசியத்தை எடுத்துச் சொன்னேன். உன் மனம் திரும்பினால் நன்மையென்பதாகச் சொன்னேன். ஆனால் உன் உறுதி என்னை மதிமயங்கச் செய்கிறது. இனிமேல் நம்மை விதிகூடப் பிரிக்க முடியாது. வாழ்வதானால் இருவரும். சாவதானால் இருவரும். பவானி தேவி அறியச் சத்யம். எந்த எதிர்ப்பையும் சாதித்துக் கொள்ள உனது காதல் உறுதியளிக்கும். உன்னை அடைவதற்காக எவ்வித நிபந்தனைகளையும், கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளுவேன் இதை நம்பு” என்று சொல்லிய வண்ணம் பிச்சுவாவை மேடை மீது போட்டுவிட்டு இரு கைகளினாலும் அவளை வாரி அணைத்துக் கொண்டான்.

“அவ்வணைப்பினால் கொதிப்படைந்த அவள் உள்ளம் குளிர்ச்சி பெற்றது போன்ற உணர்ச்சி தோன்றவே, அவன் தோளில் சாய்ந்து அவன் முகத்தைத் தன் முகத்துடன் சேர்த்து அணைத்தவாறு கண்களை மூடிக் கொண்டாள். இவ்விதம் சில நிமிஷங்கள் சென்றன. எட்டு மணி குண்டானது அவர்கள் நிலைமையைக் கலைத்தது.

“உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன், எனது காதல் வேகத்தில்.”

“அப்படியொன்றுமில்லை. சரி, நேரம் சென்று விட்டது. நீ அரண்மனைக்குச் செல்லவேண்டும். நீ விரும்பும் நாட்களில் நான் இவ்விடம் உன்னைச் சந்திக்கிறேன். இக் கருவி என்னிடமிருக்கட்டும்.”

“இல்லை. அது என்னிடம்தான் இருக்க வேண்டும். மஹாராஜாவினால் எங்கள் பாது காப்பிற்கென்று கொடுக்கப்பட்டது. எப்பொழுதும் ஆபரணம்போல் இடுப்பில் இருக்கவேண்டும். உங்கள் சகோதரி கலாவதிக்கும் இராஜகுல வழக்கப்படி இக் கருவி அளித்திருக்கிறார். அதனால் அதை என்னிடம் கொடுத்து விடுங்கள். இனிமேல் உங்களைப்

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
“நஞ்சன்கூடு பல்பொடி”
I.D.L. நெ 61, மெடிகேடட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மாஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதவும்.
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி
முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே
தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் “பிரேமலீலா” உயர்தர ஊதுபத்திகள்.
'அகர்ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.
டிப்போக்கள்: மதுரை, கோவை, கும்பகோணம், பம்பாய்.

புதுமை திடீரென்று ஏற்படுவதல்ல

ப்ரூக் பாண்ட் தேயிலையின் புதுமை படிக்குப் படி உத்தரவாதம் செய்யப் படுகிறது

செழுமையான செடிகளினின்று பறிக்கும் இளந்தேயிலைகளை தோட்டத்தொழிற்சாலையிலேயே பாங்காக்கி, நிபுணர்களைக் கொண்டு கலவை செய்ய வைத்து, உடனுக்குடன் கட்டுகளாக்குகிறார்கள்.

பின்பு அந்த கட்டுகள், கம்பெனியின் அலாதி விநியோக இலாகாமூலம் ஷாப்புகளுக்குப் போய்ச் சேருகின்றன. சில்லரை விற்பனையாளர்களுக்கு மொத்தமாயல்லாமல் அடிக்கடி, அவர்கள் உடனடித் தேவைகளுக்கு வேண்டிய அளவே கொடுத்துவருவது காரணமாக தேயிலையின் புதுமை ஒருபோதும் குன்றாமலிருப்பதைத் தவிர,

அனாவசிய காலதாமதங்களும் அதன் மூலம் தவிர்க்கப் படுகின்றன.

தொலைவிலிருக்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சைக்ளிலோ கால்நடையாகவோ, இல்லை படகு, ரயில், பஸ் மூலமாகவோ ப்ரூக் பாண்ட் ஸேயில்ஸ்மான் தேநீர்க் கடைகளுக்கும், மளிகைக் கடைகளுக்கும் முறைப்படி விஜயம் செய்து, புதிய டெலிவரிகளுக்கு ஏற்பாடு செய்கிறார். ப்ரூக் பாண்ட் தேயிலை புத்தப்புதியதாகவே உங்கள் கைக்கு வந்து சேருவதற்கான கடைசி ஏற்பாடு அவர் துவக்குகிறார். நீங்கள் பருகும் தேநீரின் புதுமை, அவருடைய சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் பொறுத்தேயிருக்கிறது.



ப்ரூக் பாண்ட் தேயிலை

ஒரு இலையும் ஒரு மொட்டும்

பயமுறுத்த மாட்டேன்" என்று சிரித்தாள். பிச்சுவாவை இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

"உன் வண்டி எந்த வாசலில் இருக்கிறது? உன் வண்டி வடக்கு வாசலில் இருக்கிறது. என்னை உன் வண்டி வரை கொண்டுபோய்

விட்டுவிட்டு நான் என் வண்டிக்குச் செல்லுகிறேன்" என்றான்.

"அதற்குள்ளாகவா பிரியவேண்டும். இந்த இடத்தில் ஈ கூட நுழைய முடியாது. யுவராஜா ஒருவர்தான் எங்கும் தடையின்றி எந்தச் சமயத்திலும் வருவார். இன்று அவர் கலாவதியுடன் சங்க மீட்டிங்கிற்குச் சென்றிருக்கிறார். அதனால் இவ்விடம் இன்று நிச்சயம் வரமாட்டார். அதனால் சற்று நேரம் பூர்ணப் பிரவாகத்துடன் செல்லும் மாஹிஷ்மதி தேவியைக் கண்டுகளித்த வண்ணம் பூர்ண நிலவில், படியில் உட்கார்ந்து ஜலத்தில் கால்களைத் தொங்கவிட்ட வண்ணம் பேசிக்கொண்டிருந்து விட்டுச் செல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த விருப்பம் நிறைவேற்றப்படுமோ?" என்றாள்.

"நான் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் தங்குவதற்கு ஆக்ஷேபனையில்லை. நீ பெண். அரண்மனையில் தேடினால்?"

"விசாகை அதுபற்றிக் கவனித்துக்கொள்ளுவாள்."

"அப்படியானால் சரி. வா போகலாம்" என்று அவள் கையைப்பற்றிய வண்ணம் நடந்தான்.

நந்தவனத்தின் ஓரமாக ஆற்றின் கரையில் உயரமான மதிள்சுவர் எழுப்பப்பட்டிருந்தது. இருபுறமும் புஷ்பச்செடிகளுடன் கூடிய பளிங்குக்கல்லினாலான பாறை வழியாகவந்து வடபக்கம் திரும்பினால் மாஹிஷ்மதியின் நந்தவனப் படித்துறை தென்படும். பாமாவும் சந்தரும் இடுப்பிலும் தோளிலும் கை போட்டு அணைத்தவாறு, ஏகாந்தமென்ற நினைப்பில் தங்களையும் உலகையும் மறந்து உல்லாசமாகப் பேசியவாறு வந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் படித்துறைப் பக்கம் திரும்புவதும், ரவிவர்மன் படித்துறையேறி வருவதும் ஒன்றாய் நிகழவே மூவரும் திடுக்கிட்டு நின்றுவிட்டனர்.

சட்டெனப் பாமாவும் சந்தரும் விலகி நின்றனர். பாமா சந்தர் மனநிலைமையை ஊகித்தே அறிந்து கொள்ளவேண்டும். புன்சிரிப்புடன் நின்ற ரவிவர்மன் ஓர் விசில் கொடுத்தான். அடுத்த நிமிஷம் நரசிம்மன் வந்து நின்றான்.

"இவனை வடபாகத்தின் வாசலில் நிற்கும் அவன் வண்டியிலேயே அழைத்துச் சென்று, கலாவின் அறையில் விட்டு, நான் வருமளவும் அவளுடன் அவ்வறையிலேயே வைத்திருக்கும் படி நான் சொன்னதாகச் சொல்லு." என்றான்.

"வா அப்பா" என்றான் நரசிம்மன் அமைதியாக.

பாலச்சந்திரன் மனம் ஒரு விஷயத்தைச் சொல்லவோ, செய்யவோ முடியாத நிலைமையிலிருந்தபடியினால் பதில் பேசாமல் அவன் பின் நடந்தான். போகும்பொழுது பாமா



வைக் கெஞ்சும் தோரணையில் பார்த்தது. "ஐயோ அப்பொழுதே சொன்னேனே கேட்டாயா? மறு நிமிஷமே தண்டனை கிடைத்துவிட்டதே. பெண்பால் நீ என்ன செய்யப்போகிறாய்" என்று சொல்லுவது போலத் தோன்றிற்று பாமாவின் மனதிற்கு.

அவர்கள் கண்ணிற்கு மறையுமட்டும் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள் இருவரும். அவர்கள் தலை மறைந்ததும் பாமாவின் பக்கம் திரும்பினான் ரவிவர்மன். அவனையும், நாலுபடிகளை மேலே தெரியும்படி பூர்ணப் பிரவாகத்துடன் செல்லும் மாஹிஷ்மதியையும் மாறி மாறிப் பார்த்த வண்ணம் இருந்தாள் பாமா.

சட்டென அவள் கையை எட்டிப் பிடித்துக் கொண்டு, "பாமா, தற்சமயம் நீ நினைப்பதை நான் அறிவேன். அவ்விதம் செய்ய நான் பார்த்துக்கொண்டிருப்பேனு? அப்படிச் செய்யவேண்டிய அவசியம்?" என்றுன்.

"அத்தான் என்னை விட்டுவிடுங்கள். மானமிழந்தபின் உயிர் வாழ்வது எதற்கு?"

"நீ மானமிழந்தாய் என்று யார் சொன்னது?"

"ஒருவர் சொல்ல வேண்டுமா? மனமிருந்தோ இல்லாமலோ, கணவனுக ஏற்கப்போகிறவர்முன், அன்னியனின் அணைப்பில் தென்பட்டால் அது எதைச் சேர்ந்தது? அத்தான் தாங்கள் எப்படி நினைத்தாலும் சரி. என் ஹ்ருதய பூர்வமான உண்மையைச் சொல்லிவிடுகிறேன். பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு உங்களுக்குத்துரோகம்செய்ய நான் தயாராக இருக்கவில்லை. நாம் இருவரும் ஒரே இடத்தில் வளர்ந்தோம். நீங்கள்தான் என் துணைவர் என்று பால்ய முதல் போதிக்கப்பட்டு வந்தேன். ஆனுலும் உங்களிடத்தில் குழந்தைப்பருவத்தில் தோன்றிய அதே உணர்ச்சிதான் இன்றும் தோன்றுகிறது. உங்களிடம் பேசவே என் மனது அஞ்சும். இந்தச் சமயம் என் மனமிருக்கும் தன்மையில் தைரியமாகப் பேசுகிறேன். ஏதோ ஒரு வழியில் விதி பாலச்சந்திரனை என்னிடம் கூட்டிவைத்துச் சந்திக்கச் செய்தது. பத்து வருஷகாலம் உங்களுடன் பழகியும் ஏற்படாத ஓர்வித உணர்ச்சி, பத்து நிமிஷத்தில் அவரிடம் ஏற்பட்டுவிட்டது. 'தாங்களே எனக்குரியவர். இதை அடக்கவேண்டும்' என்று நான் செய்த பிரயத்தனம் வீணுகி விட்டது. தாங்கள் என்னை விரும்புகின்றீர்கள் என்ருவது விரும்பவில்லை என்ருவது என்னுல் அறிந்து கொள்ள முடியவில்லை. உங்கள் மனம் எப்படியானுலும் என் மனம் தங்களை நாடவில்லை என்பதுமட்டும் புலனுயிற்று. ஏன் இவ்வித முரண்பாடு. தங்களிடத்தில் அழகாவது, குணமாவது, மற்ற எந்த அம்சத்திலாவது குறைபாடு காணமுடியுமா? பட்டம் பதவி, உலகம் போற்றும் உத்தமன், அழகில் அர்ச்சுனனை நிகர்த்தவர். எல்லாம் என்னைக் கைநீட்டி அழைக்க அணைக்க, என் மனம் ஏன் அவரை நாடிற்று? விதியின் சதிதானே. இவை யாவையும் சிந்தனை செய்து செய்து இன்றுதான் ஓர் முடிவிற்கு வந்தேன். இதுவரை நானும் அவரும் எவ்வளவோ தடவை

இண்டோ கமர்ஷியல் பாங்க்
லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:- **மாயவரம்**

சென்ட்ரல் ஆபீஸ்:- **மதராஸ்**

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

சந்தித்திருந்தாலும், ஒருவரை ஒருவர் விரும்புவதை இருவர் மனமும் அறிந்தாலும், வாய்விட்டு இதைப்பற்றிப் பேசியது கிடையாது. கூடிய சீக்கிரம் நமது விவாகத்தை நடத்திவிடவேண்டுமென்று பெரியவர்கள் சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் படவே, இன்று இவரைச் சந்தித்து, உறுதி தெரிந்துகொண்டு, நாளையே இதைப்பற்றித் தங்களிடம் நேரில் சொல்லத் தைரியம் வராது என்றதினால் கடிதமூலம் தெரிவிப்பது என்று எண்ணினேன். பரந்த நோக்கமுள்ள தாங்கள், ஸ்திரீகளின் சம உரிமைக்குப் பாடுபடும் தாங்கள் என் கோரிக்கையை அங்கீகரிப்பீர்களென்ற நம்பிக்கையுடன்தான், இன்று இவ்விடம் என்னைச் சந்திக்கும்படி அவருக்குக் கடிதம் அனுப்பினேன். கடமையின் பெயரால் நம்பிக்கைத் துரோகம் செய்ய நான் விரும்பவில்லை.

"இன்று எவ்வளவோ தர்க்க வாதத்திற்குப் பின்தான் அவர் தம் உண்மை மனதை வெளியிட்டார். அத்தான், பவானி மாதா அறிய நான் சொல்வதெல்லாம் சத்தியமான பேச்சு. இன்று தாங்கள் நேரில் கண்டபடி நாங்கள் நடந்து கொண்டது இன்றுதான் முதல் தடவை!" என்று தலையைக் குனிந்தவாறே கூறினாள்.

"அம்மா! ஒரு பாரம் இறங்கிற்று. நல்ல சந்தர்ப்பத்தில் வந்துசேர்ந்தேன். இப்படி உட்கார். சற்றுநேரம் விஷயங்களை விவரமாகப் பேசிவிட்டு நிர்மலமான மனதுடன் அரண்மனை செல்லலாம்" என்று அவளை உட்காரவைத்துத் தானும் உட்கார்ந்து கொண்டான்.

"பாமா! பவானிமாதாவானவள் என் மனதில் சிக்கலான விஷயம் ஏற்பட்டு, இதை எப்படித் தீர்ப்பது என்று நினைக்கும் தக்ஷணமே சிக்கல் தீரும் வழியைக்காண்பித்து விடுகிறாள். குலதெய்வமாகிய அவள் அருள் வியக்கத்தக்கது. நம்மிடையில் காதல் காதல் என்று ஜபித்தும், அது நம்மிடைவராது எங்கோ பார்த்துச் சென்று விட்டது. விதியின் விசித்திர விளையாட்டுக்களில் இது ஒரு செய்கை. 'நாம் அவரை விரும்பவில்லை. அவர் விரும்பினால்? என்று நினைத்தாய். 'நாம் அவளை விரும்பவில்லை, அவள் ஒரு சமயம் நம்மையே வரித்தால் என்ன செய்வது' என்று இல்லாத ஒரு விஷயத்தில் இருவர் மனமும் கவலை கொண்டது. என்றாலும் என் மனதில் முன்னமேயே, உன் காதல் பாலச்சந்திரன் மீதுதான் ஏற்படும் என்று தோன்றினது. கலாவதியினிடமும் இவ்விஷயம் தெரிவித்திருக்கிறேன்" என்றதும்,

"என்ன? கலாவதியிடமா?" என்று நிமிர்ந்து நோக்கியவாறு கேட்டாள்.

"ஆமாம். பதறாதே. விஷயம் முழுவதும் விவரமாகச் சொல்லுவதாகக் கூறியிருக்கிறேனே. இருந்தாலும் பெண்ணுள்ளம் எப்படியோ? நீ அடிக்கடி என் அறைக்கு வருவாய். அம்மாவினால் அனுப்பப்பட்டுத் தின்பண்டங்கள் கொண்டுவந்து கொடுப்பாய். நீ என்ன அழகில் குறைந்தவளா? ஆனாலும் உன்னால் என் மனதில் ஒரு மாறுதலையும் உண்டாக்க முடியவில்லை. உன் மனதையும் சந்தேகமில்லாமல் தெரிந்துகொள்ள வேண்டுமென்று, இரண்டு நாளாக வழி தேடிக்கொண்டிருந்தேன். பவானி மாதா நிதர்சனமாகக் காட்டி விட்டாள். ஒருவரும் ஒருவருக்கும் துரோகம் நினைக்கவில்லை. இதில் முக்கியமான பிரச்னை என்னவென்றால் நாம் இருவரும் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள். அவர்கள் இஷ்டவிரோதமாக நடப்பது கடமை யாகாது. ஆனாலும் கூடியமட்டும் நிலைமையைச் சீர்திருத்திக் கொள்ளுவது புத்திசாலித்தனம். காதல், கலை, இவைகளில் பற்றுள்ளவரும், பரந்த நோக்கமுள்ளவருமான மஹாராஜா இஷ்டமில்லாத மணத்தைச் செய்யக் கட்டாயப் படுத்தமாட்டார். நமது காதல் மணங்கள் நிறைவேற வேண்டுமென்றால், இந்தச் சமஸ்தானத்தை விட்டே வெகுதூரம் சென்றுவிட வேண்டும். ஆனால் அது கோழைத்தனமும், சுயநலமுமாகும். கல்யாணமில்லாவிட்டால் பட்டமேற்கக் கூடாதென்பது சட்டமல்ல. அதனால் கடமை எதிர்ப்பு என்று வரும்பொழுது நான் ஒருவனே அவைகளுக்கு ஈடுசெய்ய முடியும். உனது காதல் மணம் நிறைவேறச் செய்வது என் கடமை. கவலைப்படாமல் இரு. உன் சந்திரன் உனக்கே" என்றான்.

"ஒரு சந்தேகம். கேட்கலாமா?" என்றாள்.

"ஏன். தாராளமாகக் கேள்."

"என் காதல் மணம் நிறைவேறினால் தாங்கள் கல்யாணமில்லாமல் பட்டமேற்க வேண்டும் என்பதின் அர்த்தம்? என் மீது தங்கள் மனம் காதல் கொள்ளவில்லையென்பதும் உண்மை. அப்படியானால் தங்கள் காதலுக்குப் பாத்திரமானவர்கள் உலகத்திலேயே கிடையாதா? தேடிக் கண்டுபிடிக்கவே கலாவுடன் சுற்றுப் பிரயாணம் வருவதாகச் சொன்னீர்களோ?" என்றாள் அமைதியாக.

நிமிர்ந்து அவளை நோக்கிவிட்டு, "அப்படியல்ல. நான் பஞ்சேந்திரியங்களையும் அடக்கியாளும் யோகியல்ல. என் காதல் தெய்வம்

என்றோ அன்னை அடிமைகொண்டு விட்டது. என் காதலும் கடமைக்குள் அடங்கி அமைய வில்லை. அதனுல் அப்படிச் சொன்னேன்."

"அத்தெய்வம் யாரோ?"

"அவசியம் தெரிந்துதான் ஆகவேண்டுமா."

"இஷ்டமில்லாவிடில் சொல்லவேண்டாம். மன்னிக்கவும்."

"ஏன் மன்னிப்பு.? உனக்குக் கேட்கும் உரிமையில்லையா? இனிமேல் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். எங்கே நீயாக யூகம் செய்து சொல் பார்க்கலாம். தெரியவில்லை என்ருல் பிறகு சொல்லுகிறேன்."

"தாங்கள் எவ்வளவோ பெண்களுடன் பழகுகிறீர்கள். சில சமயம் மீட்டிங்குகளில் உங்களைச் சுற்றி ஒரே பெண்கள் மயமாக நிற்கிருர்கள். அவ்வளவு பேர்களுக்கு மத்தியில் நீங்கள் ஒருவரே நின்று பதில் சொல்லுகிறீர்கள். உலக முழுவதும் தங்களைக் கலியுக பீஷ்மர் என்று புகழுகிருர்கள். நான் யாரைக் குறிப்பிட முடியும். இருந்தாலும் 'கள்ளனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி' என்றபடி, இன்று காலை அவர்களை வழியனுப்ப வந்த சமயம், நான் அவருடன் ஒரு வார்த்தையாவது பேசவேண்டுமென்று வழி தேடினேன். அவர் பயந்து மௌனமாக ஜாடை செய்துவிட்டார். அந்தச் சமயம் தாங்கள் வேண்டுமென்றே வண்டியின் எதிர்ப்புறக் கதவைத் திறந்துவைத்து அவ்விடம் வந்து ஏறும்படி அவளை அழைத்தீர்கள். வந்தவளை ஏறவிடாமல் தடுத்து நெருங்கி நின்று நீங்கள் பேசியது, சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு நிச்சயம் வித்தியாசம் தோன்றியிருக்காது. என் மன நிலையில் சற்றே சிந்தித்தேன். என்ருலும் அப்பொழுது அதற்குமேல் ஒன்றும் தோன்றவில்லை. இப்பொழுது தாங்கள் சொல்லியதிலிருந்தும் அதைச் சிந்தனை செய்துபார்த்தால் ஒரு சமயம் கலாவதியாக இருக்கலாமோ என்ற சந்தேகம்தான்" என்ருள்.

"பேஷ். பாமா! சந்தேகமே வேண்டாம். காதல் என்னவென்று சொல்லமாட்டேனென்கிருள் என்று அழுதுகொண்டு வந்த பாமா வா இப்பொழுது" என்று சிரித்தான்.

"போங்கள் அத்தான்" என்று இரண்டு கைகளினுலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

"முகத்தை மூடிக்கொண்டு விட்டால் தங்கள் உருவமே மறைக்கப்பட்டதாகப் பெண்கள் அபிப்பிராயம் போலும். சரி. நேரமாகிறது. என்னைப் பார். நான் இப்பொழுது சொல்லுவதைக் கவனமாகக் கேட்கவேண்டும்" என்ருன்.

கையை எடுத்துவிட்டு அவனை நோக்கினுள்."

"இந்த விஷயம் நம் நால்வர் மட்டிலும் அடங்கவேண்டும். நான், முதன் முதலில் பாலிகையாக அரங்கமேடையில் கண்டதுமே அவளை என் காதல் தெய்வமாக வரித்து விட்டேன். யௌவனத்திற்குப் பிறகும் இருவரும் அடிக்கடி சந்திப்போம். இவை ஏதாகிலும் இதுவரை யாருக்காகிலும் தெரியுமா? இன்று நான் ஜாடை சொல்லாவிட்டால் நீ கூடத் தெரிந்துகொண்டிருக்க முடியுமா? காலம் வரும்பொழுது நான் யாவற்றையும் வெளியிட்டுக் கொள்ளுவேன். என் அனுமதியின்றி நீ சந்தரைச் சந்திக்கக் கூடாது. மாஹிஷ்மதி மத்திய வனத்திற்கு நாங்கள் வரும்பொழுது நீங்களும் வரலாம். உனது நன்மைக்கே இந்த எச்சரிக்கை செய்கிறேன். இருவரும் வளர்க்கப்பட்டோம். இனி இருவரும் அண்ணன் தங்கைகள். என் மனோரதம் நிறைவேறினுல், ஜமீன் முதல் சகலமும் நம் இருவருக்கும் பொது. நான் பட்டமேற்று உன்னை நாடோடியாகவிடமாட்டேன். கடமையில் முரண்பாடு, காதலை விடவேண்டுமென்ருல் அதுவும் என் ஒருவனுக்குள் அடங்கும்படி செய்து விடுவேன். நீ எப்பொழுதும்போல் காலேஜ் செல்லுவது, சிற்பம், சித்திரம் செய்வது முதலிய விஷயங்களில் கவனம் செலுத்து. ஆனுல் காதல் கடிவாளத்தை மட்டும் தளர விடக்கூடாது. அடக்கம் நன்மை தரும். உன் காதல் நிறைவேறும். கவலைப் படாதே." என்று எழுந்தான்.

"உங்கள் பரந்த நோக்கத்திற்கு எதை ஈடாகச் சொல்லுவது? இன்று இவ்விடத்தில் உங்களைக் கண்டதும் என் மனம் பட்டபாடு? என்னைக் கடு மொழிகளால் தாக்குவீர்களென்றே எதிர் பார்த்தேன். எவ்வளவு இன்பமான பேச்சு? உங்கள் புத்திமதிப்படி நடக்கத் தவறமாட்டேன்." என்று எழுந்தாள்.

முன்னும் பின்னுமாக நடந்துவருகையில் "அவர்......"என்று நிறுத்தினுள்.

"ஒன்றும் நேராது. இந்தப்பதட்டத்தில் அவன் ஏதாவது விபரீதமாகச் செய்து கொண்டால் என்னசெய்வது என்பதற்காகவே அப்படி அனுப்பினேன். அவன் இந்நேரம் சுகமாகத் தூங்குவான். வேண்டுமானுல் அடுத்த சந்திப்பில் கேட்டுப் பார், சொல்லுவான். அவனைப் பற்றிய கவலையை விடு" என்ருன்.

பாமாவும் ரவிவர்மனும் காரை விட்டு இறங்கும்பொழுது நில வொளியில் மூன்ரும் மாடியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அரச தம்பதிகள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

" இதுவரை இந்த நேரத்தில் இப்படி வந்ததில்லை," என்ருள் மகாராணி.

"இதுவரை குழந்தைப் பருவம்; இப்பொழுது யௌவனப் பருவம், மாஹிஷ்மதி வனம் சென்று வருவதில் வியப்பென்ன?" என்றார் ஜமீந்தார்,

அவ்வருஷத்திய சித்திரப் போட்டிக்காக மஹாராஜாவின் படத்தை எழுதிக்கொண்டிருந்த கலாவதி "அம்மா" என்ற சப்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள்.

"மாஹிஷ்மதி வனத்தில் இவரை என்னிடம் ஒப்புவித்து, உங்கள் அறையிலேயே பத்திரமாக வைத்திருக்கும்படி யுவராஜாவின் உத்தரவு" என்றான் நரசிம்மன்,

"சரி" என்று தலையை அசைத்தாள்.

"நமஸ்காரம், சென்று வருகிறேன்" என்று வெளியேறினான் நரசிம்மன்.

அருகில் வந்து சோபாவில் உட்கார்ந்துகொண்டு, அவன் கையைப்பிடித்துப் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு; "என்ன நடந்தது சந்தர்?" என்றாள்.

"கலா, நான் குற்றவாளி'," என்றான் கண்ணீர் தளும்ப.

"சந்திரா, வருத்தப்படாதே, விஷயத்தைச் சொல்லு"

அன்று பாமாவைச் சந்தித்துப் பேசிய விவரத்தைச் சொல்லிவிட்டு, "நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அப்பேதைப் பெண் கேட்க வில்லை. இப்பொழுது என்ன கஷ்டத்தை அனுபவிக்கிறாளோ? என்னைப்பற்றிச் சிந்திக்க வில்லை. நான் எதையும் ஏற்கத் தயார். தனக்கு மனைவியாக வரப்போகிறவளை மற்றவன் அணைப்பில் கண்டால் எந்த ஆண்மகனின் மனம் சகிக்கும். ஒரே வெட்டாக வெட்டி ஆற்றில் எறிந்தால்கூட வியப்பல்லவே. ஏன், நானாக இருந்தாலும் அப்படியே செய்து விடுவேன். ஐயோ! கலா அவள் கதி என்னவாயிற்றோ?" என்றான்.

"சந்தர், கவலைப்படாதே. நீ நினைக்கிறபடி ஒன்றும் நடக்காது. யுவராஜாவின் லக்ஷியப் பெண் பாமாவல்ல. அதனால் அவர் அவளை ஒன்றும் செய்யமாட்டார். இந்நேரம் அவளுக்கு ஆறுதல் மொழி கூறி, உங்கள் காதலை நிறைவேற்றி வைப்பதாக உறுதி மொழி கூறி, அரண்மனைக்கு அழைத்துச் சென்றிருப்பார்."

"அவர் அவளைக் காதலிக்க வில்லை என்பதை நீ எப்படியறிவாய்? உலகம் முழுவதும் அவர்கள் தம்பதிகள் என்று பறைசாற்றுகிறதே!"

"உலகம் பறைசாற்றி என்ன உபயோகம்? அவர் மனம் தானே காரணமாக வேண்டும். அவர் லக்ஷியப் பெண் வேறு" இதை நம்பு.

"அவர் லக்ஷியப் பெண்யார்? நீ அறிவாயா?"

"அவசியம் உனக்குத் தெரியவேண்டுமா?

"தெரிந்தால் எனது மனதின் பாரம் குறையும். பாமாவின் நிலைமை பற்றிக் கவலையில்லாமலிருக்கும்."

சற்று நேரம் அவளை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, "சந்தர்! நாம் அதிசயப் பிறவிகளாய் அனாதையாக வளர்ந்ததுபோல் நமது காதலும் விபரீதமான வழியில் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் இருவரும் ஒன்றாக வளர்ந்தும், அழகு கல்வி முதலியவைகளில் குறைவில்லாமலிருந்தும் விதியானது விசித்திரமாக விளையாடிவிட்டது,"

"கலா, உன்னுடன் கூடவே இருந்தும் இதுவரை இதைப்பற்றி நான் சந்தேகிக்கக்கூட இடமில்லையே" என்று ஆச்சரியத்துடன் அகலவிழித்தான்.

"இன்று உனக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். இதைப்பற்றி நீ வெளியில் பிரஸ்தாபிக்கக் கூடாது. விதி விட்ட வழி நாம் நடக்க வேண்டியது."

"கலா, ஏன் இந்த வீண்விவகாரம். நமக்குக் கலை துணையிருக்கிறது. எங்காவது கண்காணமல் சென்று விடுவோம். பிறகு அவர்கள் சுகமாக வாழ்வார்கள். சட்டத்தை எதிர்த்தால் எவ்வளவு கஷ்டம்?" என்றான்.

"அதெப்படி முடியும்? நம்மை இவ்வளவு அந்தஸ்த்தில் வைத்திருக்கும் மஹாராஜாவிற்குத் துரோகம் செய்வதாகாதா? நாம் ஓடி விட்டால் மட்டும் அவர் மனம் மாறிவிடுமா? காதல் என்பதை அறிந்தா இவ்விதம் பேசுகிறாய்? அவர் மனம் எத்தகையது என்பதை நீ அறியமாட்டாய். கடமைக்காகக் காதலைத் தியாகம் செய்தாலும், ஒருவர் பார்வையிலிருந்து மற்றவர் மறைய ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். பேதை பாமா நீ இல்லையேல் உயிர்வாழ்வாளா? வீண் மனப்பிராந்தியை விட்டுவிட்டுக் கவலையில்லாமலிரு. மறுபடி அவளைச்சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். அப்பொழுது இன்று நடந்த விஷயத்தைச் சொல்லுவாளல்லவா? கவலையை விடு. சாப்பிடவா போவோம். சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கு" என்றாள்,

"அவர் இவ்விடம் வருவதாகச் சொன்னாரே, வந்தால்"

"சும்மா சொல்லியிருக்கிறார்" அந்தச் சமயம் நீ ஏதாவது விபரீதமாக நடந்துவிடப் போகிறாயோ என்று அவ்விதம் சொல்லியனுப்பினார். நான் உனக்குச் சமாதானம் சொல்லுவேன் என்பதை அவர் அறியமாட்டாரா? இன்று இனிமேல் இவ்விடம் வரமாட்டார். நான் சொல்லுகிறபடி கேள். ஒரு கஷ்டமுமில்லை. ஒரு எச்சரிகை மட்டும் செய்கிறேன். நான் அவரைச் சந்தித்து விஷயங்களை எப்படிச் சீர்திருத்தப் போகிறார் என்பதைத் தெரிந்து கொள்ளும்வரை நீ பாமாவைச் சந்திக்கக் கூடாது. என் தகவலின்றி அவளைப்பார்க்கச் செல்லாதே. உன் அவள் நன்மைக்கே இது சொல்லுகிறேன். வா; எழுந்திரு; சாப்பிடச் செல்வோம்" என்றாள்.

(தொடரும்.)

உள்ளத்தின் உயரம்

வே. ரங்கராஜன்.

'இல்லை......என் உயிர் உள்ளவரை அப்படி ஒன்றும் நிகழாது. கருவூர்த் தேவரே! நம்புங்கள்!......கவலை......'

ராஜ ராஜ மன்னர் துயில் கலைந்து விழித்துக்கொண்டார். தம் தேவியின் வதனத்தைக் கூர்ந்து நோக்கினார். சயனக்கிரகத்திலே சிற்றொளி வீசி எரிந்த நெய் விளக்கொளியிலே தேவியின் வதனம் தெரிந்தது. அதில் சலனமில்லை. ஆனால், முழுமதியை மறைத்துப் பின் விலகி மறையும் சிறு முகில் கணங்களென, சாலேகத்தூடே தவழ்ந்து வந்த இள மென்மாருதம் குழற்கற்றைகளை மெல்ல அசைத்து வதனத்திலே புரள விட்டுக் கொண்டிருந்தது.

'தேவியின் குரல்தானா அது! சந்தேகமில்லை. தேவிதான் உறக்கத்தில், கனவின் விளைவால், பேசியிருக்கிறாள்!'

லோகமாதேவியின் மன ஆழத்திலே சுழித்துச் சென்ற சோக சிந்தனைகளின் மின்வெட்டைப் போன்றிருந்தது, அப்பேச்சு. தேவி யாருக்கு வாக்களித்தாள்? அது அவள் உயிர் உள்ளவரை நிகழாது? மாசற்ற பசும் தங்கக் கொடியில் மலர்ந்த பாரிஜாதம் போன்ற தேவிக்குமா கவலை?

* * *

எங்கோ தூரத்தில் ஒரு ஒற்றைச் சேவல் 'சொக்கநாதா!' என அழைத்தது. அதைத் தொடர்ந்து சில புள்ளினம் சிலம்பும் ஓசையும் எழுந்தது. பேரரசரின் பரந்த மார்பிலிருந்து ஒரு பெருமூச்சு எழுந்து ஆழ்ந்தது. மஞ்சத்தினின்றும் மெல்ல இழிந்து சாலேகத்தருகே நடந்து சென்றார் மன்னர்.

மங்கிய நிலவொளியிலும் முதற் பொருளாக அவர் கண்களுக்குப் பட்டது பிரகதீசுவரர் ஆலய கோபுரந்தான். தென்னையும் கமுகும் மாவும் பலாவும் சூழ்ந்து மண்டியிருந்த சோலை நடுவே நிமிர்ந்து நின்ற அந்தக் கோபுரம், போர்க்களத்திலே அஞ்சாது நிற்கும் பட்டத்து யானையின் நினைவை உண்டாக்கியது அவருக்கு. கோபுரத்தின் அந்தக் கம்பீரமான தோற்றம் ராஜராஜரின் தோள்களைப் பூரிக்கச் செய்தது, மார்பகம் விகசித்தது.

தம் வாழ்வில் இனி ஒரு குறையும் இல்லை என எண்ணியிருந்தார், அவர். ஆனால் தம் தேவியின் மனதிலே ஏதோ ஒரு குறை இருக்கிறதே! ஆக இப்படிச் சோழ சாம்ராஜ்யம் முழுமையும் தனி ஒருவர் மனதிலும் ஏதேனும் ஒரு குறை இருந்துகொண்டுதான் இருக்கிறதோ!

தெளிவாகத் தெரிந்த வான விதானத்தில் மின்னிய மீன்களையும் சந்திரனின் சஞ்சார இடத்தையும் பார்த்து, பொழுது புலர இன்னும் நான்கு நாழிகை இருக்கிறது என்பதை அறிந்துகொண்டார் மன்னர். அவர் கண்கள் மேலும் மூட மறுத்தன. உறக்கமின்றி மஞ்சத்தில் சயனித்துப் புரள மனமில்லாமல் சயனக் கிரகத்தை விட்டு மெல்ல நடந்து ஸ்நான கிரகத்திற்குச் சென்றார்.

* * *

அரசர்க்கெல்லாம் அதிபதியாய் ஆக்கினை செய்த பேரரசர், ராஜ ராஜர், அடியார்க்கும் அடியராய் இருந்த சிவநேசச் செல்வர், சிவ பக்த சிகாமணி, சிவபாத சேகரர். பிரகதீசுவரர் பேராலயம் அவர் அரச ஆக்கினையால் உருவானதல்ல, சிவ நேசத்தால் வானுயர எழுந்தது.

துயிலுணர்ந்து எழுந்த பிறகு அரண்மனையிலேயே சிவபூஜை செய்வது அவர் வழக்கம். அதன் பிறகு சூரிய நமஸ்காரம் செய்வார். பிரகதீசுவரரின் ஆலயத்தில் பிராதக் கால பூஜை நடந்தபின் வரும் பிரசாதத்தை உண்டு, அதன் பிறகுதான் காலை உணவு உண்பார். ராஜ்ய காரியங்கள் யாவும் காலை நேரத்திலேயே நடைபெறும். மாலையில் கதிரவன் மலைவாயில் விழும் வரை அவர் கவனத்தைச் செலுத்தவேண்டிய பல ராஜ்ய காரியங்கள் இருந்தன. சிறியது முதல் பெரியது வரை அவருடைய விரிந்து பரந்த சாம்ராஜ்யத்திலே அவர் அறியாதவை எதுவும் நிகழ்வ

தில்லை. வலைப் பின்னலைப் போலப்பரவியிருந்த ஒற்றர் வெளி உலக நடவடிக்கைகளை மன்னனுக்கு அறிவித்து வந்தனர்.

ஆனால் மக்களின் மனதிலே என்ன எண்ணம் நிலவுகிறது? லோகமாதேவியின் கனவுக்குக் காரணமென்ன? அவள் மறை மனத்தில் உறையும் எண்ணத்தைப்போல் மக்கள் மனதிலும் மறைந்துறையும் எண்ணங்கள் உள்ளனவோ! அதை யார் அறிய முடியும்? இது ஒற்றரின் திறமைக்கும் புறம்பானதாயிற்றே!

2

இரவின் பெரும் பகுதியில் கனவின் விளைவால் மன உளைச்சல் அடைந்திருந்த தஞ்சைத் தேவி, உஷையின் அன்பான ஸ்பரிச சுகத்திலே நன்றாகக் கண்ணயர்ந்து விட்டாள். மலர்க் கதிர் பரப்பி எழுந்த கதிரவன் வரவுடனே யாழேந்திய பாணனும் பாடிச் சென்றான்:

"உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்று நூறுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படை செய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர் வெண் திங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே"

யாழோடு இழைந்து வந்த அந்தப்பண்—பஞ்சமம்-அரசியை மெல்ல எழுப்பியது. கணவர் எழுந்து போய்விட்ட பிறகும் நீண்ட நேரம் துயில் செய்து விட்டோமே! என அவள் மனம் துணுக்குற்றது. கணவரின் பாத கமலங்களை நினைந்து அஞ்சலித்த அரசி சாலேகத்தருகே சென்றாள். கதிரவன் அணைய அலர்ந்தெழும் குமுதத்தைப்போல் காலை யிளம் பரிதியின் செம்பசுங் கிரணங்கள் பரவ, கம்பீரமாய் நின்ற கோபுரம் அரசியின் மனதிலே மீண்டும் நம்பிக்கையை யூட்டியது. வளைக்கரம் ஆர்ப்பச் சிரக்கம்பம் செய்து கோபுரத்தை வணங்கினாள் பட்டமகிஷி.

பிறகு பஞ்சணைய மெல்லடி அசைவிலே பாதசரங்கள் ஒலிக்க மேல்மாட சயனக்கிரகத்தை விட்டு மஞ்சனமாடச் சென்றாள், அரசி. சிவபூஜை முடித்து, காலை ஆகாரம் ஆனபிறகு காற்றோட்ட மண்டபத்திலே, பணிப் பெண்கள் கூந்தல் கோதி உலரவிட வீற்றிருந்த தேவியின் மனதிலே சென்ற இரவில் கண்ட கனவு படர்ந்தது. சிறுகுழந்தையின் இனிய மழலையைப்போல் தொடர்பற்று

இருந்த அதைக் கோவையாக்கி அக்கனவின் பொருளை அறிந்து கொள்ள முயன்றாள். தன் கனவைப் பற்றி அவள் யாருக்கும் கூற விரும்பவில்லை. அது வெறும் கனவாகத் தோற்றவில்லை. பிரகதீசுவரர் தன் மூலம்ஏதோ ஒரு காரியத்தை நிகழச் செய்யவிரும்புகிறார் என்று ஊகித்தாள். ஆனால் எதை? எப்போது? என்றெல்லாம் அவளால் எண்ணக்கூடவில்லை. சோழர் குலத்தின் செழித்த வளர்ச்சியிலே நாட்டங் கொண்ட கருவூர்த் தேவர் கனவில் தோன்றினார். லோகமாதேவியை என்னவோ எச்சரித்தார்; அதற்குத் தான் தேவி சொப்பனத்தில்கூடத் திடமான டதில் சொன்னாள். கருவூர்த்தேவர் கனவில் சொன்னவைகளை இப்போது அவள் சரியாக நினைவுக்குக் கொண்டுவர இயலவில்லை. சிவப் பழமென, விபூதி உருத்திராக்ஷங்களுடன் அவர் தோன்றிய தோற்றம் கண் முன்னாலேயே இருந்தது. சந்தியா கால பூஜைக்குத் தவறாமல் கருவூர்த்தேவர் வருவார். அப்போது அவரிடம் தன் கனவைச் சொல்லி அதன் உட்பொருளைக் கேட்க வேண்டும் என எண்ணினாள் பேரரசி.

* * *

‘‘சூழந்தாய்! சோழர் குலக் கொடியே! நீ தான் அரசர் மனது நிலை குலையாவண்ணம் காத்துவர வேண்டும். பௌத்த பிக்ஷுக்கள் சூழ்ச்சியில் வல்லவர்கள்; தங்கள் காரியம் கைகூடி வர அஷ்டமாசித்திகளையும் செய்யும் துணிவுள்ளவர்கள்!''

தஞ்சைத் தேவி மீண்டும் சொன்னாள்: ‘‘இல்லை, தேவரே! என் உயிருள்ளவரை அப்படி ஒன்றும் நிகழாது. நம்புங்கள்: கவலை வேண்டாம்!''

‘‘அம்மா! லோகமாதேவி! பௌத்த பிக்ஷுக்கள் சாமர்த்தியசாலிகள் என்று சொன்னேனல்லவா? அது முற்றிலும் உண்மை என்பதற்கு அறிகுறியாகச் சமீபத்தில் சில காரியங்கள் நடந்திருக்கின்றன. கடார தேச அரசனது பண உதவி பெற்று, நாகபட்டினத்திலே பௌத்த விகாரம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்துவருகின்றனர். நமது மன்னர் விகார நிர்மாணத்தை அங்கீகரித்து விட்டார். நாகபட்டினத்துச் சாகரச் சூழலிலே தேக்கு மரம் மலையாகக் குவிந்துள்ளது; விகாரம் எழும்பிக் கொண்டிருக்கிறது. அதைச் சூடாமணி விகாரமெனப் பெயரிட்டு அழைக்கப் போவதாகப் பிக்ஷுக்கள் சொல்லிக் கொள்கின்றனர்!''

‘‘அப்படியா! நாவலந்தீவு முழுவதும் பிரமிக்கும்படியான நம் பிரகதீசுவர ஆலய

நிர்மாணம் அவர்கள் மனதிலே பொறுமை யைத்தான் உண்டு பண்ணியதா? பலகாத தூரம்வரை பக்தி மணம் கமழச் செய்து நிற்கும் இவ்வாலயத்திற்கு நிகராக, தலைநக ரின் மிக அருகே, நாகபட்டினத்தில் பௌத்த விகாரம் எழுகிறதா? அதற்கு எனது தலைவர் அங்கீகாரம் அளித்துள் ளாரா? தேவரே! இவை யாவையும் நான் அறியேன். ராஜேந்திரன் பிறந்த நாளாக அவனை வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தி வருகிறேன். அவனுடன் சிரித்து விளையாடிய நேரம் போக, சிவபூஜை செய்யத்தான் நேர மிருக்கிறது. நீண்ட நாட்களாக அரச காரி யங்களில் நான் கவனம் செலுத்தவில்லை.

"நமசிவாயம்! அதைத்தான் தேவி குறிப்பாகச் சொல்ல வந்தேன். சிவ பாத சேகரன் என்ற விருதுப் பெயரையே உயர் வாகக் கருதும் மன்னர், பௌத்தர் வலையில் சிக்கிவிடுவாரோ என்ற ஐயம் ஒருபுறமிருக்க ராஜேந்திரனின் எதிர்கால அரசியலைக் குறி த்தும் கவலைகொள்ள வேண்டியிருக்கிறது. சோழநாடெங்கும் பௌத்தர்களை வளர விட்டால் ராஜேந்திரன் அரசு புரியும் கால த்தில் தஞ்சை நகரிலே ஓர்பால் பௌத்த விகாரம் எழுந்தாலும் எழலாம். ஆனால், தஞ்சை மாதேவி!, அதையெல்லாம் கண் ணால் பார்க்க இந்தக் கருவூர்த்தேவன் இருக்க மாட்டேன். இருந்தாலும் ஒரு நம் பிக்கை. சிவபாத சேகரனின் குமாரன் நிச் சயம் சைவப் பண்புகளையே பெற்றிருப் பான்!"

"அதை எப்படிச் சொல்லமுடியும் தேவரே! சிவ யோகியாராகிய தாங்கள் என க்கு என்ன யோசனை கூறுகிறீரோ அதன் படி நடக்கிறேன். சோழர் குலம் செழிக் கவும் சைவம் தழைக்கவும் நான் வாழ்வதே வாழ்வாகும்!"

"அம்மா! நீ செய்ய வேண்டிய தெல் லாம் ஒன்றுதான். மன்னன் மனதிலே சிவ பக்திக் கனல் நீறு பூக்கா வண்ணம் மூண்டு எழுந்து கொண்டிருக்கச்செய். அப் போது மன்றில் நடம்புரியும் அவன் அவர் மனதிலும் நடம் புரிவான். பௌத்தர்கள் சூழ்ச்சி தோல்வியுறும். ஆதித்த சோழனின் வமிசம் நிலைபெறடையும்!"

"ஆகட்டும் தேவரே! ஆசீர்வதியுங்கள்! சென்று வருகிறேன்!"

"குழந்தாய்! சென்றுவா, அம்மா! உன க்கு, சர்வசித்திகள் கிடைக்கட்டும்! ஓம்! நம சிவாயம்!"

3

அன்று இரவு நீண்ட நேரம்வரை ராஜ ராஜன் அந்தரங்க மந்திராலோசனை மண்ட பத்தில் வீற்றிருந்தான். மந்திரிகள், ஒற்றர், படைத்தலைவர் புடை சூழ்ந்திருந்தனர். சோனக தேச வெண்புரவிகள் ஏற்றிவந்த சில மரக்கலங்களை ஈழநாட்டுக்கடற் கொள் ளைக்காரர்கள் வழிப்பறித்து விட்டதாகத் தஞ்சை நகரப் பெருங்குடி வணிகர் அன்று காலை புகார் செய்தனர். வழிப்பறி செய்யப் பட்ட குதிரைகளைச் சிங்கள மன்னன் பொன் கொடுத்து வாங்கியுள்ளான் என்ற செய் தியைச் சற்றுமுன் வந்த ஒற்றன் கொண்டு வந்தான்.

ஏறக்குறைய நடுச்சாமமாயிற்று மந்திரா லோசனை முடிய. உடல் சோர்ந்த மன்னன் தான் உலவும் உபவனத்தை அடுத்த, காற் றோட்டச் சயனக்கிரகத்திற்குச் சென்று களை தீரச் சற்றே சயனித்தான்; பிறகு நன்றாக உறங்கி விட்டான்.

* * *

லோகமாதேவி நீண்ட நேரம் வரை அரசனின் வரவை எதிர் நோக்கியிருந்தாள். அவள் மனதில் எண்ணங்கள் கோவையாகத் தவழ்ந்து கொண்டிருந்தன. அரசரின் கருத்தைச் சந்தேகமற அறிந்துகொள்ள எப் படிப் பேசுவது? என்ன வினவுவது? என்று ஒத்திகை செய்துகொண்டிருந்தது தேவியின் மனம்.

அரசரின் மனத்தைக் கவரும் வண்ணம் தன்னை விசேஷ கவனத்துடன் அலங்கரித்துக் கொண்டிருந்தாள் தேவி. சயனக் கிரகமே ஒரு மோஹன உலகமாகத் தோற்றியது. முதல் ஜாமம், இரண்டாம் ஜாமம், மூன்றும் ஜாமம் எனக் கணக்கிட்டு வந்த தேவி சோர்ந்து சயனித்து விட்டாள். சயனித்த சற்று நேரத்திற்கெல்லாம் ஆழ்ந்த நித்திரை வசமானாள்.

.........தஞ்சை நகரின் ஓர்பால் பௌத்த விகாரமொன்று நிர்மாணமாகிறது. தமிழ் நாட்டின் தெய்வச் சிற்பிகள் அதை அமைப் பதில் ஈடுபட்டுள்ளனர். பிழைப்புக்கு வந்த இந்தச் சைவ வைணவ மதத்தைச் சார்ந்த சிற்பிகளைப் பௌத்த மதத்தில் சேர்த்து விடு கின்றனர் பிக்ஷுக்கள்......ராஜ ராஜ மன்ன ருக்குத்திடீரென்று ராஜபிளவை வந்துவிடுகி றது. அரண்மனை வைத்தியரின் சக்தியை மீறிப்போய்விடுகிறது வியாதி. வேறிடங்க ளிலிருந்து வந்த மருத்துவரும் செயலற்றுப் போயினர். அரசன் வேதனை தாளாது

துடித்துக் கொண்டிருந்தான். அப்போது தஞ்சை விகாரத்தின் பிரதம பிக்ஷு சிகிச்சை செய்யத் தாமே முன்வந்தார். மற்ற மருத்துவர் கண்டு பிரமிக்கும்படி ஆச்சரியமான ரணசிகிச்சை செய்தார். அரசனின் வேதனை குறைந்தது. புண் ஆறிக்கொண்டு வந்தது. அத்துடன் அரண்மனையுள் பௌத்தரின் செல்வாக்கும் ஓங்கியது. தனக்கு மாங்கல்ய பாக்கியம் அளித்த பிக்ஷுவை மனதார வாழ்த்தினாள் லோகமாதேவி. ஆனால் அவருடைய கண்களைப் பார்த்த தேவி கலக்கமடைந்தாள். நாகத்தின் கண்களில் வீசும் மாய சக்தியைப்போல் ஏதோ ஒரு வசியசக்தி தன்னைப்பற்றி யிழுப்பதாக உணர்ந்தாள். அரசரும் அவளும் பௌத்த மதத்தில் சேர்ந்தனர். தமிழகம் முழுவதும் பௌத்த சைவத்தகராறுகள் மலிந்தன......மீண்டும் கருவூர்த் தேவர் அரசியின் முன் தோன்றினார். அகழ் விழுந்த அவர் கண்களிலே முத்துக்களென இரு கண்ணீர்த்துளிகள் சுடர் விட்டன. 'தஞ்சைத் தேவி! வாக்குத் தவறிவிட்டாய்! சிவாகம தர்மம் சிதைவுண்டு சாகப் போகிறது! லோகமாதேவி! நீ செய்தது தர்மமா? இதோ நான் பொதியமலைச் சாரலுக்குப் போகிறேன். இமயம் தாழ்ந்தாலும் குமரி கடல் கொள்ளப் பட்டாலும் ஒரு யோகி தன் மனதைச் சலனமடைய விடக் கூடாது. ஆனால், அன்பினால், சோழ வமிசத்தின் மீதிருந்த பரிவினால், எச்சரித்தேன்......போகிறேன்!

'தேவரே! வேண்டாம்!...வேண்டாம்!......' எனவாய் குளறினாள் லோகமாதேவி. மஞ்சத்தில் புரண்ட வண்ணம் இருந்த அவள் தொப்பென இரத்தின கம்பளம்விரித்த தரையின்மீது விழுந்தாள். பணிப்பெண்கள் விழித்தெழுந்தோடி வந்து அவளைத் தூக்கி மஞ்சத்தில் கிடத்திச் சைத்யோபசாரங்கள் செய்தனர். இதனால் அவள் தூக்கம் கலைந்தது. இது என்ன கனவு?

4

ராஜ ராஜ சோழர் காலத்திலே நாகபட்டினம் பௌத்தர் நிறைந்து வாழ்ந்த இடமாயிருந்தது. ஆகவே, தமிழ் நாட்டின் ஓர் பால் பௌத்த விகாரம் நிர்மாணிக்க வேண்டும் என்ற கடார மன்னன் விருப்பத்தை அவ்விடத்தில் நிறை வேற்றிக் கொண்டனர் பௌத்த பிக்ஷுக்கள். அவர்கள் ஏகோபித்த முயற்சியின் பலனாகச் சூடாமணி விகாரம் நிர்மாணமாகி நிமிர்ந்து நின்றது.

இந்த விகாரம் தென்னாடெங்கும் வியாபித்திருக்கும், பௌத்தர்களின் தாயகமாக, யாத்திரை ஸ்தலமாக வேண்டுமென்பது பிக்ஷுக்களின் விருப்பம். ஆகவே விகாரத்துள் பிரவேசிக்கும்நாளை ஒருவிழாத்தினமாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டனர். திறப்புவிழா அமோகமாக நடை பெறவேணுமென்று திட்டங்கள் வகுத்தனர்.

பொன்னும் மணியும் ஓர்பால் மலிய, கடார மன்னனைச் சுமந்து வந்தது பெரு மரக்கலம் ஒன்று. போதி சத்துவன் திருவவதரித்த பொன்னாட்டைக் கண்டதும் பேருவகை யெய்தினான் மன்னன். நுரைத்து எழுந்த சாகரத்தைப்போல அவன் உள்ளம் பூரித்து உவகையலைகளை எழுப்பியது.

மன்னனை எதிர்கொண்டு அழைக்கப் பிக்ஷுக்கள் கடற்கரையில் குழுமியிருந்தனர். பெருமகிழ்வுடன் அழைத்துச்சென்றனர்.

சூடாமணி விகாரத்தின் எதிர்காலத்தைக் குறித்து மன்னனிடம் பிக்ஷுக்கள் தம் ஏகோபித்த கருத்தைத் தெரிவித்தனர். "அரசப் பெருந்தகையே! நும் பேராதரவால் விகார நிர்மாணம் முடிந்துவிட்டது. நாங்கள் உள்ள சூழ்நிலை தாம் அறியாததல்ல. இந்த நாட்டிலே இப்பொது சைவமும் வைணவமும் செழித்துக் கொழிக்கின்றன. பௌத்த பிக்ஷுக்கள் கண்காணிக்கப்படுகின்றனர். புத்தர் திருவவதரித்த இந்த நாட்டிலே எங்களுக்குப் பெரும் சோதனைகள் சூழ்ந்துள்ளன. யவனர், மிலேச்சர், சோனகரைப் போல் நாங்களும், அயல் தேசத்தவரெனக் கருதப் படுகிறோம்என்றால், மன்ன! நீர் ஆச்சரியப்படுவீர்! இவை இருக்கட்டும். விகாரம் நிலையாக இருந்து புத்த சங்கத்தை வளர்க்க வேண்டுமானால் இதன் நடைமுறைச் செலவுகளுக்கு ஒரு நிரந்தர மானியம் வேண்டும். அத்துடன் சோழ மன்னனின் ஆதரவும் வேண்டும். விகாரப் பிரவேசவிழா நடக்குமுன் இதற்கான ஏற்பாடுகளை மன்னராகிய தாங்கள் தான் செய்ய வேண்டும். ராஜ ராஜர் பரந்த உள்ளம் உடையவர். சிறந்த ராஜ தந்திரி. எங்கள்சார்பாகத் தாங்கள் அவரிடம் தூது போய் விகாரத்திற்கென நிரந்தர மானியம் பெற்றுவருமாறு வேண்டுகிறோம். சித்தார்த்தரின் கிருபையால் காரிய சித்தி பெற்றுத் திரும்புவீரென எதிர்பாக்கிறோம்!" என்றனர்.

அரச விருதுகள் புடைசூழ, யானைத்தந்தத்தாலான அழகிய சிறு பேழை நிறைய, நல் முத்துக்களை நிரப்பி, பாத காணிக்கையாக யானையொன்றன் மேல் வைத்துக்கொண்டு ராஜ ராஜேசுவரத்திற்குப் பிரயாணமானான் கடார மன்னன்.

5

பெருமன்னன் பேரவையிலே கடார மன்னன் உரிய முறையில் வரவேற்கப் பட்டான்.

ஆனுல் லோகமாதேவியின் மனதிலே பெரும் அச்சம் குடிகொண்டது. முதல் நாளிரவு அவள் கண்ட கனவு தெளிவாக அவள் நினைவில் நின்றது. புத்த துறவிகள் புடை சூழத் துறவுக்கோலம் பூண்ட கடார மன்னன் அரசவை எய்தக் காரணம் என்ன?

சிரத்தின் மீது சுமந்து வந்த பாதகாணிக்கையை ராஜராஜரின்முன் சமர்ப்பித்து விட்டுத் தான் வந்த காரியத்தை எடுத்துச் சொன்னுன் கடார மன்னன். தூய செந்தமிழிலே குழைந்து பேசிய அவனுடைய பேச்சு அரசரின் மனதைக் கவர்ந்தது. இல்லை என்று உரைப்போர்க்கு இல்லை என்று உரையாத இதயம் படைத்த தமிழ்மன்னன் ஆனைமங்கலம் என்ற கிராமத்தைச் சூடாமணி விகார மானியமாகத் தானம் செய்தான். அரியாசனமருங்கில் சரியாசன மிருந்த லோகமாதேவி இதைக் கேட்டதும் பதைபதைத்தாள்.

இந்தத்தானத்தை செப்புப் பட்டயத்தில் பொறித்து அளிக்க ஆஞ்ஞையிட்ட அரசப் பெருந்தகை அதன் வாசகத்தையும் சொன்னுன்:

"அவரவர் தமதம தறிவறி வகை வகை
அவரவர் இறையவ ரெனவடி யடைவர்கள்"

என்ருர் ஆழ்வார். சிவபாத சேகரன் என்ற விருதுப் பெயரைக் கண்ணெனக் கருதும் ராஜராஜன் நாகபட்டினத்தில் நிலவா நிற்கும் சூடாமணி விகாரத்திற்கு ஆனைமங்கலத்தை மானியமாக வழங்கினுன். எம்மதமும் சம்மதம்; யாதும் ஊரே யாவரும் கேளிர்!"

* * *

இந்த வாசகத்தைக் கேட்டு ராஜராஜனின் வதனத்தைக் கூர்ந்து நோக்கிய லோகமாதேவி சாந்த மடைந்தாள். மாசற்ற கொள்கையனுன மன்னனின் கண்கள் திட சங்கற்பத்தைக் காட்டின. அவள் கண்ட கனவு மனதைவிட்டு அகன்றது. இந்தத்தானத்தின் காரணத்தால் தஞ்சைப் பெருவுடையார் கோபுரத்தைவிட உயர்ந்து விட்டான் மன்னன் என்று பெருமித மடைந்தது அவள் பெண்ணுள்ளம்.

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினுல் நின்று போனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்ருர்கள்

சாதாரண கேஸ்களுக்கு ...	...	ரூ 3
நீண்ட நாளைய கேஸ்களுக்கு ...	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு ...	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)	...	ரூ 4

(வி. பி. அணு 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

Mrs. P. DEVEE, F.D.S. (C.M.)
Tollygunge CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனுபஜார் ரோடு மதராஸ்.
ராகவன் & கம்பெனி ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு பங்களூர் ஸிடி.
நாதம் & கம்பெனி மட்டஞ்சேரி கொச்சி.
ஷா கம்பெனி மங்களூர். (S. K.)
L. M. முகர்ஜி & சன்ஸ் லிமிடெட், 167, தாராம்தோலா தெரு, கல்கத்தா.
சிவானந்த சித்தர் மெடிகல் ஹால் 92, கடல்தெரு கொழும்பு, &
768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

மயக்கமும் மனோவியாதியும்

நா.கி.நாகராசன்

'மனோவியாதிக்கு மருந்தில்லை' என்பது பழமொழி. ஆனால் தற்கால விஞ்ஞானிகள் இதை மறுத்துச் சிலவகை மனோவியாதிகளுக்கு மருந்துண்டு என்று முடிவாகக் கூறுகின்றனர். குடும்பக்கவலையும், உத்தியோகத் தொல்லையும் மலிந்து வாடும் ஏழைக் கிரகஸ்தர் இதைப் படித்துத் தமது மனக்கவலைக்கு மருந்து தேட வேண்டாம். மனக் கவலைக்கு மருந்தளிக்க விஞ்ஞானிகளாலும் முடியாது; வேறெவரும் அம்முயற்சியில் வெற்றி காணவும் இயலாது. ஆனால் மக்களைப் பீடிக்கும் பைத்தியம், ஏக்கம், பிரமை முதலிய கோளாறுகளைப் போக்க முடியும் என்பதே தற்கால மனோதத்துவ மருத்துவத்தின் முடிவாகும்.

"என்னிடம் வரும் நோயாளிகளில் நூற்றுக்கு எண்பது பேருக்கு உடலில் ஒருவகையான கேடும் இல்லை. அவர்களது மனக் கோளாறே அவர்களுக்கு இருப்பதாகக் கூறப்படும் நோய்களுக்கு அடிப்படையான காரணம்" எனப் பேர் பெற்ற மருத்துவரொருவர் கூறினார். கை கால்களில் வரும் வீக்கமோ, வயிற்றிற்குள் வரும் புண்களோ வெறும் மனக் கோளாற்றினால் ஏற்படுவனவாக அவர் கூறியதாக எண்ணிவிடக்கூடாது. தீராத தலைவலியோ, நீங்காத அஜீரணமோ பெரும்பாலும் மனநோயின் விளைவாயிருக்கலாம் என்றே அவர் கருதினார். உடற்கோளாறு இருப்பதாகக் கருதும் பலநோயாளிகளுக்கு உண்மையில் உள்ளமே கோளாறடைந்திருக்கவேண்டும். இத்தகைய கற்பனை நோய்களால் வாடுவோரைத் தவிர உள்ளமே சீர்குலைந்து வருந்தும் மக்களும் எண்ணிறந்தவர். ஆதலால் உடலைக்கட்டிலும், மனத்தைச் சீர்திருத்தும் மருத்துவமே மக்களுக்கு நன்மை பயக்கும்.

மனக்கோளாறுகளின் காரணங்களைத் தெளிவாக அறியாமலே நம்முன்னோர் இவற்றை நலப்படுத்தும் முறைகளை வகுத்திருந்தனர். அவை ஓரளவு பயன் படத்தான் செய்தன. இன்றும் அம்முறைகள் வழங்கிவருகின்றன. மனத்தின் கட்டுப்பாடு தளர்ந்து, உள்ளமும் உடலும் சீர் கெட்டு வருந்தும் நோய் ஹிஸ்டீரியா (Hysteria) எனப்படுகிறது. இக்கோளாறு பெண்களையே பெரும்பாலும் பீடிக்கிறது. இந்நோய் கொண்ட மக்களைப் பேய்பிடித்துவிட்டது என்று உடனே முடிவு கட்டி விடுகின்றனர். பேயும் பிசாசும் நம் கற்பனையின் உருவங்களாகவே இருக்கலாம். ஆனால் பேயோட்டும் முறையினால் மனநோய் நலமாவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஏனெனின் பேயோட்டும் முறை ஓரளவு தற்கால மன மருத்துவத்தின் முறையையே ஒத்துள்ளது. இடம் மாற்றுதல், ஓய்வு கொடுத்தல், மனமாற்றத்திற்கேற்ற சூழ் நிலையில் நோயாளியை வைத்தல், மனம் மாறுவதை நோயாளியிடமே வற்புறுத்தல் முதலிய முறைகளால் நாமக்கல்லுக்கும் சோளங்கிபுரத்திற்கும் செல்லும் மக்களின் மனத்தைவிட்டுப் 'பேய்' நீங்கி அவர்கள் நலமடைகிறார்கள். ஆனால் பேயோட்டும் பூசாரிக்கு மனதிலே ஏன் பேய் வந்து குடிகொள்ள வேண்டும் என அறியும் ஆற்றல் இல்லை. ஆகையால் பன்முறை அவன் தந்திரங்கள் பலிப்பதில்லை. இதனால் நோயாளியும் எக்கோவிலிலும் நலங்காணாது திரும்பி ஆயுள் முழுதும் வருந்துகிறான்.

மேனாட்டு மருத்துவ முறைகளும் இந் நூற்றாண்டு வரை கிராமத்துப் பூசாரி யின் முறைகளையே ஒத்திருந்தன. ஆனால்மனக்குரங்கின்விளையாட்டுக்களைப் பற்றிய உண்மைகள் இப்போதே அறி யப்பட்டு வருகின்றன. இதன் விளை வாய் மனக்கோளாறுகளின் அடிப் படைக் காரணங்களை ஒருவாறு அறிய இயன்றிருக்கிறது. ஒரு விளைவின் கார ணத்தை யறிந்து அதைக் கட்டுப்படுத்த முயல்வதே விஞ்ஞான முறையாகும். மனக் கோளாற்றிற்குக் காரணமான சீர்குலைந்த மனநிலையைச் சரிப்படுத்த மருத்துவர் மயக்க மருந்தின் உதவியை நாடுகிறார். இம்முறை மன மருத்துவத் துறையின் புதுமையாகும்.

ஒருவரது செய்கை எனக்கு அடாத ஆத்திரத்தையும், சினத்தையும் தரு கிறது. இதற்காக அவரை அப்போதே தண்டித்து விடுகிறேன். பின்னர் இதைப் பற்றி யோசித்து நான் செய்ததே தவறு என்று முடிவு செய்கிறேன். ஆனால் நான் அவசரப்பட்டு ஒன்றும் செய்யாமல், அவரது செயலை மனதிலே கொண்டு' அன்றிரவு முழுவதும் உற ங்கி மறுநாள் காலையில் அதைப்பற்றி யோசித்தால் அவரது செய்கையைப் பற்றி நான் தெளிவான முடிவுக்கு வரக்கூடிய மன நிலையில் இருப்பேன். முதல் நாள் நான் கொண்ட ஆத் திரம் தணிந்து என் உள்ளம் பழைய நிலையை அடையத் தூக்கம் உதவுகிறதல் லவா? இதனால்தான் "சோர்ந்த உள்ளங் களின் தவறாத மருந்து" எனத் தூக் கத்தை ஆங்கிலக் கவி மன்னன் விவரித் தார். சிறு மனக்கவலைகளுக்கும், மற்றச் சில்லறைக் கோளாறுகளுக்கும் தூக்கம் மருந்தாகலாம். ஆனால் தூக்கத்தின் போதும் நமதுள்ளம் முற்றிலும் உறங்கு வதில்லை. மயக்கத்தின் போதுதான் மன மும் உறங்கும். எக்காரணத்தினாலோ சீர்கெட்டுவிட்ட உள்ளம் சீர்திருந்த மயக்கநிலை உதவுகிறது. செயற்கை முறைகளால் நோயாளிக்கு மயக் கத்தை யூட்டி அவன் மனநிலையைச் சரிப்படுத்துவதே தற்கால முறையாகும்.

உடலையும், உள்ளத்தையும் ஒருங்கே தூங்கவைக்கும் மயக்க மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு கழிந்து விட்டது. 1846-ம் ஆண்டில் மார்ட்டன் (Dr. Morton) என்னும் அமெரிக்க மருத் துவரால் முதன்முதல் ஈதர் (Ether) என்ற மயக்க மருந்தைப் பயன்படுத்தி, இளம் பெண்ணொருத்தியின் காலை வலி தெரியாது வெட்ட இயன்றது. அடுத்த ஆண்டில் சிம்சன் (Dr. Simpson) என் னும் ஆங்கில மருத்துவர் பிரசவத்தின் போது பயன்படும் மயக்க மருந்தொன் றைக் கண்டு பிடிப்பதில் முனைந்து குளோ ரபாரம் (Chloroform) என்னும் மருந் தைக் கண்டுபிடித்தார். இம்மருந்தின் தன்மையை யறிய அவர் அதைத் தாமே மோந்து பார்த்தார். சிறிது நேரத்திற் கெல்லாம் அவருக்கு அரை மயக்கம் ஏற் பட்டுவிட்டது. இதனால் என்ன செய்கி றோம் என்பதே தெரியாமல், பித்தன் போல் நகைத்த வண்ணம் தலைகீழாக நிற்கத் தொடங்கி விட்டாராம்! அப் போது அவ்வறைக்குள் நுழைந்த அவர் மனைவி அவரை இந்நிலையில் கண்டாராம். இதனால் வீட்டில் எவ்விதப் புயல் விளைந் ததோ நாமறியோம்! ஆனால் கருவி மருத் துவத்தின் இன்றியமையாத் துணையான குளோரபாரம் அன்றே பிறந்தது. இத னால் உடல் வலியோடு தான் இட்ட போரில் மருத்துவன் முதல் வெற்றியை அடைந்தான்.

டாக்டர் சிம்சன் தலைகீழாக நின்ற காட்சியை அவர் மனைவியார் கண்டு நூறு ஆண்டுகள் ஓடிவிட்டன. இக்கா லத்திற்குள் மயக்க மருந்து கொடுப்பதே மருத்துவத்தின் ஒரு துறையாக வளர்ந்து விட்டது. பார்புயூடிரேட் (Barbutirate) என்னும் வகுப்பைச் சேர்ந்த மருந்துகளை ஊட்டுவதால் நோயாளி நினைவிழப்ப தில்லை. ஆயினும் மருத்துவர் அவனுடைய வயிற்றைக் கிழித்து வேலைசெய்தாலும் அவன் வலியேதும் உணரமாட்டான். சில ஆண்டுகளுக்கு முன் கற்பனைக்கும் எட்டாத சிக்கலான கருவி மருத்துவ ங்கள் இத்தகைய மருந்துகளால் இப்போ து மிகப் பொதுவாக நடைபெறுகின்றன. இம்மருந்துகளே உள்ளத்தை உறங்கச் செய்து அதைச் சீராக்கவும் உதவு கின்றன.

ஒருவனது வாழ்க்கையில் நிகழும் சில சம்பவங்களே அவனது மனக்கோளாற் றிற்குக் காரணமாய் அமைகின்றன.

நமக்கு நேரும் அனுபவங்களிற் சில நாம் அறிந்தோ, நம்மை அறியாமலோ நம்மனதிற் பதிந்து விடுகின்றன. அவற்றிற்கேற்ற எதிரொலிகள் நம்முள்ளத்தில் எழுகின்றன. இவை நம் பிற்கால வாழ்க்கை முறையைப் பாதிக்கின்றன. இளம் பெண்ணொருத்தி தனக்குக் கலியாணமே வேண்டாமென்று மறுக்கிறாள். அவளிடம் கலியாணப் பேச்செடுத்தாலே அவளுக்கு அடங்காக் கோபம் மூளுகிறது. அப்போது அவள் பித்துப் பிடித்தவள் போலாய் விடுகிறாள். இம்மனநிலையின் காரணத்தை அவளே அறியாள். ஆனால் இதனால் அவள் வாழ்க்கையே பாழாகலாம். அவளது மனநிலையைச் சீர்திருத்தி வாழ்க்கையைத் திருத்தி யமைக்க, அவளது இப்போதைய மனக் கோளாற்றிற்கு அடிப்படையாகவுள்ள அவள் கடந்த கால அனுபவங்களை அறிய வேண்டும்.

அவளை விரிவாய்க் கேள்வி கேட்பதால் அவள் மனத்தை மூடியிருக்கும் பலகணி சற்றே திறந்து அவள் உள்ளம் நமக்கு வெளியாகலாம். இதனால் அவளுக்கு விஷயத்தைத் தக்கவாறு எடுத்துரைத்து அவளுக்கு நலன் தேடலாம். ஆனால் சில சமயங்களில் அவளை எவ்வளவு தடவை சோதித்தாலும் அவளது மனக்குறையின் காரணம் வெளியாகாதிருக்கலாம். அவளது தற்போதைய மனநிலையில் அது முடியாது. ஆகையால் அவள் உள்ளத்தைச் சாதாரண நிலைக்குச் சற்று நேரமாயினும் கொண்டுவந்து, அந்நிலையில் அவளைச் சோதித்தால்தான் கோளாற்றின் காரணம் தெளிவாகும். இவ்வாறாயின் அவளுக்கு மயக்கத்தை விளைவித்து அவள் மனநிலையைத் தெளிவாக்கி அவளைச் சோதிக்க வேண்டும். அப்போது அவள் உள்ளத்தின் குறைப்பாடு விளங்கும். இதனால் ஒருவரும் ஊகிக்கவும் முடியாத உண்மைகள் வெளியாகலாம். இப்பெண்ணின் குறை பின்வருமாறு இருக்கலாம். இவளது இளம் பருவத்தில் இவள் தமக்கை பிரசவத்தின் போது படாதபாடுபட்டு இறந்துவிட்டாள். இச்சோக அனுபவம் இவள் இளம் உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதிந்து விட்டது. இதனால் குழந்தைகளின் பிறப்பு என்னும் நிகழ்ச்சியே அவளுக்குக் கசந்து விட்டது. ஆகையால் அது தனக்கு நேராமல் தன்னை எவ்விதமேனும் பாதுகாத்துக் கொள்ள அவளையறியாது விரும்பினாள். மணத்தின் மேல் அளவற்ற வெறுப்பு என்பது அவளுக்கு இதற்கேற்ற காப்புச் சுவராக அமைந்தது. அவளது மனநிலையில் எவ்வகையிலும் இவ்வுண்மைகளை வெளியிட மாட்டாள். அதனால் மயக்க நிலைதான் அவளது உள்ளத்தைத் திறந்து காட்ட உதவும்.

மயக்கத்தால் மனநோய் தீர்ப்பதைப் பற்றிய சோதனைகள் முதல் முதல் 1931ஆம் ஆண்டில் லிண்ட்மான் (Lindemann) என்னும் மனமருத்துவரால் செய்யப்பட்டன. சிறு அளவுகளிற் கொடுக்கப்பட்ட மயக்க மருந்து மயக்கத்தை விளைவிப்பதில்லை. ஆனால் அது உள்ளத்தைச் சாதாரண நிலைக்குக் கொண்டுவருகிறது என அவர் கண்டார். அப்போது மனத்தை வாட்டும் பொருளற்ற அச்சங்களை நீக்கி, ஒருவகைப் பாதுகாப்பு உணர்ச்சியையும் தருகிறது. இந்நிலையில் நோயாளி எத்தகைய அந்தரங்கமான கேள்விக்கும் தயங்காது விடையளிக்கிறான். ஒருவரும் அறியா வகையில் மறைந்து கிடக்கும் எண்ணங்களும் இப்போது வெட்டவெளிச்சமாகின்றன. அவற்றை அறிந்து நோயாளியின் மனம் அல்லலுறுவதின் காரணமும் அறியப்படலாம். தன் மனக் குறையை மனமார வெளிப்படையாகச் சொல்வதே நோயாளிக்கு ஓரளவு நிம்மதியைத் தருகிறது. இதைத் தொடர்ந்து நோயாளிக்கே அவன் குறையை விளக்கி அது மனத்தை விட்டகலுமாறு செய்யலாம்.

இதை யொத்த அனுபவமொன்று சென்ற போரின்போது வயாட் (Wyatt) என்னும் போர் வீரனொருவனுக்கு நேர்ந்தது. போர் முனையில் ஒரு குழியில் அவன் தங்கியிருந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அப்போது பிரம்மாண்டமான 'டாங்கி'யொன்று அவனிருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து வந்தது. அது தன்னைக் கணநேரத்திற்குள் பொடிப்பொடியாக்கி விடும் என்பதில் அவனுக்கு ஐயமேயில்லை. அவன் நினைவிழந்தான். டாங்கியும் குழியைத் தாண்டிச் சென்று விட்டது.

ஆனால் அவன் ஆயுள் முடியவில்லைபோலும் அவன் சிறிதும் காயமின்றித்தப்பி விட்டான். ஆனால் அவன் மறுபடியும் நினைவுபெற்றபோது மறதியென்னும் மூடுபனி எப்போதும் அகலாதவாறு அவன் உள்ளத்தைத்திரையிட்டுவிட்டது. அவன் மூளைக்கும் நரம்புகளுக்கும் நேர்ந்த அதிர்ச்சிஅவனை நடைப்பிணமாக்கி,வாழ்க்கைக்குத்தகுதியற்றவனாக்கி விட்டது. ஆனால் அவனுக்கு மயக்கத்தை விளைவித்தபின் அவனாகவே பேசத் தொடங்கினான். அவன் உள்ளத்தில் பொதிந்து கிடந்த கோர அனுபவத்தை அவன் எடுத்துக் கூறினான். ஆகையால் தன் உள்ளத்தை வாட்டி வேறொன்றையும் அவன் எண்ணவும் முடியாதவாறு செய்த அங்நிகழ்ச்சியை அவனே உணர்ந்தான். இதனால் அவனைச் சீர்திருத்துவது எளிதாயிற்று.

உடல் நிலையில் எவ்விதக் கோளாறும் இல்லாத சிலர் தமக்குத் தீராத நோயொன்று இருப்பதாக நினைத்துக் கொள்வதுண்டு. இதுவும் ஒருவகை மனக் கோளாறேயாம். போர்முனையிலிருந்த வீரனொருவன் எவ்வாறேனும் தன் வீட்டுக்குத் திரும்பித் தன் மனைவி மக்களோடு வாழவிரும்பினான். தனக்குஏதேனும் கடும் நோய் கண்டால் தன்னை இராணுவத்திலிருந்து விலக்கி விடுவார்களே என்று அவன் ஏங்கினான். இதற்குச் சிலநாட்களின்பின் அவன் உடலெல்லாம் தீராதவலியென்று புலம்பினான். எவ்வளவோ மருந்து கொடுத்தும் அவன் வலி தீர்ந்தபாடில்லை. கைதேர்ந்த மருத்துவர்கள் அவனை நெடுநேரம் பரிசோதித்தனர். உடலில் சிறு கோளாறுகூட அவர்களுக்குத் தென்படவில்லை. ஆகையால் அவன் வலி வெறும் கற்பனையே யென்பது தெளிவாயிற்று; ஆனால் அவன் ஏக்கம் நிறைந்த உள்ளமோ கற்பனையை உண்மையென்றே முற்றிலும் நம்பியது. அவனுக்கு மருந்து கொடுத்து மயக்கத்தை விளைவித்தபின், அவன் தன் ஏக்கத்தைத் தயக்கமின்றி வெளியிட்டான். இதனால் அவனுக்குத் தக்கவாறு உதவ முடிந்தது.

நீரிழிவுக்கு மருந்தாகப் பயன்படும் 'இன்சுலின்' (Insulin) என்ற மருந்தை அனைவரும் அறிவர். அதை அளவுகடந்து இரத்தத்திற்குள் ஊட்டினால் அது இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவைக் குறைத்து ஒருவகைப் போதையை விளைவிக்கிறது. அளவற்ற சோகம், அச்சம் முதலியவற்றால் உள்ளம் அதிர்ந்து சீர்குலைந்து விடுகிறதல்லவா? அப்போது மிக அபாயமான பித்துப் பிடித்துக் கொள்கிறது. இப்பித்து நீங்க அதிர்ச்சியடைந்த உள்ளத்தைச் சிறிது காலமேனும்பழைய நிலையில்வைக்கவேண்டும். இதைச் செய்ய நோயாளிக்கு இன்சுலின் ஏராளமாகக் கொடுக்கப்படும். இதனால் நோயாளி பல நாள் வரையிற் போதையில் இருப்பான். போதை நீங்கி அவன் எழுந்திருக்கும்போது அவன்மனம் தெளிவடைகிறது. இப்போது அவனுக்குச் சர்க்கரைச் சத்து நிறைந்த உணவளிக்கப்படும். இதன் பின்னர் அவன் மீண்டும் தன் பழைய நிலையை யடைந்து வாழத்தொடங்குகிறான்.

மனோ வியாதியால் வருந்துவோர் இதுவரை நமது இரக்கத்தையும் சில சமயங்களில் நகைப்பையும் தூண்டிவந்தனர். அவர்களிற் பெரும்பான்மையோர் தாமும் ஆயுள் முழுதும் அல்லலுற்றுத் தம்மைச் சூழ்ந்தோரையும் தொல்லைப்படுத்தி மாண்டார்கள். அனால் இவ்வகை நவீன முறைகளால் பல்லாயிரவர் இவ்வுலகிலேயே நரகவேதனை என்னும் கொடிய அனுபவத்திலிருந்து தப்பி, சமூகத்தின் பயனுள்ள உறுப்புக்களாக வாழலாம். ஆகையால் மானிடனின் ஊழியனான விஞ்ஞானம் இவ்வகையிலும் அவனுக்குப் பெரும் பணி செய்கிறது என்றே கூற வேண்டும்.

பத்மினி

டாக்டர். வே. ராகவன்

[சித்தூரின் எல்லைப்புறம்; பலதடவைகள் முயன்றும் மேவார் ராணா ரதன் ஸிம்ஹனின் சித்தூர் கோட்டையைப் பிடிக்கமுடியாமல், டில்லி சுல்தான் அலாவுதீன் படைக் கூடாரங்களுக்கிடையே, மனம்குன்றி உட்கார்ந்து, தன் தோழனும், மந்திரியும், போர் வீரனும், ஆஸ்தான கவியுமான அமீர் குஸ்ருவுடன் யோசனை செய்து கொண்டிருக்கிறான். போர் முழக்கம்.—]

அலாவுதீன்: குஸ்ரு! நிறுத்தச் சொல்லு. போதும் போரும் முழக்கமும்.

அமீர் குஸ்ரு: ஏன் நிறுத்த வேண்டும், சுல்தான்?

அலா: குஸ்ரு! இக்காடுகளைக் கடந்ததும், மலைகளைத் தாண்டியதும் வீண். நம்மால் ஆகாது இக் கோட்டையைப் பிடிக்க.

குஸ்ரு: அப்படியானால் திரும்பி டில்லிக்குப் போய்விடுவோமா?

அலா: டில்லியில் என்ன வைத்திருக்கிறது?

குஸ்ரு: ஏன்?

அலா: நாம் படையெடுத்து வந்த காரணத்தையே மறந்து பேசுகிறாயே? அந்த ரதன் ஸிங்கின் ராணி......பத்மினி.........அவளைப் பற்றி அல்லவா நாம் சண்டைக்கு வந்தோம்.

குஸ்ரு: சண்டைதான் முடியவில்லையே!

அலா: குஸ்ரு! பத்மினியைக் கண்ணால் கூடக் காணாது எப்படிப் போவது? நீ தான் ஒரு வழி சொல்லு; ரொம்ப புத்திசாலி நீ; ஒரு யுக்தி செய்.

குஸ்ரு: கண்ணால் பார்த்து ஆவது என்ன சுல்தான்?

அலா: அடே! அவள் அழகு உலகிலேயே இல்லை என்கிறார்களே, அந்த அதிசயத்தைப் பார்க்கவாவது வேண்டாமா? என் மனதின் வேகம் அமைதி அடைய வேண்டாமா?

குஸ்ரு: அமைதியடைவதா?

அலா: ஆம், குஸ்ரு! நீ இந்த இந்துக்களின் நூல்களைக் கொஞ்சம் தெரிந்து கொண்டிருக்கிறாயே; பத்மினி, பத்மினி, என்கிறார்களே. அந்தப் பேரின் அர்த்தம் என்ன?

குஸ்ரு: சுல்தான்! இந்த இந்துக்கள் ரொம்ப கெட்டிக்காரர்கள்; ரொம்ப எல்லாம் படித்தவர்கள்: எதைப்பற்றியும் ஆராய்ந்து பார்த்து இவர்கள் அரிய பெரிய நூல்களை எழுதியிருக்கிறார்கள்; இவர்கள் 'காம சாஸ்த்ரம்' என்று காதலைப் பற்றி விரிவாய் நூல்கள் எழுதியிருக்கிறார்கள்.

அலா: காதல் நூல்களா?

குஸ்ரு: ஆமாம்; அவற்றுள் எவ்வளவோ நுட்பமான அதிசயங்களை விளக்கியிருக்கிறார்கள்.

அலா: அப்படியானால் நீ ஏன் இன்னும் அந்த நூல்களை நம் பாஷையில் தர்ஜுமா செய்யவில்லை?

குஸ்ரு: செய்யப் போகிறேன். அந்த நூல்களில் பெண்களைப் பத்மினி: சித்ரிணீ என்றெல்லாம் வகுத்து வர்ணித்திருக்கிறார்கள். அப்படி வகுத்துச் சொல்லப்பட்ட பெண் ஜாதிகளில் மிகவும் உயர்ந்தது பத்மினி ஜாதி. புஷ்பங்களில் நாம் மேலாகக் கருதுவது ரோஜா; இந்துக்களுக்கோ பத்மம், தாமரையே மேலான புஷ்பம்: பத்மத்தின் மலர்ச்சி, பத்மதளத்தைப் போன்ற கண், பத்ம கந்தம், பத்மஸ்பர்சம். இப்படி எல்லா அழகும் ஒன்றாய்க் கூடிய பெண்ணே, உத்தம நாயகியே பத்மினி.

அலா: ஆகா! குஸ்ரு! நீ வர்ணிப்பதைக் கேட்டால், பத்மினியைப் பார்க்காவிட்டால் என் உயிர் நிற்காதெனத் தோன்றுகிறது. சீக்கிரம், ஒரு யுக்தி செய்.

குஸ்ரு: சுல்தான்! இதோ நான் ஒரு உபாயம் கண்டுபிடித்திருக்கிறேன். அதைத் தங்கள் பெயரால் ஒரு கடிதம் மூலம் எழுதி ராணா ரதன்ஸிங்குக்கு அனுப்பி, அவனை இங்கு வரவழைக்கிறேன்.

அலா: எப்படியாவது செய்; கடிதத்துடன் நீயே போ; எனக்காக வேண்டியது பத்மினியைக் காண்பதே. பத்மினி!

குஸ்ரு: இதோ நானே போகிறேன்.

அலா: பத்மினி!

II

(சித்தூர் கோட்டைக்குள் ராணு ரத்ன ஸிம்ஹனின் அரண்மனை; சபையில் மந்திரி ராணுவத்தலைவர் முதலியோருடன் ராணு வீற்றிருக்கிறார். சேவகன் ஒருவன் வந்து வணங்கினன்.)

சேவகன்: ஜேய் மஹாராஜ்!

ராணு: சேவக, என்ன?

சேவக: சுல்தான் அலாவுதீன் தம் கவி அமீர்குஸ்ரு மூலம் சிநேகபாவத்தில் ஓர் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

ராணு: வரச் சொல்லு. மந்திரி, நீ குஸ்ருவை எதிர்கொண்டு அழைத்து வா. அவன் படிப்பாளி, நல்ல ரஸிகன்.

மந்திரி: ஆனல் ஒருவரையும் நம்புவதற்கில்லை. மஹாராஜ்...... இதோ, தானே நுழைந்து விட்டான் குஸ்ரு.

ராணு: குஸ்ரு, வாரும், இப்படி உட்காரும். என்ன கடிதம்? சுல்தான் என்ன சொல்லுகிறார்?

குஸ்ரு: இதோ கடிதம். ராணுவே படிக்கட்டுமே,

(ராணு கடிதத்தை வாங்கிப்படிக்கிறார்; சற்றுநேரம் கழித்து.)

ராணு: மந்திரி! இதென்ன ஆச்சரியம்!

மந்திரி: என்ன மஹாராஜ்!

ராணு: அலாவுதீன் நம்மேல் படையெடுத்துப் பலதடவை முற்றுகை போட்டது நம்மை வெல்லுவதற்காக அல்லவாம்.

மந்திரி: பின் எதற்காகவாம்?

ராணு: (சிரித்துக்கொண்டு) நம் மஹாராணியின் உயர்ந்த அழகைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவளை எப்படியாவது அடையவேண்டு மென்று அவனுக்குப் பித்துப் பிடித்துவிட்டது! குஸ்ரு! நீர் படித்தவராயிற்றே! சுல்தானுக்குப் புத்தி சொல்லவில்லையோ? பிறர் மனைவியரை ஒருவன் விரும்புவதா? போகட்டும்; தோற்றவன் திரும்பிப் போகாமல், இதென்ன பேடிபோல் கடிதம் எழுதினன்: அதையும் நீர் கௌரவமாய்க்கொண்டு வந்தீர்!

குஸ்ரு: மஹாராஜ்! தப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது. எவ்வளவோ சொன்னேன். பித்துப் பிடித்த சுல்தான் மண்டையில் ஒன்றும் ஏறவில்லை. உலகம் புகழும் அவ்வழகு எப்படி இருக்கின்றதென ஒருதரம் பார்க்கவேண்டுமென்ற ஆசையே தவிர வேறென்றுமில்லை. பார்த்துவிட்டு டில்லி போய்விடுவார். தயவு செய்யவேண்டும்.

மந்திரி: தப்பாய் எடுத்துக் கொள்ளக்கூடாதாம்: தயவு செய்ய வேண்டுமாம், நன்ருயிருக்கிறது!

ராணு: இது ஒரு புதுமையாயிருக்கிறது. மஹாராணியை அழைத்து வா. குஸ்ரு! நீ அந்தப் பக்கமாயிரு: ராணி இப்படி திரைப் பக்கமாய் வருவாள்.

குஸ்ரு: அப்படியே மஹாராஜ்.

மந்திரி: மஹாராஜ்! ராணி ஸிம்ஹாஸனத்தின்பின் திரைக்குள் வந்திருக்கிறார்கள்.

ராணு: பத்மினி! கேள் இந்த விசித்திரத்தை. நம் கோட்டையைப் பலதடவை முற்றுகைபோட்டானே—

பத்மினி: முட்டாள் அலாவுதீன்.

ராணு: அந்தச் சுல்தான் அலாவுதீன் சண்டை விட்டு, இப்போது சண்டி செய்கிறுன்.

பத்மினி: என்ன மஹாராஜ்!

ராணு: இங்கு அவன் படை எடுத்து வந்தது உனக்காகவாம்; உன்னை ஒருதரமாவது பார்த்துவிட்டுத்தான் திரும்புவானும்.

பத்மினி: எப்படி பார்ப்பானும்? நம்மைப் பிறர் பார்ப்பதேது? நம் பிணத்தையே பிறர் காணலாம்.

ராணு: குழந்தைபோல் சுல்தான் ஒரு கடிதம் எழுதியிருக்கிறுன்.

பத்மினி: அவர்களுடைய மனேபாவம், வேகம் எல்லாம் எப்பொழுதும் அப்படித் தானிருக்கின்றன.

ராணு: நான் உன்னைப் படுதாவுடன் அவன் இருக்குமிடத்திற்கு அழைத்து வரவேண்டுமாம்: அங்கே ஒரு பெரிய கண்ணுடி ஏற்பாடு செய்திருக்கிறுனும்; அதில் உன் நிழலைப் பார்த்தால் போதுமாம்.

பத்மினி: நிழலைப் பார்த்ததும் போதுமென்று திரும்பி டில்லிக்குப் போய்விடுவானு? இனி இப்பக்கம் திரும்பிச் சண்டைக்கு வந்து ஊரை அழிக்கமாட்டானே?

ராணு: என்ன குஸ்ரு?

குஸ்ரு: சண்டைக்கே வரமாட்டார் சுல் தான்: டில்லிக்கு ஓடிப் போய் விடுவார்; ராணுவும் சுல்தானும் நண்பர்கள் ஆவீர் கள்.

பத்மினி: மஹாராஜ்! மந்திரி என்ன நினை க்கிறார்?

மந்திரி: ராஜபுத்திரருக்கு வீரமே உயிர்: அவர் பெண்மணிகளுக்குக் கற்பே உயிர்; இம்மகமதியரின் உள்ளமே கள்ளம்.

பத்மினி: நம் வீரத்தைக் காட்டியாயிற்று; கற்பைக் கெடுக்க இவனல் ஆகாது; இவன் கள்ளத்தைப் பார்ப்போம்; ஊரை அழிக் காமல் இவன் திரும்பி விடுவதென்றால் அது ஊருக்குப் பெரும் க்ஷேமந்தானே? என் நிழலைக் கண்ணாடியில் என் கணவர் முன்னிலையில் பார்த்து விட்டுப் போகட்டுமே பேடி.

மந்திரி: ஆஹா! மஹாராணிக்கு ராஜ் யத்தின் மேலும் பிரஜைகளின் க்ஷேமத்தின் மேலும் உள்ள அன்பு எவ்வளவு!

ராணு: ஸரி, குஸ்ரு! நீ போய் ராணு வுக்குச் சம்மதம் என்று சொல்லு; ராணு வும், மந்திரி, படைவீரர் முதலியோர்களும் முன் வருவர்; பின் தன் அந்தஸ்துக்குத் தக்கவாறு மஹாராணி பத்மினி தன் தோழி வேலைக்காரிகளுடன் படுதா இடப் பட்ட எழுநூறு பல்லக்குகளில் வந்து; சுல்தானுக்குக் கண்ணாடியில் காட்சி அளிப் பாள். கண்ணாடியையும், கண்ணையும் நன் ருய்த் துடைத்து வைத்துக் கொள்ளச் சொல்லு. போ.

குஸ்ரு: சந்தோஷம்; மஹாராஜ்! நான் முன் போய்த்தங்களை வரவேற்பதற்குத் தக்க ஏற் பாடுகளைச் செய்கிறேன். தாங்கள் கொஞ்சம் முன்னதாகவே வந்துவிடவேண்டும்.

(குஸ்ரு வந்த காரியமும் வைத்த சூழ்ச்சி யும் நிறைவேறி விட்டதெனக் களிப்புடன் வெளியே போகிருன்.)

ராணு: மந்திரி, குஸ்ரு சென்று விட்டான?

மந்திரி: மறைந்து விட்டான். மஹாராஜ்! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்பதைத் தாங்களும் தெரிந்து கொண்டு விட்டீர்க ளெனக்கண்டு நான் மகிழ்கிறேன்.

ராணு: மந்திரி, அலாவுதீனுவது நிழலைப் பார்த்துவிட்டுத் திரும்பவாவது! நன்ருயிருக் கிறது! எல்லாம் இந்தக் குஸ்ருவின் குட்ர யுக்தி! நல்லது, எழுநூறு பல்லக்கு களிலும் இடுப்பில் வாள்வைத்த படை வீர ரைப் பெண் உடைபோட்டு ஏற்று; பத்மி னிக்குப்பதிலாக,அவள்சாயலாகவே இருக்கும் அவள் தம்பி பதால் ஸிங்கை பெண்ணுடை போட்டு ஏற்று: வா, நாமிருவரும் சில வீரரு டன் முன் சென்று, என்ன நடக்கிறதெனப் பார்ப்போம்.

(ராணுவும் சிப்பந்திகளும் புறப்படும் முழக்கம்.)

III

[அலாவுதீன் தங்கி இருக்கும் எல்லை. கூடா ரத்தின் வாயிலில் குஸ்ருவிடம் சுல்தான் பேசிக்கொண்டிருக்கிருன்.]

அலா: பத்மினி! குஸ்ரு.

குஸ்ரு: சுல்தான்! பொறுத்துக் கொள் ளுங்கள்; ஏன் இந்த அவசரம்? நாம் வைத்த சூழ்ச்சி பலிக்கும் சமயம்; இதோ ராணு ரதன் ஸிங் வருகிருன்; போய் மிகவும் ஆதர வாக வரவழையுங்கள்.

அலா: அப்படியே. ஜேய், ரதன் ஸிங்! வா! நாம் இனி தோழர்கள்! கொடு கையை?...... எங்கே, பத்மினி வருகிருளா? இதோ பார், ஒரு ஆள் உயரத்தில் ஒரு கண்ணாடி தயார் செய்திருக்கிறேன்.

ராணு: சந்தோஷம், அலாவுதீன்; இனி நீ சண்டைக்கு வரமாட்டாய் என்று நம்பு கிறேன்.

அலா: சண்டையா? இனிமேல் நாம் தோஸ்த்! உட்காரு ரதன் ஸிங்! இதோ, இந்தா சாப்பிடு, எங்கே பத்மினி?

ராணு: சுல்தான்! இதோ பத்மினியும் பரிவாரங்களும் பல்லக்குகளில் வருகிருர் கள்.

அலா: ராணு, நீ சற்றே களைப்பாறு: அதோ அந்தக் கூடாரத்திற்குச் சென்று சிற்றுண்டி அருந்திவிட்டு வா. குஸ்ரு, அழைத்துப்போ.

ராணு: இருக்கட்டும்; பத்மினியும் இதோ வந்து விட்டாள். சேர்ந்து செல்லுகிருேம்; இதோ பல்லக்கு வந்துவிட்டது..

அலா: வந்து விட்டதா? பத்மினி வந்து விட்டாளா! பத்மினி! குஸ்ரு!

குஸ்ரு: யாரடா அங்கே? ராணுவைக்கட்டு; சிறையில் வை.

ராணு: என்ன? குஸ்ரு, நீவந்து பிச்சைக் காரன் போல் கெஞ்சியது இதற்காகவோ? சுல்தானு நீ அலாவுதீன்? நம்பிக்கைத்

துரோகம் செய்யச் சூழ்ச்சியைச் சொல்லிக் கொடுத்தானே இந்தக் குஸ்ரு. அலாவுதீன்! ரதன் ஸிங் முட்டாளல்ல, விழித்தவன். இதோ பத்மினி யல்ல, போர் வீரர் வந்திருக்கின்றனர், என்னைக்காக்க ஜேய்.........

[ராணு ரத்னஸிம்ஹன் ஜேய என்று ஸிம்ம நாதம் கர்ஜித்ததும் எழுநூற்றொரு பல்லக்குகளிலிருந்தும் வாளும் கையுமாய் வீரர் குதித்து, அலாவுதீனின் கூடாரங்களைத் தாக்கினர். போர் முழக்கம். வீரர் சண்டை யிட்டுக் கொண்டிருக்கும் போதே ராணு ரத்னஸிம்ஹன் தப்பி ஓடி, சித்தூர் கோட்டைக்குள் புகுந்து, பெரும் படையை எழுப்பி, வரப்போகும் முற்றுகைக்குத் தயாரானன். பெரும்போர் முழக்கம்.

IV

[மறுபடியும் சித்தூர் முற்றுகை; அலாவுதீன் துருப்புக்கள் கோட்டையைச் சூழ்ந்தன. தான் வைத்த சூழ்ச்சி தப்பியதால் சினங்கொண்டு, அலாவுதீன் வெகு ஆவேசத்துடன் சண்டையிட்டான். சில நாட்கள் விடாத சண்டை; பல ராஜபுத்திரர் மாண்டனர்: ஒரு நாள் இரவு— ராணுவின் முன் ஒரு பயங்கரமான தெய்வீகத் தோற்றம் ஏற்படுகிறது]

ராணு: தேவி, நீ யார்?

தேவி: ராணு, நான் ராஜபுத்திரவீரலக்ஷ்மி.

ராணு: வணங்கினேன்; வந்த காரணமென்ன தேவி?

தேவி: உன் குலமும் மானமும் நிற்கவேண்டுமானல் என் ரத்தப்பசியை முழுதும் நீ திருப்தி செய்யவேண்டும்; ராஜ புத்திர வீரர் நூற்றுக்கணக்காய் மடிந்தென்ன? அவர் ரத்தமெல்லாம் ஜலம்: நல்ல அரச குமாரரின் கெட்டியான ரத்தம் வேண்டும்.

ராணு: யாரைக் கொடுப்பது?

தேவி: எனக்கு இன்னும் பன்னிரண்டு ராஜ தேகங்களின் ரத்தம் வேண்டும்: உன் பன்னிரண்டு மைந்தரைச் சேர்த்து, நீங்கள் பதின்மூன்று பேர்கள் இருக்கிறீர்கள்: நான் செல்லுகிறேன்.

V

(சில நாட்கள் கழிந்தன.)

ராணு: பத்மினி! நம் பதினொரு பிள்ளைகள் சுல்தானுடன் சண்டை செய்து மாண்டனர். மிஞ்சி இருப்பது நீ, நான், நம் கடைக்குட்டி அஜ்யேஷி.

பத்மினி: மஹாராஜ்! நான் மற்ற ஸ்திரீகளுடன் பிராணத்யாகம் செய்ய ஏற்பாடு செய்கிறேன், குழந்தாய், அஜய்! ராஜ புத்திர லக்ஷணம் தவருமல் நட; வருகிறேன்.

ராணு: குழந்தாய், அஜய்! சிரஞ்ஜீவியாய் இரு; இதோ இம் முடியை உனக்குச் சூட்டுகிறேன்; நீ சில போர் வீரருடன் குதிரைமேல் ஏறி, தப்பிப்போ. நான் அலாவுதீனை எதிர்த்துச் செல்லுகிறேன்,

[ராணு அலாவுதீனுடன் கடும்போர் புரிந்து வீர ஸ்வர்க்கம் ஏறினர். அலாவுதீன் ஆனந்தத்தில் குதித்துக்கொண்டு கோட்டைக்குள் நுழைந்து, அந்தப்புரத்தை நோக்கி ஓடிவந்து தேடுகிருன்.]

அலா: பத்மினி, பத்மினி! குஸ்ரு! பத்மினி எங்கே? எங்கு பார்த்தாலும் புகை!

குஸ்ரு: சுல்தான் வேண்டாம் வாரும்! புகை தாங்கவில்லை; ராஜ புத்திரர் போரில் மாண்டு வீரத்தைக் காப்பர்; ராஜ புத்திரிகள் தாமே தீயைக் கிளப்பி அதில் விழுந்து தம் கற்பைக் காப்பர்,

கற்பைக் காப்பர்,

கற்பைக் காப்பர்.

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள்நாடு	ஸிலோன் பாமா & மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப்பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

ஸிக்மா

விவசாயபம்ப்..

உங்கள் வீடுகளுக்கும், பூந்தோட்டங்களுக்கும், காய்கறித் தோட்டங்களுக்கும், வயல்களுக்கும் தண்ணீர் பாய்ச்சக்கூடிய ¼ குதிரை விசையிலிருந்து 7½ குதிரை விசை வரை உள்ள எலக்ட்ரிக் மோட்டார்கள் பூட்டிய பம்ப் செட்டுகள் இப்பொழுது எங்கள் கைவசமுள்ளன. மொத்த உயரம் 50 அடி வரையில் தண்ணீர் இறைக்கக் கூடியவை.

உங்கள் தேவைக்கு உடனே எழுதவும்.



வில்லியம் ஜாக்ஸ் & கோ, லிமிடெட்.

37. செகண்டு லைன் பீச், சென்னை. 1.

டெலிபோன்: 3226 தபால் பெட்டி: 1282 தந்தி: LIMPET

பேரொலிப் பாளையத்தின் அதிர்ஷ்டம்

பிரெட் ஹார்ட்டி

மொழிபெயர்ப்பு சி. ஸந்தானம்

பேரொலிப்பாளையம் அன்று அல்லோல கல்லோலப்பட்டது. இந்தக் கொந்தளிப்பிற்குக் காரணம் ஒரு சண்டையாயிருக்க முடியாது. ஏனெனில், 1850ஆம் வருஷத்தில் இது ஒன்றும் புதிதல்ல, அப்படி ஊரையே ஒன்றுகூட்டிவிடும்படி, அகழிகளும், சுரங்கப் பள்ளங்களும் துறக்கப்பட்டு விட்டன. முன்னொரு சமயம் 'பிரெஞ்சு பீட்டும்' 'கனகா ரீஜாவும்' ஓர் ஹோட்டலின் முன் அறையில் ஒருவரை யொருவர் வெட்டி வீழ்த்திக்கொண்டிருக்கும்பொழுது பின்னறையில் சாவதானமாய்த் தங்கள் ஆட்டத்தை நடத்திக்கொண்டிருந்த சூதாடிகள்கூட இப்பொழுது இங்கே வந்து கூடிவிட்டார்கள். மைதானத்தின் வெளி எல்லையிலிருந்த ஒரு சிறு வீட்டின்முன், அந்தப் பாளையம் முழுதுமே திரண்டிருந்தது. தாழ்ந்த குரலில் அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு ஸ்திரீயின் பெயர் அடிக்கடி கூறப்பட்டது. அது அவ்வூராருக்குத் தெரிந்த பேர்தான்—செரோகி சால்.

அவளைப்பற்றி நாம் அதிகம் கூறாமல் விடுவதே நல்லது. அவள் மிகவும் இழிந்த நிலையிலிருந்த ஒரு பாபிஷ்டை. ஆனால் அச்சமயம் அவளைத் தவிர அப்பாளையத்தில் வேறு பெண்பிள்ளை இல்லை. அவள் இனத்தின் ஒத்தாசை மிகவும் அவசியமாய் வேண்டி யிருந்த அபாய நிலையில் அவள் அப்பொழுது கிடந்தாள். துன்மார்க்கம் காரணமாக எல்லோராலும் வெறுத்துத் தள்ளப்பட்டவள்தான்; திருத்தி நல்வழிக்குக் கொண்டுவர முடியாத துஷ்டையென்று கைவிடப்பட்டவள்தான்; அவள். இருந்தபோதிலும், அச்சமயம் அவள் பொறுக்க முடியாத வேதனை அனுபவித்துக் கொண்டிருந்தாள். உதார குணம் படைத்த ஸ்திரீகளின் உதவி என்கிற திரையிட்டு மூடினால்கூட அவ் வேதனையின் வேகம் அதைக் கிழித்துக்கொண்டு வெளிவந்துவிடக் கூடியது; இப்போதோ, அவள் ஒத்தாசையின்றித் தனித்திருந்த நிலையில் கேட்கவே வேண்டாம். சிருஷ்டி ஆரம்பத்தில், அத்து மீறியதால் ஏவாளுக்குக் கிடைத்த சாபத்தின் பலனைத்தான் அந்த ஸ்திரீ இந்த ஆதரவற்ற நிலையில் தன்னந்தனியே அனுபவித்துக் கொண்டிருந்தாள். எந்தச் சந்தர்ப்பத்தில் இளகிய மனது படைத்த தன் பெண் இனத்தின் சுவாபாவிகமான அன்பும் ஆதரவும் கலந்த பராமரிப்பை வேண்டி நின்றாளோ, அப்போது அதற்குப் பதிலாக, குறும்பும் ஏளனமும் கொண்ட ஆண் முகங்களைக் காணும்படி நேர்ந்தது ஒருவேளை அவள் செய்த பாபங்களுக்குச் சொற்ப பரிகாரமாய் அமைந்திருக்கலாம். இருந்தபோதிலும் கூட்டத்தில் ஒரு சிலர் அவள் வேதனையைக்கண்டு இரங்கினர் என்று நான் சொல்ல வேண்டும். சாண்டி டிப்டன் அவளிடத்தில் பரிதாபம் கொண்டான். அவள் நிலையைப்பற்றிச்சிந்தித்தான். அவன், சூதாட்டத்தின் பாதியிலே எழுந்து வந்திருந்தான். தன் சட்டைப்பையில் உயர்ந்த துருப்புகள் இரண்டும், 'ஆசு' என்னும் பதினோராம் பந்தும் இருப்பதைக்கூடச் சட்டை செய்யாமல் அவள் விஷயத்தில் சிரத்தை யெடுக்க முனைந்தான்.

நிலைமை அசாதாரணமானது என்பதையும் கண்டுகொள்ளலாம். பேரொலிப்பாளையத்தில் சாவுகள் ஒன்றும் அபூர்வமல்ல. ஆனால், பிறப்பு புதிய விஷயம். ஜனங்கள், முடிவாகவும், ஒருகாலும் திரும்பிவர முடியாதபடியும் அப்பாளையத்திலிருந்து சீட்டுக் கொடுத்து அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு புதிதாக—பிறப்பிலிருந்தே—அனுப்பப்பட்டது இதுதான் முதல் தடவை. அதனால்தான் அமர்க்களம் எல்லாம்.

அங்கே கூடியிருந்தவர்களில் ஒருவனான "ஸ்டம்பி" என்பவனைப் பார்த்து ஊரில் கொஞ்சம் பெரிய மனிதனான கெண்டக் என்பவன் சொன்னான்:

"நீ உள்ளுக்குப் போ ஸ்டம்பி! உள்ற போய் உன்னால் முடிஞ்சதைச் செஞ்சுபாரு. இம்மாதிரி விஷயங்கள்தான் உனக்கு அனுபவம் ஆச்சே."

இவனைப் பொறுக்கி யெடுத்தது ஒருவேளை தகுதியுள்ளதா யிருக்கலாம். இவன், வேறிடத்தில் இரண்டு குடும்பங்களுக்குத் தலைவன்

என்று பெயர் போனவன். உண்மையில் இது விஷயமாய் ஏற்பட்ட சில சட்டத் தகராறுகளால்தான் பேரொலிப்பாளையம் இவனைத் தன்னுள் சேர்த்துக் கொள்ளும்படியான பெருமை யடைந்தது. பார்க்கப்போனால் அந்தப் பாளையம் முழுதுமே சட்டத்திற்குத் தப்பியோடித் தஞ்சமடைந்தவர்கள் கூட்டம் தான். குழுமியிருந்த கூட்டமும், கெண்டக் ஸ்டம்பிக்கு இட்ட வேலையை ஆமோதித்தது. அவனும் பெரும்பாலோருடைய விருப்பத்திற்குப் புத்திசாலித்தனமாய்க் கீழ்ப்படிந்தான். இப்படி அவசரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரண வைத்தியமும், மருத்துவமும் ஆன இரு வேலைகளையும் ஒருங்கே ஏற்றுக்கொண்ட ஸ்டம்பி உள்ளே புகுந்ததும் கதவு மூடப்பட்டது. திரண்டிருந்த ஜனங்கள் சாவதானமாய்ச் சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு முடிவுக்குக் காத்திருந்தனர்.

கூட்டத்தில் சுமார் நூறு பேர்கள் இருந்தனர். இவர்கள் இரண்டொருவர் நியாயத்திற்குத் தப்பியோடி வந்தவர்கள்; சிலர் குற்றவாளிகள்; எல்லாருமே அத்துமீறியவர்கள். அவர்களின் சென்றவாழ்க்கையையும் குணாதிசயங்களையும் சுட்டிக்காட்டக் கூடியதாய் அவர்கள் உடம்புகளில் ஒன்றும் தென்படவில்லை. காலாடிகளில் முதல் ஸ்தானம் வகித்தவனுக்கு, ஓவியக்கலையில் பிரக்கியாதி பெற்ற ராபீல் என்பவருடைய அழகான முகமும் சுந்தரமான கேசமும் அமைந்திருந்தன, ஓக்ஹர்ஸ்டு என்னும் சூதாடி, ஹாம்லெட்டைப்போல் விசனமான முகக்குறி, புத்தி கூர்மை, பற்றற்ற தன்மை இவைகளை ஒருங்கே படைத்திருந்தான். அதிசாந்தமும், அசஞ்சலமான தீரத்துவமும் கொண்ட ஒருவனுடைய உயரம் ஐந்தடிக்குமேல்கூட எட்டவில்லை; அவனுடைய குரலும் மென்மை, நடையோ குழப்பமும் பயமும் கொண்டது, இவர்களைக் காலிகள் என்று சொன்னால் அது அவர்களைப் பெருமைப்படுத்தியது ஆகுமேயொழிய விவரித்தது ஆகாது. ஒருவேளை சில்லறை விஷயங்களான கைவிரல்கள் கால் விரல்கள் காதுகள் இவைகளில் அவர்கள் குறைவுபட்டவர்களாயிருக்கலாம். ஆனால் இந்தச் சிறுகுறைகள் அவர்களுடைய மொத்தசக்தியைப் பங்கப்படுத்தவில்லை. எல்லாரையும்விடப் பலசாலி என்று பேர்வாங்கினவனுக்கு வலதுகையில் மூன்று விரல்கள் தானிருந்தன. சுடுவதில் ஒருபோதும் குறி தவறாத ஒருவனுக்கு ஒற்றைக் கண் தானிருந்தது.

இதுதான் அந்தக் குடிசையைச் சுற்றி வட்டமிட்டிருந்தவர்களுடைய வெளித்தோற்றம். இரண்டு குன்றுகளுக்கும், ஒரு ஆற்றிற்கும் இடையே ஒரு முக்கோணவடிவமாய் அமைந்திருந்த ஒரு பள்ளத்தாக்கிலே இருந்தது அந்த ஊர். இங்கிருந்து வெளிச்செல்வதற்கு ஒரே ஒரு வழிதான். அது அந்தக் குடிசைக்கு எதிரேயிருந்த ஒரு செங்குத்தான மலைமேல் ஏறிச்சென்றது. இப்போது சந்திரன் உதித்து விட்டான். தன் வெள்ளிக் கிரணங்களை வீசி அப்பாதையைப் பிரகாசப்படுத்தினான். கரடு முரடான ஒரு குட்டைப் பெஞ்சியின்மேல் கிடந்து வேதனை அனுபவித்துக் கொண்டிருந்த அந்த ஸ்திரீ அந்தப் பாதையைப் பார்த்திருக்கக்கூடும். அது வெள்ளி நூல் போல் வளைந்து வளைந்து மேலே மேலே தாரகைகள் வரை சென்று மறைந்து விட்டதைக் கண்டிருக்கலாம்.

கூடியிருந்தவர்கள் குளிர் காய்வதற்காகக் காய்ந்த பைன் மரக்கிளைகளைப்போட்டு ஒரு தீ மூட்டப்பட்டது. உடம்பில் சூடேற ஏற அவர்களுக்குச் சிறுகச்சிறுக இயற்கையான கவலையற்ற உற்சாகம் திரும்பி வந்தது. முடிவைப்பற்றி ஒருவர்க்கொருவர் பந்தயம் வைத்தனர். 'சால்' எப்படியாவது பெற்றுப் பிழைத்துவிடுவள், குழந்தையும் உயிரோடிருக்கும், என்றெல்லாம் பணயம் போட்டனர்' இதுமட்டுமல்ல, குழந்தை ஆணா பெண்ணா, கறுப்பா சிவப்பா, என்ற குட்டிப் பந்தயங்கள் வேறு. இப்படி விவாதம் உச்ச நிலையில் இருக்கும்பொழுது கதவடியில் இருந்தவர்களிடமிருந்து ஓர் ஆச்சரியக் குரல் எழுந்தது. எல்லாரும் பேச்சை நிறுத்திக் காது கொடுத்துக் கேட்டனர். காற்றிலாடிய பைன் மரங்களின் ஓலம், வேகமாய்ச் சல சலவென்றோடிய ஆறு, சட சடவென எரிந்த நெருப்பு—இவைகளையெல்லாம் மீறிக் கொண்டு வீரிட்ட ஒரு கீச்சுக் குரல் எழுந்தது. இந்தக் "குவாகுவா" குரலை அவ்வூரில் இதுவரை யாரும் கேட்டதில்லை. பைன் மரக்கிளைகள் தம் ஓலத்தை நிறுத்தின. ஆறு வேகம் தணிந்தது. நெருப்பும் நின்றது. இந்தக் குரலைக் கேட்க இயற்கையே நின்றுவிட்டதுபோல் இருந்தது.

குழுமியிருந்த அத்தனை பேர்களும் ஏககாலத்தில் எழுந்து நின்றனர்! வரவேற்பின் அறிகுறியாக ஒரு பீப்பாய் வெடிமருந்தை ஒரே வெடியாய்த் தீர்த்து விடலாம் என்று ஒரு பிரஸ்தாபனை வந்தது. ஆனால் தாயின் நிலையை உத்தேசித்து இது கைவிடப்பட்டது. சிற்சில கைத்துப்பாக்கிகள் மட்டும் தான் சுடப்பட்டன. ஏனெனில் இவர்களின் முரட்டுச் சிகிச்சையாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ செரோகீசால் மிகுந்த அபாய நிலையில் இருந்தாள். அவள் நாடி நாழிக்கு நாழி ஒடுங்கிக் கொண்டிருந்தது. ஒருமணி அவகாசத்திற்குள்ளாக அவள்

நட்சத்திரங்கள் வரை இட்டுச் சென்ற அந்த முரட்டுப் பாதையில் ஏறிவிட்டது போலும், அந்தப் பேரொலிப் பாளையத்தையுங் கூட ——அதன்பாபம் வெட்கக்கேடான நிலை, எல்லாவற்றையுங்கூட——விட்டுச்சென்று விட்டதைப்போலும் தோன்றியது. இந்தச் சமாசாரம் ஒருவரையும் வருத்தத்தில் ஆழ்த்தவில்லை. ஆனால் குழந்தையின் கதி என்ன என்ற கவலைஒன்றுதான் தொல்லை கொடுத்தது. 'அதுபிழைக்குமா?' என்று எல்லோரும் ஸ்டம்பியைக் கேட்டனர். சந்தேகம் என்று பதில் வந்தது. அந்தப் பாளையத்தில் செரோக்கிசாலின் இனமும் தாய் நிலையும் கொண்ட பிராணி ஒன்றுதானிருந்தது. அது ஒரு கழுதை. குழந்தைக்கும் கழுதைக்கும் ஒத்து வருமா என்ற ஒரு பிரச்னை எழுந்தது. இருந்தபோதிலும் பரீக்ஷித்துப் பார்க்கப் பட்டது. ஏனெனில் இந்த யோசனை ஒன்றும் அவ்வளவு மோசமானதல்ல. ராமுலஸும் ரீமஸும் ஓநாயால் வளர்க்கப்படவில்லையா?

இந்த வியவகாரங்கள் முடிய ஒரு மணி நேரம் பிடித்தது. பின்னர் கதவு திறக்கப் பட்டது. இதற்குள் ஒழுங்காய் வரிசையில் நின்றுகொண்டிருந்த ஜனங்கள் ஒவ்வொருவராய் உள்ளே நுழைந்தனர். அந்தக்குட்டைப் பெஞ்சியில் அந்த ஸ்திரீ கிடத்தப்பட்டிருந்தாள். போர்வைகளுக்கு அடியில் ஆடையற்ற அவள் உருவம் கோடிட்டதுபோல் நன்றாய்த் தெரிந்தது. பக்கத்தில் ஒரு பைன் மர மேஜை கிடந்தது. அதன்மேல் ஒரு சிறிய திறந்த பெட்டி. இதில் ஊருக்குப் புதிதாய் வந்த "பேர்வழி", கண்ணைப் பறிக்கும் சிவப்புக் கம்பளியில் சுற்றப்பட்டு விடப்பட்டிருந்தது. இப்பெட்டிக்கு அருகில் ஒரு தொப்பி கிடந்தது. இதன் உபயோகத்தைத் தெரிவிக்க ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டான் ஸ்டம்பி. உத்தியோகமும் அதிகாரமும் கலந்த தோரணையில் அவன் மரியாதையாகப் பேசினான்.

"கனவான்கள் முன்புற வாயில் வழியே உள்ளே வந்து, இந்த மேஜையைச் சுற்றிப் பின்புற வாயில் வழியே வெளியே போகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். திக்கற்ற குழந்தைக்கு ஏதாவது கொடுக்கப் பிரியப்படுகிறவர்கள் அவர்கள் அளிப்பதை அந்தத் தொப்பியில் சேர்த்துவிடலாம்."

முதலில் நுழைந்தவன் தலையில் தொப்பியோடேயே உள்ளே வந்தான். பின்னர் தன்னைச் சுற்றிப் பார்த்து மரியாதையாகத் தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டான். இப்படித் தன்னையறியாமலே பிறருக்கும் வழிகாட்டியாய் அவன் அமைந்து விட்டான். இம்மாதிரி ஜனங்களிடை நல்ல செய்கையோ கெட்ட செய்கையோ தொத்துவியாதிபோல் எங்கும் பரவி விடுகிறது. "மகா ஜனங்கள்" வரிசையாக உள்ளே நுழைந்ததும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாயினர். இவைகளெல்லாம் உடைமைக்குச் சொந்தக்காரன் என்ற ஹோதாவில் ஸ்டம்பியைப் பார்த்துச் சொல்லப்பட்டதாய்க் கொள்ளலாம். "அதுவா! அடேடே ரொம்பத் துளியூண்டு இருக்கே" "சிகப்பாய்க்கூட இல்லையே" "கைத் துப்பாக்கியைப்போல் அவ்வளவு சிறிதுமில்லை, ரொம்பப்பெரிதுமில்லை, நடுத்தரம்" அவர்கள் அளித்த வஸ்துக்களும், அபிப்பிராயங்களைப்போல் பலதிறப் பட்டவைதான். ஒரு வெள்ளி புகையிலைப் பெட்டி: ஸ்பெயின் தேசத்திய சுமார் ஒரு பவுன் பெறுமானமுள்ள தங்க நாணயம் ஒன்று: வெள்ளிப்பிடியிட்ட, மாலுமிகள் உபயோகிக்கும் ஒரு கைத் துப்பாக்கி; ஒரு தங்கச் சாமான்; அழகாய்ச் சித்திரிக்கப்பட்ட ஸ்திரீகள் உபயோகிக்கத் தகுந்த கைக்குட்டை ஒன்று; (இது சூதாடி ஓக்ஹர்ஸ்டிடமிருந்து) மார்ச்சட்டைமேல் தரிக்கும் ஒரு வைரப் பின்; ஒரு வைர மோதிரம் (இது வைரப் பின் கொடுக்கப்பட்டதைப் பார்த்தவன் அதற்கு இரண்டடி மேலே போக வேண்டுமென்ற எண்ணத்தோடு அளித்தது) கவண்டிக்கல் எறியும் ஆயுதம் ஒன்று; ஒரு பைபிள் வேத புஸ்தகம்; இது யாருடைய வெகுமதி என்று கண்டுபிடிக்க முடியவில்லை) தங்கத்தாலான தார் முள் ஒன்று; ஒரு வெள்ளித் தேக்கரண்டி (இதில் பொறித்திருந்த பெயர்க்குறிப்புகள் கொடுத்தவருடையதல்ல என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்) இரண வைத்தியனின் கூத்தரியொன்று; ஒரு விரண வைத்தியக் கத்தி: ஐந்து பவுன் 'நோட்டு' ஒன்று; மற்றும் சுமார் இரு நூறு டாலர்கள் பெறுமானமுள்ள தங்க வெள்ளி நாணயங்கள்.

இந்த "ஓதியிடல்கள்" எல்லாம் நடந்து கொண்டிருக்கும்பொழுது, ஸ்டம்பி, தனக்கு இடது பக்கம் கிடந்த ஸ்திரீயைப்போலவே வாய் திறவா மௌனியாய் விளங்கினான். அவனுக்கு வலப்பக்கமிருந்த குழந்தையைப் போலவே அவன் சிந்தனையும் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. ஒரேபடித்தான இந்த வினோத "ஊர்கோலத்தில்" சலிப்படைந்து விடாதபடி ஒரு சம்பவம் நிகழ்ந்தது. கெண்டக் கொஞ்சம் ஆவலோடு அந்தப் பெட்டிக்குள் குனிந்து பார்த்துத் தன் கையை உள்ளே விட்டபோது குழந்தை திரும்பிற்று. "குவா குவா" என்று கத்திக் கையையும் காலையும்உதைத்து, கெண்டகின்

ஒரு விரலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டுவிட்டது. அவனுக்கு அசடு வழிந்தது. வெயிலில் அலைந்து வாடிக் கருகிய அவன் கன்னங்கள் வெட்கத்தால் சிவக்க ஆரம்பித்தன, "அட! போக்கிரிப் பயலே" என்று சொல்லிக் கொண்டே மெதுவாய்த் தன் விரலை விடுவித்துக்கொண்டான். இதில் அவன் காண்பித்த கவனமும் அன்பு மிகுந்த உணர்ச்சியும் உண்மையில் அவன் ஸ்வபாவத்திற்கே ஏற்காதவை. அவன் வெளியே செல்லும் பொழுதுகூடக் குழந்தை பிடித்த அந்த விரலை மற்றவைகளோடு சேர்க்காமல் தனியாய் வைத்துக்கொண்டே அதை ஒரு விநோதப் பார்வையோடு நோக்கினான். இந்தப் பரீக்ஷை 'அட! போக்கிரிபயலே' என்று முன் சொன்ன சொற்களையே திரும்பத் திரும்பச் சொல்லும்படி அவனைத் தூண்டிற்று. வாஸ்தவத்தில் இப்படி திருப்பித் திருப்பி அதைச் சொல்லுவதில் அவனுக்கு ஒரு ஆனந்தம் இருந்தது. டிப்டனைத் நோக்கி, தன் விரலைக் காண்பித்துக் கொண்டே சொன்னான். "அந்தப் போக்கிரிப்பயல் இதைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டுவிட்டான், இதோடு விளையாடினான். அட! போக்கிரிப்பயலே;"

ஊரார் படுக்கைக்குச் செல்வதற்கு நான்கு மணியாகிவிட்டது. அறையில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியில் சிலர் காவல் காத்தனர். ஸ்டம்பி அன்றிரவு தூங்கவில்லை. கெண்டகும் உறங்கவில்லை. அவன் நன்றாய்க் குடித்தான்; தன் அனுபவத்தை மிகுந்த உற்சாகத்தோடு வெளியிட்டான். அந்தப் 'புதுப்' பேர்வழியைப் பற்றிய தன் அபிப்பிராயத்தையும் ——அதாவது போக்கிரிப்பயல் அவன்!—— சொல்ல மறக்கவில்லை. புருடர்களுக்குரிய சங்கோசம், குழந்தையிடத்தில் பிரேமை காட்டியதில் பிறர் பரிகசித்துவிடப்போகிறார்களே என்கிற ஒரு வெட்கம், அவனிடமும் இருந்தன. தான் வெளியிட்ட உணர்ச்சி அதிகப்படி யென்றோ நியாயமற்றதென்றோ தோன்றுமலிருக்கும்படி குழந்தையைப் பற்றி அவன் கூறிய அபிப்பிராயம்-அதாவது போக்கிரிப்பயல் அவன் — அவனுக்கு ஒரு ஆறுதலை யளித்தது. ஊரடங்கி எல்லாரும் படுக்கைக்குச் சென்ற பின், அவன் ஆற்றங்கரைக்குச் சென்றான். சிந்தனையில் மூழ்கிய வண்ணம் சீட்டியடித்துக்கொண்டே ஆற்றங்கரையோடு அந்தக் குடிசையைத் தாண்டிச் சென்றான். குழந்தையைப்பற்றி, தான் ஒன்றும் கவலைகொள்ளவில்லை யென்பது, நிச்சிந்தையாய்ச்சீட்டியடித்துக்கொண்டிருப்பதிலேயே தெரியாதா என்பது அவன் எண்ணம். ஒரு பெரிய செம்மரத்தை அடைந்ததும் சற்று நின்றான். பின்னர் திரும்பி மறுபடியும் அந்தக் குடிசையைத் தாண்டிச்சென்றான். ஆற்றிற்குப் பாதி தூரம் போவதற்குள் மறுபடி திரும்பி, குடிசைக்கு வந்து கதவைத் தட்டினான். ஸ்டம்பி கதவைத் திறந்தான். அவனைத் தாண்டி குழந்தை விடப்பட்டிருந்த அந்தப் பெட்டிப் பக்கம் தன் திருஷ்டியைச் செலுத்திய வண்ணம் 'எல்லாம் எப்படியிருக்கிறது?' என்று கேட்டான்.

"நன்றாய்த் தானிருக்கிறது."

"ஏதாவது விசேஷம் உண்டா?"

"இல்லை"

அப்புறம் என்ன கேட்பது அல்லது செய்வது என்று அவனுக்குத்தெரியவில்லை; குழம்பினான். ஸ்டம்பி கதவைப் பிடித்துக்கொண்டே வழியடைத்து நின்றான். நல்ல வேளையாய்த் தன் விரல்—அந்த புனிதமான விரல்! ஞாபகத்திற்கு வந்தது. ஸ்டம்பியிடம் அதைக் காண்பித்துக் கொண்டே "இதோடு விளையாடினான். அந்தப் போக்கிரிப்பயல்!" என்றான். பிறகு வீடு திரும்பினான்.

மறுநாள் செரோகிசோலின் சவம் புதைக்கப்பட்டது. அவள் கல்லறையும் அவ்வூரின் சக்திக்குத் தகுந்தபடி முரட்டுத்தனமாய் அமைக்கப்பட்டதொன்றுதான். இதுஆனபின் ஒரு சபை கூடிற்று. குழந்தையை என்ன செய்வது என்பதைப்பற்றி விவாதித்தனர், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஏகமனதாய் மிகுந்த மகிழ்ச்சியோடு எல்லாரும் இசைந்தனர். ஆனால் அதை எப்படிப் பராமரிப்பது என்பதுபற்றி ஒரு பிரச்னை எழுந்தது. இது பற்றி மிகுந்த உற்சாகமாய் விவாதிக்கப் பட்டது. அவ்வூரில் விவாதங்களில் சாதாரணமாய்க் காண்பிக்கப்படும் மூர்க்கத்தனமும் கோபதாபங்களும் இப்பொழுது இல்லை என்பது குறிப்பிடத்தக்க விஷயம். நாற்பது மைலுக்கு அப்பாலுள்ள "செந்நாய்" என்னும் ஊரில் ஸ்திரீகள் அகப்படக்கூடுமாதலால் குழந்தையை அங்கே அனுப்பிவிடலாம் என்று டிப்டன் பிரஸ்தாபித்தான். இந்த ஆலோசனை எல்லாராலும் கண்டிப்பாய் நிராகரிக்கப்பட்டது. அவர்களுக்குப் புதிதாய்க் கிடைத்த குழந்தையை அவர்களிடமிருந்து பிரித்து வேறு எங்கேயாவது அனுப்பி விடுகிறது என்கிற எந்த ஏற்பாடும் பெற்றுக்கொள்ளப்படாது என்பது வெட்ட வெளியாயிற்று.

"முடியாது, மேலும் செந்நாயை நம்பக் கூடாது. அவர்கள் இதைப் பெற்றுக் கொண்டு வேறு ஏதாவது ஒன்றை நம்தலையில் கட்டிவிடுவார்கள்" என்றான் டாம்ரை

டர். மற்ற இடங்களைப் போலவே இந்தப் பேரொலிப்பாளையத்திலும் வேறு ஊர்களின் நேர்மையில் நம்பிக்கையில்லாமல் இருந்தது.

ஒரு தாதியை ஊருக்கு அழைத்து வரலாம் என்கிற யோசனைக்கும் எதிர்ப்பு ஏற்பட்டது. நேர்மையும் ஒழுங்கு நடவடிக்கையும் உள்ள எந்த ஸ்திரீயையும் பேரொலிப்பாளையத்தில் வந்து வசிக்க இணங்கும்படி செய்ய முடியாது. மேலும், பெண் இனமே இனி அவர்களுக்கு வேண்டாம் என்று வற்புறுத்தினான், எதிர்த்துப் பேசியவன், இறந்துபோன தாயைக் குறிப்பிட்ட, அன்பற்ற இந்தப் பேச்சு கடுமையாகத் தோன்றியபோதிலும், உண்மையில் இதுதான் நேர்மையின் முதல் கசிவு—ஊரார் திருந்தி நல்வழிப்படுவதற்கு ஒரு அறிகுறி. ஸ்டம்பி ஒன்றும் சொல்லவில்லை. தன் வேலைக்கு, தனக்குப் பதிலாகப் பிறன் ஒருவனைப் பொறுக்கி நியமிக்கும் விஷயத்தில் தான் தலையிடுவது சரியல்ல என்று அவன் ஒருவேளை உணர்ந்திருக்கக்கூடும். ஆனால் அவனைக் கேட்டபோது, அவனும் முன்னரே சொல்லப்பட்ட அந்த நாலுகால் பிராணியும்(கழுதை) குழந்தையை வளர்த்துவிட முடியும் என்று கண்டிப்பாய்ச் சொன்னான். இந்த ஏற்பாட்டில் ஒரு நூதனம், பிறர் கையை எதிர்பாராதிருத்தல், தைரியம் எல்லாம் கலந்திருந்தது. ஊராருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே ஸ்டம்பியின் உத்தியோகம் நிலைத்தது. "சேகரமெண்டோ" என்னும் ஊருக்குச் சில சாமான்கள் வாங்கி வர ஒரு ஆள் அனுப்பப்பட்டான். வசூலிக்கப்பட்ட பணம் ஒப்படைக்கப்பட்டிருந்த பொக்கிஷதார் தூதன் கையில் ஒரு பையை அளித்த வண்ணம் சொன்னான்: "பாரு! நல்ல சாமானாயிருக்கட்டும்! ஜரிகை, சித்திரவேலைப்பாடு—தெரியாதா உனக்கு? பார்த்து வாங்கு. விலையைப்பற்றி லக்ஷியமில்லை!"

குழந்தை எப்படியோ பிழைத்து வளர்ந்தது தான் ஆச்சரியம். மற்றப் போஷணைக் குறைபாடுகளுக்கு மலைச் சாரலிலுள்ள வீறு கொடுக்கும் சீதோஷ்ண ஸ்திதி ஒருவேளை ஈடுகொடுத்திருக்கலாம். ஆம்! இயற்கை தன் விசாலமான மார்பகத்தே இந்த அனாதைக் குழந்தையை ஏற்றுக்கொண்டது. ஸீராநிவர்டா மலைத் தொடரின் அடிவாரத்தின் அருமையான சீதோஷ்ண ஸ்திதியில் கம்மென்று தைல வாசனை வீசிய காற்றில், உடம்பிற்கு விறுவிறுப்பும் உற்சாகமும் அளிக்கும் மூலிகைகளின் கந்தத்தை ஏந்தி வீசிய மலையமாருதத்தில் அந்தக் குழந்தை ஆகாரமும் போஷணையும் அடைந்திருக்க வேண்டும். அல்லது கண்ணுக்குத் தெரியாத ஒரு ரசாயன முறையில் கழுதையின் பால் முலைப்பாலாக மாற்றப்பட்டிருக்கவேண்டும். இதுவும், சரியான பராமரிப்பும்தான், குழந்தை பிழைத்து வளர்ந்ததற்குக் காரணம் என்பது ஸ்டம்பியின் அபிப்பிராயம். "நானும் கழுதையும்" அவன் சொல்வது வழக்கம் "அதற்குத் தகப்பனும் தாயும் போல!" பின்பு துணி மூட்டை போலக் கிடக்கும் கழுதையை நோக்கி அவன் சொல்வான்: "ஒருகாலும் நீ எங்களை விட்டுப்போய் விடாதே கண்ணு!" என்று.

குழந்தைக்கு ஒரு மாதம் ஆனவுடன் அதற்கு ஒரு பெயர் வைக்கவேண்டியதின் அவசியம் புலப்பட்டது. இதுவரை குழந்தை என்றோ 'ஸ்டம்பியின் குழந்தை' என்றோ அல்லது கெண்டகின் அருமைப் பெயராகிய போக்கிரிப்பயல் என்றோதான் அது எல்லாராலும் அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் இது ஸ்பஷ்டமாயுமில்லை. மனதிற்குச் சமாதானமும் அளிக்கவில்லை. மேலும் வேறு ஒரு காரணத்தால் இவைகள் சரியல்லவென்று தள்ளப்பட்டு விட்டன. சூதாடிகளும், சாகஸக்காரர்களும் சாதாரணமாய் மூட நம்பிக்கை உடையவர்கள். ஓக்ஹர்ஸ்டு ஒரு நாள், குழந்தை அவர்களுக்கெல்லாம் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்து விட்டது என்று சொன்னான். இது உண்மைதான். ஊராருக்கு அவரவர்கள் வேலையில் லாபம் கிடைத்தது என்னவோ வாஸ்தவம்தான். ஆகவே, அதிர்ஷ்டம் என்ற பொருள் கொண்ட 'லக்' என்ற பெயர் வைக்கலாம் என்றும், சௌகரியத்தை உத்தேசித்து டாமி என்கிற பெயரையும் சேர்த்துக்கொள்ளலாமென்றும், எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. தாயின் பெயருக்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை. தகப்பன் இன்னான் என்றே தெரியாது. "புதிதாக ஆரம்பிப்பது நல்லது. அதை அதிர்ஷ்டம் என்று கூப்பிட்டு ஆரம்பித்து வைப்போம்" என்று தத்வஞான முறையில் புகன்றான் ஓக்ஹர்ஸ்டு. ஆகவே, பேர் வைப்பதற்கு ஒரு நாள் குறிப்பிடப்பட்டது. மட்டு மரியாதையற்ற இந்தப் பேரொலிப்பாளையத்தாரைப் பற்றி ஏற்கனவே கொஞ்சம் தெரிந்துகொண்ட வாசகர்கள், பேர் வைக்கும் வைபவம் எப்படியிருக்கும் என்று ஊகித்திருக்கக்கூடும், இந்தச் சடங்கிற்குக் கர்த்தா போஸ்டன் எனப் பெயர் கொண்ட ஒரு கோமாளி. ஆகவே இது வேடிக்கை மிகுந்ததாயிருக்கும் என்று எதிர் பார்க்கலாம். இந்த விநோதப் பிரியன், சடங்கில் ஓத வேண்டிய மந்திரங்களை, ஊரைப்பற்றிய மேற்கோள்களெல்லாம் சேர்த்து இரண்டு நாள் சிரமப்பட்டு ஒரு வேடிக்கைப் புராணமாகவே தயாரித்து விட்டான்.



18″ ஹார்ஸ் டைமர்

நிக்கல் ஸில்வர் கேஸ்

செகண்டில் ஐந்தில் ஒரு பாகத்தைக் காட்டுபவை... ரூ. 67

செகண்டில் பத்தில் ஒரு பாகத்தைக் காட்டுபவை... ரூ. 70

18″ ஸ்பிளிட் ஸெகண்ட்

இயக்கவும், நிறுத்தவும், திரும்பிப் பழைய இடத்துக்கு வருவிக்கவும் இரண்டு தனி அமைப்புக்கள் கொண்டவை.

நிக்கல் ஸில்வர் கேஸ் ... ரூ. 160

இந்த ஸ்டாப் வாட்சுகள் வெஸ்ட் எண்டுக்கே உரிய துளியும் பிசகாத திருத்தத்தோடு அமைந்தவை. போர்வீரன், இஞ்ஜினீயர், ஸ்போர்ட்ஸ்மன் இவர்களுக்கு ஸெகண்டிலும் சிறிய கால அளவு பல காரியங்களுக்குத் தேவையாக இருக்கிறது. இந்தக் கடிகாரங்கள் இந்தத் தேவையை முற்றும் பூர்த்தி செய்யும். ஸெகண்டுகள், ஸெகண்டுகளில் ஐந்தில் ஒரு பங்கு, பத்தில் ஒரு பங்கு ஆகிய கால அளவுகளை 'ஹார்ஸ் டைமர்' காட்டும். 'ஸ்பிளிட் ஸெகண்டி'ல் இரண்டு முட்கள் இருக்கின்றன. ஒரே சமயத்தில் இரண்டு தனித் தனிச் செயல்களின் காலத்தை அளக்க இது உதவும். இரண்டு மாடல்களும் திருத்தமாக வேலை செய்யும். நீடித்து உழைக்கும்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ., பம்பாய் — கல்கத்தா.

WEST END WATCH Co.

BOMBAY CALCUTTA

13

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

1, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 ***SUNDARI ELIXIR***
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

பாடகர்களின் ஜமா சரிவரத் தயாரிக்கப்பட்டது. ஸாண்டிடில்டன் ஞானஸ்நானத் தகப்பனாக ஏற்படுத்தப்பட்டான். ஊர்கோலம், விருதுக்கொடிகள், சங்கீதம் இவைகளோடு தோப்பையடைந்தது. அங்கு, பீடம்போல் ஏற்படுத்தப்பட்ட ஒன்றின்மேல் குழந்தை விடப்பட்டது. ஸ்டம்பி முன்னுக்கு வந்து சமீபத்திலிருந்தவர்கள் மேல் கண்ணோட்டமிட்டுத் திடமான குரலில் பேசினான். “உங்கள் வேடிக்கை வினோதங்களைக் கெடுக்க வேண்டுமென்பது என் நோக்கமல்ல. ஆனால், இது நியாயமில்லை என்று எனக்குப் படுகிறது. குழந்தை புரிந்து கொள்ள முடியாத வார்த்தைகள் பேசிச் சிரிப்பது அதை இகழ்வது போலாகும். அதற்கு ஞானத்தகப்பன் அவசியமென்று நீங்கள் கருதினால் என்னைக் காட்டிலும் அதற்கு யார் அதிக அருகதையுள்ளவன் என்று நான் கேட்கிறேன்.” இந்தப் பேச்சிற்குப் பின் ஒருவரும் சற்று நேரம் பேசவில்லை. இந்த நியாயத்தை முதல் முதல் ஒப்புக்கொண்டது அந்தக் கோமாளிதான் என்பதைத் தெரிவித்து விடுகிறேன், இதைப் பயன்படுத்திக்கொண்டு ஸ்டம்பி மேலும் பேசினான். “ஆனால் நாம் எல்லோரும் பேர் வைக்கும் சடங்கிற்காக இங்கே கூடியிருக்கிறோம். அதை நடத்துவோம். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டும், கலிபோர்னியாவின் சட்டத்திற்கு உட்பட்டும், உனக்கு “தாமஸ் லக்” என்று பெயரிடுகிறேன். கடவுள் காப்பாற்றட்டும்!” இழிவான முறையிலல்லாமல், கடவுளின் புனித நாமம் அப்பாளையத்தில் கூறப்பட்டது இதுதான் முதல் தடவை. விதூஷகன் ஏற்படுத்தியிருந்ததைக் காட்டிலும் ஒரு வேளை அதிக வினோதமாயிருந்தது, பேர்வைத்த முறை என்று சொல்லலாம். ஆச்சரியம் என்னவென்றால் ஒருவரும் அதைக் கவனிக்கவுமில்லை, நகைக்கவுமில்லை. மாதாகோவிலில் எப்படி ஒரு குழந்தைக்குச் சாஸ்திரமுறையில் பெயர் வைக்கப்படுமோ அப்படியே இங்கும் பக்தி சிரத்தையோடு செய்யப்பட்டது—குழந்தை அழுதல், அதை ஆசுவாசப்படுத்துதல் எல்லாம் உள்பட.

இப்படியாகப் பேரொலிப் பாளையம் புனர் ஜன்மம் எடுத்தது. கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் குடியேற்றத்தில் ஒரு மாறுதல் உண்டாயிற்று. முதன் முதல், திருத்தத்தின் அறிகுறிகள் அதிர்ஷ்டத்தின் அறையில் தென்படலாயின. அது நன்றாகச் சுத்தப்படுத்தப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டது. சட்டங்கள் அடிக்கப்பட்டும், சுவர்களுக்குக் கடிதங்கள் ஒட்டப்பட்டும், ஜன்னல்கள் திரையிடப்பட்டும் அவ்வறை இப்பொழுது விளங்கிற்று. எண்பது மைல்களுக்கப்பாலிருந்து கழுதை மேல் ஏற்றிவரப்பட்ட செம்மரத் தொட்டில், ஸ்டம்பியின் வாசகத்தில், வேறு தட்டுமுட்டுச் சாமான்களுக்கு இடமில்லாமல் அவ்வறையையே கபளீகரம் செய்து விட்டது. ஆகையால் அந்தக் குடிசையைப் பெரிதாகக் கட்ட வேண்டியது அவசியமாயிற்று. “குழந்தை எப்படியிருக்கிறது?” என்று கேட்டுக்கொண்டு அடிக்கடி பார்க்க வந்தபேர்களுக்கு இந்த மாறுதல் உவப்பாயிருந்தது, இப்படி ஊராரின் நாககரிம் உயரவே எங்கும் ஒரு விதப் பரபரப்பு எழுந்தது. பலசரக்குக்கடை கூட விழித்துக்கொண்டு, கிழே விரிக்க ஒரு இரத்தினகம்பளமும், நிலைக்கண்ணாடிகளும் தருவித்தது. கடைக்கு வருவோர் தங்கள் உருவங்களைக் கண்ணாடியில் காண முடிந்ததின் காரணமாக உடையிலும் உடம்பிலும் சுத்தம் அதிகரித்தது. போதாக்குறைக்கு ‘அதிர்ஷ்டத்தை’ கையிலேந்தும் பெருமையும் உரிமையும் அடைய விரும்புவோருக்கு ஸ்டம்பி ஒருவித ஆசௌசத்தடையே விதித்து விட்டான்—அசுத்தமுள்ளவர்கள் குழந்தையைத் தொடக்கூடாது என்று. பாவம்! கெண்டகுக்கு மனம் இடிந்து விட்டது. கவலையற்ற சுபாவமும், எல்லைப் பிரதேச வழக்கங்களும் கொண்ட அவன் எல்லாவித உடைகளுமே ஒரு மெல்லிய மேல் தோலுக்குச் சமானம் என்று கருதும் நிலைக்கு வந்து விட்டான். பாம்பு தோலுரிப்பது போல அவைகள் நன்றாய் ஜீரணமான பின்தான் அவைகளைக் கழற்றுவது அவனுக்குச் சுபாவமாய் விட்டது. இந்த நிலையில் ‘அதிர்ஷ்டத்தை’ எடுத்து அணைக்க முடியாமற் போனதில் அவனுக்குள்ள வருத்தம் அளவு கடந்தது என்று நாம் ஊகிக்கலாம். ஆனால்! புதுமையின் பிரபாவமும், அதன் நுண்ணிய சக்தியும் அபாரமாயிருக்கின்றன! இனி ஒவ்வொரு மாலையும் நன்றாய் ஸ்நானம் செய்து, அப்பழுக்கில்லாத உடை தரித்து அவன் ஸ்டம்பியின் வீட்டிற்கு வர ஆரம்பித்தான். இதுமட்டுமல்ல. நன்னடக்கையும், சமூகத்திற்கு அவசியமான சுகாதார சட்டதிட்டங்களும் அமுலுக்கு வரலாயின. குழந்தை நாள் பூராவும் விடாப் பிடியாய், தூங்கியே தீர்த்து விடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தது போல் புலப்பட்டதால், அதை எழுப்பி உபத்திரவம் கொடுக்காதிருப்பதற்காக, ஒருவரும் சத்தம் போடக்கூடாது என்கிற சட்டமும் வரலாயிற்று. கூக்குரலும் கூப்பாடும்—அந்த ஊருக்கே ஒரு துர்ப்பாக்கியமான அடைமொழியை உண்டு பண்ணிவிட்ட பேரொலி—இனி ஸ்டம்பியின் வீட்டிற்குக் கூப்பிடுதூரம் வரையில் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே மனிதர்கள் ஒருவர்க்கொருவர் தாழ்ந்த குரலில் பேசலா

யினர். அல்லது மிகுந்த சிந்தனையில் ஆழ்ந்து புகை குடித்தனர். குழந்தை வசித்த புனிதப் பிரதேசத்தின் வட்டாரத்தில் அபசார வார்த்தைகளும், தேவ நிந்தனையும் ஒழிந்தன. சாதாரணமாய் வழக்கத்திலிருந்த "அதிர்ஷ்டம் அழியட்டும், அது நாசமாய்ப்போகட்டும்" என்கிற சொற்றொடர்கள்—இப்பொழுது அவைகளுக்குப் புதியதொரு அர்த்தம் ஏற்பட்டுவிட்டதால்—கைவிடப்பட்டன. ஆனால் வாய்பாட்டிற்கு ஒன்றும் தடை விதிக்கப்படவில்லை. ஏனெனில் அது குழந்தைக்குத் தாலாட்டுப் போலிருந்தது. முக்கியமாக ஜனரஞ்சகமான ஒரு நீண்ட கப்பல் பாட்டு எல்லோருக்கும் பிடித்திருந்தது. 'ஜாக்' என்னும் ஒரு மாலுமி குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு கப்பலாடுவதைப்போல் அதை இங்குமங்கும் ஆட்டிக் கப்பல் பாட்டைச் சொல்லித் தாலாட்டுவதைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். ஜாக்கின் விசித்திரமான ஆட்டத்தினாலோ, அல்லது அவன் பாட்டின் நீட்டத்தினாலோ, தாலாட்டுப் பயன் அளிக்காமல் போகவில்லை. இந்தக் காலங்களில் ஊரார், வசீகரமான கோடைக் கால முன்னிரவுகளில் மரங்களினடியில் நீட்டிப் படுத்துக்கொண்டு சாவதானமாய்ப் புகை விட்டுக்கொண்டு அந்த இனிமையான சங்கீதத்தைப் பருகிக்கொண்டிருப்பர். இது ஏதோ ஒரு வித தெய்வீக ஆனந்தம் என்கிற எண்ணம் ஊர் முழுவதும் பரவலாயிற்று. தன் முழங்கையை ஊன்றிச் சாய்ந்துகொண்டே காக்னி ஸிம்மன்ஸ் சொன்னான்: "இது மாதிரி விஷயமெல்லாம் தெய்வீகம் பொருந்தியது." மத விஷயங்களுக்குப் பேர் போன கிரீன்விச் நகரத்தை இது அவனுக்கு ஞாபக மூட்டிற்றுப் போலும். நீண்ட வேனிற் கால நாட்களில் தங்கம் வெட்டியெடுக்கப்படும் சுரங்கத்திற்குக் குழந்தையை எடுத்துச் செல்லுவது வழக்கமாயிருந்தது. அங்கே பைன் கிளைகளாலான ஒரு பந்தலடியில் விரிக்கப்பட்ட ஒரு துப்பட்டியின் மேல் அது விடப்படும். மனிதர்கள் கீழே பள்ளங்களில் வேலை செய்து கொண்டிருப்பார்கள். . சில தினங்களுக்குப் பிறகு இந்த லதா கிருகத்தைப் புஷ்பங்களும் சுகந்த மூலிகைகளும் கொண்டு அழகு படுத்த ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. கொத்துக் கொத்தாய் எங்கும் மலர்ந்துகிடந்த பல்வேறு காட்டு மலர்களை அவர்கள் பறித்து வருவது வழக்கமாய் விட்டது. இதுவரை அலட்சியமாய்க் காலின் கீழ் வைத்து மிதிக்கப்பட்ட இந்த அல்ப வஸ்துக்களிலும் கவர்ச்சியும் கருத்தும் அடங்கியிருப்பது அவர்களுக்குத் திடீரென்று புலப்பட ஆரம்பித்தது. ஒரு அப்பிரகச்செதில், பல வர்ண ஸ்படிகக்கல்

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
கார்த் பீச் ரோட், மதராஸ்.

●

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு,
திருவல்லிக்கேணி, தியாகராயநகர்,
மயிலாப்பூர், புரசைவாக்கம்,
எழும்பூர்.

●

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

●

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	-	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்		ரூ. 53,00 000
ரிஸர்வ் நிதி	- -	ரூ. 62,00,000

●

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

ஒன்று, சிற்றாற்றின் படுகையிலிருந்து கொணர்ந்த ஒரு கூழாங்கல்—இவைகளெல்லாம் துலக்கில் பலப்படுத்தப்பட்ட கண்களுக்கு அழகு கொண்டு மிளிர்ந்தன. இவைகளெல்லாம் குழந்தைக்குப் பிரத்தியேகமாக எடுத்து வைக்கப்பட்டன. அதற்குப் பிடிக்கக்கூடிய பொக்கிஷங்கள் எத்தனை எத்தனை வகைகள் பைன் மரக்காடுகளும், செம்மலைச் சாரல்களும் அளித்தன! தெய்வலோகக் குழந்தைக்குக்கூடக் கிடைக்காத பல விளையாட்டுச் சாமான்களால் சூழப்பட்டு அது கிடந்ததால் அதி திருப்தியடைந்திருக்கும் என்று நாம் நம்பலாம். எப்படியிருந்தபோதிலும் கவலையற்று மகிழ்ச்சியோடு இருப்பதாய்த்தான் அது தோன்றிற்று. குழந்தைக்குரிய கம்பீர பாவமும், வட்டமான சாம்பல் நிறக்கண்களிலே தோன்றிய ஆழங்காணமுடியாத சிந்தனைச் சோதியும் ஸ்டம்பியைச் சிற்சில சமயம் கவலைக்குள்ளாக்கின, குழந்தை சாதுதான். அழுது ஆகாத்தியம் செய்வதில்லை. அதைப் பற்றிய ஒரு சம்பவம் குறிக்கப்பட்டிருக்கிறது. பைன் மரக்கிளைகள் குறுக்கிலும் நெடுக்கிலும் வைத்துப் பின்னிப் பிணைக்கப்பட்டு, கட்டம் கட்டமாய் அடைக்கப்பட்டிருந்த வேலியை ஒரு சமயம் அது நீந்திக்கொண்டே தாண்டிப்போய், கரைக்கப்பால் மிருதுவான தரையில் தலைகுப்புற விழுந்துவிட்டது. பல வர்ணங்கள் காட்டிய அதன் கால்கள் உயரத் தூக்கப்பட்டு, கொஞ்சம் கூட அழாமல் இந்நிலையில் ஐந்து நிமிஷம் வரை அது கிடந்ததாகவும், அப்புறம் ஒரு பேச்சு மூச்சின்றி அந்நிலையினின்று விடுவிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. குழந்தையின் விவேகத்தை விவரிக்க இதுபோன்ற இன்னும் பல கதைகளும் சொல்லப்படுகின்றன. அவைகளை நான் இங்கே எழுதத் தயங்குகிறேன், ஏனெனில் அவைகளெல்லாம் குழந்தையிடத்தில் பக்ஷபாதம் உள்ளவர்கள் சாக்ஷியத்திலே நிற்கின்றன. மேலும் சிற்சிலவற்றில் மூட நம்பிக்கையின் சாயலும் தென்படாமலில்லை.

"நான் இப்பதான் கரேமேல் ஏறிப்பார்த்தேன். ஆச்சரியத்தை என்ன சொல்ல! குழந்தை மடியிலே குந்திக்கிட்டிருக்குது. ஒரு சாஷ பக்ஷி, அதோடு அது பேசிக்கிட்டல்ல இருக்குது! நீங்க நம்பினு நம்புங்க நம்பாட்டி போங்க. நான் கண்ணாலே பாத்தேன். இரண்டு பேரும் ரொம்ப அன்னியோன்யமாய்ப் பேசிட்டிருக்காங்க!" என்று வேர்க்க விறுவிறுக்க மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க விவரித்தான் கெண்டக். இவை எப்படியிருந்தபோதிலும் அது பைன் மரக்கிளையின் கீழே நீந்தி விளையாடிக் கொண்டோ மல்லாந்து இலைகளைப் பார்த்த வண்ணம் படுத்துக்கொண்டோ இருந்தது உண்மை. பக்ஷி ஜாலங்கள் அதற்காகப் பாடின. அணில்கள் கொரித்துப் பேசின. மலர்கள் மலர்ந்தன. இயற்கைதான், அதற்குத் தாயும் விளையாட்டுத் தோழனும். அதற்காக அவள் கதிரவனின் செங்கிரணங்களை இலைகளின் ஊடே அதன் கைப்பிடிக்குள் விழும்படி செய்வாள். வாகையின் வாடையையும், மூலிகைகளின் சுகந்தத்தையும் ஏந்திச் செல்லும் மலய மாருதத்தை ஏவி, குழந்தையைப் பார்த்து வரச் சொல்லுவாள். நீண்டுயர்ந்த செம்மரங்கள் குழந்தைக்கு மிகவும் பழக்கப்பட்டவை போல் தூங்கி வழிந்து தலையாட்டின. கருவண்டுகள் ரீங்காரம் செய்தன. ஒருவகைக் காகங்கள் தாலாட்டு இசைத்தன.

பேரொலிப் பாளையத்தின் கோடைக்கால வாழ்க்கை இதுதான். இந்நாட்கள் அவர்களுக்குச் செழுமை தழுவிய காலம்—மேலும் அதிர்ஷ்டம் அவர்கள் பக்கலில் இருந்தது, சுரங்கங்கள் அபரிமிதமாய்ச் சுரந்தன. பேரொலிப் பாளையம் அதன் உரிமைகளிலே உஷார் கொண்டது ஊருக்குப்புதிதாய் வந்தவர்களிடத்தே அவ நம்பிக்கையும் காண்பித்தது. ஊரில் பிறர் வந்து குடியேறுவதற்கு இடம் கொடுக்கப்படவில்லை. பிறர் வரமுடியாதபடியும் ஊரைச் சுற்றி வட்டமிட்டிருந்த மலைச்சுவர்களுக்கு இருமருங்கிலும் உள்ள நிலங்களையெல்லாம் ஊரார் முன்னதாகவே வாங்கி விட்டனர். இதுவும், துப்பாக்கி சுடுவதில் குறி தவறாத ஒரு புகழும் இப்பாளையத்திற்குள் பிறர் புகா வண்ணம் செய்து விட்டன. இவ்வூருக்கும் சுற்றுப்பட்ட வட்டாரங்களுக்கும் தொடர்புண்டாக்கியவன் தபால்காரன் ஒருவன்தான். அவன் அவ்வூரைப்பற்றிப் பல ஆச்சரியமான கதைகள் சொல்வான்.

அவர்கள் வீடுகளைச் சுற்றித் திராக்ஷைக் கொடிகளும் புஷ்பச் செடிகளும் மிளிர்கின்றன, அவர்கள் நாளுக்கு இரு முறை ஸ்நானம் செய்கிறார்கள். ஆனால் ஊருக்குப் புதியவர்களிடத்தே அவர்கள் கடுமையாயிருக்கிறார்கள். மாயக் குழந்தை ஒன்றை அவர்கள் தொழுகிறார்கள்.

ஊரின் செல்வ நிலை அதிகரிக்கவே, மேல் மேலும் அபிவிருத்திக்கான ஆவல் பிறந்தது. அடுத்து வரும் வசந்தகாலத்தில் ஒரு ஹோட்டல் கட்டுவது என்றும், அதில் "அதிர்ஷ்டத்தின்" சௌகரியத்தையும் அதற்கு ஸ்திரீகளின் ஆதரவில் கிடைக்கக்கூடிய போஷணையையும் உத்தேசித்து, இரண்டொரு உயர் தரக்குடும்பங்களைவந்து வசிக்கும்படி ஏற்பாடு செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஸ்திரீகளுடைய நேர்மையிலும் உபயோகத்

திலும் கொஞ்சம்கூட நம்பிக்கை யில்லாத இம்மனிதர்களுக்கு இந்த ஏற்பாட்டினால் ஏற்பட்ட தியாகத்திற்குக் காரணமெல்லாம் 'அதிர்ஷ்டத்தினிடத்தில்' அவர்கள் கொண்டிருந்த அபரிமிதமான அன்பே யொழிய வேறில்லை. இருந்தும் சிற்சிலர் இந்த ஏற்பாட்டை எதிர்க்காமலில்லை. ஆகவே தீர்மானம் செய்கையில் நிறைவேற மூன்று மாதங்கள்வரை தடைபட்டது. பின்னரும், எதிர்த்த சிறு பான்மையோர், ஏதாவதொன்று நேர்ந்து இந்த ஏற்பாட்டைத் தடுத்து விடும் என்ற நம்பிக்கையினால்தான் விட்டுக் கொடுத்தனர். அவர்கள் நினைத்தபடியே நடக்கவும் நடந்தது.

1851ஆம் வருஷத்திய மழைக்காலம் அந்த மலையடிவாரத்தில் வெகுகாலம்வரை ஞாபகத்திலிருக்கும். சீரா நிவாடா மலைத் தொடர்களில் பனிப் படலங்கள் வெகு ஆழம் வரை பதிந்து கிடந்தன. ஒவ்வொரு சிற்றாறும் பேராறாகப் பெருகிற்று. ஒவ்வொரு பெரு நதியும் ஒரு ஏரியாகப் பரந்தது. மலைச் சரிவுகளிலே பேரிரைச்சலிட்டுப் பெருகிவந்த வெள்ளம் தன் போக்கிலே மரங்களை வேரோடு பெயர்த்தும் கற்களைப் புரட்டியும் கொண்டு சென்று சம வெளிகளிலே அவைகளைச் சிதறிற்று. 'செந்நாய்' என்னும் ஊர் இரண்டுதரம் வெள்ளத்தில் முழுகி விட்டது. பேரொலிப்பாளையத்தார் எச்சரிக்கையடைந்தனர். ஸ்டம்பி சொன்னான்: "வெள்ளம் தான் தங்கத்தைச் சுரங்கங்களில் கொண்டு கொழிக்கிறது, முன்னொருதரம் இம்மாதிரி வெள்ளம் வந்திருக்கிறது. மறுபடியும்வரும்." அன்றிரவு திடீரென்று வடவாறு கரை புரண்டது; முன் கோணப் பள்ளத்தாக்கிலிருந்த பேரொலிப் பாளையத்தை வெள்ளம் கொள்ளை கொண்டது. சுருட்டிச் சுழித்து ஓடிய நீரின் இரைச்சலிலும் சரிந்து விழுந்த மரங்களின் கட கட சப்தத்திலும், பட பட வென நொறுங்கி விழுந்த கட்டைகளின் ஒலியிலும் தண்ணீரோடு பெருகி வந்து, கண் மண் தெரியாமல் ஊரையே அழித்து விடும் போல் தோன்றிய கும்பிருட்டிலும், சிதறுபட்ட ஊரை ஒன்று கூட்டுவதென்பதும் முடியாத காரியமாயிற்று. காலை உதயமானவுடன், ஆற்றின் கரைக்குச் சமீபமா யிருந்த ஸ்டம்பியின் குடிசை வெள்ளத்தில் அழிந்து விட்டது தெரிந்தது. பாவம்! அதன் சொந்தக்காரன் உடலும் கொஞ்ச தூரத்துக்கப்பால் கண்டெடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் பெருமைக்கும், நம்பிக்கைக்கும் மகிழ்ச்சிக்கும் காரணமா யிருந்த பேரொலிப் பாளையத்தின் "அதிர்ஷ்டம்" மறைந்து விட்டது. உடைந்த இதயத்தோடு அவர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கும்பொழுது கரையிலிருந்து கூப்பிட்ட ஒரு குரல் கேட்டது.

அது ஆற்றின் போக்கிலே வந்த ஒரு உதவிப் படகு, சுமார் இரண்டு மைல்களுக்கப்பால் குற்றுயிரும் குறை உயிருமாய்க் கிடந்த ஒரு மனிதனையும் ஒரு குழந்தையையும் எடுத்து வந்ததாக அவர்கள் சொன்னார்கள். இவ்விருவரையும் அவர்களில் யாருக்காவது தெரியுமா, அந்த ஊர்க்காரர்கள் தானா அவர்கள் என்று படகிலுள்ளோர் ஊராரை விசாரித்தனர்.

நசுக்கப்பட்டும் உடம்பெங்கும் கீறப்பட்டும் கிடந்த கெண்டக்கை-இவ்வளவிலும் பேரொலிப் பாளையத்தின் 'அதிர்ஷ்டத்தை' விடாமல் கையிலே ஏந்தியிருந்த கெண்டக்கை, ஒரே பார்வையில் அவர்கள் தெரிந்து கொண்டு விட்டனர். ஒருவருக்கொருவர்எவ்விதத்திலும் ஒவ்வாத இவ்விருவரையும் பார்க்க அவர்கள் குனிந்த பொழுது, குழந்தை நாடி யடங்கி விறைத்து விட்டதைக் கண்டனர். "அது இறந்து விட்டது" என்றான் ஒருவன். கெண்டக் கண்களைத்திறந்தான். "இறந்து விட்டதா?" என்று தளர்ந்த குரலில் கேட்டான். "ஆம் அப்பா! நீயும் இறந்து கொண்டுதானிருக்கிறாய்." உயிரடங்கிக் கொண்டிருந்த கெண்டக்கின் கண்களை ஒரு புன் சிரிப்புப் பிரகாசப் படுத்தியது. "இறந்து கொண்டா" அவன் திரும்பச் சொன்னான், "அது என்னையும் அழைத்துக்கிட்டுப் போவுது, நம்ம பயலுகளிடத்திலே சொல்லு, அதிர்ஷ்டம் இப்போ என் கையிலே இருக்கு இன்னு." மூழ்கித்தத்தளிப்பவன், ஒரு சிறு துரும்பைப் பிடிப்பது போல, அந்த வலிவுள்ள மனிதன் அந்தச்சின்னஞ் சிறு குழந்தையை விடாப் பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, யாருமறியாக் கடலிலே சதா ஓடி ஒளிந்து கொள்ளும் அந்த ஆற்றோட்டத்தின் இருளில் மேலே மேலே சென்று மறைந்து விட்டான்.

"The Luck of Roaring Camp"என்ற கதையின் மொழி பெயர்ப்பு.

178059

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

காமதேனு

வனஸ்பதி

சுத்தமான
சாஸ்த்ரீய
முறையில்
தயாராவது



பதார்த்தங்கள்
பூரண
ருசியுடன்
பரிமளிக்க

ஒவ்வொரு வீட்டிலும் விருப்புடன் வழங்கப்படுவது
கை படாமல் குணம் கெடாமல்
2, 5, 10 பவுண்ட் ஸீலிட்ட டின்களில் கிடைக்கிறது

காமதேனு கலந்ததே கை நிறைந்த விருந்து

உற்பத்தியாளர் :

மேட்டூர் கெமிகல் அண்ட் இண்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை, சேலம்.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜண்டுகள் :

அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 120, அரமனைக்கார வீதி, மதராஸ் 1.

கிளை ஆபீஸ்கள் :

பெஜவாடா, கல்லிக்கோட்டை, கோயம்புத்தூர், ஹைதராபாத்,
கும்பகோணம், மேட்டூர் அணை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருவனந்தபுரம்.



டி. எஸ். ஆர்.

தைலங்களுக்கு நிகரில்லை என்பது எல்லோருக்கும் கைகண்ட அனுபவம்.

வாசனைத் திரவியங்களுக்கோ கேட்பானேன். சுதந்திர இந்தியாவில் கோகுல் அம்பர் ஊதுவத்தி மணக்காத மாளிகையுமுண்டோ!

T. S. R. & Co.

கும்பகோணம்.

The Cauveri Colour Press, Kumbakonam.

புத்தப் புதிய டன்லப்

ஆர்.எச்.எஸ்.

ட்ரக் & பஸ் டயர்



மிக கனமான ட்ரெட்

கூண்டமைந்த சைட்வால்கள்

அதிக பளு தாங்கும் சக்தி

லேடக்ஸ் பூசிய நூல்கள்

அதிக கால உழைப்பு

மைல் கணக்கில் முன்னேற்றம்

TRADE MARK

DX 336 TAM

The Cauveri Colour Press, Kumbakonam.